பாரத சக்தி மகா காவியம்

ஐந்தாவது

சுத்த சக்தி காண்டம்

காப்பு

மலர்களைக்கொஞ்சி மணவெறி யேற்று
வருகின்ற தென்றலைப் போலே,
கலகல வென்றே காலையிற் பாடுங்
கட்டிலாப் புள்ளினம் போலே,
சலசலத் தோடிப் பயிர்களை வளர்க்குந்
தவமலை யருவியைப் போலே,
கலைவளர் கவிதை யருளுவாய் இன்பக்
கடவுளே கருத்தினில் அமுதே !

எத்திசை யுலகும் இனிதெனக் கொள்ளும்
இயல்புறு நிலையினை விளக்கிச்
சுத்த யோகத்தின் சுடரினைத் தூண்டித்
தொண்டறி வன்பினைத் துலக்கிச்
சத்தியத் துடுப்பால் வாழ்வெனும் படகைச்
சதானந்த வெள்ளத்திற் செலுத்தி,
நித்திய மான பயனளித் தெனது
நிறைகவி நிலவிட வருளாய் !

ஓங்கிய தெய்வச் சுவையிலே தோய்ந்திவ்
வுலகினில் அமரவாழ் வெய்தித்
தீங்கலை வளமை திசை திசை பெருகிச்
செவ்விய நன்னடை செழிக்க,
நீங்கறு சுடராய் என்னுளே நிலவு
நிமலனே நீதரும் இந்தத்
தேங்கவி யான பாரத சக்தி
திகழுக பயன்மிகச் சிறந்தே !

சித்தரின் உள்ளே தியானத்தில் வந்து
தித்திக்கும் சிவமயப் பொருளே,
சுத்தனும் புனித சக்தியுங் கூடி
சுடச் சுடத் தவம்பல புரிந்தே
இத்தல மெல்லாம் அருளர சாட்சி
இலக்கிய கதையினை யிசைக்க
வித்தகர் போற்றும் வேதவாக் குதவி
வெற்றிமேல் வெற்றி யீந்தருளே

கோரிநான் கொண்ட கொள்கைகள் அனைத்தும்
குயிற்றிய குணம்பெறு மாலை,
பாரத சக்தி, மாலையைச் சூட்டிப்
பரம நின் னருளையே போற்றி;
ஊருன தூராய், உளமுன துளமாய்,
உரையுன துரை; செய லுனதாய்ப்
பாரினில் வாழ்ந்துன் பெருமையைக் காணப்
பசுபதி யேயெனக் கருளாய் !

1. புதுநாட் படலம்

உலகம் வாழ்ந்திடத் தவஞ்செயும் உத்தமர் தலைவன்,
பலது றைகளிற் பயின்றொரு பொதுமுறை பணித்தோன்,
இலகு சங்கமும் கொள்கையும் இரவிபோன் றிலகிப்
பொலிய வந்தது சுத்தநாள் புதியபொன் னாளே ;

ஆனந் தக்கடல் மிதந்திடும் அமுதப்பொற் கலசம்
மான சூரியன் உதித்தது மறுவறு வானில்
தேனி றைந்தன நாண்மலர், இமயத்தின் சிகரம்
ஞான வெண்ணகை புரிந்தது நலங்கெழு நாளே.

மலைம கிழ்ந்தது; வளர்நதி மகிழ்ந்தது; கால
நிலைம கிழ்ந்தது ; நின்மல நிலையத்தின் யோகக்
கலைம கிழ்ந்தது ; பூமணக் காற்றுடன் கதிரும்,
தலைசி றந்தபே ரின்பத்தைக் குறித்தன தழைத்தே.

செண்டு மாமலர்த் தேனையுண் டோமெனத் திரியும்
வண்டு பாடிட வனப்புட்கள் பாடிடக் கங்கை
பண்டு போலவே பாடிடப் பணிநலம் புரியுந்
தொண்டர் பாடினர் புதுயுகந் தோன்றிடுந் துதியே.

செங்க திர்களை வீசியே செகமெலாந் திகழத்
தங்க மாக்கிடுஞ் சூரியன் போலவே, சாந்தம்
பொங்கு ஞானத்தைப் பூவினில் யோகத்தாற் பரப்பி,
மங்க ளப்புது யுகத்தினை வளர்குரு வாழ்க !

புதிய வாழ்க்கையும் புண்ணியத் திருக்களும் பொலிக !
முதிய நான்மறை மொழிந்திடு முதற்பொருள் பொலிக !
மதியில் ஒற்றுமை மனதினில் மங்கலம் பொலிக !
சதிசெய் பாபங்கள் ஒழிந்தருட் சாந்தமே பொலிக !

பால்வ ளங்களும், பயிர்கனி வளங்களும், வீரர்
வேல்வ ளங்களும், வித்தையின் வளங்களும், செய்ய
கோல்வ ளங்களுங் குடிகளின் வளங்களும், ஈகை
யால்வ ரும்புகழ் வளங்களும் இலகுக மிகவே !

அடிமை வாழ்க்கையும், அறிவிலிப் பழக்கமும், அரக்கர்
கொடிய போர்களுங் குண்டடிக் கூச்சலும் ஒழிந்தே,
படியி லேயருள் பாலிக்கும் பணிகளும் பயனும்,
குடிகொண் டாளுக குலவுக தேவரின் குணமே.

ஏக மாகிய பரம்பொருள் இறைவனை யடையுந்
தாக மோங்குக ; சாதகர் யாவர்க்கும் சுத்த
யோக சித்திகள் ஓங்குக ; வுளவறி வொளிர்க !
வேக மாகநம் விருப்பங்கள் வெற்றிகா ணுகவே !

ஒன்றி யுள்ளத் தொடுங்கி, மனத்தினை
வென்று, கண்ட விழுமிய உண்மையைக்
கன்றிற் கீயுங் கருணைப் பசுவென
நின்ற ளித்திடு நீள்புவித் தொண்டர்கள்.

அறிவும், ஆற்றலும், ஆத்தும சித்தியும்,
இறைவ னாகும் உலகினுக் கென்பவர்,
துறவு கொண்ட துகளறு நேயர்கள்,
அற வடிவம தாகிடும் அன்பர்கள்.

அரும்பு போலுள் ளடங்கித் தியானித்தே
கரும்பு போன்ற கடவு ளருட்சுவை
விரும்பி யுண்டொளி கண்டு மலர்ந்தவர்,
பெரும் புனிதன் பிறந்தநன் னாளிலே.

இரு ளரக்கர் இடர்களைப் போக்கிடும்
அருளை வேண்டினர் ; அன்பினை வேண்டினார் ,
பொருள றிந்த பொதுமறை யின்வழி
திரு வுலகந் திரும்பிட வேண்டினார்.

உளங் கவர்சம யோக சமாஜத்தைப்
பளிங்கு போலப் பரிசுத்த மாக்கியே,
வளம லர்கள், வனப்புறு தோரணங்
களை நிரம்பிடக் கட்டி யணிசெய்தார்.

வனப்பு மிக்க வளைவுக ளாக்கியே
நினைக்க நன்னெறி நீதி யெழுதினார்.
அனைத்தும் வாழ்கென் றருமறை பாடினார்,
மனத்திற் பூமியின் மங்கலம் போற்றுவார்.

கனியும் பாலுங் கடலையுங் காய்களும்,
இனிய மூலிகை யின்வகை யுங்கொண்டே
புனித நல்விருந் தாக்கிப் புசித்தனர்,
மனிததேவ மரபினர் ஒன்றியே.....

காலையெல்லாங் கரும மியற்றினார் ;
மாலை சுத்தன் மலர்க்குடி லின்முன்னே
நீல விண்மலர் நேர நெருங்கினார்
ஞாலம் வாழ்கென நல்லிசை பாடியே....

எளியநல் லுடையுடன், இனிய வாக்குடன்,
களிவளர் நகையுடன், கருணைக் கண்ணுடன்,
அளிவளர் கையுடன், அருட் கருத்துடன்,
ஒளிவளர் சுத்தனும் உற்ற மர்ந்தனன்.

முன்னுள தொண்டரை முனிவர் காவலன்,
புன்னகை குலுங்கிடப் பூங்க ணோக்கியே,
உன்னத மலையினின் றுருகி வீழ்ந்திடும்
சன்னதக் கங்கைபோற் சந்தம் பேசினான்.

சுத்தன்

பங்கய உளத்தில் அன்புப் பரம்பொருட் சோதி யான
செங்கதிர் படிந்தே, யோக சித்தியைப் பெற்றீர், சுத்த
சங்கமின் றடைந்த நன்மை சகலரும் அடைய வேண்டித்
தங்குல கெல்லாந் தொண்டு செய்திடுந் தருண மிஃதே !

பன்மய உலக மெல்லாம் பரந்தொரு மயமாம் சுத்த
சின்மய சக்தி யாலே, சித்திகள் பலவும் பெற்றீர்,
பொன்மய உடலும், உள்ளும், பூரண வாழ்வும் பெற்றீர்,
தன்மய வுயிர்கட் கெல்லாம் பணிசெயுந் தருண மிஃதே !

பூவினில் அசுர மாயம் புரிந்திடுந் தீதை மாற்றத்
தேவியல் கொண்ட நல்ல திருக்களை வளர்த்த செல்வீர் !
ஓவறு சாத னத்தால் உள்ளுறப் பெற்ற சித்தி
ஏவர்க்கும் எய்த வேண்டி ஏகிடுந் தருண மிஃதே !

கள்ளத்தால், அறிவி ழந்த காமத்தால், ஆண வத்தால்,
கொள்ளைப்பே ராசை யாலே, குணங்கெடு மாந்தர் மாற,
உள்ளத்தால், உண்மையான ஒன்றினை உணர்ந்தீர், அன்பு
வெள்ளத்தால்உயிர்த்தொண்டாற்றும்விழுமிய தருணம் இஃதே

புண்ணிய பூமி வாழப் பூதல மெல்லாம் வாழத்
திண்ணிய விரதங் கொண்ட தீரர்காள், இனிநாம் சென்றே
நண்ணுறு நலந்தீ தெல்லா நாயகன் இச்சை யென்றே
எண்ணிய கரும மாற்றும் இனியநற் றருண மிஃதே !

மக்களைப் பிடித்த லைக்கு மாவலிச் சனியனுக்குத்
தக்கதோர் விடைய ளித்துத் தானவஞ் சென்று வந்த
மிக்கநல் லன்பர் சேவை விழுமிய பயன ளிக்க
ஒக்கநாம் உலக மெங்கும் உதவிசெய் தருண மிஃதே !

துன்பிருள் அடிமை யச்சந் துயர்பல மேவ நாட்டில்
வம்புசெய் தூமகேது வகையிலா தொழிய, மாந்தர்
இன்பவா னரசை யிங்கே யெய்திடக் கரும யோகம்
அன்பினா லியற்றக் காலம் அழைத்திடுந் தருண மிஃதே !

காட்டினைத் திருத்தி, வேண்டுங் கருவிகள் உழைப்பா லெய்தி,
போட்டிபொ றாமை யற்ற புது சமயோகங் கண்டீர் ;
வீட்டினை யமைத்த தேபோல், வீறுகொண் டிடரை வென்று,
நாட்டினை யமைக்க வாரீர் ; நல்லதோர் தருண மிஃதே.

எல்லையிற் பொறுமை யாலே இன்னல்கள் அனைத்தும் போக்கி,
வல்பெருந் தவங்க ளாற்றி வரம்பெற்ற சுத்த யோகச்
செல்வர்காள், கலியொ ழிந்து, சத்திய சீலர் காலம்
ஒல்லையி னொளிர நம்மை உதவிடுந் தருண மிஃதே !

அயலவர் மாயத் தாலே, அரக்கரின் பிடிப்பி னாலே,
துயிலுறு நாடு மீண்டுஞ் சுதந்தர வுணர்ச்சி பெற்றே,
செயலுடன் எழுந்து வீரத் திருவுறு பணிகள் செய்யப்
புயவலி யுடனே தொண்டு புரிந்திடத் தருண மிஃதே .
பொன்பழுத்த பரஞ்சோதி பொழியருளி னாலே,
புதுயுகமும், புதுவாழ்வும் பூமியிலே பொலிய,
அன்புளத்தீர் வாருங்கள் அருட்பணிகள் புரிவோம் !
அசுரபயம் ஒழிந்திடவே, அதிமனிதர் செல்வோம் !

பண்படுத்தி விதைவிதைத்தே, பத்திவெள்ளம் பாய்ச்சிப்
பயிரெனவே உயிர்க்குலத்தைப் பரிவுடனே போற்றி,
விண்பழுத்த பேரின்பம் வியனுலகிற் கனிய
வீறு கொண்ட வேலைதொடர் வேளையிது வாரீர்.

கல்வி கேள்வியிற் கடவுளின் அருளினிற் கனிந்த
நல்ல தொண்டர்காள், அவரவர் நாட்டினுக் கியற்ற
வல்ல தொண்டினை வகையுற நினைத்தினி வகுத்தே,
சொல்லுவீர் அதைப் புரிந்திடத் துணிகுவீர் இனிதே....

இந்த மாப்பணிக் கெழுந்திடும் அன்பர்காள், உள்ளே
அந்த ராத்மனைக் கலந்துநீர் அமைதியா யிருந்தே,
சொந்த வாழ்வையே பொதுநலத் தொண்டெனச் செய்யும்
சிந்தை யூறிய தியானத்திற் செயற்றிறம் பெறுவீர்.

சுத்த னிவ்வகை சுதந்தர வுணர்வுறப் பேசிச்
சத்தியன் செயும் பணியையுந் தகையுறச் சொல்லிச்

சித்தர் கூட்டத்தைத் தியானத்திற் சேர்ந்திட வமர்த்திச்
சக்தி யூற்றினன் சுத்த சமாதியி லிருந்தே......

வான மர்ந்தது ; பூமியும் அமர்ந்தது ; மலையின்
கானமார் நதி யமர்ந்தது ; கருணையின் மன்னன்
மோனமா யமர் நிலையத்தின் முனிவரர், உள்ளே
தான மர்ந்தது — பாரத சக்தியாம் தணலே....

ஆன்ற மாதவர் அருந்தவம் அளித்தசிற் சக்தி,
சான்ற யோகிகள் சாதனம் சாதித்த சக்தி,
ஈன்ற தாயினும் இனிதுசெய் எழில்பெருஞ் சக்தி,
ஊன்றி யுள்வளர் ஒள்ளிய பாரத சக்தி.

இகல வர்செயும் இடர்க்குலம் ஆயிர மேனும்,
தகர் திறம்பெறத் தழைத்திடும் ஆத்தும சக்தி,
அகவி ருளையும் துயரையும் அழித்தொளி துலக்கும்
பகலெ னத்திகழ் ஞானமாம் பரிதியி தாமே

அரக்கர் தீமையை வேருடன் அழித்திடும் ; தணலைச்
சுரக்குந் திவ்விய சுதந்தரச் சுடர்பெறுஞ் சக்தி ;
இரக்க மன்பருள் ஈகைதி யாக விவேகம்,
பரக்க நல்கிடுஞ் செல்வமாம் பாரத சக்தி.

ஆணில் ஆண்மையும், பெண்ணினிற் பெண்மையு மாகிக்
காணு முக்குண உலகினிற் காட்சியாஞ் சக்தி ;
வீணுறும் பிடி வாதத்தை வீழ்த்தியன் புடனே
பேணுந் தூயரைப் பெருமைசெய் பாரத சக்தி.

சோக மோகத்தைத் துரத்திடும் தூயசிற் சக்தி ;
யோக மேதரும் உத்தம நித்திய சக்தி;
ஏக மாகி யிவ் வுலகெலாம் இலகியா னந்த
போக மீந்திடும் புண்ணிய பாரத சக்தி.

சோர்வும் அச்சமுந் துயரமுஞ் சோம்பலுந் துடைத்தே,
வீர தீரமும் வினையுல கனைத்தையும் வெல்லும்
காரி யத்திற னுந்தருங் கைகண்ட சக்தி
பாரதத் திரு நாடுயர் செழுந்தவப் பயனே !

இத்தகைப் பெருஞ் சக்தியுள் ளிறங்கிடு மெல்லை,
சத்த மின்றிநற் சமயத்தில் சார்ந்தனர் இருவர் ;
சுத்த யோகியத் தூயரை யுடன்வர வேற்று
மெத்தவும் உப சரித்ததை விளம்புவ தென்னே !

செய்ய பாரத முனியுடன் சித்திமான், எங்கள்
ஐயன் பால்வரும் செய்தியோர் அதிசய மாமோ ?
"வையங் கூவுதுன் வரவினை வரத" வென் றவர்சொல்
மெய்யு ரையினை விரும்பிடார் நிலமிசை எவரே ?

கண்டதும் பெருங் காதலோ டருட்பெருந் தூயன்,
வண்டுணா மலர் சொரிந்தவர் மலரடி பணிந்தே,
பண்டுடன் பசுப் பால், பருப் பவர்பசிக் களித்தே,
உண்டு சற்றிளைப் பாறவும் உலகியல் கேட்டான்....

வீட்டிற் குற்றதும் வெவ்விய தூமகே துவினால்,
நாட்டிற் குற்றது நாயகன் யோகத்தை நாடிக்
காட்டிற் குற்றபின் கண்டதும் பாரதன் கதைக்கக்
கேட்டவா றுரை செய்குவேன் கேண்மினோ புலவீர்...

2. போற்றிப் படலம்

வாழ்வை முற்றிலும் வளர்தவ யோகமே யாக்கித்
தாழ்வுயர் வறச் சத்திய சமரஸ வெளியிற்
சூழ்புவியினில் ஆண்பெண்கள் சுதந்தர மாக
வாழ நல்வழி கண்டனை வரதநீ வாழ்க !

தான வர்செயும் அதர்மத்தைத் தகர்த்திட வேண்டி
மோன மாகச்சிற் சக்தியை முத்தியாற் பரப்பி,
மான வர்களை அதிமனி தரின்மர பெனவே
மேனிலைபெறச் செய்தனை ; விழுமியோய் வாழ்க !

ஆதி ஈடனும் சுவர்க்கமும் அமரநா டதுவும்,
காதை சொல்லிடும் கற்பக விண்ணுமிவ் வுலகில்,
சாதி மாமத பேதமே சார்வறச் சாந்தச்
சோதி மாதவச் சுதந்தர சக்தியாற் படைத்தாய்.

இளமை கொஞ்சிடும் இயலழ குடன்மலை யழகும்,
வளமை கொஞ்சிடும் மலர்கனிச் சோலையின் அழகும்,
தெளி புனல்களுந் தெய்விகக் கைலையைக் காணும்
உளம கிழ்வுமென் னுயிரினுக் குதவிடும் களிப்பே.

துங்க மான மந்தாகினி ஓம்எனத் துதிக்கத்
தங்க மாங்கனித் தருக்களிற் பறவைகள் பாட,
பங்க மாம்புவிப் பாசங்கள் விலகிய சுத்த
சங்க மங்கள கானங்கள் சாந்தமீந் தனவே.

வேத மெய்ப்பொருள் விளங்கிடக் கண்டுளம் விண்டே,
சாத கர்களைப் பயிற்றியிச் சகத்தினுக் கெல்லாம்
ஓதிடாதற வழியினை யுணர்த்திடும் , பரம
சோதி வீசிடுஞ் சுத்தசங் கத்தினைப் படைத்தாய்.

கொடிய ணைந்திடு மரங்களுங் கொழுங்கனி மலரும்,
படிய ணைந்திடும் பசுமையும், படிகவா றணையும்
முடிநி வந்திடு மலைகளு, முத்தமிட் டழகைக்
கடிக மழ்ந்திடு மூலிகைக் காற்றையு நுகர்ந்தோம்.

புண்ணி யப்புனல் படிந்தரன் புகழினைப் பாடி,
விண்ண ளாம்பனி மலைகண்டு வேகமா யிங்கே
நண்ண லும்ஒரு நவசக்தி யின்பத்தை நயந்தோம்,
எண்ணந் திண்ணிய வெற்றியென் றிதயத்திற் களித்தோம்.

பரவ சம்பெறும் பாரத முனியிவை கூறி,
வரதன் சொல்வர லாற்றையும் அறிந்துதான் வகிக்கும்
விரத முஞ்சொலி, சித்திமான் விருப்பையுங் குறித்தே,
இரவை யோட்டிடும் இரவிநீ யெழுகென வுரைத்தான்.

சுத்தன்

இரவி இப்புது நாளினில் எழுந்தது பெரியோய்.
கரவுங் கள்ளமுங் கடுங்கொலைப் பாபமும் கடிந்தே,
சுரகு ணத்தினைத் துய்க்குமுன் சுதந்தர மற்றே,
இரவி லிப்புவி வருந்திய வகையினை யியம்பாய்....

பாரத முனி

பத்தி மான்களின் பாவன னாகிய பகவன்,
புத்தி மான்களின் போதனை புறக்கணித் துலகம்,

எத்த கைத்துயர் வருந்திய தென்பதை, நமது
சித்தி மான்சொலக் கேளெனச் சிவமுனி குறித்தான்.

சித்திமான்

பிறந்ததும் வளர்ந்ததும் பிறர்க்கு வாழநீ
சிறந்ததும், கலியினைச் செயித்து, நீளிசை
நிறைந்ததுந் துறந்தது நிமல யோகத்தில்
உறைந்ததுங் கண்டுனை வணங்கும் உள்ளமே.

முயன்றநின் அற்புத முயற்சி திவ்வியப்
பயன்றரு நேர்மையும், பாரில் உன்றனால்,
இயன்றதும் அறிந்துளம் எண்ணி என்மனம்
வியந்தது ; மகிழ்ந்தது வெற்றி கூறியே !

அங்குநீ துறந்தனை ; அணிநிலா விலாக்
கங்குலைப் போலகக் கவலை மூண்டனம்,
இங்குன தருந்தவ வியல்பைக் கண்டதும்,
செங்கதிர் உதித்ததெஞ் சித்த வானிலே.

அன்னையும், அப்பனும், அரிய நண்பனும்,
பின்னுள தலைவனும், பிரானும் நீயென
உன்னையே நல்லவர் ஓது கின்றனர் ;
தன்னையே உலகுயத் தந்த தீரனே.

உலகினைத் துறந்தனை உலகைக் காக்கவே,
அலவற வருந்தினோம் ; அசுரர் மாயையாற்,
கலகமும் போட்டியுங் கலியும் கேதுவும்,
பலதுயர் செய்யினும் பான்மை கெட்டிலோம்.

மன்னுயிர்க் குலமெலா மகிழ நீ செயுந்
தன்னல மற்றநற் றவத்தை யெண்ணியே,
அன்னைதன் குழந்தையில் அமைதி காண்பதே
என்னநாம் உன்புக ழெண்ணி வாழ்கின்றோம்.

கெடுமதிக் கலியனுங் கீழ்க்கு ணத்தையே
நடுவதிற் சலிப்பறு நாசத் தூமனும்,
படுதுயர் செய்தனர் ; பரிவு கொண்டுநீ
விடுதலை தந்திட வேண்டும் ஐயனே.

மூதறி முனிவனு முதிய ராணியும்,
தீதறு நண்பருஞ் செய்த சேவையால்,
யாதொரு தீமையும், இன்று நாள்வரை
ஆதவன் கொடியினை அசைக்க வில்லையே.

கருமமே கண்ணெனக் கடமை செய்கிறோம் ;
ஒருமனத் திட்பமோ டுன்னை நல்லருட்
குருவெனப் போற்றிய கொள்கை, சித்தியின்
உருவினை இன்னமும் உலைக்க வில்லையால்.

நற்றவ முடிந்தது ; நாடு சேர்ந்துநீ
பற்றலர் கொடுமையைப் பங்கஞ் செய்குவாய் ;
ஒற்றுமை யாக்கிநல் லுறவை யூக்கியே,
தெற்றென நிலைமையைச் சீர்தி ருத்துவாய்.

பொய்யிருள் போக்குவை ; புனித சக்தியால்
மெய்யருள் இலக்குவை ; மேன்மை யீகுவாய்,
துய்யநீ எங்களைத் துகளி லாமலே
தெய்விக வாழ்வினிற் சேர்க்க வேண்டினோம்

கண்ணனும் புத்தனுங் கந்த வேளும்போல்,
எண்ணிய தவத்தினால், எடுத்த காரியம்
திண்ணிதின் வென்றிடும் என்று தேர்ந்தனம்
உண்மையின் உள்ளத்தில் ஒளிரும் தூயனே.

சுத்தன்

என்செய லெதுவு மில்லை என்னையா ளுடைய சுத்தன்
அன்னைபோல் சக்திப் பாலை அளித்தெனை வளர்த்து நாளும்
பின்னொரு பந்தமின்றிப் பேச்சறு தவத்தி லுய்த்தான் ;
அன்னவன் அருளை யன்றி யடியனுக் குய்வுண்டாமோ ?

அற்புத மான சுத்த சக்தியின் அருளி னாலே
சிற்பரா னந்த யோக சித்தியைக் கண்டேன்; ஐய
கற்பினைக் காத்து நிற்கும் கன்னிபோல், உள்ள மூறும்
அற்பினா லவனுக்கேயான் ஆசைகொண் டுயிர்ப்ப தாமே.

எனக்கொரு வணக்கம் வேண்டேன்; எம்பிரான் சுத்த தேவன்
தனக்குநீர் சரண மாவீர்; சமயமாஞ் சழக்கிற் சிக்கி,
மனக்கிலே சப்ப டாது மறுவறும் உண்மை தன்னைத்
தனிக்குரு வாகி யுள்ளே தந்தனன் சிந்தை மேவி.

நிசமுள சுத்த சக்தி நெறியினைப் பற்றிச் சென்று,
நிசியிருள் இடர் வருந்து நிலவுல கொளிபெற்றுய்யப்
பசிவளர் பதித ருக்குப் பரனருட் பால்சுரக்க
சுசியுடன் வாழ மாந்தர் தொண்டுசெய் தொண்டன் யானே.

இந்தநல் லுலக மெல்லாம், இராக்கதக் கொடுமை மிஞ்சி,
வெந்துய ரடைந்த போது, விடுதலை தந்து காக்க,
முந்துநாள் அருளைத் தந்து, முனிவருக் கினிது செய்த
தந்தையென் முறையுங் கேட்டுத் தன்னருள் பொழிந்தானிங்கே

அவ்வருட் சக்திக் கேயான் அடிமைசெய் வாயி லாக,
வெவ்விய தானவர்கள் வேதனை தீர்க்க வந்தேன்.
செவ்விய பாத்தி ரங்கள் சேர்ந்தன; இனியிக் காலம்
ஒவ்விய செய்யு முன்னே உன்கதை யுரைத்தி டாயே....

கலியனெவ் வாறு மீண்டான் ; கலங்கறு நாட்டி லின்று
புலியெனத் தூமகேது புகுந்தவா றென்னே? அன்னார்
நலிவுறா ததர்மத் தாலே நாட்டினை வளைத்த தென்னே !
பொலிவுறு புத்தி மானே புகலுவை புலவ ரேறே.

3. கலி மீண்ட படலம்

கோகுலக் கண்ணன் போலே கோதம புத்தன் போலே,
ஆகுலந் தீர்க்க வந்தாய் அரவிந்தக் கண்ணா கேளாய் ;
போகமா நகரை நீயும் பொட்டெனத் துறந்து, முன்னே
ஏகலும் உன்சொற் போற்றி இந்திரைக் குதவி செய்தோம்.

பகவநீ துறந்த தாலே, பங்கயச் செல்வி சின்னாள்
அகமலர் வாடி வாடி ஆறுத லடைந்த டைந்து,
முகமலர்ந் தெங்க ளுக்கு முதற்பெரும் அன்னை யாகித்
தகவுடன் செங்கோ லோச்சித் தருமத்தைத் தாங்கி வந்தாள்.

ஆதவன் பிசகி னாலும், அரசவை தவற மாட்டாள் ;
வேதநன் னெறியா லுன்றன் விதிமுறை காத்து நின்றாள் ;
மாதமும் மாரி பெய்ய, என்னுயிர் மகிழ நாட்டில்
யாதொரு குறைவு மின்றி இந்திரை யன்னை ஆண்டாள்.

அன்னநம் அரசிக் கேற்ற துணைவலி யாக யானும்,
பின்னுறும் அமைச்சர் தாமும் பெருந்தகை முனியும் சேர்ந்து,
மன்னறங் காத்து, நாட்டு மக்களை உயிர்போற் பேணி
உன்னறந் தழுவித் தூய உண்மைக்கே வாழுகின்றோம்.

இணையறும் ஆத்ம ஞானம், இனியநற் கல்வி வாழத்
துணைதருந் தொழில்கள், செல்வத் துறைதரு வாணி கங்கள்,
கணைதரு வீரக் காவல், கவிதரு புகழ்ச்சி யெல்லாம்
தணிவறத் தழைக்க நாட்டைத் தாங்கினோம் தீங்கி லாதே !

தீரனாம் புத்தன் போன்ற திருவகக் கருணை கொண்டாய்,
வீரனாம் சிவாஜி போன்று கலியினை வென்ற சூரா,
ஆரண முனிவர் போன்றே அருந்தவம் புரிந்த தூயா,
பாரத நாட்டை யுன்பால் அன்பெனப் பரிவின் ஆண்டோம்.

ஒளிவளர் மணியே, எங்கள் உள்ளமுன் உள்ள மாகி,
அளிவளர் உன்றன் அன்பே ஆருயிர் நேய மாகக்
களிவளர் கருத்தி னோடுங் கடமையைக் காத்து வந்தோம் ;
தெளிவளர் உனதி யோக சக்தியுந் தினமும் தேர்ந்தோம்.

தாயென நாடு தாங்கத் தருமமே அரசைத் தாங்கத்
தூயநல் லமைச்சர் வைரத் தூணென நீதி தாங்க,
நீயெமை யிங்கி ருந்தே நீளரு ளாலே தாங்கத்
தேயத்தை அன்னை தாங்கச் சேமமாய் வாழ்ந்து வந்தோம்.

அத்ததி யுலக மெல்லாம் அலைந்தலைந் துனது தந்தை
சத்தியன் இருக்கை தேடிச் சலித்தநம் உள்ளம் பொங்க,
உத்தமச் சீகரன்பால் உதவிய கடித மொன்று
வித்தக மன்னன் செய்தி விளம்பிட வியந்தோம் ஐயா

சத்தியன் கடிதம்

இளநகைச் செல்வன், சுத்தன், இந்திரை யரசி, ஞான
வளமிகு முனிவன், சித்தி மந்திரி, அனைவருக்கும்,
உளமிகும்அன்பைச்சொல்லி,உண்மையின்அழைப்பைஏற்றேன்;
எளியவன் பணிக்கி றைவன் இரங்கிநற் றுணையு மீந்தான்.

இல்லறம் இடைநின் றாலும், ஈன்றவள் எதிர்நின் றாலும்,
செல்வனின் பாசம் வந்து செல்வழி குறுக்கிட் டாலும்,
சொல்லறங் காக்குந் தூயர் துணிந்ததைத் துறப்ப துண்டோ?
நல்விடை கொள்கிறேன் ; என் கனவினை நனவ தாக்க.

சித்தனோ டசுர நாடு செல்கிறேன், கலையி னாலும்,
சுத்தசன் மார்க்கத் தாலும், சுதந்தர ஒளியைத் தூண்டி,
அத்தனின் கருணை யாலே அதர்மத்தை மாற்றிக் காமப்
பித்துடை யவுணர் போர்ப்பேய் பிறகிடத் தொண்டு செய்வேன்

விரிவுரை யெல்லாம் சுத்தன் அறிந்திட விளம்புகின்றேன் ;
அரியதோர் கருவியாலே போகனின் அருளி னாலே,
நரசமு தாயத் திற்கு நமனென வாய்த்த ஊணர்,
தரையெங்கும் பரவி, யான்ற தருமத்தை யழிக்கின் றாரே.

மந்திரி மணியே, மீண்டும் வஞ்சகக் கலிய னுள்ளே
வந்தறந் தேயத் தீமை யிழைத்திடா வகையைச் செய்வீர் ;
கொந்தளித் தகந்தை மோதுந் தானவர் கூட்டம், உள்ளே
முந்திடா தமைதி யாக முப்புறம் விழித்தி ருப்பீர்.

இல்லறம் வழுவி டாமல், இயற்கையோ டிணைந்த தூய
தொல்லறம் வழுவி டாமல், சுத்தனார் தவத்தின் வந்த

நல்லறம் வழுவி டாது, நாட்டினைக் காத்து நிற்பீர் ;
கொல்லறங் கொண்டவூணர் குலத்தினைத் திருத்தி மீள்வேன்

பார்க்கின்ற உலக மெல்லாம் படுகொலை யரக்கர் செய்யும்
போர்க்கடு மைக ளின்றிப் புதுயுகம் பிறக்க நன்மை
சேர்க்கிறேன்; முதிய வாழ்வைச் சிறந்சன் மார்க்கத் திற்கே
வார்க்கிறேன் மீண்டு மங்கே வருகிறேன் வாகை கொண்டே....

இனையன விளக்கி மெய்யன், ஏகியங் கிழைத்த தெல்லாம்,
தனையறி போகன் வந்து சாற்றிடக் கேட்டு வந்தோம்...
மனையினைப் போல நாட்டை மாண்புறக் காத்து வந்தோம்,
வினையுறு பயனாற் பின்பு விளைந்ததைக் கேளாய் மன்னா....

கலி வருதல்

காற்றினில் ஆவிபோற் கரந்து வந்திடுங்
கூற்றையுங் கண்டுடன் கொய்து வீழ்த்திடும்
ஆற்றலைப் படைத்தவர் அணிகொள் சேனையை
ஏற்றநல் லிடங்களில் இருத்திக் காத்தனம்.

வீரருள் வீர, ஓர் வியன்செய் கப்பலிற்
காரிருட் போர்வையிற் கரந்தி றங்கிய,
போர்மத வரக்கரைப் புரட்டித் தள்ளினோம்
ஆர்கலி விழுங்கிய ததர்மக் கூட்டத்தை.

கரையறு கருங்கடற் கடந்து, மற்றொரு
பெரியபோர்ப் படைவரப் பெயர்த்த னுப்பினோம்,
திரை தரைப் படையினைத் திடுக்கிட் டஞ்சியே
விரைவுறத் தானவர் வீட்டை நோக்கினார்.

அரியவர் பெரியவர் அன்பு மிக்கவர்,
உரியவர் அறிவினில் உயர்ந்த வீரர்கள்,
எரிவிளக் கென்னவே எங்குந் தேசத்தின்
புரிகளை உயிரெனப் போற்றி நின்றனர்.

இவ்வள விருப்பினும் இகல்செய் மாவலிக்
கொவ்விய கலியனும் ஊணர் கூட்டமும்
எவ்வகை வந்தனர் என்று காணிலோம் ;
வெவ்வியர் பலபல வேடங் கொண்டனர்.

அணியணி யாகநீள் ஆழிச் செல்வத்தைக்
கொணர்பெருங் கப்பலிற் கூலி வேலைசெய்
பணியினர் வந்தனர் ; பதுங்கிப் பின்பல
வணிகரும் வந்தனர் வாங்கி விற்கவே.

பகைமுக மறைத்தவர் பகட்டு மன்பினால்,
நகைமுக மினுக்கினால், இந்த நாடெங்கும்,
வகையுறப் படர்ந்துபின், வலிய சந்தைகள்
மிகையுற விரித்தனர் விந்தை வாணிகர்.

துணி நிறை மூட்டையைச் சுமந்து விற்றவர்,
அணிபெறுங் கடைகளை அகல நாட்டினார் ;
தணிவினைக் காட்டியே தயவைப் பெற்றதுந்
துணிவினைக் காட்டினர் துறைமு கங்களில்.

அன்னசத் திரங்களும் அறம டங்களும்,
இன்னியற் கல்விகள் ஈயுஞ் சாலையும்,
பொன்னுறப் பொலிந்திடும் புனிதக் கோயிலும்,
உன்னத மனையிலும் உறைந்து சென்றனர்.

பத்தர்போற் சிற்சிலர் பகட்டி வந்தனர் ;

சித்தர்போற் சிற்சிலர் செகத்தை யேய்த்தனர் ;
சத்தர்போற் சிற்சிலர் தந்திரஞ் செய்தார்,
எத்தர்கள் ஊரினை யேய்க்கும் வஞ்சரே.

இமயமா மலைமுதல் இலங்கை மட்டிலும்,
சுமையுடன் சுற்றிய சூழ்ச்சிக் காரர்கள்,
அமைதியின் அமர்ந்துபின் அகங்க ரித்தவர்,
இமைவறு வரிப்புலி யென்னப் பாய்ந்தனர்.

கரும்பெனப் பேசிய கள்ளர் தம்மையும்
விரும்பிநல் விருந்தென வீட்டி லேற்றுமே
அரும்பசி தீர்த்தநல் லன்பர் நெஞ்சிலே
பெருந்தின வேறிட நஞ்சு பெய்தனர்.

வாணிகஞ் செய்திட வந்து, மன்னரின்
ஆணவ நெஞ்சினில் ஆசை தூண்டியே,
வீண்சமர் கிளப்பினல் வீடி ரண்டுறக்
காணியுந் துறைகளுங் கலந்து பெற்றனர்.

நந்தொழி லாளரை நயந்து, கற்றதுந்
தந்தொழி லுக்கொரு சந்தை தேடினார்,
இந்தமா யாவிகள் இருவர், ஓர்பகல்
வந்தனர் என்னிடம் வணிக ரென்னவே.

கடையினை விரித்திடக் காணி கேட்டனர்,
உடையினுள் ஒளித்திடும் உள்ளங் கண்டுடன்,
நடையினைக் கட்டுமென் னாட்டி லேயுமைத்
தடைசெயுஞ் சட்டமென் றழுந்தச் சாற்றினேன்.

முன்கலி வித்திய முரண்கள், இன்னமும்
தன்னலக் கும்பலின் சரிதை யாகிடத்
துன்னிய சாகசர் தூண்டி யாசையைப்
பொன்புகழ்க் கனவினைப் பொருந்த வைத்தனர்.

அங்கொரு மன்னனை ஆத ரித்தபின்,
இங்கொரு மன்னனை இழிவு செய்குவார்,
உங்களுக் கேயினி யுதவி யென்றவர்
தங்களுக் குதவியை நாடுந் தந்திரர்.

எண்ணுறு சூழ்ச்சியால் இடம்பெற் றன்னவர்
உண்ணியென் றொட்டுவர் ; ஒற்றர் வந்திடிற்
கண்ணினிற் பொடியினைத் தூவிக் காணிலார்;
பண்ணிய தொல்லைகள் பகர வொண்ணுமோ ?

புண்ணிய நாட்டினிற் புலாலின் வாடையும்,
கண்ணினைச் சுழற்றிடுங் கள்ளின் வீச்சமும்,
பெண்ணினங் கற்பழி பெரிய தீமையும்,
புண்ணுறக் கண்டதும் புரிந்து கொண்டனன்....

தானவ மாவலித் தரக னாகவே,
மானமி லாக்கலி மாறு வேடத்தில்,
ஈனரின் படையுடன் இன்னல் செய்வதை
நானறிந் துடனொரு சபையை நாட்டினேன்.

சிற்றர சர்களிற் சிலர் எதிர்த்தனர் ;
மற்றவர் வந்தனர் மதிவ லாருடன் ;

கற்றவர் முடிவுறக் கருதிச் சொன்னதைப்
பற்றினர் பற்றலர் படையொ டுங்கவே.....

சித்தியைச் சார்ந்த சிற்றர சர்காள் !
நாட்டுத் தலைவீர் நன்னெறி மக்காள்,
நமது சுத்த நரபதி யன்று,
முறியடித் தோட்டிய முரட்டுக் கலியன்
தானவஞ் சென்று தரும விரோதப்
படையுடன் மீண்டும் பதுங்கியே வந்துளான்.
விண்குடை தனிலும் விமானந் தனிலும்,
மீன்பிடிப் பவர்போல் வேடம் பூண்டு
படகு களிலும் பாதகர் வந்தார்.
துணிகளை விற்கும் வணிகர் போலும்,
தொண்டர் போலும், துணைவர் போலும்,
கடையை விரித்துக் கனிவுரை பேசி,
மெல்ல மெல்ல விடத்தையூட் டினரே !
சிற்றர சர்களின் சித்தங் கலக்கி,
ஊன்மது காமம் ஊட்டி மயக்கி,
அறிவைக் கெடுத்தும் அறத்தைக் கெடுத்தும்,
ஒருவருக் கொருவர் ஒவ்வா தாக்கியும்,
சிண்டு முடித்தும் சண்டைக் கிழுத்தும்,
பழைய கதையைப் படிக்கத் தொடங்கினார்....
ஆதலால் அனைவரும் அறியச் சொல்வோம்;—
கலியன் அவன்படை காணில் எங்கும்
பிடித்துச் சிறையில் அடக்குமின் உடனே.
கதிர்க்கொடி முத்திரை காணின் அல்லது,
துணிமணி யெதையுந் தூக்கி விற்பவர்
கலியாட் களெனக் கடுஞ்சிறை யிடுமின்.
துறைமுகக் காவலர் கரைசேர் முன்பே
கப்பற் சோதனை கவனமாய்ச் செய்மின்.
விண்ணிலும் உங்கள் கண்ணினை ஓட்டீர் !
கீதையுங் குறளும் ஓதித் தினமும்,
அருட்பா டல்களை விருப்புடன் பாடிச்
சன்மார்க் கத்தைச் சார்ந்து வாழுமின்.
பஞ்சமா பாதகர் வஞ்ச வலைகளை
அறுத்தெறிந் துண்மை அறவழி நடமின்,
உலகம் வாழவே உறுதவம் புரியும்
புலவன், புனிதன், புண்ணியன் சுத்தன்,
கட்டளை தன்னைக் கருத்துடன் காமின்.
அதர்மப் படையுடன் அந்த ரங்கமாய்
உலவுங் கலியன் உதவியை நாடும்
அரசரைத் திருத்துமின் ; அல்லது விலக்குமின்.
காதுங் கண்ணுங் கருத்தும் வைத்துக்
கலியன் ஆட்களைக் கண்டுடன் கட்டிக்
காவலர் கேட்டுக் கடுஞ்சிறை யிடுமின்.
அதர்மத் தானவர் அடிமைக ளான
வேந்தர் நாட்டின் விரோதிக ளாவார்.
புண்ணிய நாட்டீர், புத்தனும் வீரனும்,
கண்ணனும் வந்த கண்மணி நாட்டீர்,
சிவாஜியும் பிரதாபனும் சீக்கிய குருவும்,
இராச ராசனும் இலகிய நாட்டீர் !
வீரத் தமிழர், வீர மராடியர்,
அக்கினி குலத்தினர், அகாலியர், கூர்க்கர்
வாள்வலி தாங்கும் வளமிகு நாட்டீர்,
பாபமே யறியாப் பாவன நாட்டீர்,

பஞ்சமே யறியாப் பல்வள நாட்டீர்,
கலைமிகு வங்கர்காள், காரியத் திறமிகும்
கூர்ச்சரச் செல்வர்காள், கொங்கணத் தொண்டர்காள்,
கன்னடப் புலவர்காள் கண்விழித் திருமின்.
அன்னியப் பகைவர்கை அடிமைப் பட்டால்,
ஆண்மையும் பெண்மையும் அல்லற் படுமே.
பொருளெலாம் கொள்ளை போகுமென் றறிவீர்.
பஞ்சமும் பசியும் பந்தமும் பிணியும்,
மடமையும் நாட்டைக் கொடுமைகள் செய்யும்.
அறிவீர் ! ஆதலின் அன்னியப் பகைவரை
இடங்கொடா தடக்கி, இரவிக் கொடிக்கு
நன்றியோ டிருமின் ! வன்றவக் கதிரோன்
அரசன் சுத்தன் அருட்சக் தியுடன்
புதிய வாழ்வைப் புதிய யுகத்தைப்
பொற்புற நாட்டும் அற்புதப் பணிக்குத்
துணைசெய உங்களைத் தூய ராக்குமின் !
அருளைப் பெறவுள் ளன்பை வளர்மினோ !
தீமையை வெல்ல நன்மையை வளர்மினோ...
இவ்வா றெங்கும் எழுத்திலும் சொல்லிலும்,
எச்சரித் தனைவரும் எழுந்திடச் செய்தேன்,
ஆயினும் அந்தப் பேயினுங் கொடியான்,
ஊட்டிய மயக்கால், உட்பகை கொண்டு,
நான்குசிற் றரசர் நாட்டைக் கெடுக்க
ஊணர் படையின் உதவியால் மீண்டும்,
கலியனைப் போற்றிக் கத்தியுந் தீட்டி,
எளிய மன்னரை எளிதாய் வென்றே
“அரசன் இங்கே ஆண்டி யானான்,
அரியணை வகிக்கும் உரிமை சத்தியன்
தம்பிக் கே” யென வம்பு தொடுத்துச்
சித்திக் கோட்டையைச் சுற்றிச் சூழ்ந்தார்....
உடனே நாங்கள் படைவலி கொண்டே,
பகைவர் சேனை பதறப் பொருது,
பாதியைக் கொன்றதும் பயந்தவர் ஓடிச்
சிலநாள் ஒளிந்து, சேனை திரட்டிப்
புதுக்கொடு வெடிகளாற் பொதுக்கொலை செய்து,
கலிவளர் நாட்டைக் கைப்பற் றினரே,
சிற்றர சுகளிற் சிலவும் பற்றினார்,
செருக்குறு கலியன் செயமுடி சூடி
நாட்டை யாள நாள்வைத் திருந்தான்...
அத்ததி அரக்கர் ஆகாய வழியே
பொத்தெனக் குதித்துப் போர்முர சடித்தார்.
தூமகே துவெனும் துட்டக் கொடியோன்,
கலியனைப் பற்றிக் கடுஞ்சிறை யிட்டுத்
தானே யரசெனத் தற்செருக் குடனே
முடிபுனைந் ததனை முதல்வா கேளாய்...
இடிவிழுந் ததுபோல் இருந்ததச் செயலே...

4. தூமகேதுப் படலம்

“பொன்முடி சூடியிப் பூமி யாளுவேன்
என்னினும் பெரியவர் எவரே” யெனத்
தன்னகங் காரத்தைக் கலியன் சாற்றியே
மன்னவை புகுந்தனன் மமதை விம்மவே.

அத்ததி அளவறும் அன்பு பேசியே,

முத்துருள் புன்னகை முகத்திற் காட்டியே,
மெத்தவும் பரிவுடன் விநய மாகவே
எத்தனாங் கேதுவும் எய்தி னானரோ !

மாவலி யனுப்பிட மல்லர் தம்முடன்
ஆவலாய் வந்தனம் அன்பு செய்யவே,
நாவினில் அளவறு நட்பு கொண்டநம்
பூவுல காட்சியும் பொருந்து மின்பமே.

நயவுரை இவ்வகை நவின்ற கேதுவைப்
புயவரை புயவரை பொருந்தப் புல்லியே,
பயமிலை இனியெனப் பதகன் விம்மினான் ;
கயவரின் உறவினிற் கருணை காணுமோ ?

நண்பகல் வெளிச்சத்தில், நட்புக் கொண்டவன்
விண்கருந் திரையிட வேறு மாறியே,
உண்களின் வேகத்தில் ஊணர் சேனைக்குக்
கண்ணடித் தொருபுரம் கலியைக் காட்டினான்.

சட்டெனக் கேதுவின் றான வர்களும்,
கட்டினர் செருக்குறு கலியை வெம்மையாய்த்
திட்டினர், கொட்டினர் சிறையி லிட்டனர்,
வெட்டினர் விடுதலை விளம்பு மாக்களை.

கலியினைச் சிறையினிற் கட்டிப் போட்டதும்,
கிலிகொளு மோகியைக் கேது பற்றியே,
நலிவுறல் ஏன்இனி ! நகைமல ரெனப்
பொலிகவென் றணைந்தனன் போலிக் காமுகன்.

கற்பெனிற் கைகொட்டிச் சிரிக்குங் காமுகி
அற்பமாம் சுகத்தினை அவாவு மோகியும்,
புற்புதக் கனவெனக் கலியைப் போக்கியே
பொற்சுக வரக்கனைப் புல்லி யாடினாள்.

ஆயிரங் கோணல்கள் அறியக் காட்டியே,
வாயிலும் உதட்டிலு மலர்க்கண் கோணத்தும்,
தூயரு மயங்கிடத் தொழில்செய் மாதரின்
மாயங்கள் யாவரே மதிக்க வல்லவர் ?

“கொல்லுவேன் பாதகி” என்று கோபமாய்ப்
பல்லினைக் கடித்தனன் பழங் கலியனே
“செல்லறுங் காசெ”னச் சிரித் தரக்கியும்
புல்லினள் கேதுவைப் பொன்செய் மார்பிலே.

அரக்கரை வைதனன் ; அழகு மோகி யாம்
பரத்தையைப் பழித்தனன் ; பழிசெய் கேதுவை,
உரக்கநின் உயிரினை உலைப்பன் என்றனன் ;
இரக்கங்கொள் அண்ணனை எண்ணிக் கூவினான்.

சத்தியச் செம்மலே, சாது மன்னனே,
எத்தனை பிழைகளை யியற்றிக் கெட்டனன் !....
சித்தியின் மரபினைச் செருக்கத் தீட்டிய
கத்தியென் கழுத்தினைக் கதறக் கொய்ததே.

யாதொரு தீமையும் இயற்றி லாதநின்
ஆதவன் குலத்தினை அழிக்க முந்தினேன் ;
பாதகப் பதரினைப் பரிந்து மன்னிப்பாய்...
வேதனை தந்தது விதிவி னைப்பயன்.

ஒட்டுற வாகிய ஒருகு லத்திலே
கெட்டவன் உதித்தனன் கிளைய றுக்கவே...
பட்டனன் ! வினைப்பயன் ! பாச வெஞ்சிறை
விட்டதும் அடைக்கலம் ! விமல நாதனே !....

ஐயனை என்னுடை யண்ணல் மைந்தனைத்
துய்யனை யடைந்தினித் தொண்டு செய்தலே
உய்வழி என்றனன் உருக்குச் சங்கிலி
கையிலுங் காலிலுங் கலக லக்கவே.

இச்ச மயம் இகல்செய் அரக்கர்கள்,
அச்சு றுத்தி யடித்துப் பறித்ததை
மெச்சு கேதுவின் வெற்றி விளைவென
உச்ச மாக முரசடித் தோதினார்.

காலிக் கூட்டங்கள் கட்குடித் தாடிடக்
கூலிக் கூட்டங் குரலெடுத் தோதிடப்
போலிக் கூட்டங்கள் பொன்முடி சூட்டிடக்
கேலிக் கூத்தினைக் கேட்டு வியந்தனன்.

உலகை யாளும் உயர்ந்தநல் லாட்சியாங்
கலையை எங்குங் கனக வெறியினாற்
கொலைசெய் யூணக் கொடுஞ்செயல் வேந்தனும்
மலையைப் போலந்த மன்றில் எழுந்தனன்.
காகந் தன்னை வெருட்டுங் கருநிசிக்
கூகை தன்புகழ்க் கூச்சலிட் டாலென
ஓகை கொண்டபல் ஊணர்கள் வாழ்த்திட,
மோகி கேது முறுவலித் தோதினான் :

தூமகேது

மாவலி எங்கள் கோவலன் உயர்த்திய
வாட்கொடி யின்கீழ் வந்தமா னிடர்காள் !
என்னை அரசாய் ஏற்ற நண்பர்காள்,
தானவச் சட்டந் தலைக்கொண் டென்னுடன்
அரிய தொண்டுகள் ஆற்றிட நின்றீர்.
பெரிய நலஞ்செயப் பிரியங் கொண்டே
கடலைத் தாண்டிக் ககனந் தாண்டி,
உடலுக் குற்றிடும் இடர்களைத் தாண்டி,
உங்களை யாங்கள் உய்விக்க வந்தோம்.
பலமதம், பலவகை பலநிறங் கொண்டே,
கலகமிட் டிழிந்த கடையரை நாங்கள்
அமைதியாய் வாழவே அடக்கி யாளுவோம்.
சாதி வேற்றுமை, சமய வேற்றுமை
சாமி வேற்றுமை சற்று மின்றியே,
எண்டிசை மாக்களைத் தொண்டராய்க் கொள்வோம்.
எனதுன தென்னும் இகலும், போட்டியும்,
இல்லை யினிமேல் எல்லாம் எமதே.
மானிட ராக மாநிலத் துள்ளார்,
தானவ ருக்குச் சமவூ ழியரே.
நாட்டிய விதிப்படி நடந்தார் மகிழ்வார்.
ஊனை வளர்க்கும் உணவு தருவோம்.
ஊக்க மளிக்கும் ஒன்றை ஊட்டுவோம்.
இளமை விரும்பும் இன்ப மளிப்போம் ;
ஆடல் பாடலின் அருவிருந் தளிப்போம்.

தானவர் வகுத்த சட்டந் தவறினால்,
எங்களுக் கெவரும் எதிர்சிறி தாற்றினால்,
கட்டளை மீறிக் கதையை வளர்த்தால்,
கேட்டதைத் தராது கெடுவினை வைத்தால்,
துப்பாக்கி யாலே சுட்டுப் பொசுக்குவோம்.
தூக்குப் போடுவோம், துப்பாக்கி காட்டினால்,
பீரங்கி யுள்ளது ; போர்களுக் கேற்ற
விமான வெடிகளும் வெவ்விடப் புகைகளும்,
கண்ணிகள் பலவும் காத்திருக் கின்றன.
மாவலி யடியார் மடியார் என்றும் ;
மாவலிப் பகைவர் மடிவார் உறுதி.
அறிஞரும் புலவரும் அப்புறஞ் செல்க.
படிந்து நடக்கும் அடிமைகள் வருகவே !
அள்ளிப் பணந்தரும் புள்ளிகள் வருகவே !
எம்மையே பணியும் ஏழைகள் வருகவே !
இவரே என்னர சியக்கும் கருவிகள்.
அரசன் மாவலி ஆணவத் துடனே
கடும்போர் தொடுத்தான் ; காரணம் அறிமின் !
அனலனிந் நாட்டில் ஆட்சி பெற்றால்,
ஆளையும் பணத்தையும் அள்ளி விழுங்குவான்.
உள்ள வளமெலாம் கொள்ளை போகும்.
பஞ்சமும் பிணியும் பரவுமென் றெண்ணியே,
உங்களுக் கெல்லாம் உற்ற நண்பனாம்
மாவலி யரசன் மற்போர் தொடுத்தான்.
போரினை வெல்லப் பொற்குவை தாரீர் !
நன்றிசெய் வீரே நன்றிசெய் வீரே !
கிளர்ச்சியாய்த் தூம கேதுபே சிடவே,
அடிமைப் பொம்மைகள் "ஆஹா" என்றன !
மடையரும் செல்வரும் சடசட வென்றே
கையடித் துடனே பைகளை அவிழ்த்தார்.
மாவலி கேது வாழிய நீடெனக்
குடித்தனர், களிப்பிற் குதித்தனர் ; ஆங்கே
பறைகள் கொட்டின பல்லிய முழங்கின,
அழகிளம் பாவையர் அரக்கனைப் புகழ்ந்து
பாடினார் ஆடினார் பரிசுகள் பெற்றார்.
"எம்மைக் காக்கவே இத்தொலை கடந்து
கப்ப லேறிக் கருணையோ டுற்றீர்,
தெய்வமு நீரே, திருமறை நீரே,
உமக்கே நாங்கள் ஊழியர்" என்று
மானங் கெட்ட மதியிலி மன்னரும்,
வயிறே பெரிதென வாழும் மாக்களும்,
அடிமை வலையில் அகப்பட் டாரே...
கலிநகர் அரக்கர் களிநக ராகவே,
பாரத தருமம் பாழாய் மறைந்தே,
அனாசா ரங்களும் அக்கிர மங்களும்,
வளர்ந்து, மக்கள் வாழ்வைக் கெடுத்தன.
போலிப் படிப்பும், போலி நடிப்பும்,
தலைவரிக் கொடுமையுங் கொலைவெறிக் கொடுமையும்
அன்னியச் சரக்கும், அகத்தொழி லழிவும்,
வறுமையும், கல்லா மடமையும் வலுத்தே ,—
புண்ணிய பூமி கண்ணியங் கெட்டதைக்
காணக் காணக் கவலை பெருகினோம்
வறுமை மடமை வஞ்சம் பொறாமை
சோடி நடனம் ஆடிக் களித்தன
அந்தோ அந்தோ அழிவு காலமே !

5. போராடிய படலம்

சுத்தன்

மதுபுலால் அரக்கர் வந்து, மகுடமும் பூண்ட தென்னே !
முதுபுகழ் சிறந்த நாட்டின் மெய்வலி மூய்ந்த தென்னே ?
பதியறம் விளங்கு நாட்டிற் பாபத்தின் பேரி கைகள்
அதிர்வதும் என்னே ? நம்மோர் அடிமைகள் ஆன தென்னே ?

வேல்கொண்ட வெற்றி, வேத வித்தகர் வெற்றி, செய்ய
கோல் கொண்ட வெற்றி யின்பங் குடிகொண்டபரத நாட்டில்,
போலிகள் புகுந்த தென்னே ? புண்ணியந் தேய்ந்த தென்னே ?
மால்கொடு மன்னர் இன்று மாவலிக் கிசைந்த தேனோ ?

தேசமெந் தேச மென்றே சிந்தனை செய்வோர் எங்கே ?
ஆசையாய்ப் பொது நலத்தை யணிந்திடுந் தொண்ட ரெங்கே ?
நேசமன் னர்களெங்கே ? நேர்மையும் அறமும் எங்கே ?
வீசுமின் வாளு மெங்கே ? விதிவலி தான தந்தோ ?

சுதந்தரத் தணலைக் கொண்ட சூரரின் வீர நாடு,
மதந்தரு தான வர்க்கு மண்டியிட் டடிமை யான
விதந்தனை யறிகிலேன் ; பின் விளைந்ததை யறிகிறேன் ; என்
இதந்தரு சித்தி யங்கே யியற்றிய கடமை யென்னே ?

தொண்டையும் அடைக்கக் கண்ணீர் துளும்பிடத் தூய னாங்கே,
பண்டைநன் னாடு போன கதியினைப் பகர்ந்த போது,
எண்டிசை திகைத்த தேங்கி, யியற்கையும் விசன மிக்கக்
கொண்டது காற்றும் புள்ளுங் குரலடைத் திருந்த மாதோ !

சித்திமான்

ஆங்குறு மோனந் தன்னை ஆண்மையாற் பிளந்த மைச்சன்,
“நீங்கறு கருணை யாலே நீளுயிர்த் துயரை யெண்ணிப்
பூங்கணீர் வடிக்கும் எங்கள் புனிதனே, நாங்க ளெல்லாம்
தூங்கினோ மில்லை ; எங்கள் சூரப்போர் கேளா” யென்றான்.
தோற்க வில்லை துணிவுறு வீரர்கள் !
ஏற்க வில்லை இகலவர் ஆட்சியைப்
பார்க்கப் பார்க்கப் பதைத்துளம் பொங்கியே,
வேர்க்க வெட்கி விரைந்துடன் கூடினோம்.

வீட்டை யன்னியர் வெய்துறப் பற்றியே
நாட்ட றத்தை நலிக்குங் கொடுமையைச்
சாட்டை யென்னச் சரேலென் றுணர்ந்தனம்.
தீட்டு வாளொடு செஞ்சினங் கொண்டனம்.

வங்கர் கூடினர், மாரதர் கூடினார்
சிங்கம் போன்ற செழுந்தமிழ் வீரரும்,
தங்கம் போன்ற சமர்த்தருங் கூடினார்
எங்கள் பாரதம் என்னும் உணர்ச்சியால்.

பணத்தி னுக்கும், பரத்தைக்குங் கள்ளுக்கும்
குணத்தை விற்றுக் குடிகெடுந் தாதரைப்
பிணத்தை யொப்பப் பிறகி லொதுக்கியே
கணத்தி லொற்றுமை கண்டுமு னின்றனர்.

தன்னலந் துறந்தாய் தவ சக்தியால்,
இன்னல் போக்கும் இறைவநின் அன்பையே,
உன்னி நாங்கள் உருவியெம் வாளினை
மின்னிட் டோங்கும் விரதங்கள் கொண்டனம்.

கல்லும் வேதத்தைக் காட்டிடும் பூமியில்,
வில்லும் வேலும் விரோத வரக்கரை
வெல்லும் வீறுகொள் வீரரின் பூமியில்
எல்லை மீறி இகற்கொடி யாடுமோ ?

அருந்த வத்தில் அமைந்த சமூகத்தின்,
வருந்து நோயும் வறுமை மடமையும்
தெரிந்த ரக்கர்செய் தீமையும் ஆகுமோ ?
புரிந்த நீதியும் பொய்யெனப் போகுமோ ?

வசிக்க நல்ல வளம்பெறு பூமியும்
புசிக்க நெல்லும் பொலிந்தொளிர் நாட்டிலே,
பசுக்கொ லையும் பரிவறச் செய்தெமை
நசுக்குந் தானவர் நாடக மாகுமோ ;
*நாலெட் டென்று நலம்செய் தருமங்கள்
சாலப் போற்றும் சமரஸ நாட்டிலே,
சீல மற்ற திருவிலி ராக்ஷஸர்
கால சக்கரங் கைக்கொண் டிருப்பதோ ?

புரையி லாத புலவர் அருளிய
கரையி லாத கலைவளர் நாட்டிலே,
நிறையி லாத நிருதரின் கும்பலும்
வரையி லாத வழக்கை வளர்ப்பதோ ;

கூற்றி னுக்குங் குலைந்தக மஞ்சிடார்,
ஆற்றல் வீரர்கள் ஆரிய நேரியர்
நேற்று வந்த நிருதர்முன் னேயிவர்
தோற்றனர் எனுஞ் சொல்லுமுண் டாவதோ ?

மனைய றத்தினை, மக்கள றத்தினை
அனைவ ருக்கும் அமைதி யளிக்கின்ற
தனைய றியும் சதானந்த யோகத்தை
இனிது போற்றிடு மெங்கள் சுதேசமே !

"ஆவு, மந்தண்மை யாளரும், பெண்டிரும்,
காவலனும், கடன்முறை காட்டியே,
மேவு வேதமும் வாழ்" கென வித்தகர்
தூவு மாமலர் தூய்மை யிழப்பதோ ?

வாழை போன்று வழிவழி வாழ்கின்ற
தோழ மையுந் துகளறு நீதியும்,
வீழ நாட்டினில் வீணர் கொடுமையால்
ஏழை யின்விழி நீரிங் கிறைப்பதோ !

குறையி லாத கொடைவளர் செல்வமும்,
சிறையி லாத திருவினர் கற்புடன்
கறையி லாத கருணை யரசுடன்
வரையி லாத வளம்பெறு நாடிதே !

(பொது நலத்தை வளர்க்கும் 32 தானங்கள், அவை: பசு, பயிர், கல்வி, கலை, தொழில், தாய்மொழி, உலகமொழி, பூதபௌதிக, ரசாயன சாத்திரங்கள், இல்லறம், மக்கள், ஒழுக்கம், வீரம், கடவுளன்பு, அரியநூல்கள், பிரமசரியம், அஹிம்சை, உடலுறுதி, வீட்டுநலம், ஊர் நலம், தேச நலம், உலக நலம், ஆன்மநலம், ஆன்மநேயம், ஒற்றுமை, ஐம்பூதநிறை, செங்கோல், ஆண்பெண் கற்பொழுக்கம்,யோகசித்தி, யோகசித்தர், திருமடம், கோயில், குளம் முதலியவற்றைக் காத்தலாம்)*

முதுபெரும் புலவர் முனிவர் பலர்
துதிகள் பாடித் தொழுதநன் னாட்டிலே,
இதய மற்ற விராக்கதர் இன்றுசெய்
மதும யக்கை மறுப்பறக் காண்பமோ ?

பொன்ம ணித்திரள் பொங்கிய நாட்டிலே,
கன்ம யோகியர் காத்திடு நாட்டிலே,
வன்மங் கொண்ட வணிக நிருதர்கள்
பன்ம ணியைப் பகற்கொள்ளை கொள்வதோ ?

தாங்கு கின்ற தரும நிலத்தினைத்
தீங்கு செய்யுந் திருடர்கை விட்டுநாம்
தூங்கி வீரத் துடிப்பறப் பின்விழித்(து)
ஏங்கிக் கைபிசை யும்இழி வாகுமோ ?

ஒன்றி யாக உலகைச் செயித்திட
வன்றி றல்பெறு மாதவர் நாட்டிலே,
கொன்று யிரைக் குடிக்கும் அவுணர்கள்
வென்றி கூறி விறைத்து நடப்பதோ ?

கோல மாளிகை கோபுரக் கோயில்கள்
சால மாநிதி சத்தியங் காத்திடுஞ்
சீல மன்னர் திருத்திய நாட்டிலே
கால பாசர் களிநட மாகுமோ ?

ஆட்க ளுண்டுநல் லாயுத முண்டெழுந்
தோட்க ளுண்டு, சுடர்பெறு வீரரின்
வாட்க ளுண்டு மனமுண்டு, நாட்டினை
மீட்க, வீரர் வருகென வீறிட்டோம்.

பற்றலர் படைத்திறம் பார்க்க வேண்டியே
ஒற்றரை ஏவியுள் உளவு பார்த்ததும்,
வற்றறு கடலென வலிய சேனையாற்
பற்றினம் ஊணர்கள் பற்றும் ஊர்களை

கொழுந்தெறி கனலெனக் கோபத் தானவர்
எழுந்தனர் ; அடிமைகள் இசைமு ழங்கவே ;
அழுந்தநம் படைக்குலம் அமர்செய் தோட்டவே
இழந்தனர் முதற்சமர் ; இன்னும் வந்தனர்.

எங்கிருந் தெழுந்தார் என்றே இன்னமும் அறியோம் ஐயா!
பொங்கிடுங் கடலைப் போலும், பூகம்பம் போலும், ஊணர்
சங்கையில் ஆயுதங்கள் சகடைகள் விமான ராசி,
வெங்கதப் படைக ளேந்தி சித்தியை விழுங்க வந்தார்....

அத்தனை கொடிய தாகும் ஆயுத மில்லோ மேனும்,
உத்தம வீரர் சேனை ஒன்றுபட் டிகலை வென்றோம்.
பித்தர்கள், அடிமை மன்னர், பின்னரும் வழியைக் காட்டச்
சத்துரு சேனை மீண்டுஞ் சாடிய தைய கேளாய்...

ஊழி வெள்ளமோ ஊணர் சேனையோ,
ஆழி யேழுமே ஆர்த்து வந்தவோ ?
நாழி தன்னிலிந் நாடு முற்றுமே
பாழ்ப டுத்தவே பாய்ந்து வந்ததால் !

காடு மாமலை கரந்து நாங்களும்,
சாடி வேங்கைபோற் சண்டை செய்துமென் ?
வீடு காத்திட வேண்டுஞ் சோதரர்,
ஆடு காத்தஓ நாயென் றாயினார்.

கடையு கப்புயற் கடலெ ழுந்திட
மடைதி றந்ததோ ! சண்ட மாருதப்
படைதி ரண்டதோ பகைதி ரண்டதோ,
இடையறாப் புகை யிருள் செறிந்ததோ !

வன்ம னத்தினர், வஞ்ச நெஞ்சினர்,
தன்மை யற்றவர், தானவர்களின்
புன்ன கைபெறப் போக வாழ்வுறப்
பொன்ம யக்கினிற் போர்தொ டுத்தனர்.

உண்மை நோக்கிலார், உரிமை நோக்கிலார்,
பெண்மை நோக்கிலார், பெருமை நோக்கிலார்,
கண்மை யற்றவர் கல்லி னெஞ்சினர்
திண்மை யுற்றசிற் றரசர் சேனையே...

ஈட்டி வாளுடன் எடுத்த போரிலை ;
தோட்டி னவுறத் தொடுத்த போரிலை ;
போட்டி போட்டுபீ ரங்கி பூமென
வேட்டு டன்கொலை வீறும் போரிதே.

மண்ணி லேயெதிர் மாவ லிப்படை
மண்ண ழுந்திட மற்பு ரிந்தனம் ;
விண்ணி லேறியே வேக மாகவே
எண்ணி லூணர்கள் குண்டெ றிந்தார்....

** ** ** **

அந்தோ கொடுமை, அந்தோ கொடுமை,
கோட்டை கொத்தளங் கோபுரங் கோயில்
அரண்மனை வீடுகள் அறிவுமன் றங்கள்,
மருத்துவ சாலைகள் மகளிர் இல்லம்,
எல்லாம் குண்டால் இடிந்துமண் ணாயின....
தேசச் சிற்பிகள் செய்து வியந்த
கலையின் அற்புதம் கனவெனச் சென்றதே !
பெண்டிர் மூத்தோர் பிள்ளைகள் ஆக்கள்,
அனற்குண் டுகளால் அடிபட் டிறந்த
காட்சி இரத்தக் கண்ணீர் தருமே.
தரையிலுங் கடலிலும் வருபகை யெல்லாம்
வென்றோம் ; அரக்கரைக் கொன்றோம் ; ஆயினும்
நூறு மயில்வரை ஏறிப் பறவையில்
விண்ணி லிருந்தே கண்கா ணாமல்,
நாச வெடியும் நச்சுப் புகையும்,
நோய்தரு வெடியும், பேயொலி வெடியும்,
வீசினார் ; எதிர்க்க வேறு வகையிலோம்,
ஒளிந்துயிர் பிழைத்தே ஓடிச் சென்று,
சித்திக் கோட்டையிற் சிந்தித் திருந்தோம் :—
எத்திசை எங்கே இராக்கதர் இருக்கை,
எப்படி யிவர்கள் இங்குவந் தார்கள்,
இத்தனை வெடிகளும் எப்படிக் கொணர்ந்தார்—
என்பதைக் காண வியலோம் ஐயா ;
இருப்பினும் முயற்சி சிறப்புறு மென்றே
அர்த்தசாத் திரமும் அதர்வண வேதமும்
ஆயுத நூலும் ஆழ்ந்து பார்த்து,
ககனப் புரவியும் கடுங்குண் டுகளால்
அழியா வேலியும், பழிக்குப் பழிதரும்
குண்டுகள் சிலவும் குகைகளிற் செய்து,

கலிநக ரத்தைக் கலக்க வெழுந்தோம்.
வங்கர் தமிழர் மராட்டியர் சீக்கியர்,
அக்கினி குலத்தார், ஆந்திரர், முதலியோர்
பதுங்கி யிருந்த பறைவக் கப்பல்கள்
பாழ்பட் டழியப் படார்வெடி போட்டதும்,
கலியின் கோட்டையைக் கதமுறத் தாக்கினோம்.
அரக்கரும் அரக்கரின் அடிமை மாக்களும்,
திகைத்திட மீண்டும் சேனையால் வளைத்துப்
புதிய கருவியாற் போரும் புரிந்தோம்.
துரோகி யொருவன் சுதந்தர விரோதி,
ஒன்னலர்க் கெங்கள் உளவெலாம் சொல்லி,
ஆயுதக் குகைகளை அழியச் செய்தான்.
இராக்கதர் மீண்டும் எம்மைத் துரத்தி,
வந்தனர் சித்தி வாயல் வரைக்கும்.
சித்தியில் எங்கள் சிறந்த சேனைகள்
இடிமின் புயலென வெடிப்புகை கிளரப்
போர்கொடுத் தரக்கரை வேருடன் ஒழிக்க,
முயன்ற பொழுதும், பயின்ற துரோகிகள்,
நாட்டை மெல்லக் காட்டிக் கொடுத்து,
சித்திக் கோட்டையைச் சிதைக்கத் தூண்டினார்.
எங்கிருந் தென்றே இன்னும் அறியோம்
எண்ணெய் கரியால் இயங்கும் வண்டிகள் ;
பேயெனக் குமுறும் பெரும்பீ ரங்கிகள்
வந்தன மீண்டும்; வலிமையை ஊன்றி
உயிரைத் தந்தே உயிரினும் பெரிய
மானந் தன்னை மயக்கறக் காத்தோம் ;
ஆயிரம் ஆயிரம் ஆட்பலி தந்து,
பேயரை முடிவிற் பெரும்போர்க் களத்தில்
முறியடித் தோட்டி முரசு கொட்டினோம்.
பெருஞ்சமர் புரிந்து பிழைத்தது சித்தியே.
பிழைத்தது கதிர்க்கொடி பெருமநின் னருளால்.
நாடு முழுதும் சோடை யடிமைகள்
அரக்கரை அஞ்சி அஞ்சித் தாழ்ந்தும்,
சித்தியின் பொன்னார் சிகர ஜோதி
முன்போல் ஒளிரவே என்பணி செய்தேன்.
எத்திறச் செயல்கள் எங்களால் இயலும்,
அத்திறச் செயல்கள் அனைத்தையுஞ் செய்து,
காந்த வேலி கட்டி மேலே
குண்டையுந் தடுக்குங் கூரை யமைத்துக்
கண்க ளுறங்காக் காவலும் வைத்துச்
சித்தியை அரக்கர் தீண்டவொண் ணாது
காத்து நிற்கிறோம் கருணையி னாலே.
முன்னே கலியை முறியடித் திடவே
செய்து வென்ற செருவினும் கொடிய
போர்களைச் செய்தும், புரட்சி செய்தும்,
தூம கேதுவைத் துணிந்தெதிர் பேசக்
கூட்டம் போட்டுங் கூக்குர லிட்டும்
ஓயா தரக்கர் உள்ளே வருந்தக்
கிளர்ச்சி செய்தும் தளர்ச்சி யின்றியே
சூரியன் ஒளிரும் சுதந்தரக் கொடியைப்
பற்றிநிற் கின்றோம் பகவநின் னருளால்.
எனினும், இந்தப் புனிதநன் னாட்டில்
ஒற்றுமை யின்றி, உள்ளன் பின்றி,
ஓரினம் என்னும் உணர்ச்சியு மின்றி,
அன்னியத் தானவர் அடிமை யாக்கிய

நம்மவர், நமக்கே வெம்மையைச் செய்யும்
தீமையி னாலே தீரர் முயற்சி
வீணாய், நாடு வீழ்ச்சி யடைந்ததே.
வருந்து நிலையினித் திருந்திட வேண்டி,
பூரண சித்தி பொலியத் தவஞ்செய்
பூரண யோகிநீ போந்தருட் பணிசெயும்
காலம் வந்தது ; ஞாலம் அழைத்தது.
பாரத முனிவரும் பண்புடன் கண்டே
உன்னை அழைக்கவே என்னுடன் எழுந்தார்.
ஐயநீ எமக்கினி அருள்புரி வாயே....

பாரத முனிவர்

சுடச்சுட நோற்றுத் துரியா தீத
நிலைபெற் றொளிரு நின்மல யோகியே,
சுத்தச் சுடரே, அத்தினம் உன்றாய்,
கண்ட கனவே காட்சியா னதுவே.
பஞ்ச வடியிற் பண்ணவன் சாந்தன்
பகர்ந்த தெல்லாம் பழுதறும் உண்மையே.
நாத்திகத் தானவர் நாடெலாம் பரவி,
உலகெலாம் பரவிக் கலகமே தொழிலாய்
அன்பறம் வருந்தத் துன்புறு செயலே
செய்தனர் ; அதனால் வெய்துறும் உலகும்,
புண்ணிய பூமியும், புனிதனே நின்னை
முறையிட் டழைத்தன ; குறைதவிர் வள்ளால்,
இங்கிருந் தேநீ இயற்றிய நலங்களை
நன்குநாம் அறிவோம் ; ஞாலம் போற்றிடும்
பெரியரும் அறிவார் ; அரியமெஞ் ஞானியே,
உள்ளிருந் தியற்றிய உயர்வினை பலவும்
வெளியிருந் தியற்றும் வேளையும் இதுவே.
பயிற்றிய சித்தர் படையுடன் எழுந்து,
வாராய் உன்னை வரவேற் றிடவே
சித்தி மக்கள் ஒத்துநிற் கின்றார்...
ஊனுங் கள்ளும் உளங்கெடு நடையும்
காமமுங் கொலையுங் கல்வியில் லாத
மடமையும் வறுமையும் அடிமைப் புத்தியும்,
பஞ்சமும் பிணியும் பார்க்கச் சகியா
நோயுந் துயரும் மேவிய உலகின்
இற்றை நிலைமை இயம்புவ தென்னே ....
உன்னினும் அறிந்தார் உலகினில் உண்டோ ?

சாந்தன்

முந்துநான் முதற்போர் ஆங்கே முடிந்ததும் உரைத்த காலம்
வந்தது ; தீமை யெல்லாம் வழுத்திய வாறே யின்று
வந்தன ; உலகைப் பற்றி வருத்தின ; வரத நீயும்
வந்ததைத் திருத்துங் காலம் வந்துனை அழைத்த தின்றே.

அஞ்சுபா தகத்தை மிஞ்சி ஆயிரம் பாத கங்கள்
வஞ்சரின் கோள்பொறாமை வளர்கொடுந் துயரப் போர்கள்
கஞ்சியென் றுழைக்கும் ஏழை கண்ணிநீர் வடிக்குங் காட்சி.
எஞ்சிய கொடுமை யெல்லாம் ஏவரே அறிந்தி டாதார்....

தானவர் அசுர மாயந் தந்ததீ வினைக ளெல்லாம்,
வானுல கெங்குங் கண்டோம்; வருணித்த லினியும் என்னே !
தீனரைக் காக்க வந்த திவ்விய வாழ்வின் மன்னா
நானில முய்யுந் தொண்டு நாட்டிடச் சமய மிஃதே.

சென்றஓர் வார மாகச் செகம்புகழ் உனது சேவை
வென்றிடக் கௌரி மீண்டும் வியன்பெருஞ் சக்தி யாக
நின்றெதிர் பேசு கின்றாள்; நிமலநின் பணிக்கே அன்னாள்
'இன்றுநான் வருவேன்' என்னும் இன்னிய சொல்லுங் கேட்டேன்.

ஆதலால் சுத்த சக்தி அருளினால் இனிநாம் சென்று,
மேதினிப் பணிசெய் கால மேவிய தென்று சாந்தன்
ஓதிய போதே, யாங்கே உயரஓர் விமானங் கண்டார்...
சோதிமின் போற்சு ழன்று சுழன்றது தாழக் கண்டார்.

வானத்தின் உயர்வி னின்று வையத்திற் றாவு கின்ற
வானம்பா டியினைப் போலே வந்தெதிர் குதித்த நல்வி
மானத்தி னின்றி றங்கி வருபவர் யாவர் ? அன்னார்
ஏனிவண் வந்தா ரென்றே இக்கணம் அறிகு வோமே. 296

6. சக்தி விஜயப் படலம்

எண்ணிய பணிக ளிங்கே இயற்றிட வேண்டித் தூயன்
உண்ணினை யுணர்வே போல உள்ளமும் உருவுங் கொண்டே,
விண்ணினின் றிறங்கும் தெய்வத் திருவருள் விளக்கம் போலே,
கண்ணுளங் களிக்கச் சக்தி பாட்டனின் காப்பில் வந்தாள்....

போகன்

போகனாங் கிருந்து, சக்தி புனிதன்பால் அடையச் செய்து,
"தாகமாய் உன்னை யன்பு செய்திடுந் தயைமி குந்த
சீகரன் பேர்த்தி சக்தி சீலமும் வீறுங் கொண்டாள்,
ஏகநா யகநின் கௌரி இவ்வுருக் கொண்டாள்" என்றான்.

சத்தியன், உந்தை அந்தத் தானவ ரிடையே செய்த
உத்தமப் பணிகட் கெல்லாம் உயிரென வுதவி செய்தாள்.
பித்துறும் அரக்கன் எம்மைச் சிறையினிற் பிணித்த போதிச்
சத்தியே விரதங் கொண்டுன் சத்தியாற் கிளர்ச்சி செய்தாள்.

இரவொடு பகலும் உன்னை எண்ணியன் பிசைக்கு நீராள் ;
கரவிலாத் தூய நெஞ்சாள், கருணையே உருவ மானாள் ;
வரமிகு குரலும் பாட்டும் கவிதையும் வாக்கும் பெற்றாள்,
சரசுவ தியுடன் காளி தாமரைத் திருவும் போன்றாள்.

இங்குன தமர்க்க ளத்தில் உடலினை ஈந்த கௌரி,
அங்கிவ ளுடட்பு குந்தே அதிசயம் புரிந்தா ளைய...
வெங்குலத் தான வர்கள் வெறிகளற் றுனது நன்மை
பொங்குறத் திருந்த வேண்டிப் பொதுநலம் புரிந்த நங்கை.

தந்தைமா வலியின் கெட்ட தனங்களைச் சீகரத்தாய்
சுந்தரி யோடெதிர்த்துச் சுத்தசன் மார்க்க சங்க
மந்திரி யாகி, யூணர் மரபையே மாற்றி வைத்த
தந்திரக் கலையில் வல்லாள் சக்தியுன் சக்தி யன்னாள்....

இயல்புற உன்னை நட்டாள், இயல்புற உள்ளே கண்டாள்,
இயல்புற உன்னைக் கேட்டாள், இயல்புற உனக்கே வாழ்ந்தாள்,
இயல்புற வுனது தொண்டே இன்னுயிர்ப் பணிய தானாள்,
இயல்புற உன்பால் வந்தாள் இனியுனக் கின்ப மாமே !

போக னிவ்வகை புகலுமுன் புன்னகை யாலே,
ஓகை காட்டியவ் வுத்தம சக்தியைச் சுத்தன்,
வேக மாய்வர வேற்றவள் சரண்புகுந் ததுவும்,
யோக சக்தியைப் பெய்துடன் உரைசெயப் புக்கான்....

சுத்தன்

அன்று போர்க்களம் ஆவியாய் மேலெழுந் தாங்கே,
சென்றென் அன்பினைத் தியானத்திற் செறிவுட னுணர்ந்தாய்,
ஒன்றி வாழ்ந்தநம் உயிரினிப் பிரிதலும் உண்டோ ?
நன்றென் சக்தியாய் வாழ்கநீ நீடென நவின்றான்.

வருக கௌரியே, வருகநின் வாழ்வினிப் பொலிக !
தருக நின்னையித் தரைமிசை தருமமோங் கிடவே ;
வருக சக்தியே பாரத சக்தியாய் வாழ்க !
தருக நின்னையே தானவர் குலந்திருந் திடவே...

முந்தத் தானவ நாட்டினைத் திருத்தவென் முதிய
தந்தை சென்றதுந் தியானத்திற் சக்தியாய்க் கௌரி
எந்தைக் காற்றிடும் இயல்புறுந் துணைகளுங் கண்டேன்.
சிந்தையா லிருந் தங்குநான் செய்ததை யறிவாய்...

வன்மங் கொள்செருக் கோங்கிய மாவலி திருந்திக்
கன்ம னங்கரைந் திடவொரு காரியஞ் செய்தாய்.
நன்ம ருந்துபோல் வந்தனை பாரத நாட்டிற்
கன்ம யோகஞ்செய் ; காத்திருந் தேனெனப் புகன்றான்.

கௌரி சக்தி

முன்னுறு பிறவி தன்னில் உனதருண் முதல்வி யாகிச்
சொன்னதை நிறைவு றுத்தத் தூயநின் பணியே தாங்கி,
இன்னொரு சக்தி தேகம் ஏந்தியான் வந்து சேர்ந்தேன்,
என்னவா எம்பி ரானே என்னையா ளுடைய கோவே !

தானவ ரிடையே தோன்றித் தானவர் கொடுமை வீழ,
ஊனுட லுள்ளே கௌரி உன்சக்தி யாக வந்தாள்,
நானென ஒன்றும் இல்லை; நம்பனே நீயே எல்லாம் ;
ஆனதை அறிந்துன் னன்பே ஆருயி ராகக் கொண்டேன்.

வெல்லுக நினது யோக வித்தையின் சக்தி யெங்கும்,
தொல்லுல கனைத்தும் ஓங்கித் துலங்குக அருளி னாட்சி ;
சொல்லுவ தினியேன்? ஐய தொடங்குவோம் கடமையென்றே
சொல்லறு மின்பக்கண்ணீர் சொரிந்தனள் அறிந்த நல்லாள் !

சுத்தன்

அருமை யாகிய செயல்களை யாற்றிடத் துணைசெய்
பெருமை பெற்றதோர் பெண்ணினைப் பெற்றசீ கரனே,
திருவின் மாமுனி செப்பிடத் தெரிந்தனன் அனைத்தும்,
வருக மன்னநீ எந்தையின் வலக்கரம் போன்றாய்....

உனது மாமகள் உயிர்த்தநம் சுந்தரி சக்தி,
எனது கௌரியின் இன்னுயிர் தாங்கிடும் சக்தி,
தனது வாழ்வினைப் பொதுநல வாழ்விற்கே தந்த
மனது யர்திரு மகளொரு மாசிலா விளக்கே !....

அருளைப் பெற்றநல் லணியிவள், அவனியிற் படர்ந்த
இருளைப் போக்கிடும் இனியபுன் னகைத்திரு வுடையாள் ;
தெருளு றத்தெளிந் தென்னுளே செழித்தெழும் வாக்கைப்
பொருள றிந்திவள் போற்றியிப் புவிக்கருள் புரிவாள்.

அன்பு கொண்டிவள் ஐக்கிய சித்தியும் பெற்றாள் ;
என்ப ணிக்கிவள் எழுந்ததே இதன் குறிப் பாமே ;
நண்ப நான்கொண்ட நாளினை எப்படி யறிந்தாள் ?
இன்பத் தாயுடன் எந்தையும் என்னவா யினரோ ?

முனிவன் வந்தபின் முயன்றநன் முயற்சிக ளெல்லாம்
இனிதெ மக்குரைத் திடுகெனத் தூயனும் வினவக்
கனிமு கத்துடன் சீகரன் கைகுவித் திறைஞ்சிப்
புனித நாங்களும் புரிந்ததைக் கேளெனப் புகன்றான்.

சீகரன்

பொறிக ளின்கலை தேர்ந்தநம் போகமா முனியின்
அறிவி னாலென தரசினில் அமைத்தசூட் சுமத்தால்,
இறைவ நாங்களிவ் வுலகெலாம் இல்லத்திற் கண்டு,
நிறைவு றப்பெரு நினைவுகள், இயன்றன புரிந்தோம்.

தான வத்திலும், ஆணவந் தன்னிலும் அன்பர்
ஈனப் போர்களின் இரத்தவீண் இதுவெனக் காட்டி,
ஞான மாம்சம யோகத்தின் கிளர்ச்சியை நாட்டிக்
கோனை வேண்டிலர் ; குடியர செழுந்திடக் குறித்தார்.

அரக்க வேகத்தில் ஆயுதப் போர்புரிந் தலுத்தே,
பரக்கும் ஆணவம் பாழ்பட மாவலி யாங்கே
இருக்குந் தன்மையை யறிந்துநம் இணையறு மெய்யன்,
திருக்க ளோங்கிய சுந்தரி தொடர்ந்திடச் சென்றான்.

மாண நன்னெறிக் கிளர்ச்சியால் வசஞ்செய்து நாட்டை,
ஊணர் போர்வெறி உலைந்திடக் குடியர சுயர்ந்தே,
வீணர் வாழ்வினை யுன்வழி விளங்குறத் திருத்திக்
காணத் தொண்டுசெய் கருத்துடை யாரிரு வருமே.

அன்ன வாறவர் செய்தலும், நின்னருள் அடைந்த
மின்னொ ளித்திரு சக்தியும் வேகமா யெழுந்தே
உன்ன ரும்பணிக் குறுதுணை யாகிட உற்றாள்....
பொன்னின் மாமணி போன்றினிப் பொலிகநின் பொருளே !

சித்தி கண்டனம் கௌரி விலாசத்தைச் சேர்ந்தே,
பத்தி யாய்த்தொழு தோம் ; அந்தப் பத்தினித் தெய்வம்,
சத்தி யாயுனை யடைந்தனள்; சகத்தினில் இனிமேல்
சுத்த சக்தியின் சுடரொளி பரவுக தினமே.

போரி லாதவிப் புண்ணிய பூமியும், இன்று
போரி லேவளர் அரக்கரின் புரட்சியாற் சிதைந்து,
காரி ருள்படர்ந் துள்ளதைக் கண்டனம் ; ஐய,
பாரி ருள்தெறப் பரிதிபோல் எழுந்திடும் பண்பா.

எடுத்த நல்வினை இயல்புற முடித்துவெவ் வரக்கர்
கெடுத்த பூமியைக் கேடறத் திருத்திநல் லறிவைக்
கொடுத்துத் திவ்விய சீவனங் குலவிட நீசெய்
அடுத்த மெய்வினைக் காவன புரியுமென் அன்பே.

சுத்தன்

வீரத்திற் பெரியாய், இங்கே வெய்யவர் கொடுமை யாலே
போரொத்த கருவி செய்யப் புகலிலோம் ; சென்று நீயுன்
சீரொத்த தீவில் வேண்டுந் தீட்டணி படையைச் சேர்ப்பாய் ;
கூரொத்த படையும் வேண்டும்; குறிப்பறிந் தனுப்ப லாமே.

ஆற்றலை யனைத்தும் ஆற்றின் அருளிசை முரல்வ போன்றும்,
காற்றலை மேக மெல்லாங் கருணைவான் பொழிவ போன்றும்,
வேற்றலை வின்றி நாமும், விரும்பிய புண்ணி யத்தைப்
போற்றலைக் குறிப்பின் இங்கே புரிவினை புரித லாமே.

தீரமும் வேண்டும்; உள்ளத் திண்மையும் வேண்டும்; ஆத்ம
வீரமும் வேண்டும்; ஊணர் வெறியெழப் படைந டத்திப்
போரினைத் தொடுத்தால், யாமும் போருக்குப் போர்கொ டுத்து
வேரொடுந் தீமை சாய விடுதலை வழங்கு வோமே.

கத்தியின் பலத்தை நாமும் கடைசியாய் வைத்துக் கொண்டு,
புத்தியின் பலத்தி னாலே, பூரண யோகந் தந்த
சத்தியின் பலத்தி னாலே, தானவர் செருக்கைப் போக்கிச்
சத்திய யுகத்தை நாட்டச் சாந்தமாய்ப் பணிகள் செய்வோம்...

அன்னதே செய்வோம் என்று சீகரன் அன்பு கூறப்
புன்னகை புரிந்து தூயன் புனிதநா ளின்று ; நீவிர்
முன்னுல குய்து சுத்த சமரஸ முத்தி சேரத்
தன்னறி வுண்மை யொன்று தருகுவீர் இரவில் என்றான்.... *132*

7. யோக சித்தி எழுந்த படலம்

மோக மற்ற முனிவர் அருளிய
ஆக மத்தும் அருமறை யுள்ளத்தும்
ஏக மாயுணர் எவ்வகை ஞானமும்
யோக சித்தி யுணர்ந்திடக் காணுவாம்.

நீண்ட மாதவஞ் செய்த நிமலர்கள்,
பூண்ட மாதவத் தின்பொருள் யாவுமே
வேண்டு சுத்தன் விரும்பத்தி யானத்தில்
ஈண்டு சித்தி யெழுந்தது கேண்மினோ !

கான மாமலர்க் காற்றுடன் கங்கையும்,
மீன ளாவி மிளிர்மதி வானமும்,
மோன மாக முனிவருட் பூத்தருள்
தேன ளாவிய செஞ்சொலைக் கேட்டவே.

வெண் கடலெழும் வெண்மணித் தாழிபோல்,
விண் கடலில் விளைந்தபொற் சோதிபோற்
கண் கருத்துட் கலந்த சமாதியில்,
உண்மை பொங்கி ஒலியுருக் கொண்டதே.

இயற்கை யின்பம் இலகும் இமாலயம்,
இயற்கைக் கானக மேந்திய சாந்தத்தில்
இயற்கை யொன்றி யிறைவனைக் கண்டுளே
இயற்கை யோகத் திருந்த முனிவரே.

சுத்த ஜோதிச் சுடர்மணி யானவர்,
சுத்த சக்தி சொரூபத்தைக் கண்டவர்,
சுத்த னோம்பிய சுத்தசங் கத்தினர்
சுத்த யோகியர் ஆத்மசு தந்தரர்.

உயர் துரிய ஒளிமணி மாடத்தே
இயல்பி னின்றுறும் இன்பமெய்த் தூயவர்
பயிலும் யோகப் பயனை யடைந்தவர்,
துயர் கெடுத்தசுத் தானந்தத் தோழரே.

புலனை வென்றவர், புந்தியி லேமனச்
சலன மின்றி நிலைத்துப சாந்தத்தால்,
இலகு தத்துவ மெய்தியஃ தாகியே
உலகை யுள்ளத் தடக்கிய உத்தமர்.

தூரம னத்தினர் , தூய செயலினர்
தூமொ ழியினர் தூய கருத்தினர்,
பூமி வாழப் பொழியு மழையெனச்
சேம சக்தி செழிக்கப் பொழிபவர்.

இருண டுங்கும் இனிய முறுவலாள்,
அருணத் தேவி யழகில் அரும்பிய
கிரண முத்தென உள்ளங் கிளர்ந்தெழும்
கருணை யான கனிமொழி வல்லவர்.

பொங்கு மானந்த போத சொரூபத்தை
நன்கு ணர்ந்து, நடுநிலை கண்டவர்,
இங்கு சுத்தன் இதயத்தொ டொன்றியே,
தங்கி நின்றனர் யோக சமாதியில்.

கதிரை யுண்டு விரிந்த கமலம்போல்,
மதியை யுண்டு மடல்விரி யல்லிபோல்,
இதயப் பூவிரிந் தின்பம் பருகியே
மதுவென் றின்னிய வாக்கு வழங்கினார்.

ஆழ்ந்த யோகத்தி லாழ்ந்து பல்லாண்டுகள்
வாழ்ந்து கண்ட வரம்பெறும் உண்மையைச்
சூழ்ந் தெழுதித்தம் சுத்த குருபதந்
தாழ்ந்து வைத்தனர் ‘சத்தியம் வெல்’ கென்றே.

தூயர் தந்த சுருதி மொழிகளை
நேய னாகிய நின்மலன் ஆய்ந்துதன்,
வாய்மை கண்ட வரகவி வாக்கினால்,
ஏய வேத மியற்றி முடித்தனன்.

ஒன்றி யுள்ளத் தொளிகண் டுரைத்தவன்
இன்று தந்தநல் லீரடி யின்னிசை
நன்று லகு நயந்து பயின்றிடும்
வென்றி செய்பொது வேதமென் றானதே.
வாய்ந்தநல் வேதந் தன்னை வரிவரி யாக நோக்கித்
தோய்ந்ததிற் படிந்து, யோக சித்தியின் வித்தைக் கண்டு,
ஓய்ந்தது சமயச் சண்டை உலகொரு குலமாய் வாழத்
தூய்ந்தமிழ் யோக சித்தி துலங்கிய தென்றான் சுத்தன்....

பூரண யோக சங்கம் பூவெலாம் பொலிய, மாந்தர்
நாரண ராகத் தேவ சீவன நயந்து வாழக்
காரண மாகும் யோக சித்தியைக் கருணை வள்ளல்,
சீரிய சுத்தச் சங்க சீலருக் கீந்து சொன்னான் :

சுத்தன்

பளிங்கு போன்றநல் லுளத்தினாற் பார்த்துசுத் தான்மா
விளங்கி யப்பர மானந்த விளக்கமே வாழ்வாய்த்
தெளிந்த மேலவர் சிந்தனைத் திரளிது காணீர் ;
குளிர்ந்த தென்னுளம் கொண்டிதை ஓதுமின் உடனே...

கடவுளும் உலகும் அறமும் அறிவன்பும்,
நடையும் இல்லமுங் குலந்தொழில் அரசுட னவின்றே
இடைய றாத்தவ யோகமும் சித்தியின் இயல்பும்,
அடைய மானிடர் அமரராம் அருளொளி தருமே.

மனிதர் தேவராம் பன்னிரு சாதன வகையை
இனிது ரைக்குமிந் நூலினை ஆரபி யிசையில்,
அனைவரும் இசைத் திடுகென அன்புடன் அளித்தே,
புனித னோதிடப் புங்கவர் சங்கமோ தியதே... 80

சத்தி யாழுட னிசைத்திடத் தவப்பெரு முதல்வர்,
ஒத்த நெஞ்சுடன் சுத்தன்பின் ஓதிட ஒருங்கே,
சுத்த யோகத்தின் சித்தியை விளக்கிடுஞ் சுருதி—
நித்தி யானந்த ஓமென விரிந்தது நிறைந்தே....

எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவனா லயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்,
எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே !

என்று நூலினை இனிதுறத் தொடங்கியத் தூயர்,
நன்றி சைத்தனர் ; நாதமா மறைநலங் கிளர ;
என்றும் அன்பரின் இதயத்திற் சுழலுமந் நூலை
ஒன்றி நல்லுல கோதிட வுரைப்பதெம் உவப்பே: 92

8. யோக சித்திப் படலம்

1. கடவுளியல்

1. கடவுள்

ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு.

உள்ளத்தான், ஓங்கு முலகத்தான், பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு.

எண்குணத்தான், ஏகனே, எல்லா மடங்கவுளான்
புண்ணியனாம் போதப் பொருள்.

காற்றைக் கனலைக் கதிரைக் கடலுலகைத்
தோற்றினா னன்பர் துணை.

எல்லா மவனுடைமை ; எல்லா மவனாணை ;
எல்லா மவன்பொதுவென் றெண்.

2. உள்ள பொருள்

பெயர்வடி வாதியவாம் பேதங் கடந்த
வுயர்பொருளொன் றுண்டென் றுணர்.

பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர் ;
உளனொருவ னென்றே யுணர்.

ஐந்தரணுக் குள்ளே யரசாளு மன்னவனை
ஐந்தடங்கி யன்பா லறி.

அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாலே யின்பப் பொலிவு.

விழிமி னெழுமினுள்ளே விண்ணரசைக் கண்டு
செழிமின்சுத் தானந்த சித்து. 20

3. அருள் விளக்கம்

அறிவுச் சுடரோ னருட்கதிரா லெங்கும்
நிறையு நிறைவை நினை.

தாக்கற்று நோக்குந் தனித்தலைவன் சந்நிதிக்கே
யாக்கன்முத லைந்தொழிலு மாம்.

ஒன்றெனவுந் தோற்ற மொடுக்கமதி லேயெனவுங்
கண்டவனே காட்சிக் கிறை.

பிண்டத்தி லுள்ளான் பிரமாண்டத் திற்கோயில்
கொண்டுலவுந் தெய்வமெனக் கொள்.

நானென்ற மாயை நலிய நலியவுனைத்
தான்கொண்டு போற்றுமருட் டாய்.

4. வழிபாடு

நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சாரப்
பேசினாற் பேசும் பிரான்.

அன்புண்மை யாக அமர்ந்த கடவுட்குன்
அன்புண்மை யால்வழிபா டாற்று.

பற்றற்றுப் பற்றிப் பணிந்துணர்வா லர்ச்சித்துத்
தொட்டுநில் ; அஃதே துதி.

எனதென தென்ன லிடராகு மென்றும்
அவனது வென்ன அருள்.

தம்மைக் கொடுத்தோர்க்குத் தன்னையே தந்தருளும்
அம்மையப்ப னாணைவழி யாற்று.

5. கடவுட்டன்மை

மகிழ்விற் படைத்தளித்து மாற்றும் பொருளை
அகத்தூய்மை யாலே யறி.

வாய்மை நலனோன்பு வன்றொண் டடக்கமிவை
தூயவனைச் சேருந் துணை.

மெய்யன்பு நல்லுறுதி மேதக்க வொப்புரவாந்
துய்யவுளத் தொண்டர் துணை.

காமம் வெகுளி கலக்கமி லாதமனச்
சேமமத னாலிறையைத் தேர்.

உள்ளப் பொதுவெளியி லோங்கு மணிவிளக்கைக்
கள்ளமற வுள்ளுணர்விற் காண்.

2. உலகியல்

1. உலகாலயம்

உயிர்மேனி யாக்கொண்டே யோங்குமொரு சோதி
பயிலா லயமுலகு பார்.

ஆருயிர்கட் கோருயிரா யாங்காங்கு நின்றியங்கும்
பாரால யத்தானைப் பார்.

விரிவா னுலகை விளங்கருளா லாடும்
பரமான்மா வாகவே பார்.
உலவுடலஞ் சிற்றுலகாம் ; உள்ளத்தான் கோமான் ;
நிலவியல்பே நீதி நெறி.

இயற்கையே யாக்கை; யிறைவனே யான்மா ;
உயிர்க்குல மோர்தொடர்பென் றுன்.

2. உலகநிலை

உண்டில்லை யென்றோயாச் சண்டையேன்? உள்ளவரை
பண்டுலகிற் பாங்குற் றிரு.

வகுக்கு மனமயக்கால் வையத்தைக் காணேல் ;
உகக்கு மொளியறிவா லுன்.

இருப்ப தொருபொருளே ; யெல்லா மதுவே ;
பிரிப்பதுபொய் மாயப் பிணி.

ஆலுக்கும் பூசணிக்கும் ஆய்ந்து கனிகொடுத்த
ஞாலத்தான் வைப்பே நலம்.

மாறித் திரிந்து வளர்மன் னுலகினிலே
மாறாத வொன்றை மதி.

3. இயற்கை

இயற்கையின் புத்தகமே யின்பாக நோக்கிற்
பயக்கு மறிவுப் பழம்.

பேசாது பேசிப் பெருநல் லறிவுணர்த்தும்
ஆசா னியற்கையே யாம்.

கதிராற் கடன்முகந்து, கார்மேக நல்கி,
யிதஞ்செய் யியற்கையென் றாய் !

ஓசைப் படாம லொருகோடி யற்புதஞ்செய்
தேசுற்றாள் சித்தாடுந் தாய்.

இயற்றுவ தெல்லா மியற்கையதைப் பற்றிப்
பயிற்றுக வாழ்வைப் பரிந்து. 80

4. உலகுயிர்

ஒவ்வோ ருயிரு முலகின் வினைக்கணியாய்த்
தெய்வம் படைக்குமெனத் தேர்.

வினைக்களவு தோற்றம் ; விமலனரு ளாலே
யனைத்துயிரும் வீடடைத லாம்.
போக்கு வரவற்ற பூரணனைக் கூடுதற்கே
மீக்கூர்த்துச் செல்லுமுயிர் மேல்.

பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை ;
எண்ணிருவர் சேர்ந்தே யிகம்.

வேறுபா டெல்லாம் விகற்ப மனமயக்காம்
ஊறுபா டென்றே ஒதுக்கு.

5. உலக வாழ்வு

தன்னியல் பாந்தெய்வத் தன்மை யறியாக்கால்,
என்னபய னிப்பிறவி யே ?

ஆட்சிபெற் றுள்ளே யகில விளையாட்டைக்
காட்சிபோற் கண்டு களி.

எத்தனையோ காரியங்க ளிந்த வினையுலகில் ;
அத்தனையும் ஆடலென லாம்.

வினையுலகை யஞ்சாத வீரன்போல் வெல்க
மனவுறுதி யாலே மகிழ்ந்து.

அகிலவாழ் வத்தனையு மான்மவிரி வாக
நிகழுவதே யுண்மை நிறைவு. 100

3. அறவியல்

1. அறம்

தானு நிறைவுற்றுத் தன்னவரு மின்புறுதற்
கானவொழுக் காறே யறம்.

மன்னு மனச்சாட்சி மன்னவன்சொல் என்னவென
வுன்னி நடத்த லுயர்வு.

'இவ்வழிச்செல்' லென்றொன்றுள் ளெச்சரிக்கை செய்யுமே
அவ்வழியி லச்சமறச் செல்.

அறமென் றறிந்ததனை யஞ்சாது செய்மின் ;
இறைவனருள் காக்கு மினிது.

இறந்தபின் னெப்படியோ ; ஈங்கண் ணுலகிற்
சிறந்த திருவினையைச் செய்.

2. அற விரிவு

யாதொன்று காலத்திற் கேற்றபொது நன்மையதை
வாதின்றி யாற்றி மகிழ்.
பழமை பழமையெனும் பல்லவியே பாடேல் ;
புதுமை புதுமையெனப் போ.

மோகமய மின்றி, முரணற்ற முன்னேற்றம்
நாகரிக மென்றே நவில்.

தொடர்ந்தார் துயரந் துடைக்காத செல்வன்
கடமை வழுவியோன் காண்.

எதுதீ தெனநோக்கி யெள்ளற்க ; நன்மை
யதுபோற்ற லாற்ற லறிவு.

3. அறத் தகுதி

போக்கும் வரவும் பொழுதுமறி யோமதனால்,
யாக்கையோ டேசெய் யறம்.

உண்ண வுடுக்க வுவந்திருக்க நன்முயற்சி
பண்ணல் அறவாழ்வின் பண்பு.

சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்
வீரனாய் வாழ விரும்பு.

உலகோ ரருட்குலமா யொன்றியினி தோங்கு
நலமார் பொதுநிலையை நாட்டு.

உள்ளொளியிற் பூத்த வுயிர்வாழ்விற் சாதிமதச்
சள்ளையிலை சச்சரவுந் தான்.

4. அற நெறி

விண்ணின் விரிந்த வியன்செய் யறநூலின்
உண்மை யுடுவி னுறும்.

அன்புண்மை யின்சொ லடக்கம் பொறுமையருள்
இன்பப் பொதுநெறியென் றெண்.

கொலைபுலை, கூத்தி, குடிகளவு, சூதாம்
வலிய நரக வழி.

வசைசின வஞ்ச வழக்கற்றுத் தீய
நசையற்று நாணுற்று வாழ்.

மூவழுக்கு நீங்குகவே, முத்தூய்மை யோங்கிநர
தேவர்குலம் வாழ்க செழித்து !

5. பொது நலம்

பிறர்க்கென வாழும் பெரியோரே சேர்வார்
துறக்கத்துங் காணாச் சுகம்.

எத்துணை நன்றெண்ணி யிவ்வுலகிற் கன்புசெயல்
அத்துணை யான்மவிரி வாம்.

ஈசன் அருண்மொழியை யெவ்வினத்தார் சொன்னாலும்,
ஆசையுடன் கேட்ப தறிவு.

அற்பம் பெரியதென் றெண்ணாம லன்புசெயு
நுட்ப வறிவுடமை நோன்பு.

கீண்மேற் பிறரொடுதான் கேண்மைதெவ் வொன்றெனவே
காண்போன் கருணைக் கடல்.

4. அறிவியல்

1. அறிவு

அறவின்பம், வாழ்வி னழகின்ப மெல்லாம்
அறிவின்ப ஊற்றி னமிழ்து.

எங்குற்றோ மென்னசெய லெங்கேக லென்றறிவோன்
கங்குற் கடல்கடந்தோன் காண்.

போக்குவர வற்ற பொருளான்மா ; நானதுவென்
றேக்கமற் றின்புற் றிரு.

யானு முலகு மறிவுண்மை யின்பமயம் ;
ஏனோ வெருவ லினி.

நம்பு, நினை, முயல் ! நாடொருமை ; ஞானமாம்
இன்பம் பெருகு மினிது.

2. கல்வி

அறிவு தொழிலொழுக்க மாண்மை யழகாந்
திறமான கல்வித் திரு.

இயற்கைவளத் தோங்கி, யியற்புலனைத் தூண்டும்
இயற்கைநெறிக் கல்வி யினிது.

ஆற்றல் மிகப்பெருக்கி யாளாக்குங் கல்வியினைப்
போற்றுக வீரர் பொலிந்து.

மெய்க்கு மறிவிற்கு மேன்மை யுறுதிதராப்
பொய்க்கல்வி யாலென் புகழ் ?

ஈகையு ளீகையா மின்கல்வி ; பெற்றவனுக்
கேகுழி யெங்கு மிசை.

3. கற்ற பயன்

கற்ற வழியாற்றக் கற்றோனே கற்றோனாம் ;
மற்றவன் கற்ற மடம்.

அருளற்ற நெஞ்சில் அடைத்தநூற் குப்பை
பொருளற்ற வெற்றுரையைப் போலும்.

புலனைவென் றோனே புலவனாம் ; பாட்டாற்
கலகலப்போன் பேச்சுக் கடை.

வெள்ளத் தனைய விரிநூ லளந்தாலும்
உள்ளத் துணர்வே யுயர்வு.

கல்வியும் வாழ்வும் கவியுஞ் சுவையும்போற்
புல்லுவதே செல்வப் பொலிவு.

4. ஆசான் - சீடன்

ஆசா னருளு மழிவில் லறிவொளியே
காசினிக் காகுமுளக் கண்.

வானும் விளைநிலனும் வாரிதியும் வெற்பும்போல்,
ஞானகுரு செய்யு நலம்.

நாட்டிற் பெருந்தகையா னாளைவீ ரற்கறிவை
யூட்டினான் பெற்றாரி னூங்கு.

அழகுநிறை யாசானுக் கன்புடைமை யீந்து,
பழகிடலே நல்லறிவின் பண்பு.

நாடிப் பணிந்தோதி, நற்சேர்க்கைத் தொண்டுடனே
சீடன்மெய்க் கற்றல் சிறப்பு.

5. கலை வளர்ச்சி

போற்றுக தாய்மொழியைப் பொன்போற் புறநயங்கண்
டேற்றுக நாளு மெழில்.

அருளறிவி லூறி, யழகிற் றவழ்ந்து,
பொருள்செழித்த பொற்கவியைப் போற்று !

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டிற்கு நல்ல நலன்.

கண்ணைக் கருத்தையுறக் கைந்நயத்தை யின்புறுத்தும் ;
கண்போல நுண்கலையைக் கா.

மெல்லியர்க்கு மென்கலைகள் ; வீரத் திறனாண்மைக்(கு)
எல்லார்க்கும் எண்ணோ டெழுத்து.

5. அன்பியல்

1. அன்பு

அன்பே கடவுளா மன்பே யருஞ்சமயம்
அன்பே யறிவிற் கணி.

அன்புள் ளிருந்தால், அடவியிலு மச்சமிலை ;
தன்போல் அகிலவுயிர் தான்.

சுமையுமெளி தாகுஞ் சுடுபகைநட் பாகும் ;
நமனும்போ மன்பை நயந்து.

பொன்புகழி னாலன்று ; பூதவுட லாலன்றே ;
அன்பினால் ஆளை அறி.

தாயன்பு காட்டித் தமர்பிறரென் றோரமிலா
நேயனுக்கு முண்டோ நிகர் ?

2. இனிமை

இன்சொல்லி னில்லை யியம்பி னிணங்காரின்
வன்சொல்லை மாற்று மருந்து.

கன்மீது கூர்செய்யுங் கத்திபோல், வன்சொல்லில்
இன்சொல்லைக் கூர்செய் யினிது.

விருப்பினிய சொல்லேயாம் வெம்பகைவன் கோப
நெருப்பை யவித்திடுநன் னீர்.

மாற்றான்செய் துன்பமெலா மன்னித்துத் தான்மறக்கும்
சீற்றமிலான் சீரியனே தேர்.

தன்பிழையைப் போக்கிப் பிறர்செய் பிழைதாங்கி,
அன்புசெய்வான் அன்பர்க் கிறை.

3. இன்னாத செய்யாமை

இன்னாத செய்யாமை யென்னும் ஒழுக்கத்தாம்
மன்னுயிர்க் கெல்லா மறை.

'கொல்லேன், விழையேன், குடிகளவு சூதெண்ணேன்,
பொய்யே'னென் றேயுறுதி போற்று.

மனத்தி லிரக்கிமிலா மக்களை மாக்கள்
இனத்தினுஞ் சேர்த்த லிழுக்கு.

கதறக்கொன் றூனுண்ணுங் காதகர்க்கே தன்பு ?
மதுவுண்பார்க் கேது மதி ?

கூற்று மிடுகாடுங் கூடிய மாக்களே
நாற்றவுட லுண்ணு நரர்.

4. நட்புரிமை

மாணப் பெரியது மன்னோ, மயக்குலகில்
ஆணவமில் லன்புத் தொடர்பு !

சீரியர் கேண்மை சிறிது கிடைத்தாலும்,
ஆருயிர்க்கு நல்லமுத மாம்.

இடித்துத் திருத்து மிணக்க மினிது ;
கொடுத்தும்புன் கேண்மை கொடிது.

உடல்பொரு ளாவி யுதவியுங் கொள்க
கடவுட் பெரியார் கழல்.

உயிரைக் கொடுத்து முயிர்பிரியா துள்ளே
உயிரொன்றி நட்டார் உறவு.

5. பொறுமை

ஆற்றல் பொறையளவே யாகு மதனாலே
யேற்றம் பெறுமெங்கு மே.

வாய்மை, பகையாமை, மாட்சி, மனப்பொறுமை
காய்வானைக் காயும் படை.

பொறுமை புவிவெல்லும் புன்னகையால் ; வாணப்
பொறிபோற் சினங்கரிந்து போம்.

காந்தியைப் போன்ற கருத்துறுதி யோடு நீ
தேர்ந்த திருவினையைச் செய்.

அறந்தாங்கி வாழும் அருட்பெரியார் என்றும்
இறந்தும் இறப்ப திலர்.

6. நடையியல்

1. ஒழுக்கம்

முகத்தில் விளங்கும் முறையான வாழ்வால்,
அகத்தொளிரு மான்ம வழகு.

தெய்வ மிகழார்க்குத் தேவரெதிர் பேசார்க்குப்
பொய்புகலார்க் காகும் புகழ்.

தன்னடை போற்றாதான் சான்றாண்மை பேசுவதின்
மின்னைக் கரிதீட்டன் மேல்.

குற்ற மிரங்கிக் குறையற் றெழுமின்கள் ;
அற்றே நடையோங்கு மாறு.

காலையி லாற்றுங் கடமை வழுவார்க்கு
மாலையி லுண்டாம் மகிழ்வு.

2. தீயன விலக்கல்

முரடர் துணையு முரண்பாடாஞ் சான்று
கரடியீ யோட்டுங் கதை.

பேரைக் கெடுத்துப் பிணிசேர்க்கும் வேசைவழிச்
சேராரைச் சேருந் திரு.

வேரோ டொழிக விலைவாழ்வு ; வீட்டறத்திற்
சீரோங்கு பெண்டிர் சிறந்து.

வட்டாஞ் சகுனி வலைப்பட்டு மன்னவர்கள்
கெட்டாரம் மாயம் கெடு.

நடையை மதியை நலத்தைப் புகழைக்
குடியைக் கெடுக்குங் குடி.

3. புன்மை விலக்கல்

கோள்பொய் புகன்று குளிரவோ ? வுன்னெஞ்சை
வாள்கொண் டறுக்குமனச் சான்று.

காதலரை நாயின் கதைகட்டிச் சீரழிக்கும்
பாதகரைப் பார்த்தல் பழி.

தற்பெருமைத் தம்பட்டந் தன்னுள்ளே யொன்றுமிலை;
அற்பமதி யாணவமே யாம்.

கற்கண்டு போற்பேசிக் காணாது தீவைப்பார்
மற்கொண்ட மாற்றாரிற் கேடு.

எள்ளி யிழித்த லிரத்தல், பிறர்பொருளைக்
கொள்ளைகொளல் புல்லர் குணம். 280

4. வாய்மை

தூய்மையும் வாய்மையுந் தோழ ரவர்நட்பு
வாய்பவர்வாழ் வின்ப வனம்.

'இப்பொய்யே னின்றுரைத்தோம்' என்று வருந்தியுடன்
அப்பொய்யை நீக்க லறிவு.

பயனுள கூறும், பழிபகையைப் போக்கும்—
நயனுள நாவி னலம்.

பக்குவத்திற் கேற்ற பயனுரையே பேசிடுக ;
மிக்கது, மோனம் ; விரும்பு.

புறத்தூய்மை செய்யும் புனலைப்போ லுண்மை
மனத்தூய்மை செய்யு மருந்து.

5. விந்தடக்கம்

சிந்தை யடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி,
விந்தை யடக்கிவளர் வீறு.

பிரம சரியம் பிழையின்றிப் போற்றின்
அரிய பயனெல்லா மாம்.

ஆற்றல் அறிவாயு ளாக்கைநல வாழ்வின்ப
வூற்றாகும் விந்துன் னுயிர்.

ஆண்பெண் விலக்கில்லை ; யான்மப் பொதுவுறவு
பூண்டார்க்கு நீங்கும் புரை.

வன்னியாய்க் கற்ற வலியுடையார் போற்றுகவே
நன்மனை வாழ்க்கை நயம். 300

7. இல்லற வியல்

1. இல்லறம்

வீட்டின் விரிவே வியனுலக மாதலினால்,
வீட்டறத்தில் வெற்றி விளக்கு.

இல்லற மீசனரு ளெய்திய நல்லறமஃ
தில்லையெனி லில்லையுல கீங்கு.

இல்லறமே வீட்டின்பம் ; இல்லாளு நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்.

நல்லாளைக் காதலித்து நம்பி நனிவாழ்க
வள்ளுவரும் வாசுகியும் போல்.

பூணோடு பொன்போற் பொருந்தி யறிவொளிரும்
ஆணோடு பெண்சக்தி யாம்.

2. திருமணம்

காந்தமுனை மாறிக் கவர்வதைப் போலுமே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு.

காதல் மணமே கருத்திற் கினியமணம் ;
ஏதம் வலுமணமென் றெண்.

நல்ல குணமணியாய் நாணுடுத்த நல்லாளைக்
கொள்ளுக வாழ்வைக் குறித்து.

ஆக்கல் அழகுசெயல் அன்பறிவு மெய்யுறுதி
காக்கலிவை பெண்டிர் கடன்.

கற்புயிர் ; நாணழகு ; காரிகைக்கு நற்கணவன்
சொற்படித லாகுஞ் சுகம்.

3. பெண்ணின் பெருமை

மென்மை யுடலின்ப மேதக்க வாழ்வெல்லாம்
பெண்மை யுவந்தளிக்கும் பேறு.

வாழ்க்கைத் துணையும், வகையும், விரிநலமும்
ஆக்கமும் பெண்சக்தி யாம்.

அறமன்பு மைங்கடனு மாற்றிடலுக் காவாள்,
நிறைமனைவி யென்றே நினை.

பகட்டணிக் கொள்ளாள், பதிக்கணி யாவாள்
அகத்திற்கு வாய்த்ததிரு வாம்.

பெண்ணிற் பிறங்கும் பெருங்கனலைப் புல்லினால்,
மண்வாழ்வு மங்கலவிண் ணாம்.

4. ஆண்மை

ஈட்டிமனை போற்றல் இசைபெருக நல்லறங்கள்
ஆற்றலிவை யாண்மைக் கழகு.

இல்லாளோ டன்புற் றிணங்கி யறங்காக்க
வல்லான் மணவாள னாம்.

மனைவியுடன் காதலாம் ; மக்களுட னன்பாம் ;
அனைவரொடுந் தண்ணருளே யாம்.

தக்க மனையிருக்கச் சார்ந்தயலிற் சீரழிவான்
கக்கலை யுண்ணுங் கடை.

கண்ணொத்த வீட்டிற் கனதன மங்கலமே;
மண்ணொத்த வான்பயிரின் வாழ்வு.

5. காதலின்பம்

குலமோங்குஞ் சக்திக் கொழுந்தோங்குங் காதல்
நலமோங்க நாடோங்கு நாள்.

ஈதலிற் காதற் கிணையில்லை ; தண்முகிலும்
வாதத்தான் மாறு படும்.

புண்ணுற்று மோகப் புணர்வுற்று நொந்தழியும்
கண்ணற்ற காமக் கடா.

பெண்ணைப் பழிக்காதே ; பெண்ணை யிழிக்காதே ;
பெண்ணைப் பெருமையுறப் பேணு.

காதலுல காக்குங் கனலதனை யீசன்பால்
ஈதலே யின்பமென் றெண்.

8. குலவியல்

1. தாய்

எல்லார்க்கும் ஓரன்னை ஈச னருளன்னை
எல்லாரும் ஓர்குலமென் றெண்.

தாய்சக்தி வாழியநீ ! தங்கக் குழந்தைகளால்
தேயம் வளர்க்குந் திரு.

தாய்மா ரிடத்தாகுந் தன்னாட்டின் சீர்மையெலாஞ்
சேய்வடி வாகச் செறிந்து.

வீறு மகனையே யீன்றெடுத்த மெல்லியர்க்கு
வேறுதவ மேனோ விளம்பு ?

சோறூட்டும் போதன்பாய்ச் சொல்லிவாழ் வின்கடமை
வீரத்தா யூட்டும் விறல்.

2. தாய்ப்பணி

சாவையும் அஞ்சாது தாயின் பணிபுரிவோம் ;
ஆவிக் குரியா ளவள் !

அன்னை யளித்தவுடல், அன்னை யளித்தவுயிர்
அன்னை யருட்பணிக்கே யாம்.

மழையின் விளைநிலமு மன்னுயிரும் வாழ்வுந்
தழைவது தாயன்பாற் றான்.

அன்போடு கொஞ்சி யமுதிட்ட பொற்கையைப்
பின்பற்றி முன்னேறல் பீடு.

தாய்சொல்லும் அம்மொழியே தம்மக்க ளுஞ்சொல்வார் ;
தாய்நன்று சொல்லத் தகும்.

3. தந்தை

தந்தை செயலே தனயன் செயலாகும்;
தந்தைக் கொழுக்கந் தலை.

சுற்றும் புலன்வழியே தோய்ந்து மனம்பற்றும் ;
சுற்றத்தைச் சுத்தமுறச் சூழ்.

பெற்றோருங் கூடப் பிறந்தோரும் போலநீ
உற்றமனை நாடுலகு முன்.

குலனொன் றணங்குங் குரிசிலும் பொன்செய்
நிலனும் விதையும் நிகர்.

அறிவுந் திருவும் அறநெறியும் அன்புத்
திறனும் பெருகுகநின் சேய்.

4. சேய்

இன்றுசேய் நாளையே யிப்புவியின் கையாகும்
என்றுசேய் போற்ற லினிது.

இல்விளக் காகு மினிய புதல்வர்க்குக்
கல்வியறி வாற்றலாங் கண்.

நன்மக்க ளின்பெருமை நாட்டிற்கெல் லாம்பெருமை ;
வன்மக்கள் வீட்டின் வசை.

தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி னார்மேல்வை
மாறாட்ட மில்லா மனம்.

இளமையிலே பெற்றோர் இயற்றியதை மைந்தர்
முதுமையிலே செய்யன் முறை.

5. சுற்றம்

நல்ல துணைநின்று நன்றி மறவாதான்
எல்லார்க்கு மின்னுறவென் றெண்.

பாகத்தி லன்று; பரிந்த வுதவியினில்
தேகத் துணைவனைநீ தேடு.

கிளையுரிமை கொண்டாடிக் கேடுசூழ் வானுந்
தலையரிக்கும் பேனுஞ் சரி.

இன்னா புரிவார் இரத்தக் கலப்பெனினும்
ஒன்னா ரெனவே யுணர்.

நன்னோக்கங் கொண்டுமனை நாடுய்ய வாழ்ந்திடலே
முன்னோர்க்குச் செய்யு முறை. 400

6. பிழைக்கும் வழி

தேவை யறிந்து, செழுமையுறப் பொன்செய்து,
பூவையறிந் தில்லம் புரி.

கடன்செய் யிடம்பம் கவலைக்குத் தூது ;
விடஞ்செய் வறுமைக்கு வித்து.

வீணணி யாடை விருந்து மணச்செலவு
காண்வறுமை காட்டி விடும்.

மடைவாய்நீர் போல வழிந்துபோம் செல்வம் ;
உடையார் தருக வுவந்து.

திருநாள், பெருநாள், கருநாட் செலவு
வருநாளைப் போற்றி வழங்கு.

7. குலநலம்

நிலநலத்தை வேண்டி, நிறைமுறையாம் வாழ்வாற்
குலநலத்தைப் போற்றக் குறி.

பசிக்குத் தொழிலும், பரமற்கு நெஞ்சும்,
இசைக்கு வியன்செயலு மெண்.

அச்ச மடிமை யகந்தை யிருள்வறுமை
யிச்சகத்தைக் கொல்லும் எமன்.

தின்றுபடுத் தீன்றெமன்வாய்ச் சென்றுபடல் வாழ்வன்றே ;
பன்றிக்கு முண்டப் பயன்.

வீண்பகட்டும் வேண்டா வெறுமையு மில்லாது
மாண்புபெற வாழ்வாங்கு வாழ். 420

9. தொழிலியல்

1. முயற்சி

முயல்க, முயல்க, முயல்கமேன் மேலும்
பயன்களைவைத் தீசன் பதம்.

தங்கு முயற்சியாற் சாராத தொன்றில்லை ;
கங்கை கொணர்ந்தோன் கரி.

முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் ; சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவி யாம்.

ஏதானு மொன்றை, யியற்புலமை கொண்டறிந்து,
மூதுலகம் வாழ முயல்.

அவலப் படுவினையில் ஆற்றலைப் போக்கல்
உவர்நட்டு நீர்ப்பாய்ச்ச லொப்பு.

2. வினைத்திறன்

முடிக்குந் திறனின்றேல் முந்திநா னென்னேல்;
அடக்கத்தி னாற்ற லறிவு.

உழைத்த வுணவை யுவந்துசுவைத் துண்க ;
வழுத்தி வழிபட்டு மன்....

மாமனிதன் தேவனெனும் வாழ்க்கைப் படிகளெலாம்
தாம்செய் வினையே தரும்.

தேவா சுரர்தாந்தாஞ் செய்யும் வினையாலே
யாவா ரிதனை யறி.

வையமெலாம் சிற்சபை ; நல் வாழ்வெல்லாம் வேள்வியே;
செய்வதெலாந் தெய்வச் செயல். 440

3. தொண்டு

நல்லவினை யேசூழ நாளு மிருப்பாயேற்
பொல்லா வினையெல்லாம் போம்.

தொண்டா லுறுமகிழ்வே தொல்புவியுஞ் செய்தோனும்,
அண்டரும் போற்று மமிழ்து.

அருட்பணி யின்ப வமுதமாம் ; பொல்லா
இருட்பணி நஞ்சா மிடர்.

நாட்டி னடிமையு நல்குரவு நீக்கிடலே
வீட்டின்ப மென்ன விரும்பு.

ஒருண்மை தேர்ந்திங் குலகுய்யத் தொண்டாற்றி
யீருலகு மெய்தி யிரு !

4. நலிவறல்

பசியு நசையுமறு பட்டாலிப் பூவே
வசையற வோங்கிடும் வான்.

இவ்வுலகைப் போற்றி யியல்பான நல்லறஞ்செய் ;
அவ்வுலகி னின்பமெலா மாம்.

இளைத்தோர்க் குணவு மியன்றோர்க் கறமும்
விளைத்து வறுமை விலக்கு.

நாட்டில் விளைபொருளந் நாட்டார் நலம்பெறவே
யீட்டு முயற்சி யினிது.

இன்மை மடமை யிரண்டும்பா பாசுரன்கை ;
நன்மைவிழுங் காது நலி. 460

5. கைத்தொழில்

கைத்தொழி லொன்றற்றார் கையிருந்துங் கையற்றார் ;
மெய்த்தொழிலின் வேர்வையெலாம் பொன்.

இயற்கைதருஞ் சக்திகளை யந்திரத்தில் ஊக்கிச்
செயற்கரிய நன்மையெலாஞ் செய்.

காலத்தை வெல்லுங் கருவி பலசெய்து
ஞாலத்தி லேவெற்றி நாட்டு.

ஒவ்வொரு கையும் உழைத்துப் பிழைத்தாலே
செவ்வியதாந் தேசத் திரு.

தொழிற்செல்வ மோங்கச் சுதந்தர வாழ்வாகும்
எழிற்செல்வ மோங்கும் இனிது.

6. வேளாண்மை

ஏரோசை பாருக் கிதயத் துடிப்புநூற்
போரோசை ஓங்காரம் போல்.

சொற்போரும், விற்போரும், பொற்போருஞ் சோருமே
நெற்போரொன் றில்லா நிலை.

ஒருபயி ராக்கி யுணவீவான் பாரிற்
பொருமக னென்றுநீ பேசு.

பயிர்செய்வான் வாழ்க்கையே பாங்கு ; மற் றெல்லாம்
அயல்சார்ந்த சேவகமே யாம்.

உழைத்துவிளைத் துண்ண வுவந்தா லுலகம்
செழித்து வளருந் தினம்.

7. உழைப்பு

செய்யுங் கிணறுஞ் சிறுகுடிலும் பெற்றமுங்
கையுழைப்பு மீயுங் களிப்பு.

நூற்றுத் தறிநெய்து, நூல்கற்று, மண்ணுழுது
காற்றாட வாழக் களிப்பு.

மண்ணுழு துண்ணார், வறுமைக்கொடி தென்பார்க்குக்
கண்ணிருந்துங் கையிருந்து மென் ?

கட்கஞ்சாத் தீயிலைகள் காப்பி யறநீக்கி
நற்பயிர்செய் யுண்டுடுக்க நாடு.

அந்தந்த நாட்டிற் கமைந்தபயிர் செய்துண்ணல்
அந்தந்த நாட்டார்க் கழகு.

8. பிழைப்பு

பாடுபட் டோருக்குப் பாட்டின் பயனெய்தில்
நாடுவிட் டோடும் நலிவு.

விளைப்பானே நேராக விற்றுண்ணு வானேல்
உழைப்பாளிக் கோங்கும் பிழைப்பு.

தன்னியல்புக் கேற்றபடி தாளாண்மை, வேளாண்மை
பண்ணுக ; தீமை படும்.

கூலி குறைத்தாற் குலங்குறையும் ; பாட்டாளர்
ஞாலவாழ் விற்கு நரம்பு.

புவிமக ளீந்தபயன் போதிய மட்டும்
அவரவர் துய்த்த லறம்.

9. பணம்

நல்லன மல்கி நலமோங்க நல்வழியிற்
செல்வ முயற்சிகளைச் செய்.

பணஞ்செய் படர்நீங்கிப் பண்டமாற் றோங்கின்
மணஞ்செய்யு நாட்டின் வளம்.

போதைத் தொழிலாக்கிப் பொன்னைப் பொருளாக்கி
மேதைப் புகழை விரும்பு.

பொய்வஞ்சக் கள்ளர் பொருளைக் கவராது
தெய்வப் பணிக்குத் திருப்பு.

பைதந்த செல்வம் பலருண்டு வேலைசெயக்
கைதந் திடவே கருது.

10. செய்வகை

இயற்றுக கால மிடம்வகை தேர்ந்தே ;
பயக்கும் பருவமழை போல்.

காக்கையிடம் பாட்டைக் கரக்கும் குயிலெனநீ
நாக்கடங்கி நன்முயற்சி செய்.

பின்னா வதனைப் பெரிதுங் கருதியே
முன்னோர் வினையை முயல்.

தாய்மொழியுந் தன்னறமுந் தாய்நாடுந் தண்ணருளும்
வாய்மையறி வும்பெருக வாழ்.

'ஓம் வணக்க' மென்ன வுயர்ந்தோ ரடிபணிக ;
போமகந்தை ; புண்ணியங்க ளாம்.

11. வினை வெற்றி

சங்கடம் போன்று ஜயமாந் திருவினைகள்
கங்குன் முதிரக் கதிர்.

சொல்லிற் குறைபோலத் தோன்றி நிறைபெறுமே
பல்லுயிர் வாழும் பணி.

மலர்மெத்தை மீதல்ல, வாண்மீது சென்றே
பலர்நன்மை செய்தார் பரிந்து.

துணிந்துமுன் செல்க ; துயர்க்குலந் தானே
பணிந்துவெற் றிக்காம் படி.

ஆருயிர்கட் கன்புற் றருள்வலியால் வெற்றிபெறும்
சீருயர்ந்த தெய்வப் பணி.

10. அருளரசியல்

1. தலைமை

பாருலக மெங்கெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா மோ ?

இவனுயிரே யாகும் அவனுயிரு மென்னில்
எவனடிமை யாவதெவ னீங்கு ?

குடியிற் குடியாய்க் குடியொத்துக் கோல்செய்
நடுநிலை யாட்சி நலம் ;

அறங்காக்கும் வீறும், அறிவழகும் வெற்றித்
திறங்காக்கு மன்னன் றிரு.

உண்மையே திண்மை ; யுலகி லறமோங்கு
நன்மையே நாடாள்வான் சீர்.

2. தேர்ச்சி

குடிகளே தேர்ந்திதமாய்க் கொண்டவனே கோமான்;
நடுநிலைசேர் நாட்டத்தி னான்.

தான முயரச் சமுதாய சேவைகளும்
மாணப் பெருகி வரும்.

ஆராய்ந்து போற்றி யனைவருந்தேர் சீரியரே
பாராள் சபைக்கமைதல் பண்பு.

பொதுநலமே வாழ்வாகும் புண்ணியரைத் தேர்ந்தால்
அதுநலமாம் பூவிற் கணி.

உள்ளத் துடிப்பில் உலகந் துடிப்பவரைத்
தெள்ளத் தெரிந்துடனே தேர்.

3. நல்லாட்சி

தொத்தடிமை யின்மை, துயர்செய் முரணின்மை,
உத்தமனாள் ஊருக் கணி.

சிற்றூரிற் றேயம் தெரியும் படியாண்டு
வற்றா நிறைவு வழங்கு.

பார்தழுவிப் பஞ்சம் பகையிருள்நோய் அச்சமறச்
சீர்வழியிற் செங்கோல் செலுத்து.

வறுமையற நற்றொழிலும், வாய்மை யறிவும்
முறைமையுறத் தந்துதவு முன்.

ஒளிசெய்யுங் கல்வி யுலகிலெல் லார்க்கும்
எளிதுறச் செய்த லினிது. 560

4. வரவு செலவு

கல்வி தொழில், சுகங் காப்பு நலங்கருதி
மல்குவரி வான்போல் வழங்கு.

தேவைக்கு மேற்சேர்க்குஞ் செல்வர் திறைவாங்கித்
தேவையறத் தேசநலஞ் செய்.

எவரெவ ரெத்திறத்த ரென்றாய்ந்து போற்றி,
அவரவர்க் காந்தொழிலை யாக்கு.

மனங்கொண் டறவழியில் மாந்தர் ஒழுகின்,
கனங்கொள் படைச்செலவேன் ? காட்டு !

கூரை பிடுங்கிக் குளிர்காய் வதுபோலும்
பாரைப் பிடுங்கும் பரிசு.

5. படை

நயத்தால் அரசாள நாடாத மன்னன்,
பயத்தாலே கொள்வான் படை.

பார்மனம் பற்றிப் பரிந்துமுறை செய்நாட்டிற்
போர்வெறிகள் போக்கற்றுப் போம்.

நஞ்சப் பகைவர் நடுநடுங்கப் போர்புரியும்
அஞ்சாப் படைவலிமை யாக்கு.

வீரப் பயிற்சிமிக வேண்டிப் புலிநரிகள்
ஊரைக் கெடுக்கா தொழி.

இன்றுவாள் வென்றதனை யின்னொருவாள் வெல்லுவதே
என்றுமிம் மண்ணாள் இயல்பு. 580

6. வெம்மை விலக்கல்

காலைபோற் செய்யதிருக் காவலன் சீரோங்கும் ;
மாலைபோ லாம்வெய்யோன் வாழ்வு.

கோதேறி னானேறுங் கொற்ற நெடுஞ்செருக்கு
மீதேறும் கற்போல் விழும்.

நடுக்கி யடக்கிடவே நாளும்போ ராட்டம் ;
அடுத்துத் தரவமைதி யாம்.

பாரோடு வாழான் படைச்செருக்குத் தன்னரசை
வேரோடு சாய்த்து விடும்.

ஆன்மநே யத்தால் அருளாட்சி யாலுலகில்
வானரசை யென்றும் வளர்.

7. சட்ட திட்டம்

கட்டுக் கடங்கிக் கடமையினி தோங்கிடவே
சட்ட மியற்றத் தகும்.

அதிகாரஞ் சொற்பம் அதிகஞ் சுயேச்சை
விதிசிலவா மாட்சி விரும்பு.

வித்தக நல்லோர், விதந்தெரிந்த மேன்மக்கள்
ஒத்துழைத்த லென்று முயர்வு.

ஐந்த னணியி லவைசேர்த் தறிவன்பர்
மந்திரத்தி னாளுமுறை மாண்பு.
அறவோர், தொழிற்புலவர், அஞ்சாத வீரர்,
அறிவாளர் நாட்டிற் கணி.

8. நாட்டன்பு

வீடுகளி னீட்டம் விரிநாடா மாதலினால்,
வீடென்றே நாட்டை விரும்பு.

வளமறிவு வீரம், வளரிசையு மாந்தர்
உளமகிழ்வு மோங்கியது நாடு.

நாத்திருந்தி மேலோங்க நாடுந் திருவோங்கும் ;
தாந்தாந் திருந்தல் தலை.

அன்னையன் புக்கனலை யாவிதொறு மூட்டிடுவோம் ;
பின்னே திருளச்சப் பேய் ?

எந்தா யருட்பணிசெய் யின்பத்தி னின்பமிலை ;
இந்திர போகமெமக் கெள்.

9. மக்கள் கடமை

ஆற்றப் பொறுத்துநல் லன்போ டறங்காத்தல்
மாற்றானை மாற்று மருந்து.

உலகிலுன் னாட்டை யுயர்த்துகமெய் வீரப்
புலவர்மலிந் தோங்கப் புகழ்.

நல்லொழுக்கம் பற்றி நடந்து நடந்துதினம்
அல்லொழுக்கம் போக அடங்கு.

பணிந்து நடக்கை பயனீயும் ; வீரர்
துணிந்து நடக்கையினைப் போல்.

வெற்றிபெற வாழ்தலும், வீட்டுநலந் தாங்குதலுங்
கற்றறிந்த மக்கள் கடன்.

10. ஒற்றுமை

ஒற்றுமையே பேராற்றல் ; ஒற்றுமையே வாழ்வின்பம் ;
ஒற்றுமையே வெற்றிக் குயிர்.

உள்ளொன்றி னாலே யுலகொன்று மாதலினால்,
உள்ளத்தில் ஒற்றுமையை யூன்று.

பார்த்தால் மனத்தாற் பலவாகும் ; சுத்தான்மா
போர்த்தா டியற்கைப் புவி.

மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்,
ஆன்மவொருப் பாட்டுரிமை யால்.

ஒன்றே யுயிருலகம் ; ஒன்றே யுலகிறைவன்
ஒன்றே யிறைவனுறை யுள்.

11. யோகவியல்

1. யோக சக்தி

பூரணத்தை யுட்புறமும் பூரணமா யொன்றிவளர் ;
பூரணமே யோகப் பொருள்.

சக்திக் கதிராற் சகமொளிர வாழ்ந்திடலே
சுத்தான்ம சித்தியெனச் சொல்.

சக்தியே முக்திபரா சக்தியே யின்பமருட்
சக்தியே சித்தியெனச் சாற்று.

"ஓம் சுத்த சக்தி"யென வுள்ளே யுயிர்த்திடுமின் ;
ஆம்சித்தி சக்தியரு ளால்.

மதிநீ ; வழிநீயே ; வாழியறத் தாயே !
கதிரின்றிக் காணுமோ கண் ?

2. உடலுறுதி

உடலுறுதி செய்க ; உடலையொளி செய்க ;
உடல முயிர்மனையென் றுன்.

பத்தா மிருக்கை உயிர்ப்படக்கம் ஆறுவினை
சுத்தமுட னீயுஞ் சுகம்.

ஈரெட்டு நான்களவில் ஈர்த்தடக்கி விட்டுயிர்ப்பின்
வேரெட்ட வுண்டாகும் வீறு.

அற்றுப் பசிகண் டளந்துண் டியல்வழிநில் ;
குற்றமு றாதூன் குடில்.

தூயவுணா தூயநட்புத் தூயமனத் தூயருக்குக்
காயமுங் கண்ணாடி யாம்.

3. இயற்கைச் சிகிச்சை

தீயமனத் தாலுந் திருவற்ற வாழ்வாலும்
நோய்பிறக்கு மென்றே நுவல்.

தூயவுடை யூணுந் துகளறுவாழ் வுங்கொளலே
நோயு மருந்துமிலா நோன்பு.

பூத வுடலுக்கைம் பூதமே நன்மருந்தாம் ;
பூதநிறை யெந்நாளும் போற்று.

உண்ணாமை மாற்றும் உடற்பிணியைக் காற்றொளிநீர்
மண்வாழ்வார்க் காகு மருந்து.

உண்ணும் பணியை யுடல்வாழ் பரமனுக்கே
பண்ணும் பணியாகப் பார்.

4. மனவுறுதி

நிலைத்த மனமே நிலைபேறாம்; ஆசை
யலைத்த திடர்க்கடலே யாம்.

சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில்.

சினத்துடனே மண்ணைச் செயிப்பதினுந் தத்தம்
மனத்தை யடக்கிடலே மாண்பு.

நிலைக்கு நலநாடி நீளவா நீந்தி
அலைக்கு மனத்தை யடக்கு.

நினைப்பி னுருவே நிசமாகும் ; நல்ல
நினைப்பையே தேர்ந்து நினை.

5. சித்த ஜயம்

வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணுவதேன்?
சிந்தையலை யாதிருக்கச் செய்.
ஒன்றினை யொன்றலே யோகம் ; அலைமனத்தை
வென்றிடி னொன்றாம் விரைந்து.
தீனி முயக்கினிலே செல்லாதுன் வாணாளில்
ஞான முதிர்ச்சிபெற நாடு.
இன்பத்தி லின்பம் எனைத்திலுங் கட்டின்மை ;
துன்பத்துட் டுன்பந் தொடர்பு.
பற்றற்று வாழ்ந்து, பரம சுகமெய்தக்
கற்றவனே கற்றார்க் கிறை.

6. மௌனம்

செவிப்படக் கேட்டவை சிந்தித்துச் சித்தங்
குவிப்பது கற்பின் குறி.

வாயடங்க நெஞ்சடங்க மௌனமே மந்திரமாம் ;
சேயடங்குந் தாயைத் தெளிந்து.

தானாகக் கூடுந் தலைவன்முன் பேச்சடங்கும்
ஆனாத மோன மது.

வாய்ப்பேச் சடக்க, மனமடங்கி, நாடியாழ்
பாய்ச்சும் பரநாதப் பண்.

இரவுபக லின்றி யெரிமுச் சுடரிற்
பரமான்ம நூலைப் படி.

7. தியானம்

நினைத்து நினைத்து நினைப்பற்று, நெஞ்சே,
நினைப்பற்றி நீயாகி நில்.

சிதையாம லெண்ணித் தெளிந்தாலுன் னுள்ளே
"அதுநா" னென் றேயுணர லாம்.

எழுந்து விழுந்தும் இடத்தமர்முன் னீர்போல்
அழுந்தியுன் னுள்ளே யடங்கு.

பொன்னூற்றிற் பொங்கிப் பொலியும்வெண் டாமரைவாழ்
அன்னமென் றுன்னை யறி.

அமைதியின் பத்தில் அறிவுச் சுடராய்ச்
சமதைபெறுந் தன்னிலையைச் சார்.

8. ஸஹஸ்ரார சித்தி

கர்ப்பூரத் தீபவொளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலை யேற்றச் சிரம்.

ஆறுருவி, யேழேறி, யானந்தத் தேனுண்ணும்,
சீறியெழும் ஆதாரத் தீ.

வெண்டா மரையில் விளைதேன் அறிவருளால்
உண்டார்க்கும் உண்டோ பசி ?

ஊற்றைப்போற் பொங்கி யுலகைச் செழிப்பிக்கும் ;
ஆற்றைப்போற் பாயு மருள்.

கூற்றஞ்சி யோடுங் குலகுண் டலியுச்சிக்
கேற்றுக முக்கண் ணிடம்.

9. சாகாக் கலை

என்று மிருப்பதனி லென்று மிருப்பதுவே
என்று மிருக்கும் இருப்பு.

பிறப்பிறப் பில்லாப் பெருவாழ்வு வேண்டின்,
மறப்பறவுள் ளூன்று மனம்.

தேகாதிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே
சாகாத சக்திக் கலை.

கூற்றையுதைத் தாடுங் கொழுந்தடியைப் பற்றினால்,
மாற்றேறும் பொன்னுடல மாம்.

எப்போது மெண்ணி யிருப்பார்க் கியலுண்மை
தப்பாது வீசுந் தணல்.

10. கூற்றிற்கஞ்சாமை

சாதல், பழையவினைச் சட்டையறப் புத்துடலை
யீத லுயிர்க்கென் றியம்பு.

மாரடிப்பு வேண்டா ; மகிழ்மினே, யிவ்வுலகப்
போரொழிந்து சாவுவரும் போது.

வாவென்னும் ; வந்தால், மனைமக்க ளைப்பிரியேன்,
போவென்னுங் கூற்றைப் புவி.

உண்மைக் குயிர்வாழும் உத்தமருக் கச்சமிலை ;
திண்மையிலார்க் கென்றுந் திகைப்பு.

என்றுந்தான், எல்லாந்தான், எங்குந்தான் சுத்தாத்மா ;
பொன்றுவது முண்டோ ? புகல் ?

12. சித்தியியல்

1. மெய்த்துறவு

மனத்தி லருண்மல்கி மாணுலக முய்யுந்
தனைத்துறக்குந் தொண்டே தவம்.

கனத்த நிதிகண்டுங் கட்டின்றி வாழு
மனத்துறவே வாய்மைத் துறவு.

பத்தாறும் வென்று பழுதற்ற சுத்தான்ம
சித்தரைத் தேவரெனத் தேர்.

அடிமைத் தளையுதறி யஞ்சாத வீரம்
மடமையை மாற்றும் மருந்து.

அழகெனக் காட்டி யடிமை தருவ
முழுவதும் போக்க முயல். 740

2. பற்றறுத்தல்

பற்றே துயராகும் ; பற்றறலே பேரின்பம் ;
கற்றறிந்தோர் கொண்ட கருத்து.

வெற்றெலும்பை நாய்கடிக்கும் விந்தையென மாயமனப்
பற்றுழன்று நோவார் பலர்.

அழியாப் பொருளை யழியாது பற்றின்
அழியா வமரநிலை யாம்.

கொண்டுவந்த தில்லை ; கொண்டுபோ வதுமில்லை ;
வண்டார் கனிமரம்போல் வாழ் !

நாளாக நாளாக நாளான மாயம்போய்,
ஆளாத லீசற்கென் றாம்.

3. மன மாயம்

சிரிப்பும் அழுகையுஞ் சேர்ந்தமன மாயம்
அரிப்பும் எரிப்பும்போ லாம்.

ஆசை, பொறாமை, யகந்தையிவை, நெஞ்சத்திற்
பாசவலை வீசும் பகை.

தூசியிலா ஆடியிலே தோன்றுமுகம் போலான்மா
ஆசையிலா நெஞ்சகத்தே யாம்.

இன்பவலை வீசி யிழுக்கு மனமாயந்
துன்பவலை யாகுந் தொடர்ந்து.

ஆசையழுக் கில்லாமல் ஐம்பொறியை வென்றவனார்?
ஆசா னுலகிற் கவன். 760

4. தெய்வ வொளி

தெய்வ வொளிதனையே தேடு ; பிறவெல்லாம்
கைநழுவுங் காலத்தினாற் காண்.
ஆர்வக் கனலுடனே யாண்டவனை வேண்டினருட்
பேரமுத வான்பொழியும் பேறு.
இருக்கிறே னிங்கென் றிதயத்தா னுன்னை
யழைக்கிறா னாங்கே யடை.
மனத்தூ டுருவி மணிமன் றொளிகாண் !
இனிக்கும் பரம்போ லிகம்.
துரியமலை மீதேறிச் சோதிநடங் காணின் !
அரிய செயலெல்லா மாம்.

5. ஆத்ம சாந்தம்

பொன்னும் பொருளும் புவியு மளித்திடுமோ,
தன்னுள்ளா மின்பந் தனை ?

உறவுந் துணையுமாம் உள்ளத்தான் ; உண்மை
யறிவின்ப மாவ னவன்.

இயல்பான வுன்னை யியல்பா யறிந்தே,
யியல்பாகி யின்புற் றிரு.

அன்னிய மின்றி யறிந்தடங்கி, யெக்காலுந்
தன்னிலையிற் றானா யிரு.

கண்ணைத் திறந்து, கருணையொளி காட்டியருள்—
உண்மைப் பரம்பொருளே ஓம் !

6. அறவோர்

பார்வாழ்க்கை முற்றும் பரமன் வழிபாடாம்
பூரணருக் கென்றே புகல்.
அறிதற் கரிதை அறவோர் அறிந்துலகில்
அறிவொளி யாவா ரவர்.
அருட்கோயில் சுற்றி யணியணியாய் மாந்தர்
திருத்தக்க வாழ்வமையச் செய்.
அதிமனிதர் தீரர், அருட்சக்தி மைந்தர்
புதுயுக வீரர்வரப் போற்று.
அறக்கடவுள் வாழி ! யறம் வாழி ! வாழி
யறவோர் அருள்வெற்றி யாங்கு.

7. போற்றி

போற்றுகிறே னுன்னைப் புவியே யிறைவடிவென்
றாற்றுகிறேன் அன்புப் பணி !

நடமாடுங் கோயில்காள் ! ஞாலத் துயிர்காள் !
கடவுட் குலமொன்றே காண் !

வான்பழுத்த வாழ்வே மகிழ்ந்து மகிழ்ந்தின்பத்
தேன்செழித்து வாழ்க தினம் !

இறைவ னருட்குடைக்கீழ் எல்லாரு மின்ப
நிறைவெய்தி வாழ்க நிலைத்து.

விண்குடை தாங்கியருள் வேந்தனுக்கே யாளாவோம்
பண்ணும் பணியும் படைத்து.

8. அனைத்தும் வாழ்க !

இதயம்பூ ; மந்திர மின்சொல் லுனதன்பு
துதியாக வேயருளாய் தொண்டு.

போரற்றுப் பாரிற் பொறுமை விளங்கியுயிர்
சீருற்று வாழ்க செறிந்து !
உன்பொற் றிருமுகத்தை யுள்ளும் புறமுங்கண்
டன்புற் றிருக்க வருள்.
இத்தல வட்டமெலா மென்மனைபோற் றொண்டுசெயச்
சக்திக் கனலெனக்குத் தா.
நல்லறிஞ ரோங்க, நலமோங்கிப் பூவெங்கும்
எல்லாரும் வாழ்க வினிது !

9. அகண்ட சாதனப் படலம்

மண்ணில மாந்தர் வாழ, மன்னுயிர்க் குலங்கள் வாழப்
புண்ணிய பூமி வாழப் பூரண சுத்த யோகி,
எண்ணிய பலனை யெய்தி இருளறும் அருளி னாட்சி
நண்ணிடச் சுத்த சங்க நண்பரை அணிவ குத்தான் :—

எவரெவர் எத்தி றத்தார் எனத்தெரிந் தன்பு கொள்ளும்
அவரவர்க் கிசைந்த தாகும் அருட்பணி வகுத்தத் தொண்டை
நவையறப் புரிதற் கேற்ற ஞானமுந் திறமுந் தந்து,
புவியினில் அகண்ட யோக சாதனம் புரியச் செய்தான்.

வாழிய சுத்த யோகி, வாழிய சுத்த யோகம்
வாழிய சுத்த யோக சங்கத்தின் வளமை யென்றே
ஏழிசை யுடனே சங்கம் இனியநற் கீதம் பாடிச்
சூழவும் அமர்ந்து சுத்தச் சுடரினை நினைந்த தம்மா !

பத்தியும் பணியும் அன்பும் பலகலை யறிவுங் கொண்டு,
நித்திய யோகஞ் செய்திந் நிலையத்தில் வாழ்ந்த நல்லீர்,
சத்திய யுகத்தைக் காணச் சகமெலாம் சுத்த சங்க
சித்தியைப் பரப்பு கின்ற சேவையே சேவை யாமே.

திவ்விய சேவைக் கேற்ற திறல்பெறுஞ் சித்த ரெல்லாம்
ஒவ்விய பணியைத் தேர்ந்த உத்தமத் தொண்ட ரெல்லாம்,
செவ்வழி யறிந்து செய்யச் செய்பணி கேண்மின் என்றே
துவ்விய குருவு மாங்கே சொன்னதைச் சொல்வேன் கேளீர்:

பொதுக் கடமைகள்

பூரணம் பெற்ற புனிதமெய் யோகிகாள்,
சுத்த சமரஸ சுதந்தரச் சுடர்காள்,
பல்லாண்டுகளாய்ப் பயின்றநம் யோகம்
யோக சித்தியாய் உருவெடுத் துள்ளதே.
மலைவளர் சுத்த நிலையம் இனியிவ்
வுலகெலாம் பரவி யோக சித்தியின்
வழியே, மாந்தர் வாழச் செய்யும்
அகண்ட சாதனம் ஆற்றிட லாமே.
பூரணச் சாதகர் பொதுவிதி கேளீர் ;
காலை யெழுந்து கடன்முறை செய்து,
கானத் தாலும் தியானத் தாலும்
சுத்த சக்திச் சுடரினை உள்ளே
கலந்து நிற்றல் கடமை யுமக்கே.
கவிகளே புதிய காலைக் குயில்களாம்.
அருட்கவி யாகும் ஆனந்த யோகி,
பாடிய பாடலைப் பாடிப் பாடி
மாந்தரை எழுப்புமின் ; மானிடப் பிறவியின்
பயனை யறியப் பாடிப் பேசுமின்.

காலை மாலை கடவுளை வணங்கல்,
எல்லா ருக்கும் இயற்பெருங் கடனாம்.
சத்துவ மான சைவ உணவையே
பசித்திரு முறையே புசிப்பது நலமாம்.
யோக சித்தியை ஒருமுறை தினமும்
ஓதலும் கேட்டவர்க் குணர்த்தலுங் கடனாம்.
உழைத்தே உண்ணல் பிழைத்தலின் விதியாம்.
இருளர சேகி அருளர சோங்கி,
நமது மெய்ப்பணி நலமுறு மட்டும்,
பெண்ணும் ஆணும் பிரம சரியமே
காத்துத் தவமெனக் கடமை செய்கவே.
சிறப்பாய் அவரவர் செய்கடன் அவரே
கலப்பறச் செய்து காணுக வெற்றியே.
ஒருவர் கடமையில் ஒருவர் குறுக்கிடேல்.
ஓர்பெரும் பொறியில் ஒவ்வொரு பங்கும்
அதனதன் கடமையை அமைதியாய்ச் செய்தே
ஒரேமின் சக்தியால் ஓடுதல் காணீர்.
உடலில் உள்ள ஒவ்வோ ருறுப்பும்
ஆருயிர் ஒன்றால் அசைதலைக் காணீர்
சாதி மதநிறப் பேதமே யில்லை.
உலகெலாங் கோயில் உயிர்த்தொகை சாமி ;
பொதுநலம் புரிதலே பூசனை யாகும்
என்றுணர்ந் தனைவரும் ஏகுவீர் ; அவரவர்
தலைவரைப் பணிவீர் ; தகுந்த தொண்டரை
ஒவ்வொரு காலையும் செய்விதி பயிற்றி
ஊர்தொறும் ஊர்தொறும் உரியன செய்வீர்.
நானூற் றைந்து நல்ல தொண்டரும்
பன்னிரு தலைவரும் பகுதி பகுதியாய்,
பாக்கம் பாக்கமாய்ப் பரவிப் பணிசெய
நோக்குவீர் புதுயுகம் ஆக்குவீர் ஆங்கே !
அருட்பணிக் கெழுவீர் அன்புள மணிகாள்,
இருளற் றுலகெலாம் இன்பமே பொலியும்
அருட்பணிக் கெழுவீர் .... அகண்டசா தகர்காள் !

கடவுட் குழு

நீண்ட தவத்தால் ஆண்டவன் அருளைப்
பெற்றுக் கற்பன கற்றுச் சிறந்த,
ஜோதி முனிவரின் பாது காப்பிலே
ஒள்ளிய தொண்டர் ஊரூர் சென்று,
பாட்டி னாலும் பரவுதலாலும்
அருட்பெரி யாரின் அற்புத வாழ்வைப்
படித்துப் பேசி நடித்து விளக்கி
இசைக்கதை பேசி இதயந் தொட்டுத்
தெய்வம் உண்டு தெய்வத் திருவருள்
சூரியன் ஒளிபோல், மாரிபோல், அனைவரும்
பெறத்தகும் ; கருணைப் பெரும்பரஞ் ஜோதி
சாதி மதநிற சாத்திர கோத்திர
நாடு நகர நானா பேதம்
இல்லை ; இறைவன் எவர்க்கும் பொதுவாம்.
உலகெலாம் இறைவன் உலாவிடுங் கோயில்,
உள்ளந் தோறும் உள்ளது கடவுள்....
நம்புமின் ; என்று நவின்று நவின்றே
ஊர்தொறும் அன்பரை ஒன்று சேர்த்துப்
பரம்பொரு ளுணர்வே பரவச் செய்மினோ !
நாமே தெய்வம் ; நமக்கிணை யில்லை,

என்று பேசி இறுமாப் பாலே
உண்மையை மறைத்தே, உலகை மயக்கிப்
பொருளும், புகழும் போகமுந் தேடிடும்
மனிதனைச் சுற்றும் மதவினை ஒழிக !
ஒன்றே தெய்வம் உளந்தொறும் அதுவே,
பத்தியுந் தியானமும் பரோப காரமும்
அதனை அடையும் அன்பு வழியெனப்
புகல்வீர், திருவருள் பொதுவென விளக்கி,
தியானத்தாலே ஞானம் மலரவே
சுத்த யோகத் தொண்டர் தமக்கு
வழியைத் துலக்கி மகிழ்வுறு வீரே....

உலகக் குழு

அனுபவ ஞானி ஆத்தும நேயனைத்
தலைக்கொண் டேகுக உலகக் குழுவே.
இப்போ துலகம் எண்ணிலாப் பிரிவினைச்
சந்தையாய் அகந்தைச் சண்டையா யுள்ளதே.
சாதிச் சண்டை, சமயச் சண்டை
நாட்டுச் சண்டை வீட்டுச் சண்டை,
நிறத்திமிர்ச் சண்டை நீசச் சண்டைகள்
ஆயிரங் கொள்ளிப் பேயெனக் கிளம்பி,
மனிதரை விலங்கென மாற்றுகின் றனவே.
புலவர் சொன்ன பொதுநெறி மறந்தே
தாம்தம தென்னும் சமயக் கோட்டைகள்
எழுப்பி, மாந்தர் மழுப்பி மெய்யைத்
தன்னலத் தாலே தற்கொலை புரிவார்.
உலகம் பொய்யதை உதறிச் செல்வதே,
துறவெனச் சிலபேர் சொல்லைப் பெருக்கி,
ஊரின் சோற்றை உழையா துண்டு,
“நாசமாய்ப் போகும் ஞால விசாரமேன் ?
சும்மா இரு” மெனச் சொல்லித் திரிவார்,
இப்படிச் சும்மா இருப்பவ ராலே
தொண்டினை வெறுக்கும் சோம்பற் கூட்டம்
பெருத்தது ; நாட்டின் பெருமை குறைந்ததே ;
மண்ணாசை கொண்ட மாற்றார் நம்மை
அடிமை செய்தார். அந்தோ, துயரம் ....!
உலகக் குழுவினர் உணர்ச்சி ததும்பும்
சொற்பொழி வுடனே சிற்பம் சித்திரம்
பாட்டு நாடகம் பரத நாட்டியம்
நூல்கள் ஆகிய நூறு வகையால்,
வானம் வளைந்த மாநில மெல்லாம்
திருவருள் ஆடும் ஒருபெருங் கோயில் ;
உள்ள மட்டிலும் உலகம் உண்மை.
நமக்கு முன்னும் நமக்குப் பின்னும்
கற்ப கோடி கால மிருக்கும் ;
அழகுச் சோலையாம் பழகிய வுலகம்
அன்பு மலரும் அருட்கனி வளமும்
செழிக்கத் தொண்டு செய்வதே வாழ்வாம்
என்று நன்றே இயம்பி விளக்குமின்.
மதமும் சாதியும் மனவிவ காரமே ;
அறிவிலி மனமே பிரிவினை என்றே
அழுந்தக் கூறி அகண்ட உலகில்
ஆருயிர் அனைத்தும் ஓர்குலம் எனுமின்.
உலகிற் கெல்லாம் ஒன்றே கடவுள்
உயிரெலாங் கடவுளின் உடலென லாமே,

உயிர்க்குயி ராக வுள்ளசுத் தான்மா
அதனைக் கலந்தால் அறிவொளி யதுவே.
தானே பிறராம் பிறரே தானாம் ;
ஆன்ம நேயம் அன்புறக் காணினே,
அமர்க்கள மொழியும் அகந்தை யொழியுமே.
உலகோர்க் கெல்லாம் உலகம் பொதுவே.
மண்வெறி கொண்டு புண்சமர் செய்யும்
அரக்கர் செருக்கை அறுக்கும் வாளிதே—
ஆலய உலகில் ஆன்ம ஒருமை,
கொலைப்போ ரன்று, விலைவாழ் வன்று,
கொள்ளை யன்று, கொடுமைக ளன்று,
பெண்மண் பொன்வெறிப் பிழைகளு மன்றே—
கண்ணியும் குண்டும் பண்ணிக் குவித்து,
நாட்டை நாடு நலியப் போர்செய்
இரத்த வெறியிலை...... இப்புவி வாழ்வின்
குறிக்கோள் இறைவனை அறிந்து கலத்தலே.
எங்கும் பரம்பொருள் இருக்கக் காணலே,
எல்லா ருக்கும் இன்பஞ் செய்தலே ;
என்பதை நீவிர் மன்பதைக் குரைத்து,
வழியைத் துலக்கின், வரும்அறக் குழுவே....

அறவோர் குழு

எல்லா மதமும் எல்லா நூலும்,
பழமையும் புதுமையும் பண்புறப் பயின்று,
நின்று பார்த்து நிலையறி வுடைய
தரும சேனர் தலைமையிற் சென்றுநம்
அறக்குழுத் தொண்டர் அறப்பணி செய்கவே.
அறவோர் கூட்டமே அருளாட் சிக்கு
வலக்கரம் போல வாய்ந்தது வாகும்.
மறவலி யரக்கர் மண்வெறி யாலே,
இவ்வுல கத்தில் இரத்தம் வடிப்பதை
மாற்றி அமைதியைப் போற்றிடச் செல்வீர்.
ஒருவருக் கொருவர் உள்ளன் புடனே
உதவி யாக உலகில் வாழ்வதே
அறமென் றுரைப்பீர் ; ஆசை யாணவம்,
காமம் குரோதம் கடிமனச் சீற்றம்,
ஊன்மது புசித்தல், உழைக்கா துண்ணல்,
பிறரைத் திருடல், பிறர்நா டழித்தல்,
நோய்துயர் பெருக்குந் தீய பழக்கம்,
இத்தகை அதர்மப் பித்துகள் ஒழிகவே !
தூய வாழ்வும், தூய நினைவும்,
வாய்மையும் அன்பும் வளர்ச்சி பெறவே
மேடை அச்சு, பாடல், நாடகம்,
துண்டுப் பிரசுரம், துகளறு நூல்கள்
ஆகிய வற்றால் அரும்பணி புரிகவே.
உலகப் பெரியார் உள்ளமும் உரையும்
சீரிய வாழ்வும் செவ்விய தொண்டும்
அருட்பெரும் பாடலும் அகங்கனிந் துருகப்
படித்து விளக்கிப் படிக்கச் செய்மினோ !
சுத்தசன் மார்க்க சத்தி வழியை
அரங்கிலும் அச்சிலுந் திறம்பட விளக்கி,
ஊர்தொறும் அறவோர் சீர்பெறப் பழக்கி,
அறவிளக் கேற்றி மறவிரு ளகற்றிப்
பொதுநலம் புரிக புதுயுகம் வரவே.

அறிஞர் குழு

அறிவைப் பரப்பும் அரியநற் றொண்டர்,
பாரத முனிவர் பண்புறப் பயிற்றிய
ஞான ஜோதி நடத்திடச் சென்றே
கல்வி பரப்புக, கலைகளைப் பரப்புக.
மேற்கும் கிழக்கும் விளங்கும் அறிஞர்
கண்ட ஞானமும் காணும் கலையும்,
புண்ணிய பூமிப் புதல்வருக் கெல்லாம்
கலாநிலை யங்கள் கண்டு புகட்டுக.
நூறுவீட் டிற்கு நூலகம் ஒன்றும்
ஆயிரம் வீட்டிற் கறிவகம் ஒன்றும்
எழுப்பி மடமை யில்லா தொழிப்போம்.
பிரம சரியம் பேணுக வாலிபர் ;
கன்னியர் குருகுலங் கண்டுபெண் மணிகள்
கற்றறி வோங்குங் கடமை புரிகவே.
எண்ணெழுத் திலக்கியம், மண்விண் ணறிவு,
பௌதிகம் ரசாயனம், பொறிக ளமைத்தல்,
பயிர்த்தொழில் நெசவு பயனுறு கைத்தொழில்
இவற்றையும் புலவர் பயிற்றுக நன்றே.
உழைத்துண் டுடுத்துப் பிழைக்கவும், கற்கவும்
எல்லா ருக்கும் எளிதி னியல்கவே.
திண்ணிய உடலும் நுண்ணிய அறிவும்,
எண்ணிய நல்வினை இயற்றும் திட்பமும்,
வீர தீரமும், வெல்லுந் திறனும்,
செறிந்த வாலிபர் தேசப் பணிசெய
முந்துறச் செய்க மூதறி வாளர்.
ஆற்றல் மிகுந்த அரியமா ணவரை
அமரகம் ஐரகம் அனுப்பியாங் கறிஞர்
செய்யும் வியன்களைச் செய்திறன் பெற்று
நமது நாட்டிலே நாட்டிடு வோமே.
தொழிற்கரு விகளும் எழிற்கரு விகளும்,
போர்க்கரு விகளும் வார்த்திவண் செய்ய
வாலிபர் பயின்று ஞாலம் வெல்கவே !
கல்விக் கடலின் எல்லையார் காண்பார் ?
பொதுக்கல் வியுடன் புலமைக் கேற்ற
சிறந்த தொழிலும் திறம்படக் கற்று,
வீடும் நாடும் விளங்கிட நன்றே,
மடமையும் பொல்லா வறுமையும் ஒழியவே,
அன்னியச் சார்பிலா தவரவர் பிழைக்கவே
வேண்டிய கல்வி ஈண்டுநல் குகவே ....

அன்புக் குழு

அறமும் அறிவும் அருளும் திருவும்
அன்புடன் விளங்கும் இன்புறு தொண்டர்
அன்புச் சாமியின் அரிய தலைமையில்,
ஊர்ஊர் சென்றே ஒற்றுமை, நேயம்,
உயிர்களுக் கிரக்கம், ஊனுண் ணாமை,
இன்சொல் லாடல் இணக்கம் வணக்கம்,
பரோப காரம், பரிவு முதலிய
அன்பொழுக் கங்களை அடங்கிப் பயிற்றுவீர் !
பசிக்குத் தானியம் பழம்பால் உண்ண,
உலகைப் பயிற்றி ஊன்உண ஒழிப்பீர்.
ஊனுண வொழிந்தால் உயிர்க்கொலை யொழியும் ;
உயிர்கொன் றுண்ணும் ஒருபிழை யொழிந்தால்,

மனிதரை மனிதர் மடிக்கும் போர்வெறி
ஒழிந்து, கருணை பொழிந்து பொலியுமே,
கருணையி னாலே கடவுட் டன்மைகள்
வளரும் ; அதனால் வன்மனங் கொண்ட
அசுரக் குணங்கள் அற்றரு ளோங்குமே.
அருளால் அறிவும், அறிவால் ஒளியும்
உண்மை யின்பமும் ஓங்குத லாமே.
உழைப்புக ளாலே பிழைப்பருள் சாலை,
உயர்தொழிற் சாலை உணவுடை நல்கும்
கைத்தொழிற் சாலை, கால்நடைச் சாலை,
சீவகா ருண்யச் செயல்கள் இனும்பல
நாட்டி யன்பைக் காட்டுக நல்லோர்.

நன்னடைக் குழு

நன்னடைத் தொண்டர் ஞாலந் திருந்த
உத்தம சாதுவின் உயர்வழி பற்றியே
பொதுஜன சமூகம் புண்ணிய வழியில்
இயல்பாய் நடக்கவும், இழிநடை ஒழியவும்,
கலைக ளாலும் கட்டுப் பாடுடன்
வாழுத லாலும் வாழ்வகை விளக்குமின்.
வீறும் பலமும் மேதையும் வளர்க்கும்
பிரம சரியம் பிழையறக் காக்கும்
வகையைச் சொல்லி, வாலிபர் தமையும்
இல்லறத் தாரையும் நல்லறத் துய்மின்.
ஆசை காட்டி ஆளைக் கெடுக்கும்
வேசைத் தொழிலை வேரோ டொழிமின்,
கற்பொழுக் கத்தைக் காத்தில் லறத்தில்
ஆண்பெண் இருவரும் மாண்புற வாழ
வற்பு றுத்தி வழியைக் காட்டுமின்.
காலை மாலை கடன்முறை செய்யவும்,
உடல்மன மொழியில் உண்மையுந் தூய்மையும்
கடமையிற் கருத்தும் காத்திடச் செய்மின்.
மதியை மயக்கும் மதுவை விலக்கிச்
சூதும் தீதும் வாதும் வழக்கும்
வஞ்சமும் இன்றி நெஞ்சத் துடிப்பை
மதித்து நடக்க மாந்தரைப் பயிற்றுமின் !
காலம் போற்றும் சீலத் துடனே,
நாணுவ நாணிப் பேணுவ பேணி,
கனிந்த மொழியுங் கண்ணோட்ட முடனே
பிறர்வருந் தாத பிரியமாம் செயலுடன்
நாக ரிகமாய் நடந்துல கத்தில்,
முரட்டுத் தானவர் வறட்டுச் செருக்கை
ஒழித்துத் திருத்த உயர்நடை காண்மின்....
நடையைப் போன்றே நாடா கும்மே.

இல்லறக் குழு

இல்லற வாழ்வே இப்புவி வாழ்வாம்.
எப்படி இல்லறம் அப்படி நாடாம்.
திவ்விய தாந்திரச் சித்திகள் பெற்ற
இல்லற யோகிகள் எனப்புகழ் சிறந்த
சிவமங் களரின் சீரிய சொற்படி
இல்லறத் தொண்டர் இருபா லாரும்
இல்லந் தோறும் நல்லறங் காமின்.
பிரம சரியம் பிழையறக் காத்த
கன்னியும் காளையும் காதலித் தொன்றி

உழைத்துப் பிழைக்க ஒருதொழில் போற்றிக்
கற்பைக் காத்துக் காமவே கத்தை
அடக்கி யாண்டு திடக்கருத் துடனே,
மக்களைக் கருதியே மனைவியைக் கூடி
மற்றைக் காலம் மாசற ஒழுகி,
அகமும் புறமும் சுகமுறத் தக்க
தியானமும் நல்ல தேகப் பயிற்சியும்
தூயநல் லான்ம நேய வுரிமையும்
வள்ளுவர் அறப்பால் வகுத்த வழியே
இழுக்கற் றொழுகும் இயலற மேன்மையும்
விளக்குமின் ; மனத்தின் விகார மொழிமின்.
பெண்டிர் வாழ்வைப் பேயெனப் படுத்தும்,
அடிமைத் தனமும், கொடிய கைம்மையும்,
வரதட் சிணையும் வழக்கற் றொழிகவே.
நல்ல கல்வி நல்ல கைத்தொழில்,
நல்ல காதல் நல்லுழைப் புடனே
இருவரும் உள்ளே ஒருவராய் விரும்பி,
இல்லம் விளங்க நல்ல மக்களைப்
பெற்றுப் பெருகிச் சுற்றந் தழுவி
வாழும் வகையை வாழ்ந்துகாட் டுமினே....

குலக் குழு

குலத்தை வளர்க்குங் கலையிற் சிறந்த
குலமா ணிக்கந் தலைமை தாங்கவே
தாளாண் மையுடன் வேளாண் மையுமுறக்
குலநலங் காக்குங் கொள்கை பயிற்றுவீர்.
தாயுந் தந்தையுந் தனயருஞ் சுற்றமும்
நண்பரும் விருந்தும் அன்புடன் ஒழுகி,
அவரவர் கடமையை அமைவுறச் செய்யவும்,
வீட்டுப் பணிகளை மின்னிடை யாரும்,
வெளிவே லைகளை வீறுகொள் ஆண்களும்,
சரிவரச் செய்து சரிநிக ராக
மனையோர் வாழ்க மங்கலம் பொங்கவே
அறிவும் செல்வமும் அகமகிழ் வுடனே,
அழகுங் கலையும் அன்புந் துலங்க
உடலைப் போற்றும் உயிரென வீட்டை
இன்புறப் போற்றும் இயற்கை யான
நடை முறைகளை நன்றெடுத் தோதுமின்.
தாய்மா ருக்குத் தக்க கல்வியும்,
குழந்தைக் கலையும் அளந்து பயிற்றுமின்.
குழந்தை களுக்குக் குடிக்கப் பாலும்,
எட்டாண்டு வரையில் இன்னிய கல்வியும்
ஆடலும் பாடலும் அளிக்க வேண்டிய
பாலர் சாலையும் பசுநிலை யங்களும்,
ஊர்தொறுங் காண்மின். உழைத்துப் புசிக்க
வேண்டிய தொழில்களை வித்தகர் பயிற்றுமின்.
ஒழுக்கமும் கல்வியும் ஓங்கிச் செழிக்க
கலைக்கோ யில்கள் கட்டி ஊர்தொறும்,
ஐந்து புலன்களும் இன்புறச் செய்யும்,
பயனுள நாடகம், பரதம், பாட்டு,
கதை புராணம், கவிதை, சிற்பம்,
சித்திரம் ஆகிய சிறந்த கலைகளை
இருபா லார்க்கும் இயல்புறப் பயிற்றுமின்
குலந்தொறுங் குலநலச் சங்கம் நிறுவி
உலகமுன் னேற்றம், உலகம் போற்ற

நமது முன்னேற்றம், நாடு பயன்பெற
வேண்டிய திருத்தம், விவாகம், சடங்கு,
திருநாள் பெருநாள் கருநாள் செய்வகை
பொதுச்சுகா தாரம் பொதுநலத் தொண்டுகள்
போற்றும் வகையெலாம் ஆற்றவும் பயிற்றி
உலகம் வாழக் குலநலங் காமினே ?

தொழிற் குழு

கலையுந் தொழிலுங் கணக்கும் அறிந்த
புலவன், உழைப்பிற் சலியாத் திண்மையன்
வீரகர் மாவின் விருப்பப் படியே
தொழிற்குழு செய்க தொண்டுகள் பலவே.
வறுமையே மாந்தரைச் சிறுமை செய்யும்
பெரும்பே யாகும், பேரிட ராகும்.
ஒவ்வொரு கையும் உழைத்துப் புசித்தால்,
செவ்விய தொழில்கள் செயமுற வளர்த்தால்,
நாட்டுப் பொருளை நாட்டார் துய்த்தால்,
பசும்பொருள் இங்கே பண்டமாய் உதவினால்,
கப்பலும் வணிகமும் கைத்தொழில் வளமும்,
நாடு செழிக்கவே நங்கையி லிருந்தால்,
பணம்புதை யாது பலதொழில் வளர்த்தால்,
தொழிற்பயன் பொதுவுறத் துய்த்தால், உலகில்
வறுமை யிராது ; வறியரும் எவரே ?
ஜனோப கார சங்கம் நாட்டி
ஊர்தொறும் பிழைப்புற உழைப்பை வகுப்பீர்
உண்ண வுடுக்க உரிய தொழிலெலாம்
பலர்பய னடையும் பான்மை யுள்ள
கைத்தொழி லாகவே கணித்தல் அழகே...
கஞ்சி வார்ப்பது கைத்தொழி லாகுமே.
கையாற் செய்யக் கட்டி வராத
ஆவிக் கப்பல் ஆகாயக் கப்பல்
ஆயுதம் வாகனம் அச்சுப் பொறிகள்
இவற்றை இயந்திரம் இயற்றலே முறையாம்.
பலர்கை யுறங்கிப் பசிவாட் டாது,
கைத்தொழில் எளிதாய்க் காணுறத் தக்க
இயந்திரங் காணல் இனிதா கும்மே.
போட்டியில் லாது பொதுநல வுணர்வுடன்
ஒருவர் இருவர் ஓட்டிப் பலரும்
பழகிப் பயன்பெறும் அழகிய கருவிகள்
மனைதொறும் பயில்க மக்கள் பிழைக்கவே
தையல் யந்திரம், தானியச் சக்கி,
இரும்புக் கலப்பை, இயந்திர ராட்டை,
விசைபெறுந் தறிகள் மின்சாரத்தால்
இயங்கும் பொறிகள் இயற்றலே நலமாம்.
ஆக்கந் தேய்க்கும் அன்னியப் பொருளை
நீக்குக ; சுயத்தொழில் ஊக்குக மாந்தர்.
பணஞ்செய் மாயப் பிணியும் செருக்கும்
பண்ட மாற்றின் பயனால் விலகுமே.
நூற்றவர் நூலை மாற்றுக நெல்லாய்.
கள்ளபின் கஞ்சா, காப்பி, புகையிலை,
புலாலைப் போன்ற பொல்லாத் தொழில்களைக்
கட்டோ டொழிமின் கருணை வேண்டுவோர்.
உண்டுடுத் திருந்துநன் றூருக் குதவியாய்
வாழ வேண்டிய மங்கலத் தொழில்களைத்
தெருதொறும் வளர்க்கத் திருப்பணி செய்மினோ !

தகுதிக் கேற்ற பகுதியில் உழைத்தே
அனைவரும் உண்ண மனைசெழித் தோங்க
உழைப்பைத் தருதல் உங்கட னாமே !

அரசியற் குழு

ஆண்மையும் வீரமும் அஞ்சா நெஞ்சும்,
வாக்கும், உயர்ந்த நோக்கும் செயலும்,
வீரமும் காரிய வெற்றியும் செறிந்த
பொதுஜன நண்பன் புண்ணிய வீரன்
தருமகேசரி தலைமை தாங்கவே
சித்திமான் வகுத்த திட்டப் படியே,
அரசியற் குழுவார் ஆற்றுக பணியே.
ஒவ்வோர் ஊரும் உலக மாகவே
அரசியற் பணிகள் அமைந்து பொலிகவே !
இசைக்கவி யோகிகள் எழுந்துமுன் சென்றே
பழங்கதைப் பாட்டும் புதுக்கதைப் பாட்டும்,
சரித்திர பாட்டும் சமத்துவ சுதந்தர
வீரப் பாட்டும் வீதியி லிசைத்தே
புண்ணிய பூமியின் புகழும் பெருமையும்
இற்றை நிலையும் தெற்றென விளக்கி,
நாட்டன் போங்க நற்பணி புரிகவே
அடுத்தொரு கூட்டம் ஆண்மையும் வீரமும்
உரிமை யுணர்ச்சியும் ஓங்கப் பேசியே,
செய்தித் தாட்கள் செவ்வனே நடத்தித்
தூண்டுக வீரர் சுடரொளித் தொண்டே
மற்றொரு சாரார் மாதரைப் பயிற்றுக.
கல்வியுந் தொழிலும் வல்ல புலவரால்
சுதேசப் பொருளைத் தொண்டெனப் புரிந்து
தேசச் செல்வஞ் செழிப்புறச் செய்கவே.
ஆக்க மழிக்கும் அன்னியர் பொருளை
நீக்கி வாழ ஊக்குக நாட்டை.
அரக்கர்க் கிடந்தரும் அழிசெயல் அனைத்தும்
அன்னிய மோகமும் அடிமைப் புத்தியும்
அறவே யொழியத் திறம்பெறு தீரர்
மற்றக் குழுவுடன் ஒற்றுமை கொண்டே
தேச மெல்லாந் தேவை யளவு
பெற்று வாழப் பெரும்பணி புரிமினே.
வேலை தந்து கூலி யுதவியே
பிச்சை யேந்தும் பிழையைத் தீர்மின்.
சுயமான வுறுதியும் சுயநம் பிக்கையும்,
சுயநல மற்ற பொதுநலத் தொண்டும்,
தியாகமும் ஆத்தும தீரமுங் கொண்டால்,
பிரிவினைக் கட்சிப் பேதமே யின்றி
உரிமை வேண்டி ஒற்றுமை யுற்றால்,
ஆட்சிச் சபைகளை ஆண்மையோ டாண்டால்,
மெல்ல மெல்ல வெல்லுந் திறனும்
விடுதலை யின்பமும் விளங்குத லாமே.
புண்ணிய நாட்டார் புலமையைத் தூண்டி
மேதினி போற்ற மேதா விகளை,
உண்டு பண்ணி உலகெலாம் அனுப்பி,
நாட்டின் மதிப்பை நட்புடன் உயர்த்தினால்,
நமது சொல்லை ஞாலம் மதிக்குமே.
புலவரைப் போற்றிப் புகழ்பெற வாழ்வோம்.
அமைதியாய் இவ்வகை அரும்பணி செய்மினே !
புத்திமா னாகிய சித்திமான் பயிற்றும்

வீரர் செய்வார் விடுதலைக் கிளர்ச்சியே ;
சீகரத் தீவிற் சேனைக் கேற்ற
புதுப்புதுக் கருவிகள் போரெனத் துடிக்கும்....
அதனிடை யேநாம் ஆயுத மின்றியே
தியாக வேள்வியின் வேகத் தாலே,
அறத்தை நாட்டி அதர்ம விதிகளைப்
புறக்க ணிப்போம். பொய்யை யெதிர்ப்போம்.
குடிபடை சேர்த்துக் கொடுமையைக் குமைப்போம்.
நடுங்கா நெஞ்சுடன் கடுஞ்சிறை காத்தும்
துப்பாக்கி முனையிலுந் துணிந்துமெய் யுரைத்தும்,
அடிமைப் பான்மை அடியுடன் சாய்ந்து
சுதந்தர வீரராய்ச் சோர்வற நின்றும்,
ஒத்த விடத்தில் ஒத்துழைப் பீந்தும்
ஒவ்வா விடத்தில் ஒத்துழை யாதும்,
நல்லதைப் போற்றிப் பொல்லதை வீழ்த்தியும்,
வீரத் தியாகிகள் விடுதலை கொணர்வாம்.
அசுர பலங்கள் ஆயுதம் எடுத்துச்
சாது சனங்களைச் சண்டைக் கிழுத்துக்
குண்டுக ளெறிந்து கொலைசெயப் புகுந்தால்,
அவர்களை அடக்கநாம் ஆயுத வீரரைப்
பயிற்றிட வேண்டும், பாரினில் இன்று
வாணிகத் தொழிலுடன் இராணுவ பலமும்
ஐக்கிய பலமும் அறிவுத் திறனும்
வளர்க்க வேண்டும். வலிய தானவர்
சாந்தக் கிளர்ச்சியால், சமதரு மத்தை
அறிந்திட ரின்றி அடங்கிப் போனால்,
இரத்தப் போரிலை ; இருவரும் அன்புடன்
குலவி நல்ல குடியர சாக்குவோம்...
இவ்வா றனைத்திலும் இகலை வென்று,
சுதந்தரம் பொலிய நிதந்திருத் தொண்டர்
சுறுசுறுப்பாகத் தொண்டுகள் செய்கவே.

யோகக்குழு

எல்லாச் செயல்களும் எல்லாப் பயன்களும்,
யோக சக்தியால் ஒருங்கே தழைக்குமே ;
ஆருயிர் வாழ்வெலாம் அகண்டசுத் தான்ம
யோகமாக் குதலே உயர்கட னாமே.
அதற்கே நாமும் அருந்தவஞ் செய்தோம்.
அதற்கே சித்தர்கள் ஆயிரந் தேர்ந்தோம்.
யோக தீரன் உம்மை நடத்தச்
செல்வீர் முன்னே சேமம் பெருகவே.
அன்பாம் ஆன்மா இன்ப மயமாம் ;
உள்ளும் உலகும் தெள்ளிதின் அதனை
உணர்ந்து வாழலே யோக சித்தியாம்.
சித்தி நல்கும் சக்தியி னாலே,
உலகான்ம நேய ஒருமை கூடியே
அறிவும் திருவும் அன்பும் இன்பமும்,
அறமும் அருளும் ஆற்றலும் ஓங்குமே.
குண்டலிக் கனலை மண்டையி லேற்றி,
வெண்டா மரையில் வீற்றிருந் தாலே,
சுத்தா னந்தச் சுடராம் உயிரே ;
சிற்சக்தி யென்னும் தேன்செழிக் கும்மே.
யோக சித்தியின் உள்ளுரை கண்டு,
சாதனஞ் செய்து, சகலரும் வாழ்வைச்
சுத்தான்ம யோகச் சுடரொளி யாக்கினால்,

மனித சமூகமே மாறுதல் பெறுமே.
பூரணம் பெற்ற புனிதன் ஒருவனால்,
கணக்கிலர் ஆன்மக் கனல்பெறு வாரே.
மனத்தை யடக்கி மாசிலாத் தியான
சாதனத் தாலே சக்தி பெறலாம்.
அத்தகைச் சக்தி யடைந்த நல்லோர்
எங்குந் தம்மையே இயல்புறக் காண்பார்.
அன்பும் நேயமும் அவரால் ஆமே.
அமைதியும் இன்பமும் அவரால் வருமே.
மனோமய மான மானிடம் மாறி,
விஞ்ஞா னத்தில் வியனொளி கண்டே..
ஆனந் தத்தில் அமுதம் பருகியே,
துரியாதீதச் சுகமய போகம்
புசித்துச் சின்மயம் பொலிந்திடும் யோகம்
சக்தி யளிக்கும் சம யோக மாமே
அத்தகை யோக சித்தர்காள், இனிநீர்
தேசந் தேசமாய்த் திரிந்துல கிற்குச்
சமயோக சக்தி சாதன வாழ்வைச்
சொல்லிப் பயிற்றிச் சுத்தான்ம ஒளியைத்
தூண்டுமின் ; எங்கும் சுத்தசங் கத்தை
நாட்டிநல் லோரைக் கூட்டித் தினமும்,
உடலுறு திக்கே உயிர்ப்பா சனமும்
உள்ளுறு திக்கே தெள்ளிய தியானமும்,
சித்தசுத்திக்குப் பத்திசா தனமும்
இந்திரிய மடங்கத் தந்திர யோகமும்,
உபசாந் தந்தரும் ஓம்சுத்த சக்தி
ஜபசா தனமும் தவசா தனமும்
சுத்த முக்த சமத்துவ வாழ்வும்,
அருட்பணி யாகிய கரும யோகமும்,
பாரத சக்தி பரவும் கலையும்
பக்குவ மறிந்து பயிற்றுக நன்றே...
எல்லா நலமும் வல்லது யோகம்.
மூச்சைப் போலவே முதுநில மாந்தர்,
யோகத் திறைவனை உட்கலந் துயிர்க்க
வேண்டும் பணிகளை, விஞ்ஞா னத்தால்,
ஆண்டவன் அருளால், அமைதியாய்ச் செய்மின்,
விஞ்ஞான யோகம் விளங்குக நன்றே.

சித்தர் குழு

சமயோக சுத்த சமாஜக் கொள்கையைச்
சித்தர் உருச்செய் திறனைக் கேளீர் :—
ஊர்தொறும் ஊர்தொறும் யோகிகள் கூடிச்
சமயோக சமாஜம் தழைக்கச் செய்கவே
அன்பர் நாட்டும் அருளால யத்தைச்
சுற்றிலும் சங்கம் வெற்றியோ டமையும்
அருளால யத்தில் ஆண்டவன் ஒருவனை
தியானத் தாலும் திருப்பாட் டாலும்,
அன்பர் அனைவரும் இன்புறக் கலப்பார்,
அருட்பேச் சருட்பாட் டருட்சா தனமே
அருட்கோ யிலிலே அருளுற நடக்குமே.
வாய்மனங் கடந்த தூயவ னுக்கே
தியானப் பூசனை தினந்தின மாமே.
சமயோக சக்தி சமாஜ மிதுவே ;
இதுவே சித்தர் பொதுவீ டாகும்.
கோயிலைச் சுற்றிக் கொழுங்கனிச் சோலையாம் ;

கனிகளை யுண்டு கடுந்தவம் புரியும்
மாதவர் வாழும் வீதியங் காகும்.
சக்தி யளித்தலும் சாத்திரங் கோத்தலும்,
யோகம் பயிற்றலும் உயர்பொரு ளுரையும்
மாதவர் செய்யும் மாப்பெருங் கடமையாம்,
பொழிலைச் சூழ்ந்து புலவர் வாழும்
கலைநிலை யங்களும் கல்விச் சாலையும்
அறநிலை யங்களும் அணியுறக் காணுமே,
அனைத்தையு நடத்துவோர் அறவோர் ஆவார்.
கல்வி, கைத்தொழில், கமத்தொழில் நெசவு,
வைத்தியம் முதலிய வகைவகைப் பணிகளை
அணி வகுப்பவர் ஐம்பதாம் அறவோர்.
அச்சுக் கூடமும், அருங்கலை யிதழும்
நடத்தி அறிவை நாட்டிற் பரப்புவார்.
இருபா லார்க்கும் குருகுலக் கல்வியும்
அறிஞர் குழுவால் அளிப்பவர் இவரே.
பிரம சரியம் பேணிய வாலிபர்
தக்க கல்வியும் சக்தியும் பெற்றபின்,
விரவிய தொழிலும் வீரப் பயிற்சியும்
பெற்றிரண் டாண்டுகள் பிரியமாய்ப் பழகி
இல்லறக் குழுவிலும் இன்குலக் குழுவிலும்
தொண்டு செய்தபின் சுத்த சித்தரின்
ஆசி யுடனே மாசிலா மனையறம்
காப்பார் ; ஆண்பெண் கலந்து வாழ்வதும்
நற்பணி செய்யும் நாற்கரம் போலுமே.
நான்கு மக்களை நலமுறப் பெற்றதும்
உடன்பிறந் தார்போல் உள்ளன் புடனே
பிரம சரிய விரதம் பூண்டு
பொதுநலம் புரிந்து புகழுற வாழ்வரே.
இல்லற வீதியின் எல்லையைத் தாண்டிச்
சங்கம் வேண்டும் சகல தொழில்களும்
கலைமன் றங்களும் நிலைபெற் றோங்குமே ;
தொழில்வட் டத்தைத் துருவிச் சென்றபின்,
ஊர்ச்சுகா தாரம் ஊங்குறக் காக்கும்
ஊழியர் வட்டம் ; மேழிச் செல்வர்
உயிரைக் காக்கும் பயிரைக் காத்து
வாழும் வீதிகள் வனப்புறக் காணுமே.
சித்தர் மாதவர் சீலர் அறவோர்,
புலவர் தொண்டர் நிலவும் அனைவரும்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்ற உணர்ச்சியில் ஏக ரசமாய்,
அருளா லயத்தில் அன்புசெய் வாரே.
சுத்த சங்கச் சூரியக் கதிரே
அனைவரும் ஆவார். அருளும் கலையும்
தொண்டுந் துறவும் கொண்டு செழிக்கும்
சுத்தசங் கத்தைத் துலக்கிப் பணிசெயும்
சித்தர் முதலிற் சித்தி நகரிலே
சமாஜம் நாட்டிச் சாதனம் வளர்ப்பார்.
அதன்செய லாளன் அமர சித்தனே.
அதன்கிளை யாகவே அமைதியாய்ப் பலவூர்த்
தொண்டுகள் வளரும் தொண்டர் வளரவே
பன்னிரு வகையாய்ப் பகுத்த பணியாம்.
அறிவுந் தொழிலும் பெருகிப் பரவவும்,
சாத்திரஞ் செய்து தகுமுறை தரவும்,
தொண்டினுக் கேற்ற தொண்டரைப் பயிற்றவும்,

பொருள் வளம் பெருக்கவும் பொதுநல மூக்கவும்,
காலம் பார்த்துக் கட்டளை யிடவும்
நாட்டிற் சங்கம் நாட்டி யுழைக்கவும்,
உலகிற் கெல்லாம் உண்மையை விளக்கவும்,
நாட்டிற் கேற்ற நலமுறு தொண்டரைப்
பயிற்றி யுலகெலாம் பணிசெய் விக்கவும்,
சக்தியும் யானும், முத்தி முனிவரும்
சீரிய தாயும், சித்தி மானும்
அயரா துழைப்போம்..... ஆண்டவன் அருளால்.
பன்னிரு வகையிலும் பயின்ற தொண்டர்
சீகர னுடனே செல்க சிலபேர்.
எந்தைக் குதவியாய் ஏகுக சிலபேர்.
தானவம் வளரும் சமயோக சங்கம்
அரக்கரை அடக்கி அருளாட்சி நாட்டவே
ஆனந்த விஜயனும் அறவோர் நூறும்
செல்க சத்தியம் வெல்கநா மின்று
தியானத் தாழ்ந்து திருவருள் பெற்று,
சுபகீ தமுடன் சுறுசுறுப் பாகப்
பாரத முனியும் பழம்பெரு சாந்தனும்,
சித்தி மானும், செல்க போகனும்.
முன்னே தொண்டுகள் முயன்ற பெரியார்
வரலா றுகளை வளம்பெறக் காட்டி
ஊக்கிடச் செல்க உலகப் பணிக்கே !
இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க !
சுத்த னிவ்வகை சொன்னதும் சங்கம்
பன்னிரு வகைப்பணி பணிவுறச் செய்தே
யோகத் தாலும் தியாகத் தாலும்,
அருளாட் சியினை அடியார் நாட்டுவோம்....
சுத்தனும் சங்கமும் சுத்த யோகமும்
போற்றி ! யென்று புகுந்தனர் உளமே !

10. மஹாத்ம விஜயப் படலம்

திருவருள் பொலிய ஓங்கும் திவ்விய சுத்த சங்கம்,
குருவருள் குறித்த சேவை கொள்கையின் இயற்ற வேண்டிப்
பெருமகிழ் வுடனே நிற்கப் பெரியவன் பரத யோகி
பொருளுடன் ஆசி கூறிப் புகன்றனன் புனித வாயான்.

பாரத முனி

"அகவிருள் போக்கி, ஆத்ம சக்தியின் ஆக்கத் தாலே
சகவிருள் போக்கச் செல்லும் சமரஸ வீரச் செல்வீர்,
பகலொளி போன்ற தூயன் பண்புள பணியைச் செய்யத்
தகவுறு காந்தி போலச் சத்தியக் கனலைத் தாங்கீர்.

ஒவ்விய மனத்தாராகி, ஒவ்விய செயலைத் தேர்ந்து,
செவ்விய பயிற்சி யாலே திறம்பல பெற்ற நல்லீர்,
துவ்விய காந்தி போலத் தொண்டுகள் பரவி, யிந்தத்
திவ்வியப் புண்ய பூமி விழித்தெழச் செய்வீர்" என்றான்.

தொண்டர்

நீடுறு தவத்தி னாலே நிலவுறு பரதன் சொல்லைப்
பீடுறு தொண்டர் கேட்டுப் பெரியவ, பெரிய சான்றோன்,
ஈடறுங் காந்தி காதை எங்களுக் கியம்பக் கேட்டால்,
நாடுறு வினைக்கு நல்ல ஊக்கத்தை நல்கு மன்றே.

புண்ணியத் தொண்டர் சொல்லப் புனிதனும் ஆமோதிக்கப்
பண்ணவன் பரதன் ஆங்கே பழுதறு தமிழி னாலே,
கண்ணெலாங் கருணையாகக் கையெல்லாம் சேவை யாக
மண்ணெலாம் போற்றவாழு மஹாத்மனின் சரிதை சொன்னான்.

மஹாத்ம விஜயம்

சத்தியம் உள்ள மட்டும், தருமமே வெல்லு மட்டும்,
உத்தமர் பொறுமை யாலே உயிர் நலம் உயரு மட்டும்,
வித்தக பரத நாட்டின் புண்ணியம் விளங்கு மட்டும்,
இத்தலம் உள்ள மட்டும் இலகுக மஹாத்மா காந்தி.

சாந்தமே கனிந்த வீரன், சத்தியாக் கிரக தீரன்,
காந்தமே போல மாந்தர் கருத்தினைக் கவர்ந்த நல்லோன்,
மாந்தரை வாய்மை யாலே மாசறச் செய்த வள்ளல்,
காந்தியென் றுலகு போற்றுங் கருணையங் கண்ணன் னானே.

திறங்கொண்ட ராமநாம ஜெபத்துடன் சேவை செய்யும்
அறங்கொண்ட தியாக மூர்த்தி அஹிம்ஸையே விரத மாக
மறங்கொண்ட மிருக சக்தி வலிவிழந் தொடுங்கத் தீதைப்
புறங்கண்ட மெய்யன், செய்யன், பொறுமையிற் பூமிபோன்றான்

அன்னிய மாயத்தாலும் அஞ்சிடு மடமை யாலும்,
தன்னலச் சூழ்ச்சி யாலும், சாதிம தாபி மானம்
பின்னிய வலைக ளாலும், பிறபல தீமை யாலும்,
மன்னுல கடைந்த துன்பம் மாறிட வழிசெய் தானே.

இத்தகைக் காந்தி, எங்கள் இந்தியா செய்த வத்தால்,
கத்திய வார்போர் பந்தர் கரமசந் திரனா ருக்கும்
புத்திரி பாய்க்கும் செல்வ புதல்வனாய் வந்து, நல்ல
பத்தியும் கருணை யன்பும் பழுத்திட வளர்ந்தா னம்மா !

மன்னவன் சலுகை வேண்டா மந்திரி தந்தை நல்லோன்,
பொன்னணிமினுக்குவேண்டான்போட்டியும் புகழும் வேண்டான்
அன்னதா னங்கள் செய்வான், ஹரிபக்தி என்றும் செய்வான்
அன்னவன் மகனைக் கண்டால் அவனைநாம் காண லாமே.

சீரிய கற்புத் தேவி, சீவகா ருண்ய சீலை,
சூரிய விரதங் காக்குந் தூயநல் லன்புச் செல்வி,
காரியத் திறமை மிக்காள், கருணைசெய் யறத்தின் மிக்காள்,
ஆரிய தருமத் திற்கே அணிகல மாகும் அன்னை....

வையக வியல்ப றிந்து வாழ்வகை வாழும் இன்னோர்
செய்தவப் பயனோ, அன்றிச் செகஞ் செய்த தவத்தின் பேறோ,
பொய்யிருள் ஒழிய வந்த புண்ணியச் சுடரைப் போலே,
மெய்யருள் வீசி வந்தான் மேதகு சந்த்ர காந்தி.

பள்ளியிற் படித்த போதும், பகவனை மனதில் வைப்பான்,
உள்ளநெக் குருகி ராம கதைகளை ஓதக் கேட்பான் ;
கள்ளமில் லாத காந்தி, கருணையே யான காந்தி,
பிள்ளையா யிருந்த போதே, பெரியனைக் காட்டி னானே.

"ஆருயிர்க் கருணை பேணி, அஹிம்ஸையே விரத மாகி,
நேரிய வாய்மை காத்து, நெஞ்சினில் உனைநி னைந்து,
பாரினில் அஞ்சி டாமல், என்கடன் பணிந்து செய்து,

சீரிய தீர னாகச் செயபரம் பரனே போற்றி ”.

தாயுடன் இந்த வாறு சாமியை வணங்கி நாளும்,
தூயநன் மலர் சொரிந்து தொண்டுடன் அன்பு செய்வான்.
வாய்மையும் பரிவும், பெற்றோர் மதிமிகு சொல்லும் போற்றித்
தேயமும் அறமும் வாழச் சிறந்தனன் பிறந்த ஊரில்.
புல்லியர் சேர்க்கையாலே புசித்தொரு தடவை யூனை,
அல்லலுற் றழுங்கி யன்றே அஹிம்ஸையின் விரதம் பூண்டான்;
நல்லரிச் சந்த்ரன் போன்ற நாடகம் கண்டும், அன்பர்
சொல்லிசை கேட்டும் வாழ்வைத்தூயநன் னெறியில்உய்த்தான்.

கற்றறி வோங்கு முன்பே, காதலை யறியு முன்பே,
பெற்றவர் பாசங் கொண்டு பிள்ளைக்குப் பதின்மூன் றாண்டில்,
சிற்றில்செய் தாடு கின்ற சிறுமிகஸ் தூரி தன்னை
நற்றினம் வதுவை செய்தார் நன்மனை யின்ப மோங்க.

பொன்னுடன் மணியைப் போலப் பொருந்திய கற்புச் செல்வி
புன்னகை பொழியும் வாயாள் பொறுமையே வடிவ மானாள்.
அன்னமென்னடையாள், அன்பே அணியென வுடையாள்,காந்தி
சொன்னதே வேதம் என்று துணிந்துடன் சென்ற தூயை.

கண்ணுடன் மணியைப் போலக் கருத்துடன் சொல்லும் போல,
விண்ணுடன் காற்றும் போல, மின்சக்தி யிரண்டு போலப்
பண்ணுடன் பதமும் போலப் பரிசுத்த காந்தி, கொண்ட
பெண்ணுடன் வாழ்ந்து வாழ்வின் பேறினைப் பெற்றானாங்கே.

ஆங்கிலம் பத்தாண் டிங்கே அமைவுறப் பயின்ற காந்தி,
ஓங்கிய சட்டங் கற்க — உறவினர் தடுத்துங் கேளான்—
வீங்கிய புதிய போக வியன்பல விளங்கு லண்டன்
பாங்குறச் சென்றான் ஆங்கே பாரிஸ்டர் பரிட்சை தேற.

மாசறு மகனைப் பார்த்து "வைணவ ஒழுக்கம் பூண்டாய்
வேசை, கள், ஊனை என்றும் விலக்கிவாழ் ; உறுதிசொல்" லென்
றாசையாய்க் கேட்டாள்; சேயும் "அன்னையுன் ஆணை காப்பேன்
தேசமே பெருமை கூறத் திரும்புவேன்" என்று சென்றான்.

பாரிஸ்டர் காந்தி

ஊனும் விஸ்கியும் உவந்திடும் சீமையில் உறைந்தும்,
தேனின் இன்னிய காய்கனி தீஞ்சுவைப் பாலும்,
தான ருந்தியோர் தாவரச் சங்கமும் நாட்டி
தீன ரட்சகன் ஜீவரட் சகனெனத் திகழ்ந்தான்.

ஏசு நாதரும் கண்ணனும் புத்தரும் இயம்பும்
மாசிலாவுப தேசத்தை வாழ்வகை வாழ்ந்தான்.
தேசு லாவிடும் எளிமையின் சிகரத்தில் இருந்தே,
காசி னிக்குமெய் வழியினைக் காட்டிய கதிரோன் !

இருவி காரத்தை அடக்கிய இருடியைப் போன்றான்,
ஒருமை கொண்டுதன் படிப்பிலே உள்ளத்தை யூன்றி,
பெருமை யாகவே பாரிஸ்டர் பட்டமும் பெற்றே,
அருமைத் தாயகம் அடைந்தனன் அலைகடல் கடந்தான்.

பணஞ்செ ழித்தபம் பாயினில் பகட்டின்றி வாழ்ந்தே,
இணங்கு தன்றொழில் இயற்றினன் எளியவர் மகிழ ;
பிணங்கு செல்வியின் வக்கிரப் பிலுக்கையும் பொறுத்தான் ;
உணங்கிலான் உயர் உள்ளமும் உழைப்புடன் உகந்தே.

அழி வழக்குகள் ஆடிடான் ஆயிரம் கொடுத்தும் ;
பழியை நாணுவான் ; அசத்தியம் கனவிலும் பகரான்;
உழையும் ஏழைகட் குறுதுணை யாகநின் றுதவித்
தொழிலைக் காட்டிலுந் தருமமே சுகமெனத் தொடர்ந்தான்.

கல்வி கற்றதுங் கடல்கடந் துற்றதுந் தனக்கே
செல்வந் தேடுதற் கன்றுசு தேசத்தின் சேமம்
பல்கவே ஒரு பணிதனக் குளதெனப் பகர்ந்தான் ;
மெல்ல மெல்லமுன் செலுத்திய விதிவழி விரைந்தான்.

அன்னி யக்கொடுங் கோலுக்கே அடிமையாய் நாடு
பொன்னி ழந்துநற் புகலின்றிப் பொலிவிழந் தழுங்கி,
தன்ன தூணுக்குந் தவித்திடக் கண்டுளந் தளர்ந்தான் ;
மன்னு யிர்களின் இன்னலை மாற்றிட வந்தோன்.

தீர ராகிய திலகர்தா தாமுதற் சிறந்தோர் —
பார தச்சபை நடத்திடும் பண்பையும் பார்த்தான்.
ஈர நெஞ்சினன் இந்திய வேள்விக்கே தன்னைத்
தாரை வார்த்திடுந் தருணமும் வருமெனத் தழைத்தான்

அம்பொன் மல்குதென் னாப்பரிக் காவிலோர் முஸல்மான்,
தன்பெ ரும்வழக் காடிடத் தயவுசெய் கெனவே—
அன்பு வள்ளலுந் தருமமே யழைத்திடச் சென்றான்—
துன்ப முற்றிடு மெளியவர் சுதந்தரம் பெறவே.

தென்னாப்பிரிக்காவில் காந்தி

வந்த வேலையை டர்பன்மா வழக்குமன் றத்தில்
முந்து நன்முறை முடித்துத் தன் முயற்சியி னாலே
சொந்த மாந்தொழில் செழித்திடத் தொடர்ந்திடும் எல்லை,
இந்தியர் படும் இன்னலை எதிரிலே கண்டான்.....
சட்டை தொப்பிகள் அற்றவர் தம்மையே
மட்டம் என்று மதித்திடும் வெள்ளையர்,
சட்ட மிட்டனர் தன்தலைப் பாகைக்கும் ;
வட்ட மிட்டனர் வாழு மிடத்திற்கும்.

வண்டி யேறவும் வம்புத் தடைபல ;
உண்டி கொள்ளவும், ஊரில் நடக்கவும்,
கண்டிப் பான கருப்புத் தடைகளைக்
கண்டு கண்டு கடிந்தனன் காந்தியே.

தீரன் ஓர்பகல் திரான்சுவால் ஏகுழி,
பேர கந்தையிற் பேசியோர் வெள்ளையன்
“யார டாகறுப் பன்” எனத் தூற்றியே
கோர மாகக்கை கொண்டு புடைத்தனன்.

வெவ்வ நீதிகள் வீதியிற் கண்டெங்கும்
திவ்வி யப்பொறை தேறிய காந்தியும்,
ஒவ்வ றுங்கொடுஞ் சட்டம் உடைக்கவே
செவ்வை யாகக் கிளர்ச்சிகள் செய்தனன்.

தனி யகந்தையும் தன்னலச் சூழ்ச்சியும்
எனது சாதி யினமெனும் வாதமும்
மனிதனை மனிதன் மதி யாதுசெய்
சினமும் வெய்ய செருக்கும் வெறுத்தனன்.

இங்கு வெள்ளை யினத்தவர் மேவியே,
பொங்கு செல்வம் பொலியும் பொழுதெல்லாம்
தங்க வைரச் சுரங்கத்தில் தன்னவர்
மங்கி வாடி மடிவதைக் காட்டினான்.

பசையுண் டென்று பலநயம் பேசியே,
வசஞ்செய் திந்திய மக்களை வாட்டிய
கசையடியுங் கடுந்துயர் வேலையும்,
பசி முகமும் பரிவுடன் கண்டனன்.

நெற்றி வேர்வை நிலத்தினிற் சொட்டவே,
உற்று வேலைசெய் ஒப்பந்தக் கூலியைக்
கற்ற றிந்துங் கருணையில் லாதவர்
வற்ற டித்துயிர் வாட்டிடக் கண்டனன்.

புழுதி மேவிய பொட்டலை வேர்த்திட
உழுது நட்டுரம் இட்டுழைத் தோங்கவே
செழுமை செய்த திருத்தொழி லாளரும்
அழுத கண்ணீர் அகநெகக் கண்டனன்.

இடை முறிந்திடும் இன்னலைத் தாங்கியே
கடமை செய்யும் கதியறும் ஏழையைத்
தடைகள் ஆயிரந் தாழ்த்தி மிதித்திடும்
கொடுமை கண்டு கொடியரைக் கண்டித்தான்.

பால் கறக்கும் பசுவைப் புசிப்பவர்,
தோல் கறுப்பெனத் தூற்றிநம் ஆட்களை
கூலி மக்கள் உழைப்பிற் கொழுத்தினும்
கேலி செய்திடும் கேட்டினைக் கண்டித்தான்.

உதிரம் ஈந்துழை ஏழைகள் 'உம்' என்றால்
அதிருஞ் சாட்டை ! அடிமை விலங்கினை
எதிர் முறுக்கில் எமபுர மேகதி ;
கதியி லார்கதி கண்டு கலங்கினான்.

ஏடு கற்கவும் ஏழைக் கிடமில்லை ;
வீடு கட்டவும் வீதித் தடைகளே.
ஆடு மாடெனவே யடை பட்டிடும்
பாடு பட்டவர் பங்கமென் சொல்லுவோம் ....!

ஈங்குன் சேரியென் றெல்லையை நாட்டுவார் ;
தாங்கொ ணாத தலைவரி வாங்குவார் ;
ஆங் கெழுத்தடை யாளமும் வாங்குவார் ;
ஏங்க மானம் இழிவுசெய் வார்களே.

திரு மணத்திற்கும் திட்டமும் சட்டமும்
வருகை போகைக்கும் வன்மைக் கெடுபிடி ;
ஒருவ ருக்கும் உரிமையாய் வாழ்ந்திடும்
பெருமை யில்லை அடிமைப் பிடிப்பிலே.

கடி யரவினும் காட்டுப் புலியினும்
கொடிய நோயினுங் கொள்ளைப் படையினும்,
அடிமைத் தாதராய், அன்னியர் இன்னலிற்
படிதல் ஆன்மப் படுகொலை யாகுமே.
ஆடு மாடினும் ஆறறி மக்களைக்

கேடு செய்திடுங் கேவலச் சட்டத்தைக்
கூடி நின்று குமைத்திடக் காந்தியும்
மேடை யச்சில் விளம்பரஞ் செய்தனன்.

உழைத்திந் நாட்டை உருப்படி யாக்கியே
செழிக்க வைத்த செழுந்தொழி லாளரை
அழிக்கும் பேயெனும் ஆசியச் சட்டத்தைப்
பழிக்கு மெந்தப் பழுதுறு நாடுமே.

வேலை செய்து விகிதப் படிதரும்
கூலி வாங்கிக் குடித்தனஞ் செய்குவார் ;
ஓல மிட்டழ, வாழும் உரிமையைக்
கோலும் சட்டமுங் கொண்டு பறிப்பதோ ?

பட்டி மாடெனப் பாடு படுத்திடும்
கெட்ட சட்டங் கெடக்கிளர்ந் தன்பர்கள்
"எட்டுத் திக்கும் எதிர்த்துநிற்போ" மென்றான் ;
சுட்டி டினுஞ் சுதந்தரஞ் சாகுமோ ?

வாய்மை சொல்லி வருந்துயர் தாங்குவான் ;
தீமை வீழ்ந்திடத் தீங்கறு போர்செய்தான் ;
சீமை சென்றுந் தெளிவுறப் பேசினான் ;
பூமி யெங்கும் புகழ்பணி போற்றினான்.

காந்தி சொல்லைக் கருத்துறக் கேட்டதும்,
சாந்த மாகிய சத்திய வீரர்கள்,
மாந்தர் மாண்பை மதித்து விளக்கிடப்
போந்தனர் பொறு மைச்சமர் போற்றியே.

"நாடு விட்டு, நலம்புரி மக்களின்
வீடு விட்டிந்த வேகு நிலத்திலே
காடு வெட்டிக் கரும்பு விளைத்தவர்
பாடு பட்ட பலனிக் கொடுமையோ ?

துலங்கும் ஆன்ம சுதந்தர மானிடர்
விலங்கு போல, மிடியிருள் அச்சத்திற்
கலங்கி யிங்குக் கவலைப் படுவதோ,
நலங் கிளர்த்திட நாங்கள் கிளர்ந்தனம்.
அரிய மானிடர் அன்பினில் வாழ்ந்திடும்
உரிமை நாட்டிநல் உண்மையை நாட்டுவோம் ;
எரி வெடியும் சிறையும் இடும்பையும்
வரினும் எங்கள் உறுதியை மாய்க்குமோ ?

என்று கூறி எழுந்தனர் ஆசியர்,
வன்ற வத்தலை வன்சொல் வணங்கியே,
ஒன்று பட்டுத்தம் உண்மை யுரிமையை
வென்று நாட்ட விரைந்து கிளர்ந்தனர்.

"கறுத்த கூலிகள் காந்திக் கிணங்கியே,
மறுத்தெஞ் சட்டத்தை வாயுந் திறப்பதோ ?
வெறுத்த கூலி விநோதப் படைகளை
ஒறுத்த டக்கிடு வோ" மென வெள்ளையர் ;

குறைசொல் வாரைக் கொடுமைசெய் தேயிருட்
சிறையி லிட்டனர் ; சீறிப் புடைத்தனர் ;

பறை யடித்தினும் பாரெங்கும் இச்செயல்
நிறச் செருக்கினை நீள வுரைத்ததால்.

மூலம் இன்னவன் என்று முனிந்தெதிர்
கூலி வேந்தைக் கொடுஞ்சிறை யிட்டனர்.
சால வுங்கடுஞ் சங்கட மாகிய
வேலை தந்து வெறுப்புடன் வாட்டினார்.

தொண்டர் சூழத் துணிந்த மகாத்துமன்,
எண்டி சையும் எதிர்ப்பினைத் தூண்டியே,
கண்ட னத்தைக் கனலுறச் செய்தனன் ;
தண்ட னைகளைத் தாங்கினன் சாந்தமாய்.

அடுத்த டுத்தங் கலையலை யாகப்போர்
தொடுத்த சாந்த சுதந்தர வீரரை,
அடைத் தடைத்துவிட் டேயலுத் தச்சமர்
முடித்தி டவும் முனைந்தனர் வெள்ளையர்.

கட்டி ரும்பும், கடுஞ்சிறை வாசமும்,
சுட்டு வீழ்த்தும் துபாக்கியும் அஞ்சிலார்.
வெட்டு வாளையும் விஞ்சிய வீரரை
எட்டுத் திக்கும் இசைத்தன போற்றியே.
விடப் பொறாமைகொள் வெய்ய பகைவரோ
நடப்ப தற்கும் தடைகளை நாட்டினார் ;
சுடப்ப டினும் சுதந்தரச் சாவென்றே
திடப் பொறுமைகொள் தீரன் எதிர்த்தனன்.

கத்தி யின்றிக் கடுஞ்சொலு மின்றியே,
சுத்த வீரத் துணிவொ டநீதியை
எத்தி சையும் எதிர்த்திடச் சாந்தமாய்ச்
சத்தி யாக்கிர கந்தனைச் சாதித்தான்.

உண்மை யான உறுதிகொள் உள்ளமும்
திண்மை யான தியாகப் பொறுமையும்,
கண்மை யான கருணையுங் கொண்டவர்,
ஒண்மை யான உரிமை பெறுவரே.

கொலையினுங் கொடிதாம் அடிமைசெய் கொடுமை,
கோபமாம் கொள்ளியின் கொடுமை,
தலைவரிக் கொடுமை, தனிநிறச் செருக்காம்
சட்டதிட் டங்களின் கொடுமை,
விலைசெயுங் கொடுமை, வேற்றுமைக் கொடுமை
விநோதமாங் கொடுமைகள் பலவும்
அலைகடல் கடந்தும் உலகினுக் குரைத்தான்
ஆத்மசஞ் சீவியை அறிந்தான்.

தொடங்கிய பணியைத் தொடர்ந்திட மீண்டுந்
துணிந்துதன் மனைமக்க ளுடனே
திடந்தரு காந்தி திரைகடல் கடந்தே
திரும்பிய செய்தியைக் கேட்டே,
அடிமிதி கொல்லென் றன்னியப் பகைவர்
ஆத்திரக் கூச்சலிட் டணுகித்
தடதட வென்றே கற்களை யெறிந்து,
தடியினைச் சுழற்றியும் புடைத்தார்.

அந்தகோ நன்மை யதனையே கருதும்
அஞ்சறும் அன்பருட் பெருமான்,

சிந்திய குருதி சிலுவையில் கிறிஸ்து
சிந்திய குருதியே போலும் ;
வந்தது வரட்டும் வாய்மையே வெல்லும்
வாழுவேன் அதற்கெனக் காந்தி
சிந்தனை செய்து தீயவர் செயலைச்
சினத்தலு மின்றியாங் கிருந்தான்.
அத்ததி யாங்கே அந்நகர் காப்பான்
அலெக் சாந்திரன் அரு மனைவி,
உத்தமன் காந்திக் குய்வினை யளித்தாள்
உருமறைத் தவனைக்கைக் குடையால்,
பத்திர மாகத் தன்மனை சேர்த்துப்
பதியிடம் பாதுகாப் பீந்தாள்.
வித்தகன் அவனும் வேடத்தை மாற்றி
விமலனை வீடுசேர்த் தானே.

வன்மனப் பகைவர் வாளினைச் சுழற்றி
வந்தனர் பேய்க்குர லெடுத்தே
அன்னவர் மீது வழக்கினைத் தொடர்வீர்
அக்கணம் எனஅலெக் சாந்தர்,
“இன்னலுக் கின்னல் இயற்றிடக் கருதேன்,
என்னவர் அன்னவர்” என்றே
புன்னகை புரிந்தான் பொறுமையி னாலே
பூமியிற் பெரியனாய்ப் பொலிந்தான்.

வந்தது கொடிய பேயெனப் போயர்
வன்சமர் குண்டுகள் வீசி ;
அந்தவெம் போரில் அடிபட்டார்க் கெல்லாம்,
ஆபத்தில் அன்னைபோல் உதவி,
இந்தியச் சிங்கம் எனும் பட்டம் பெற்றான்,
இந்தியக் கருத்தெனும் இதழால்,
சொந்தநாட் டாரின் சுதந்தரத் திற்கே
சோர்வறத் தொண்டுகள் தொடர்ந்தான்.

தன்னுடல் பொருளும் ஆவியும் உலகின்
சத்தியப் பணிக்கெனத் தந்தோன்,
தன்மனை தனையும் சகோதரி யாகக்
கருதியே புலன்களை யடக்கி,
உன்னத பிரம சரியமே பூண்டான்
உண்மை வாழ் வகையினை விளக்க,
இன்னிய நூறு ஏகரா வாங்கி
எழுப்பினன் எழில்பெறு நிலையம்.

உத்தமர் டால்ஸ்டாய் ரஸ்கின் உரைகளைப் பருகி நின்று,
சத்திய தியாக வாழ்வைத் தன்மனச் சாட்சி யொப்ப
நித்தியம் பயின்ற காந்தி, நேயரும் பயில வேண்டிப்
புத்தொளி வீசு கின்ற போனிக்ஸா சிரமங் கண்டான்.

பழிசெயும் பேத புத்தி பாழ்பட ஒருமை யோங்கி,
இழிவுசெய் நிறச் செருக்கும் இடர்களும் ஒழிய வேண்டி,
மொழிகளாற்சொன்னதெல்லாம் செயல்களான் முயன்றுகாட்டி
வழியினைத் துலக்கி, காந்தி வாழ்வகை வாழ்ந்தான் மாதோ.

எளிமையின் சிகர ஜோதி இடம்பத்தை வெறுத்தான், தேவை
யளவறிந்துழைத்தேயுண்டான், ஆசையாய்க்குவிக்கும்பொன்னை
களவென நினைத்தான், கையாற் பலதொழில் இனிது செய்தான்
உளமகிழ்வுற நடந்தான் உலகுக்கே வாழுந்தூயன்.

சத்தியச் சோதனைக்கே வாழ்வினைத் தந்த காந்தி,
ஒத்துவாழ்ஒருமைகண்டோன்ஒழுக்கமேஉயிராய்க் கொண்டோன்
பத்தியும் பணியும் செய்யும் பண்புடன் பணிவு மிக்கான்,
தொத்துநோய் தீர்ப்பான் குப்பை கூட்டியும் சேவை செய்வான்.

பெட்டக மூளை கொண்ட பெரும்புலி போன்ற மாற்றார்,
வெட்டெனப் பேசி யின்னும் வேதனை செய்ய வெய்ய
சட்டங்கள் விதித்த தெல்லாம் தடையெல்லாந் தகர்க்கவேண்டி
கட்டங்கள் பொறுத்துச் சாந்தக் கனலுடன் எழுந்தான் மாதோ!

நடையுயர் மஹாத்மா காந்தி நல்லநெஞ் சுறுதி கொண்ட
படையுடன் சத்தியப்போர் பயமின்றித் தொடுத்துச் சர்க்கார்
தடைகளை மீறிச் சென்றான், சத்தியாக் கிரக வேகம்
சுடச்சுடத் தியாக தீரஞ் சுடர்விடக் கண்டா னம்மா !

கொதிபகை சுட்ட போதும் கொடுஞ்சிறை யிட்ட போதும்,
விதியையும் எதிர்த்து நின்ற வீரவள் ளியின்பேர் வாழ்க !
துதிமிகு தமிழர் வாழ்க ! துணிந்தநா கப்பன் வாழ்க
அதர்மத்தை எதிர்த்து வெல்லும் அறநெறி யுறவோர் வாழ்க !

ஆந்துரு கோகலே யனைய நல்லவர்
போந்தனர் நிலையினைப் புகுந்து பார்த்தனர் ;
காந்தியின் சக்தியைக் கண்டு போற்றினர்
நேர்ந்ததை விளம்பினர் நீதி யோங்கவே.

இடுப்பொடிந் திடவு ழைத்தும் ஈச்ச வளாரி னாலே,
வடுப்பட வருந்தி நாட்டை வளஞ்செய்த கூலிமக்கள்,
படுந்துயர் தனதென் றெண்ணிப் பாரெலாம் அதிச யிக்கக்
கொடுந்துயர்ச் சிறைபொறுத்த குணநிதி காந்தி வாழ்க !

பொல்லது செய்தோ ருக்கும் புன்னகைப் பொறுமை யன்றிச்
சொல்லினுந் தீமை யற்ற சுடர்பெறுஞ் சாந்த தீரன்,
பல்லினை யுடைத்தா னுக்கும் பரிவினைக் காட்டுங் காந்தி
தொல்லுல குள்ள மட்டுந் துலங்குக நலங்க ளோங்க !

மதிமிகு காந்தி செய்த வாய்மைப்போர் தன்னை மெச்சி,
இதமுற ஸ்மட்சின் மூலம் இணங்கிவெண் ணாட்சி யாளர்,
சதிசெயுங் கொடிய சட்டத் தளைகளைத் தளர்த்தி, வெய்ய
விதிகளை மாற்றி யன்றே விடுதலை தந்தா ரம்மா !

இந்தியாவில்

தன்பணி முடிந்த பின்னர் இந்தியத் தாய் வருந்தும்
துன்பத்தைத் தீர்த்து நல்ல சுதந்தரம் அளிக்க வேண்டி,
அன்பினால் அறப்போர் செய்யும் ஆற்றலைக் கொண்டு வந்தான்;
இன்பமெய் யுரிமை வாழ இன்னலைப் பொறுத்த வீரன் !

பகைவரைப் பகைத்தி டாது பகையினைத் திருத்தும் வள்ளல்,
மிகையினைத் தகையால் வென்று, மேன்மையே செய்யுமேலோன்
தொகை மிகு படையும் ஆத்ம சக்திமுன் தோற்றொ டுங்கும்
வகையினைக் கண்ட வீர மகாத்துமன் வாழி மாதோ !

இந்திய நிலை

வங்கத்தால் உலகை வென்ற மகாகவி தாகூர் வாழ்த்தச்
சிங்கத்தைப் போன்ற தீரத் திலகமா முனிவர் வாழ்த்த,
தங்கக்கிண் கிணிபோற் பேசுங் கோகலே சபையில் வாழ்த்த,
மங்கறு புகழை யேந்தி, மகாத்துமன் விளங்கி னானே !

திலகர், லால் பால், கோஷ், செய்த தீவிரக் கிளர்ச்சி யாலே,
தலைநிமிர்ந் தெழுந்த தேசம், தணல்குறைந் துறங்கி, மீண்டும்
நிலைகுலைந் தினியென் செய்வோம் என்றுள நெக வருந்தி,
மலைவொடு நிற்கக் கண்டு மகாத்மனும் வருந்தி னானே.

தொண்டுசெய் கடமையொன்றேதொழிலெனக்கொண்டகாந்தி
வண்டுபோல் நாட்டைச்சுற்றிவாய்மையும், பொறையெதிர்ப்புங்
கொண்டுதி யாகத் தாலே குறையறச் சுதந்த ரத்தைக்
கண்டுநாம் களிப்போம் என்று கலக்கத்தை நீக்கி னானே.

சம்பரான், கைரா — சேவை

சம்பரான் குடிகள் வெய்ய சட்டத்தால், வரியால், அந்தோ !
வெம்பினர் அவரைக் காக்கத் தாயென விரைந்து சென்றான் ;
வன்பிணி பஞ்சத் தாலே வருந்திய கைரா மக்கள்
தம்பிணி தீர்த்தான், இந்தத் தயைமிகு சாந்த வள்ளல்.
வறுமையைத் தீர்க்க ராட்டை வழங்கினன் ; மடமை போக
அறநெறிக் கல்வி யீந்தான் ; அருட்பணித் திறனை யூக்கிச்
சிறுமனச் சுயநல த்தைச் சிதறிடச் செய்தான் ; காந்தி
பொறுமையாற் பகையை வென்ற புண்ணிய வீர னானான்.

சபர்மதி

சத்தியாக் கிரகத் தொண்டர் சாதனஞ் செய்ய வேண்டி,
நித்திய சாந்த மோங்குஞ் சபர்மதி நிலையங் கண்டே
உத்தமர் தம்மைக் கூட்டி ஒருகுல மாக்கி ஆத்ம
சக்தியை வளர்த்துத் தேசத் தாய்ப்பணி புரியச் செய்தான்.

சத்தியம் பேசிப் பிரம்ம சரியத்தைப் பேணி, அன்பே
மெத்தவும் வளர்த்தஹிம்ஸை விரதத்தைப் போற்றிச் சொந்தச்
சொத்துரி மையை விடுத்துப் பிறர்பொருள் சுரண்டி டாது,
நித்தியம் தொழில்பு ரிந்து நியமமாய் வாழச் செய்தான்.

அதர்மத்தை அஞ்சி டாமல், அறத்தினால், உண்மை தன்னால்,
எதிர்த்ததை வெல்ல வேண்டும் ; இடம்பத்தை நீக்க வேண்டும்;
கதிர் சுற்றி நூற்று நெய்யும் கதரையே கட்ட வேண்டும் ;
பொதுஜனத் தொண்டு செய்யும் புண்ணிய வாழ்வே வேண்டும்.

சாதிமா மதபே தங்கள் சங்கட மென்ன நீத்துச்
சோதிப ராத்ம நாதன் ஒருவனைத் தொழுதெல் லாரும்,
மேதினிக் குழைக்க வேண்டும்; விடுதலைக் கிளர்ச்சி வேண்டும்;
ஓதலின் ஒழுக்கம் வேண்டும் என்றனன் உண்மை யாளன்.

அவ்வழிப் பயின்ற தொண்டர், அன்புடன் தேச மெங்கும்
செவ்வழித் தொண்டுசெய்து,செனங்களின் வாழ்த்தைப்பெற்றார்
ஒவ்வருந் தீர னான உத்தம காந்தி, நாளும்
திவ்விய சேவை செய்து தேசத்தை நடத்தி னானே....

அதிசய சக்தி மேவும் அனிபெசண் டம்மை செய்த
மதிமிகு சுயாட்சிப் போரில், மராட்டிய திலகன் செய்த
சுதந்தரப் போரில், காந்தி தொண்டுகள் செய்தான்; அன்னான்
இதந்தரும் ஆத்ம சக்தி எழுந்ததோர் நிகழ்ச்சி யாலே.

கெடுதலைக் குமைத்திடக் கிளர்ந்து சாந்தமாய்,
நடுநிலை யறத்தினை நாட்டி, மாந்தர்க்கு
விடுதலை யளித்திட விரதங் கொண்டவன்
படுகொலை யொன்றினைப் பதறக் கேட்டனன் !
விடுதலைக் கிளர்ச்சியின் விதையை மாய்க்கவும்,

அடிமையின் சங்கிலி அழுத்த மாகவும்,
இடியென ரவலட்டுச் சட்டம் எங்குமே
கொடியன செய்திடக் குதித்தெ ழுந்ததால்.

வரிகளைத் தாருங்கள் வாயை மூடுங்கள்,
தெருவினி லைந்துபேர் சேர்ந்து பேசவும்
உரிமையொன் றில்லையென் றுரைக்குந் தீவிதி
பெரியதோர் பேயெனப் பிறந்தெ ழுந்ததே.

கசையடி யடித்துயிர் கலங்கத் தீமைசெய்
வசைமிகுஞ் சட்டத்தை மறுத்துக் காந்தியும்,
இசைமிகு திலகரும் இந்தியா வெங்குந்
திசைதிசை கண்டனஞ் செய்து சுற்றினார்.

சத்தியாக்கிரகம்

முழுச்சு தந்தர மூச்சை, முயற்சியை
அழுத்தி வாயை யடக்குமிச் சட்டத்தை
குழுக்கு ழுவாகக் கூடி யெதிர்த்திட
வழுத்தி னான்ஒரு மங்கல நாளிலே.

கதர ணிந்துகை ராட்டை சுழற்றியே
மதுவி லக்கித்தீண் டாமையை மாற்றுமின் ;
மதம் வகுப்பு வளர்த்திடும் வாதமேன் ?
பொது நலத்தைப் புரிந்திடச் சேர்மினோ.

அல்ல லின்றி அமைதியாய்க் கூடியே
வல்ல வீரர் வழுத்து மறுப்பினைத்
தொல்லை யென்று சுதந்தர காந்தியை
எல்லை மீறலென் றேயக மிட்டனர்.

புயலினை யடக்கினும் பொங்கும் ஆழியைக்
கயத்தினில் அடக்கினுங் கருத்தின் வேகங்கொள்
சுயசன சுதந்தரந் தூண்டுந் தாகத்தை
அயலவர் அடக்குதல் ஆசை வார்த்தையே.

கேடுறு சட்டத்தைக் கிளர்ந்தெ திர்க்கவே,
நாடுற எழுந்தது, நலிவை நீக்கிட
வீடொறுஞ் சத்திய விரதம் பூண்டனர் ;
ஈடிலாத் தலைவர்கள் எழுந்து முன்வந்தே.
அச்சமொன் றறியா வீர அகாலியர், பாஞ்சா லத்தில்,
உச்சமாம் உணர்ச்சி கொண்டே ஒற்றுமை யாயெ ழுந்து,
நச்சுறு சட்டந் தன்னை நலித்திடச் சாந்த மாக
மெச்சுறு காந்தி வாக்கை விளம்பியூர் வலங்கள் வந்தார்.

நாடுகொண் டாடும் ராம நவமியில் அமைதி யாகப்
பாடி 'ஓம் ஹரிராம்' என்றே பக்தர்கள் எழுந்து மாலை,
கூடியே ஜலியன் வாலா தோட்டத்திற் கொள்கை பற்றி,
நீடிய பஜனை யன்று நிகழ்த்தினர் உருக நெஞ்சம்.

"இறைவனே, உலகிற் கெல்லாம் ஏகனே, எம்மைக் காவாய் ;
அறமுயர் நாட்டைக் காவாய்; அடிமைநோய் தீராய்; எங்கும்
நிறைபரம் பொருளே, உண்மை நீதியே எமைவ ருத்துங்
குறைதவிர் நிறைவே! எம்முட் கோயில்கொள் அரசே போற்றி!

தொண்டரிவ் வாறு கூடித் தோத்திரஞ் செய்யும் போதே,
அண்டகோ ளங்க ளெல்லாம் அதிர்ந்தன, புகையில் மூடி

விண்டல மிரண்டு, வேக விமானங்கள் 'டாம் டாம்' என்றே
குண்டுகள் பொழிந்த! கோரக் கொடுமையென் சொல்லுவோமே

தந்திரச் சூழ்ச்சி யென்னே! சட்டத்தின் கடுமை யென்னே !
அந்தகோ அந்தகோ இவ் வநீதிக்குச் சொல்லும் உண்டோ !
பந்தத்திற் பரித விக்கும் பட்டினி மக்கள் மீது,
சிந்திய கொடிய குண்டு செய்தவெங் கொலைக ளென்னே !

நீதியே எங்கொ ளிந்தாய் ! நீயுமிக் குண்டிற் கஞ்சிப்
போதியோ அடிமை நாட்டின் புகலிது தானோ ! பஞ்சாப்
வீதிகள் சுடுகா டாக வீடெலாஞ் சிறைக ளாக,
மாதரின் கற்பு மஞ்ச வளர்ந்தது கொடுங்கோ லாட்சி !

சுடுசுடு வென்றே குண்டு சுடும்வரை சுட்டுத் தீர்த்தார் ;
சுடவினுங் குண்டிங் கில்லை என்றுளஞ் சுருங்கிச் சென்றார்;
விடுதலை கேட்டார், தேக விடுதலை யாய்விண் சென்றார் ;
படுகொலைக் களத்தைக் காணப் பரிதவித் திரவி சென்றான்.

கைபட்டார், கால்பட் டாரும், கண்பட்டார், புண்பட் டாரும்
மெய்பட்டார் மிதிபட் டாரும், மேனிவிட் டேகி னாரும்,
நைபட்டார் நரம்பற் றாரும், நாளமுங் குடலுங் கக்கிக்
கொய்பட்டார் மானபங்கம் பட்டவர் கொஞ்ச மேயோ ?

பிறந்தநாட் டுரிமை கேட்டுப் பிழையொரு சிறிது மின்றி,
அறந்தனக் காவி யீந்தார் ஆறுநூற் றவரே யாக
உறங்கறு மிராணு வத்தால் உலைந்தழிந் தொடுங்கி னார்எண்
ணிறந்தவர் இன்ன லுற்றார் ; இரத்தக் கண்ணீரே எங்கும் !

குற்றத்தை மூடமூடக் கொலைப்பழி வீறிட் டோதிச்
சுற்றிலும் பரவி இந்த உலகையே சூழ்ந்த தம்மா !
குற்றமில் லாரை ஏனோ குண்டெறிந் திந்த வெய்யர்,
செற்றனர் என்று தூற்றிச் செகமெலாம் எழுந்ததம்மா !

சுட்டுயிர் துடித்த பேர்க்குத் தொண்டுசெய் அன்பர் தம்மைக்
"கிட்டவ ராதீர்" என்றார்; கிளைகளைத் துரத்திச் செற்றார்;
பட்டவர் தாகத் திற்குப் பச்சைத்தண் ணீருந் தாரார் ;
"எட்டிநில்" என்றார், காயம் கட்டுதற் கிசைந்த பேரை.

இல்லினிற் புகுந்தார் ; எங்கும் இராணுவச் சட்ட மிட்டார்.
தொல்லைகள் செய்தார்; அந்தோ தோகையர் துகிலு ரித்தார் ;
செல்வரை யிழந்த கண்ணீர் வற்றுமுன், செய்ய பெற்றார்
எல்லையில் இடர்க் கண்ணீரை இருபுறங் கொட்டி னாரே.

மற்குல மலைகள் சாய, மார்பினால் மாந்தர் ஊர
வற்புறுத்தின ரடித்தார். மானமும் பதைப தைக்கச்
சொற்கருந் துயரக் கண்ணீர் சொரிந்தொரு புகலு மின்றி,
இற்குலப் பெண்கள் வாடச் செய்தனர் ஈர மில்லார்.

திரிபுரர், காலர், நீலர், கீசகர் திரும்பி வந்தே
எரியெழக் கொலைசெய் தாங்கே இருந்தனர் என்று மேலோர்,
பரிவுடன் பதறி நொந்து, பாரெலாம் அறியச் சொல்லி,
உரியநன் னீதி செய்ய உத்தர வாதங் கேட்டார்.

அசைவன அசையா வெல்லாம் அநீதியோ அநீதி யென்னத்
திசைதிசை வான்பி ளக்கத் தீக்கொலைக் கொடுமை பேசி,

வசையுறும் அடிமை வாழ்வை நரகென வாய்விட் டோதித்
தசைதுடித் தெழுந்த தீய தணலெரி தாக்கு மாபோல்.

நாட்டடி யார்கள், காந்தி நற்றவத் தலைமை யேந்திக்
கேட்டினுக் கெல்லை தேடக் கிளம்பினர் ஒருங்கு சேர்ந்தே ;
கூட்டங்கள் போட்டார் ; தங்கள் குறைகளை வீறிட்டோதி,
நாட்டங்கள் சிவக்க நல்லோர் நாணமும் வீறுங் கொண்டார்.
நாடெலாம் பதற வந்து நரர்களைத் துரத்திக் கொன்ற
வேடரை, டயரை, மன்றில் விசாரித்த போது, சற்றும்
வாடுத லின்றிக் "கையிற் குண்டுள வரையிற் சுட்டேன்
நீடுறச் சுட்டேன் சுட்டேன்" என்றனர் நீதி யில்லார்....

நல்லதென் றியம்பிச் சர்க்கார் நரவுடல் வேட ருக்குப்
பல்வகைப் பரிசும் வைர வாளுடன் பணமுந் தந்து,
கொல்கொலைக் குற்ற மெல்லாம் குணமென மறைத்தத் தீதைச்
சொல்லலுங் குற்ற மென்றே சுடுவிதி விதித்தாரம்மா !

சத்தியப் போர்

மாணுறு நாட்டைப் பற்றி மக்களை யடிமை செய்து
வாணிகச் சந்தை யாக்கி, வளமெலாம் உறிஞ்சிக் கொண்டு
நாணறு சட்டத் தாலே நலித்திடத் துணிந்தார் ஆட்சி
பேணிலோம் என்று தேச பக்தர்கள் பேசினாரே....

சட்டத்தால் அடக்கி வைத்த சாகசச் சருக்கார் ஈந்த
பட்டத்தை எடுத்தெ றிந்து, பாழ்செயும் அடிமை வாழ்வை
நட்டமெத் தனைவந் தாலு நலிப்பதே கடமை யென்று
திட்டமிட் டெழுந்து காந்தி செல்வழி சென்றார் மேலோர்.

நடுநிலை யாளன் காந்தி நல்லதே நினைக்குங் காந்தி,
கடுமொழி சொல்லாக் காந்தி, கங்கணங் கட்டிக் கொண்டே
கெடுதலை யொழித்து நன்மை ஓங்கிடக் கீழ்மை தீர
விடுதலை யளிப்போம் என்றே வீறுடன் முன்வந் தானே.

பாரத சபையை அந்தப் படுகொலைக் களத்தே கூட்டி,
ஆருயிர்க் கநீதி செய்யும் அதர்மத்தைக் கண்டித் தாங்கே,
வீரத்தூண் ஒன்று நாட்டி, விடுதலைக் குறுதி பூண்ட
தீரரைச் சேனை சேர்த்துத் தேசத்தொண் டாற்றி னானே.

காந்தி

சுதேசம் விடுபடத் துடித்திடும் அன்பீர்
ஒத்துழை யாமைத் தத்துவங் கேண்மின் !
பகைசின மின்றிப் பகைவரைத் திருத்தும்
திண்மன வுறுதியும், தியாகமும் துணிவும்,
உண்மை யகிம்ஸையும் ஒற்றுமைத் திறனும்
இருந்தால், விடுதலை எய்திட லாமே !
அருந்துணை செய்வீர் அமைதியாய்க் கேளீர் !
எண்ணெய் பிரிந்தால் எரிவிளக் கென்னாம் ?
தண்ணீ ரின்றித் தாவர மென்னாம் ?
மன்னுயிர் பணிய மன்னன் மன்னாம் ;
மன்னுயிர் பிணங்கின் மன்னவ னுண்டோ !
நம்மவர் துணையே நாயகர் ஆட்சி ;
நம்மவர் துணைதரச் சம்மத மின்றேல்
அன்னியர் செய்யும் ஆட்சியு மாமோ ?
உலகைப் பகைத்தவன் ஓங்குவ தில்லை.
தன்னுத வியுடன் சாந்த எதிர்ப்பும்
இன்னலைப் பொறுக்கும் இதய சக்தியும்,

அழியா தென்றும் ஆத்ம சக்தியைப்
பொழியும் கடவுள்பாற் பொருந்திய நேயமும்,
கடமையிற் கண்ணுங் கருத்தும் இருந்தால்,
விடுதலை யெய்தும் ; விளங்குற லாமே.
இந்திய நாட்டைச் சொந்தங் காட்டிச்
சந்தை யாக்கும் விந்தை வணிகர்—
இறக்கும் விதேசச் சரக்குகள் வேண்டோம் ;
கறக்கும் பசுவினும் கற்பகத் தருவினும்,
கைராட் டினமே கவலைதீர் மருந்தாம்.
பொன்னினும் சுதேசப் பொருளையே மதிமின்.
பஞ்சை மக்களின் பசியை தீர்க்கும்.
வஞ்ச மின்றி வாழ்வகை யாமே.
தேவை யளவே செலவிட் டெஞ்சிய
யாவையுந் தேச சேவைக் குதவுமின் !
குடியைக் கெடுக்கும் குடியை ஒழிப்பீர் ;
மறியல் செய்து மதுக்கடை யொழிப்பீர் ;
இந்து முஸல்மான் இரானியர் கிறிஸ்துவர்
எந்த வகுப்பின ரேனும் ஓர்குலம்—
பாரதத் தாயின் சீரிய மக்களே,
என்றே கருதி ஒன்றுபட் டோங்குமின்.
ஹரிஜனர் உம்முடன் சரிசம னாக
வாழும் உரிமை வழங்குமின் உடனே
சமரஸம் பேணி அமைதியாய்க் கூடி,
தேசப் பணிக்கே தியாகம் செய்மினோ !
சுதேசத் தொழில்கள், சுதேசக் கல்வி,
சுதேசப் பொருள்கள் சுதேசக் கலைகள்
சுதேச பாஷை, சுதேச உணர்ச்சி
சுதேச உணவுடை சுகமுறப் போற்றுமின்.
அதிகார வர்க்கம் அடிக்கினும், சிறையில்
அடைத்து வருத்தினும் அல்லலை யெல்லாம்
தவமெனத் தாங்கித் தளரா திருமினோ !
அணுவெடி தாக்கினும் அழியா தான்மா
சத்தியம் ஆத்தும சக்தி அஹிம்ஸை
இவையே நலமாம் ! இன்றே பயில்வீர் ...
வந்தே மாதரம் வந்தே மாதரம் !
என்று மகாத்மன் இயம்பிடக் கேட்டார்
ஒன்று சேர்ந்தார் ; உடன்முன் சென்றார்...
தமிழகந் தனிலிச் சத்தியாக் கிரகம்
உருவாய், நாடெலாம் உலாவிய தறிவாம்.
செல்வத் தியாகி சித்த ரஞ்சனர்,
மோதிலால், ஜவஹர், முதியலா லாஜி,
இராஜன் பாபு இராஜா ஜீயுடன்,
முகம்ம தாலி சௌகத் தாலி,
அன்சா ரியுடன் அபுல்கலாம் அஸாது,
பட்டாபி யுடன்கோ பால கிருஷ்ணர்,
ஐயர் பிரகாசம் அருமை வீரர்கள்
சட்ட மறுப்பும் சத்தியாக் கிரகமும்
செய்தனர் பன்முறை சிறையும் காத்தனர் ;
அடக்க அடக்க அடங்கா தெழுந்தே
விடுதலை இயக்கம் வீறிட் டதுவே !
இயந்திரத் துணிகளை எரித்தனர் எங்கும் ;
இராட்டையின் பிரணவப் பாட்டொலி செய்தார்.
கைத்தறி நெய்த கதரே யணிந்தார்.
கட்டுப் பாட்டாற் கட்குடி நீத்தார்.
பட்டம் விட்டார் பதவிகள் விட்டார்.

அதிகா ரத்தை ஆட்டும் சக்கரம்
திகைத்து நிற்கத் தேசத் தொண்டர்,
காந்தி கொள்கை சாந்தமாய்ப் பரப்பி
உலகெலாம் போற்ற நலம்புரிந் தாரே.
ஆலைகள் நின்ற; மல்கும் அன்னியப் பொருள்கள் நின்ற;
வேலைகள் நின்ற; பள்ளி வித்தைகள் நின்ற, நீதிச்
சாலைகள் நின்ற, சட்ட சபைகளு நின்ற ; மாற்றார்
காலமும் நின்ற தென்றே களித்தனர் கணக்க றிந்தார்.
வாயினைப் பூட்டுஞ் சட்டம் வாய்களைத் தடுக்க வில்லை ;
பாய்புலிச் சினமும் இந்தச் சாந்தன்முன் பலிக்க விலலை ;
தூயவன் முன்னே குண்டு துப்பாக்கியும் வெட்கக் கண்டார்
தாயெனும் அன்பின் முன்னே தயங்கினர் சேனை கொண்டோர்.
"இளம்இந்தி யா"வென் கின்ற இதழொன்றி னாலே காந்தி
தெளிந்திடத் தனது கொள்கை தேசத்தை ஊக்கி நின்றான் ;
அளந்தவன் எழுதிச் சொல்லும் அமுதுரை புதிய வாழ்வை
உளந்தொறும் பொழிந்து நாட்டை, உலகினைத் திருத்திற்றம்மா
காந்தியின் வாழ்வே வாழ்வு, காந்தியின் எழுத்தே வேதம்
காந்தியின் உரையே யிந்தக் காசினிக் கினிய நன்மை ;
காந்தியின் செயலே மாந்தர் கதிபெறும் சேவை யென்று
தேர்ந்தநல் லறிஞரெல்லாம் திசை திசைபுகழ்ந்து சொன்னார்.

சிறைவாசம்

உலகெலாம் புகழ்ந்தும் என்னே ; உறங்கிய நாடு செய்யுங்
கலகமிக் காந்தி செய்யுங் கலகமென் றதிகா ரத்தார்,
பலபல குற்றஞ் சாட்டிப் பட்டெனக் கைது செய்து,
விலகறுஞ் சட்டத் தின்முன் விசாரணை செய்து சொன்னார்.

நீதிபதி (புரூம்பீல்டு)

உன்னைப்போற் பெரியோன் இந்த உலகினில் இல்லை, இல்லை
என்னைப்போல் ஏழை யில்லை ; என்னினும் அரசச் சட்டம்
தன்னையே பற்றி என்னைத் தாங்கிடுங் கடமை செய்வேன் ;
அன்னையின் அன்பு மிக்காய், அமைதியாய்ச் சிறைசெல் வாயே!
முன்னருன் போலெழுந்த திலகரை முனிந்த சட்டம்
உன்னையும் ஆறாண்டிற்குக் காவலில் உய்ப்ப தாமே ;
என்னினும் இடையில் உன்றன் இருஞ்சிறைத் தளைவிட் டுற்றால்
என்னினும் மகிழ்வார் யாரே, இமாலயம் போன்றாய் நீயே !
திருமுகங் காண, உன்றன் செவ்விய வாழ்வைக் காண,
அருட்பெரும் வாக்கைக் காண, அகந்தையில் எளிமை காண,
உருகுதென் உள்ளம் என்னின் உத்தியோ கத்திற் கான
பெருங்கடன்புரிதல் வேண்டும்; பெருமையாய்ச்சிறை செல்வாயே

காந்தி

தன்னிக ரற்ற சாந்தத் தவநிதி அருளி னோக்கிப்
புன்னகை பொங்கி மிக்கப் பொலிமுக மகிழ்வு காட்டி,
உன்னத மனித னென்றே உலகெலாம் புகழுங் காந்தி
சன்னத வாக்கி னாலே சரியெனச் சாற்றி னானே.
வந்தனம் அரிய நீதி மானுன தின்சொலுக்கு,
வந்தனம் ! உனதி டத்திற் குரியநல் வாய்மை சொன்னாய் ;
உந்தமைப் போன்றோர் எம்மை உடன்சிறை யிடலே நீதி ;
எந்தமைப் போன்றார் தீதை யெதிர்ப்பதே நீதி யாமே.

இத்தினம் எனது தேசம் இந்தமண் ணுலகின் மீதே
எத்தகை மனித ருக்கும் இயல்புறும் உரிமை நாட்ட,
ஒத்துழை யாமை யென்னும் ஒருவழி கொண்ட தந்தச்
சத்திய வெற்றிக்கே நான் சாகவுந் துணிகின் றேனே !

என்மனச் சாட்சி சொல்லும் உண்மையை யியற்றி நின்றேன்;
உன்மனச் சாட்சிக் கேற்ற உரைகளை நீயுஞ் சொன்னாய் ;
வன்மன அநீதி தன்னை வாய்மையால் எதிர்ப்போ னுக்கு
மென்மையே ஆறாண்டென்றுவிளம்பினான்பொறையின்வேந்தே

எமதுநா டிந்தி யாவே இதன்சுதந் தரமெம் மூச்சே ;
தமதுநாட் டன்பு மூச்சைத் தடுப்பவர் உலகில் யாரே ?
உமதுநா டெம்மைப் போலே அன்னியர்க் குரிமை யானால்,
அமைதியாய் இருக்க மாட்டீர் என்பதை அறிகு வீரே !

கத்திதுப் பாக்கி யாலே கலகஞ்செய் யிரத்த வீரர்
எத்திசை தனிலும், உங்கள் இங்கிலாந் தினிலும் வெய்ய
யுத்தங்கள் செய்தே தேசம் உய்ந்திட முயன்றார்; இங்கே
சத்தியங் கொண்டே நாங்கள் சாந்தமாய்க் கடமை காப்போம்.

சுடுதிற லற்றோம், ஐய துப்பாக்கியைப் பிடித்து நாங்கள்
படுகொலை செய்து வாழும் பாபமும் பழியும் வேண்டோம் ;
கெடுதலை அஹிம்ஸை யாலே கெடுத்திடர் பொறுத்தே,நாங்கள்
விடுதலை நாட்டும் உண்மை விரதங்கொண்டெழுந்தோம்ஐயா.

படைகளும்இல்லோம்; கொல்லும்படைக்கலமில்லோம்நாட்டை
உடையவர் நாங்கள்; ஆள உற்றவர் நீங்கள்; இந்தப்
புடவியில் மிக்க வெய்ய போர்ப்படை யுடையீர்; ஐயா—
இடர்பொறுத் துரிமை காப்ப தின்றியோர் வழியுங் காணோம்.

சாவதே இயற்கை யான சடலத்திற் கஞ்சோம்; எம்மை
ஆவலாய்ப் பிடித்த டக்கும் அடக்கிடு முறைக்கும் அஞ்சோம் ;
ஏவலாய் அடிமை செய்யோம்; இனியநல் லுரிமை கொள்வோம்
காவலாய், அறிதி நெஞ்சக் கடவுளின் சொல்லி தாமே....

அனைவர்க்கும் அப்ப னாகும் ஆண்டவன் ஒருவன் பெற்ற
தனயர்கள் உலகோர் எல்லாம், சாதிவேற் றுமைக ளின்றி
இனிதொரு குலமாய் வாழும் இன்பநாள் வருவதற்கே
அனவர தமும் யான் வேண்டி அருந்தவம் புரிகின்றேனே...

“போதுமிவ்வுரை என்மனச் சான்றினைப் புகன்றேன்.
வாதனைபல வருத்தினும் வாய்மையைத் தவறேன்—
ஆதலால் எனைச்சிறையினுக் கனுப்பியுன் அரச
நீதி செய்குவாய்” என்றனன் நிகரிலாப் பெரியோன்.

வாயி லான்சொல மனமிலான், வழுவிலான் இவனே ;
நேயனென்றுளே நினைத்ததந்த நீதிபன் இரங்கித்
தாயி னுந்தயை மிகுந்தவச் சத்திய நிதியைப்
“போயமர்” எனச் சிறையினுட் பூட்டினான் உடனே.

கதர ணிந்துநற் கடமையைக் காமினென் றோதி
இதமுடன் எர வாடியிற் சிறைகொண்ட எம்மான்,
பதமுடன் வெளியேபணி செய்ததைப் பார்க்கின்
சுதந்த ரச்சுடர் சுருண்டெழத் தூண்டினான் காணீர்.

ஆக்க வேலைகள்

சாந்த மூர்த்தியெம் சத்திய மூர்த்தி மஹாத்மா
காந்தியோ சிறைக் கதவின்பின் கடுந்தவம் புரிவான் ;
மாந்தர் யாவரும் அவன்சொலை மனவுறு தியுடன்
ஏந்தி நற்பணி செய்குவோம் என்றனர் வீரர்.

சிற்று ருவினிற் செகத்தினும் பெரியவ னாக
உற்ற காந்தியின் உடலையே சிறையிடுஞ் சட்டம்.
மற்றவன் உளம், ஆத்தும சக்தி எம் மனதில்
உற்ற ருட்பணி தூண்டிடும்; உழைப்பமென் றுரைத்தார்.

நல்ல வன்; பெரி யானிவன் அமைதியை நாட்ட
வல்ல வன்; சிறை காத்திட வாய்த்தவன் என்றும்
அல்லவன்; அவனைத் தெறல் அநீதியென் றுலகம்,
சொல்லச் சொல்லத்தம் செய்கையிற் சுறுசுறுப் பானார்.

உடுத்துக் காந்தியின் கதரினை உண்மையைக் காத்துப்
படித்துக் காந்தியின் வாழ்க்கையைப் பணிகளைப் புரிந்தே,
விடுத்து வேற்றுமை நாடெலாம் வியனுறச் சேர்ந்தே,
முடித்த தன்னவன் முற்றறி மொழிகளைப் புரிந்தே.

நூற்று நாளெலா நுவல்பணி அன்பர்கள் செய்தே,
வேற்று மையறக் காந்தியின் விடுதலை வேண்டி
நோற்று நின்றனர் ; நூதனத் தலைவனை அந்தோ !
கூற்றெ னுங்குடற் பிணிவந்து குடைந்ததைக் கேட்டார்.

“கடவு ளேயெங்கள் காந்தியைக் கா” வென நாட்டார்
திடம னத்துறும் அன்பினாற் றெய்வத்தைத் தொழுதார் ;
குடலி நோயினை வைத்தியர் குணஞ்செய்த வுடனே,
விடுத லைத்தரக் காந்தியும் வெளிவந்து நின்றான்...
இருள்கி ழித்தெழு மின்னெனத் திருநகை யிலக,
அருள் செழித்தெழும் அற்புத வாழ்வினை யுடையான்,
உருவி னுக்குறும் பிணிதுயர் ஒன்றையுங் கருதான்
மருவு நாட்டினில் மறுபடி பலபணி தொடர்ந்தான்.

பல பணிகள்

கதர்மல்கக் கைராட்டை சுழலச் செய்தான்
கல்வியுடன் கைத்தொழில்கள் வளரச் செய்தான்
மதுவிலக்கி ஏழைகளின் வாழ்த்தைப் பெற்றான்
மக்களிடை ஒற்றுமையை மதிக்கச் செய்தான்.
பொதுவுரிமை யுணர்ச்சியினைப் பொலியத் தூண்டிப்
பொல்லாத தீண்டாமை போகச் செய்தான்.
அதஞ்செய் மடமை வறுமை அடிமை நோய்கள்
அழியச்சிற் றூர்தோறும் அறிவைப் பெய்தான்.

சட்டசபை மோகத்தார் சர்க்கார் சிங்கக்
குகையினிலே சமர்த்தெல்லாங் காட்டச் செய்தான் ;
பட்டமிலாப் பதவியுடன் காங்கிரஸ் வீரர்,
பாராள வுஞ்செய்து பார்த்தான் காந்தி ;
இட்டமுடன் உப்புவரி யெதிர்த்து வென்றான்;
இங்கிலாந்து சென்றுரிமை இனிது கேட்டான் ;
வட்டமகா நாட்டினிலே வாய்மை சொன்னான்
மஹாத்மாகாந் தியின்பெருமை வழுத்தப் போமோ ?

இருபதுநாள் பலதரம்பட் டினி யிருந்தே,
இந்துமுஸ்லிம் ஒற்றுமையை யியற்றி நின்றான் ;
ஹரிஜனரின் உரிமையினை அமையக் காத்தான் ;
அநியாயச் சட்டங்கள் அழியச் செய்தான் ;
கருஞ்சிறையும் சுடுஞ்சரமும் கருதா திந்தக்
காந்திமுதியோன் செய்த காரியங்கள்
வருஞ்சமுதா யத்திற்கு வழியைக் காட்டும் ;

வாழ்கமகா காந்திஎன்றும் வாழ்க மாதோ !

உலகப் போர்

இன்னும் கேளீர் இம்முது வாலிபன்
இரண்டாம் புவிப்போர் இராக்ஷஸ வெறியுடன்
எழுந்ததும் அதனை எதிர்த்துநல் லமைதி
உலக மெல்லாம் நிலவ வேண்டி
அறிக்கை யிட்டான் ; அரக்க இட்லரும்
உயிர்க்கொலைப் பழியை உணர்ந்து திருந்தவே...
மகான்சொல் கேளார் மண்வெறி யாளரே !
ஜர்மன் இதாலி ஜபானியர் கூடி
ஐரோப் பாவையும் ஆசி யாவையும்
ஆப்பரிக் காவையும் அமர்க்கள மாக்கி,
விதவித மான விமானக் குண்டால்
ஊர் ஊராக வேருடன் அழித்தார்.
எட்டுத் திசையும் இட்லருக் கஞ்சி
உலகெலாம் இரத்த ஊழியைக் கண்டு
கலங்கித் தவித்துக் கண்ணீர் வடித்ததே.
தனியாய் ஆங்கிலர் சண்டைப் பேயைக்
குண்டுக்குக் குண்டு கொடுத்துப் பொருதினும்,
கோடிக் கோடியாய்க் கொடும்பலி கொடுத்தும்,
பைபை யாகப் பணஞ்செல விட்டும்,
மலைமலை யாக மற்பிணங் குவித்தும்,
இட்லரின் வேகம் இறங்கவே யில்லை.
முத்துத் துறையில் முதற்குண் டடித்த
ஜபானிய மறவர் சைகோன் மலாசியா,
ஜாவா பர்மா சகலமும் பற்றி,
கோகினா டாவிலும் குண்டுகள் போட்டுச்
சென்னை நகரிலும் தீக்குண் டெறிந்து
வங்கத்திற்குள் வந்துகொண் டிருந்தார்...
இம்பால் முனையில் இந்திய விதியும்
துடித்து நெஞ்சம் வெடித்துநின் றதுவே.
இந்திய வீரன், இணையிலாத் தலைவன்,
நாட்டன் பொன்றே நாடித் துடிப்பாய்க்
கொண்ட சுபாஷ்போஸ் கொள்கையை முடிக்க,
கல்கத் தாவின் காவலைத் தாண்டி,
பக்கிரி போலப் பதுங்கிச் சென்று,
கைபர் காபூல் காண்டஹார் தாண்டி,
தைரியத் தாலே தடைகளைக் கடந்தே,
துயர்பல வருந்தித் தூதர் துணையால்,
பெர்லின் சேர்ந்து பெரும்புகழ் பெற்றே,
இட்லரின் உறவால் இந்திய முதல்வனாய்,
நீர்மூழ் கியிலே நெடுங்கடல் கடந்து
சிங்கம் போலச் சிங்கப் பூரில்
நாட்டு சேனை கூட்டிட முனைந்தான்.
வீரப் புலிரஸ விஹாரி யாலே
ஒப்பில் லாத நிப்பன் படையுடன்
கூடியே விடுதலை முரசினைக் கொட்டினான்.
கனல்வே கத்துடன் கடமை தொடர்ந்து,
ஜேஹிந் தெனவே ஜெயகோ ஷமுடன்
தில்லி சலோவெனும் சிங்கநா தமுடன்
செங்கோட் டையிலே தேசக் கொடியை
ஏற்றப் பாய்ந்தான் ஏறுபோல் சுபாஷே !

இந்திய சுதந்தரம்

இத்தகை நிலையில் இந்தியா இன்றே
சுதந்தரம் பெறுகெனத் துணிந்துநம் காந்தி,
பம்பாய் தன்னில் பணிகளை வகுத்தான்.
பண்டித ஜவஹர் படேல் ராஜாஜி
சரோஜனி அபுல்கலாம் ஜாகிர் தேசாய்
கஸ்தூரி முதலிய கண்ணியத் தலைவர்
இறுதிப் போரை உறுதியாய்த் தொடங்கவே
அத்தனை பேரையும் அதிகார வர்க்கம்
கொத்துடன் சிறையில் வைத்தது காணீர் !
அகாகான் மாளிகை அருஞ்சிறை யாகி
காந்தி மகாத்மன் காவலில் இருந்தான்.
விடுதலைக் காக வீறிடு நாட்டில்
எரிமலை போலே எழுந்தது புரட்சியே.
ஆயுத மின்றியே ஆத்திரக் கொதிப்பால்,
தந்தியும் ரயிலும் தம்பித் திடவே,
சர்க்கார் நிலையம் தரையிற் சாயவே,
புரட்சி வீரர் புரிந்தனர் போரே.
கரந்து பலபேர் கலகந் தூண்டினார்...
மறைந்து பலபேர் வன்பணி புரிந்தார்.
மறைந்த வானொலி வழியைக் குறிக்க
மறைந்த படைக்கலம் வந்துகை வலுக்க
மறைந்த போர்கள் மல்கியிந் நாட்டில்
அரசாங்க வேரும் ஆடிய தென்னே !

** ** *** **

அமெரிக் காவின் அருந்துணை யாலும்,
ஸ்டாலின் ரூஸ்வெல்ட் சர்ச்சில், ஷியாங்கே,
ஆகிய தலைவரின் ஆற்றலி னாலும்
இட்லர் முஸோலினி இறந்துபட் டாங்கே,
வெண்ணாட் டமர்க்களம் வெற்றி கண்டபின்,
யுரேனிய குண்டால் இரோஷிமா அழியவே
அணுவெடிக் கஞ்சிப் பணிந்தது ஜப்பான்....
இரண்டாம் போரை இப்படி வென்றபின்
ஆசியா முழுதும் தேசிய உணர்ச்சி
பொங்கித் ததும்பிப் பூரண சுதந்தர
கர்ஜனை செய்யக் கண்டு கலங்கியே
இனிநம தாட்சி யியலா தென்றே,
இங்கிலாந் திறங்கி இந்தியா விற்கு
விடுதலை தந்ததை வியப்பென லாமோ ?
காந்தி மகானின் சாந்த சக்தியால்,
தியாகிகள் காட்டிய தீரச் செயல்களால்,
பொதுஜனத் துடிப்பின் புயல்வே கத்தினால்,
பாரத சக்தியின் பரிதிக் கனலால்
உலகுயிர் எங்கும் நலம்பெறக் கருதியே
தனித்தவம் புரியும் தணல்பெறு யோகிகள்
பரமாத்ம சக்தியைப் பரப்பிய பயனால்,
மஹாத்மா காந்தியின் வாய்மைக் கிளர்ச்சி
வென்றது நாடு விடுதலை பெறவே ....!
விடுதலை பெற்ற வியன்பெறு நாடு
இந்து முஸ்லிம் எனப்போ ராடி,
இரண்டு துண்டாய் இரத்த வெறியுடன்,
வாளுந் தீயும் கோளும் வசையும்,
குண்டர் ஊழிக் கூத்துமாய் வருந்தும்
அந்த நாளில், அமைதிக் காகவும்

ஒற்றுமைக் காகவும் உள்ளம் மாறி
பிரிவினை நீங்கிப் பெரியநன் னாடு
சேர்ந்துல கிற்குச் சீரிய தொண்டுகள்
செய்துமா னிடரின் உய்திக் கான
தெய்வச் சுடரைத் திசையெலாம் பரப்பவும்,
ஆயிரம் ஆயிரம் அன்பரைக் கூட்டி
பஜனை பிரார்த்தனை பண்புறச் செய்தே
சுத்தசக் திக்குத் துலக்கினான் வழியே....
ஜவஹர் நேருவும் சக்கர வர்த்தியும்,
படேல்ரா ஜேந்த்ரரும் பண்புளார் பலரும்
அசோக சக்கரம் அமைந்தமூ வர்ணக்
கொடியைப் பிடித்துக் குடியர சாளவே,
சமவுரி மைச்சுடர் அமைதியாய்ப் பொலியவே
கண்டு களித்துக் கடவுளின் அருளையே
தாரக மாகத் தவமுடன் கருதி
உலகிற் கேதன் உயிர்வாழ் வுதவி
உலகுள மட்டும் இலகினான் போற்றி ...
எல்லா நாடும் இசைத்திட நன்றே....
வாழிய மஹாத்மா ! வாழ்கசத் தியமே !
தந்தை தாய் காட்டிடாத தனிப்பெருங் கருணை தாங்கி
வந்தனை, தியாகத் தீயில் வருந்தினை, அஹிம்ஸையாலே
இந்திய நாட்டினுக்குச் சுதந்தரம் ஈந்த காந்தி
எந்தமைப் பிரிந்த செய்தி எப்படி நம்புவோமே...

நடுநிலை கொண்ட காந்தி நல்லதே சொல்லும் காந்தி
கடுமொழி யில்லா தென்றும் கனிமுகக் கருணை காட்டி,
விடுதலை தந்த காந்தி, விரதத்தால் மெலிந்த காந்தி,
படுகொலை செய்யப் பட்டார் பதைக்குதே நெஞ்சம் ஐயோ !

துடிக்குதெம் ஆவி அந்தோ துயர்மனம் இரத்தக் கண்ணீர்
வடிக்குதெம் உளம்வெதும்பி வாடுதுன் பிரிவை எண்ணி...
இடிக்கும்வெம் புயலி னுக்கும் இடர்ப்படா தெம்வி லங்கை
ஒடிக்குநல் லன்பு வீர உனக்குமோர் சாவும் உண்டோ ?

இடமகல் உலகம் எல்லாம் இனிதுறச் சேர்ந்து வாழ,
மடவிருள் அகலத் தீய வறுமைநோய் தீர வேண்டி....
சுடச்சுட நோற்று நாட்டிற் சுதந்தரக் கொடியை நட்டாய் !
சுடச்சுட உயிரை நீத்தாய் சோகநா டகமிவ் வாழ்வே....!

முனிவ னிவ்வகை காந்தியின் சரிதையை முடிக்கக்
கனிவுடன் அதைக் கருத்துற மாந்திய தொண்டர்
அனைய வாழ்க்கையும் அருட்பணி விரதமுங் காக்க,
மனது கொண்டனர் ; சுத்தனும் வாழ்த்துரை மலர்ந்தான்....

சுத்தன்

மெல்லிய உடலுக் குள்ளே மேதினி முழுதுங் கொண்டோன்
சொல்லிய சொல்லினுண்மை துலங்கிடத் தொண்டிசைத்தான்.
வல்லியற் படையும் வெட்கி வணங்கிடும் அஹிம்ஸை வீரன்,
எல்லையிற் கருணை யாழி; எளியர்கோன் வாழ்க மாதோ! 901

விதவித வேடங்கொண்டு வெம்மைசெய் அடிமை நோயும்,
அதஞ்செயும் வறுமை நோயும், அடங்கொண்ட மடமைநோயும்
கதமிகுகாழ்ப்பு நோயும், கதிர்கொண்ட பனிபோலேகிச்
சுதந்தரம் பொலிய நாடு சுடச்சுட நோற்றான் காந்தி.

மன்னுயி ரெல்லாம் வாழ மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தான்; புத்த தருமமே உருவெ டுத்தான்.
கன்னத்தில் அடித்த வர்க்குங் கருணைசெய் கிறிஸ்து போன்றான்;
மன்னுல கெல்லாம் போற்ற வாழிய மகாத்மா காந்தி.....
அந்தம கானைப் போன்றே அருட்பணி செய்ய, நல்லீர்
முந்துமின் என்னச் சுத்தன் "மொழிந்ததைப்புரிவோம்" என்று
வந்தனஞ் செய்து தொண்டர் வாய்ந்தநற் கடமை தாங்கிச்
சிந்தனை யுறுதி யாகிச் சென்றனர் தம்மை வென்றார். 913

11. திருத் தொண்டர் படலம்

பொன்ன முதப் பொலிநகை வீசிப்
பூத்த தின்பப் புதுயுகக் காலை ;
மன்னுலகை மணந்தது வானம் ;
மானிடந் தெய்வ மாறுத லெய்தி,
இன்ன லின்றிப் பிரிவினை யின்றி,
இனமொன் றாக மனமொன்றி வாழத்
தன்னுறுதி தழைத்தற மோங்கச்
சக்தி தொண்டர் தவப்பணி செய்தார்.
துய்ய சுத்தன் சுதந்தரச் சொல்லைச்
சொன்ன வாறு துணிந்து புரிந்தே,
மெய்யறிவும் விழுமிய வாழ்வும்,
மேன்மை யான நினைப்புந் தொழிலும்,
பொய்யி லாத புனிதமெய் வாக்கும்,
பொருந்தி ஞாலந் திருந்திடத் தொண்டர்,
தெய்வ சக்தி திருவரு ளாலே
செய்த சேவை சிறப்புற வாழ்க !
சிலை வடித்திடுஞ் சிற்பியைப் போலும்,
செகத்தை யாக்கிடுஞ் செங்கதிர் போலும்,
கலை வளர்க்கும் கருத்தினைப் போலும்,
கவியின் உள்ளுறுங் காட்சியைப் போலும்,
நிலைபெ றுந்தவ யோகியைப் போலும்,
நிலவி யற்கை நெறியினைப் போலும்,
தலைசி றந்த சமரஸத் தொண்டர்
சகச மாகச் சகப்பணி செய்தார்.
சுத்தன் யோகச் சுடர்வழி காட்ட,
சுருதி மாமுனி வர் துணை கூட்ட,
சக்தி சாதகர் கூட்டத்தை ஊக்கித்
தளர்வி லாது சயம்பெறச் செய்ய,
பத்தி ஞான கருமப் பயனாம்
பாடல் ஆனந்தப் பாணனும் பாட,
உத்தமர் உல கெங்குங்கொண் டாட
உண்மைத் தொண்டர் உழைத்தனர் நாளும்.

கீதங்கள்

வாழ்க சுத்த சுதந்தர ஜோதி
வாழ்க சத்திய சன்மார்க்க நீதி.
வாழ்க மானிடத் தேவர் மரபு
வாழ்க யோக வளம்பெறு வாழ்வே.
வீழ்க ராக்ஷஸப் போரின் வெறிகள்
விண்ண ரசு விளங்குக பூவில்.
சூழ்க நல்லன தொல்லுல கெல்லாம்
சுத்த சக்தி துலங்குக மாதோ !

உலகெ லாம்ஒரு நாடென வாழ்க !
உனதெ னதெனும் சண்டைகள் ஒய்க !
பல மதங்களின் பந்தனை தீர்க !
பரமன் ஒன்றெனும் பண்பு வளர்க !
கலக மின்றியிக் கட்டுக ளின்றிக்
கருணை யான கடவுளை யன்பால்
விலகறக் கலந் தின்பம் விளைந்தே
வீறு பெற்ற விழுமிய ராவோம்.

இருளை யோட்டும் இரவி யெழுக !
இன்ன லோட்டிடும் இன்பம் வருக !
பொருளி லாப்பழம் பொய்வினை போக்கிப்
புதிய ஞானம் பொலிக, பொலிக.
திருவி லாதன தீயன மாறித்
தெய்வ நல்லழ கெங்குந் திகழ்க !
அருளு ணர்ச்சி, அருள்வழி வாழ்க்கை,
அருள ரசுடன் ஆகுக நன்றே !

சாதி யில்லை ; சமயங்க ளில்லை ;
சாத்தி ரந்தரும் சண்டைக ளில்லை.
ஆதி சக்தி யிறைவ னருளில்
அகில மெல்லாம் அமைந்து வளர்வோம்.
தீதி லாத திருவுறு நன்மை,
தியான சாதனந் தீவிர பக்தி,
ஜோதி பூசனை தோத்திர மென்னுந்
தூய வேதச் சுடர்வழி செல்வோம்....

மட்டி லாத மகிழ்வுட னிங்கே
மனிதர் ஓரினத் தேவர்க ளாகத்
தட்டி லாத தவசக்தி கொண்டே,
தாயு ளத்துடன் சத்திய சேவை
எட்டுத் திக்கிலும் செய்திடும் இன்பம்
இம்மை யம்மைக் கினிய நலமாம்—
அட்ட சித்தியி னும்அரி தாகும்,
அவனி வாழும் அருட்பணி யென்போம்.

நாட்டில் ஒற்றுமை நாட்டிட வேண்டி,
ஞாலக் கோயில் நலம்பெற வேண்டி,
வீட்டில் ஆண்பெண் அறம்பொரு ளின்பம்,
மேவி வாழ்க்கை விரிவுற வேண்டி,
சேட்டை செய்திடுந் தீய பகைவர்
தீமுன் விட்டிலாய்த் தீய்ந்திட வேண்டி,
தேட்ட மற்ற சுதந்தரம் வேண்டித்
தீர ராகத் திருப்பணி செய்வோம்.

ஆற்றலும் அறிவும் வளர்ப் போமே,
ஆண்மை ஆண்மையென் றேமுன்செல் வோமே.
சீற்ற முற்றெதிர் தீய பகையும்
திருந்தச் செவ்விய வீறுகொண் டோமே,
ஏற்ற மான சுயேச்சை யிலங்க
எம்மு யிரையும் ஈந்துழைப் போமே,
போற்றி சக்தி புதுயுகத் தேவி
பொங்கு மங்களந்தந்தருள் வாளே.

இன்ன ழகும், இனிய வளமும்,
எங்கு நோக்கினும் தங்கக் கனியும்
புன்ன கைசெயும் புண்ணிய பூமி,

புனிதர் போற்றிடும் பூரண பூமி,
முன்னு லகின் முதுநலப் பூமி,
முத்தி நல்கிடும் தத்துவப் பூமி,
உன்னத நிலை யோங்கிட வேண்டி
உயிரை யீந்தும் உழைத்திடு வோமே.

சேர்ந்து வாழுந் திறமறி வோமே,
தீர ராகத் தலைநிமிர் வோமே.
சோர்ந்தி டாது துணிந்துநிற் போமே,
சொல்லுஞ் செய்கையும் ஒன்றுசெய் வோமே.
கூர்ந்த நன்மதி கொண்டுயர் வோமே,
கொண்ட கொள்கைக் குயிர்தரு வோமே,
நேர்ந்த போதறத் தொண்டுசெய் வோமே,
நேரத்தைப் பொன்னென் றேநினைப் போமே.
தன்ன லத்தைத் தவிர்த்திடு வோமே.
தாய் நலஞ்செய் தவம் புரிவோமே.
அன்னியர்வலை யையறுப் போமே.
ஆண்மை தன்னை மிகவளர்ப் போமே.
மன்னன் எம்மனச் சாட்சியென் போமே.
மாநி லம்பொது வாய்மதிப் போமே.
இன்னமும் இருளில் மடி யாமல்
இரவி போன்று விழித்தெழு வோமே.

சிறுமை யின்றிச் சிறந்திடு வோமே,
தேச சேவைத் தவம்புரி வோமே.
வெறுமை யச்சம் பொறாமை மடமை
விடமெனத் தள்ளி வீறுகொள் வோமே.
வறுமை நோயை வராதடிப் போமே,
வாழ்விற் காவிய வான்வளர்ப் போமே,
பொறுமை யாகப் புவிநலம் ஓங்கும்
புது யுகத்தைப் பொலியவைப் போமே.

மனித னுக்கு மனிதன் அடிமையோ
வாழு மாந்தர் அவரவர் மன்னவர்,
கனி மரத்திற்குக் காய்க்கும் உரிமைபோல்,
கதிரி னுக்கொளி காந்தும் உரிமைபோல்,
மனதி னுக்கு நினைக்கும் உரிமை போல்
மண் ணுயிர்க்கு வளரும் உரிமையாம் ;
தனிய கந்தைகொண் டேபிறர் தாழ்வுறத்
தாக்குந் தீமையைத் தாக்கி நிமிருவோம்.

காணு லகம் பராசக்தி காணியாம் ;
கார்வ ளத்தாற் பசுவளங் காணுமே ;
ஊணு டைக்கிவ் வுலகினிற் பஞ்சமோ
ஒருவரை யொருவர் திருடா துண்டால் ?
மாணு றும்உழைப் பால்வந்த செல்வத்தை
மாந்த ரெல்லாம் பகுத்துண்ண வல்லரேல்,
சாண் வயிற்றுச் சடங்கெளி தாகிடும் ;
சத்தியம் இதென் றேபறை சாற்றுவோம் ....

அருந்தவ முனிவர்கள் ஆசிகள் கூறி
ஆனந்த கானங்கள் ஆர்த்தனர் தொண்டர்,
திருந்திய நற்பணி செய்தனர் நாளும்,
தேசமெந் தெய்வம் எனச்சிரங் கொண்டே ;
வருந்திய மக்களின் வாட்டந் தவிர்த்தே,
மனதிலும் வாழ்விலும் மங்கள வளமை

பொருந்திடப் பொதுநலம் புரிந்திடும் அன்பர்,
புண்ணியம் பொங்குக கண்ணுல கெங்கும்.

ஆர்த்தன பறவைகள், ஆர்த்தன குயில்கள்,
ஆடின மயிலினம், ஆடின மான்கள்,
ஆர்த்தன வேதங்கள் ஆர்த்தன கீதம்,
ஆர்த்தன சுத்த பராசக்தி யென்றே.
ஆர்த்தபல் லாயிரம் ஆனந்தக் குரல்கள்,
அன்பர்கள் பாட்டுடன் அருட்பணி செய்தே
ஆர்த்தனர் யாவர்க்கும் அமர நிலையை
அளித்திடும் அன்புள்ள அன்னையைப் போற்றி...

புண்ணிய நாடே பூரணர் நாடே
புகழ்மிகு பாரத நாடே
விண்ணொளிர் நாடே வித்தகர் நாடே
விதவித நலந்தரு நாடே.

மாரதர் பலமும், வங்கரின் கலையும்
மங்கலத் தமிழிசை யமுதும்,
சீரிய சிங்கரின் வீறுடன் கூர்ச்சரர்
செல்வமு மல்கிய நாடே.

புத்தரின் சாந்தப் புன்னகை யொளியும்
பூரண யோகியர் கனவும்,
சித்தரின் அறிவும், பக்தரின் அன்பும்
தீரரின் வீரமும் பொலியும்—

எம்முளந் துடித்திடும் இன்னுயிர் நாடே ;
எம்விழிக் கொளிதரு நாடே ;
எம்மனம் நிம்மதி யெய்துநன் னாடே
எங்களை யீன்றபொன் னாடே ;

முனிவரர் போற்றிய முதுபுகழ் நாடே,
மோகனக் கண்ணனின் நாடே
மனதினுக் கினிதுறு வரம்பெறு நாடே,
மலர்கனி வளமிகு நாடே....

பண்டுயர் தருமங் கொண்டுயர் நாடே,
பாருயர் சீருயர் நாடே,
கண்டதும் பெரியார் கைதொழு நாடே
கடவுளைக் காட்டிடு நாடே.

மறுமையை இம்மையில் வழங்கிடு நாடே,
மடவிருள் போக்கிடு நாடே,
பொறுமையும் வீரமும் பொய்யறு புகழும்
பொங்கிய சிங்கரின் நாடே...

ஓரினம் ஓர்குலம் ஓர்நிகர் ; உலகம்
ஒன்றெனும் உத்தம நாடே,
பேரிகை கொட்டி யிதன்புக ழிசைத்தே
பேரின்ப மெய்திடு வோமே...

பாடி யிவ்வகை பாட்டுட னேபணி
சூடி ஞானச் சுடர்பெறு தாய்நிலம்
வாடி நிற்கும் வருத்தந் தணித்திட

நாடித் தொண்டர் நலம்புரிந் தோங்கினார்.

சுத்தன் ஆணையும் தூய தவந்தரும்
சித்தியும் அருட் செய்கையும் ஏந்தியே
சத்தி சாதக சங்கக் கிளைகளை
பத்தி கொண்டு பணிபெறத் தூண்டினாள்.

ஆணும் பெண்ணும் அனைத்திலும் ஒன்றெனப்
பேணும் தொண்டர் பெருகிய கூட்டத்தைக்
காணும் சுத்த சிவசக்திக் காட்சியாய்
மாணு லகு மதித்திடச் செய்தனள்.

யாது செய்யினும் எங்கிருந் தாற்றினும்,
சாதுக் கூட்டம் சமரசப் பான்மையெப்
போதுங் கொண்டு புனிதனின் பொன்மொழி
ஓதுந் தொண்டொ டுயிர்த்தது நாளுமே.

நித்தி யத்தை நிரம்பிடக் கண்டவர்,
சத்தி யத்தைச் சரண்புகு சாந்தர்கள்,
சுத்த சக்தி யுபாசகத் தொண்டர்கள்,
சத்த மின்றிச் சகப்பணி செய்தனர்.
ஞாலங் கண்டவர் ஞானத்தைக் கண்டவர்,
கோலங் கண்டவர் கோலத்தி னுள்ளூறும்
கால சக்தியின் காட்சியைக் கண்டவர்
நீல வானென நெஞ்சம் படைத்தவர்.

உண்மை யானவர், உன்னத மானவர்,
கண்மை யுள்ள கருணைத் திருவினர்,
வண்மை கொண்ட வளம்பெறுங் கையினர்,
தண்மை யான தடம்பெறு வாக்கினார்.

சித்தி மானும், திறல்பெறு சக்தியும்,
தத்த மக்குத் தகுமுறை தந்ததைச்
சித்த மூன்றித் திருவுறச் செய்திடும்
பத்தர் கூட்டமிப் பாவனக் கூட்டமே...

பயிற்சி பெற்ற பலகலைச் சாதகர்
அயர்ச்சி யற்றனர் ; அல்லும் பகலுமே
முயற்சி யேயுயிர் மூச்செனக் கொண்டனர்—
உயர்ச்சி யுற்றதை ஓதவும் வேண்டுமோ !

கோட்டை கொத்தளங் கோயில்கள் கோபுரம்
நாட்டி லுள்ள நகரச் சுவர்தொறும்
தீட்டி வைத்தனர் சுத்தனின் செம்மொழி
காட்டி மக்கள் கடமை யறியவே.

யோக சித்தி யுளங்கொண்டு வாழ்ந்தனர்
யோக சித்தி யுரைத்தனர் ஊர்தொறும்,
யோக சித்தி யுரைத்த பணிகளை
யோக சித்தி யொளிரப் புரிந்தனர்.

சக்தியின் பெரும்பணி

பாலுந் தேனும் பழமுங் கலந்தெனச்
சீல வாழ்க்கையுஞ் செவ்விய சிந்தையும்
கால மேற்குங் கலைகளும் வல்லவள்

ஞால சேவை நடத்தினள் சக்தியே.

அண்ணல் சுத்தனுக் கன்பை யளித்தவள்,
கண்ணு லகை அவனெனக் காண்பவள் ;
உண்ணுஞ் சோறும் அவனென் றுணர்பவள்
எண்ணும் எண்ணமெ லாமவ னெண்ணமே.
உண்மை யான உளத்தினைக் கோயிலாய்ப்
பெண்மை யான பெருமையைத் தீபமாய்,
வண்மை யான வரதனை மூர்த்தியாய்த்
திண்மை யான தியானஞ்செய் சீரியள்.

கண்க டந்த கடலுறு தீவிலே,
தண்க டலையுந் தாண்டிவந் தாட்கொண்டான்.
எண்க டந்த பெருமையன் என்மனப்
பண்க டந்த பனுவலை ஏற்றனன்.

எல்லை யற்ற கருணையன், எம்பிரான்,
தொல்லு லகிருள் போக்கிடும் சூரியன்,
சொல்ல ரிய சுகமெனக் கீந்தனன்,
அல்லி யுள்ளம் அலர்மதி யன்னவன்.

மின்ன லென்னவென் மெல்லிய நெஞ்சிலே,
தன்னொ ளியினைத் தந்து கலந்தவன்
என்னு யிரும் எனதுயிர்க் காவியும்
அன்ன வன்பணி யாவதென் வாழ்வென்றாள்.

அனவ ரதமும் அன்பை நிவேதித்தே,
கனவி லோங்குங் கவியுரு வென்னவே
நினைவி லோங்கிய நின்மலன் சேவைக்கே
மனமும் வாக்கும் வழங்கிய தூயவள்.

பருகும் ஆர்வமும் பண்புள காதலும்
உருகு நெஞ்சினில் ஊறிடும் பண்களும்,
அருவி போலிசை யாழும் அமுதச்செந்
திருவு மோங்கிய திவ்விய வாழ்வினாள்.

மற்றை யாசைகள் யாவு மறந்தவள்,
வெற்றி யாக விமலன் விரதத்தை
முற்று விக்க முயன்றுமுன் சென்றிடும்
ஒற்றை யாசை யுளமெனக் கொண்டவள்.

ஓவி யத்திற்கும், உண்மைப் புலவரின்
காவி யத்திற்குங் காணரும் பொற்பினாள்.
"ஆவி யின்புறும் ஆனந்த யோகியாந்
தேவன் சேவையென் சென்மப் பய" னென்றாள்.

முருகன் ராமன் முரளி மனோகரன்
அருகன் புத்தன் அனைவரும் கூடிய
உருவன் உள்ளத்தை யள்ளிய உத்தமன்
குருவவ னுக்கென் கோதறு வாழ்க்கையே.

என்று நெஞ்சினில் ஏத்திப் பணிந்துளம்
ஒன்று சக்தியின் உட்கனல் ஓங்கவே
நன்று தூண்டினன் பூரண நாயகன்—
வென்றி நல்கும் வியன்பணி செய்யவே.

செங்கை கோத்த தியானத் திறமையால்,
அங்க முற்றும் அருட்கனல் பாய்ந்தொளிர்
தங்க மாகத் தளிரிள மேனியும்
பொங்கு பூரண யோகம் புரிவித்தான்.

ஆறு சக்கரம் தாண்டி யருட்கனல்
ஏறும் உச்சிவெண் டாமரை ஏகமாய்,
ஊறும் இன்ப ஒளிசிவ சக்தியாய்
வீறும் தன்மை விளம்பிட ஒண்ணுமோ ?

தாயுந் தந்தையும் தானும் உலகமும்
தூய னென்று துணிந்து பணிந்திடும்
நேய மிக்க நிமலையைச் சாதகர்
சேயு ளத்துடன் சிந்தித்தன் பாற்றினார்.

தன்னை யீந்த தகவுறு சக்திக்கே
தன்னை யீந்த தயவுறு சுத்தனும்
முன்னி ருக்கு முயற்சித் தலைவியாய்
அன்ன வளை யனுப்பி மகிழ்ந்தனன்.

மருவு கால வாழ்க்கை நடத்திடும்
இருசு டரென் றிருவரும், புண்ணியம்
பெருக மெய்யொளி எங்கும் பிறங்கிடத்
திருவு றும்பணி செய்தனர் நாளுமே.

துய்ய வீர சுதந்தர நாதனின்
தெய்வ வீறுறத் திவ்விய சக்தியும்
வைய மெங்கும் வரதனின் வாசகம்
உய்ய மாந்தர் உருகிடப் பேசினாள்.

மாசிலா யோக சித்தன், மறுவிலாக் கேள்வி யாளன்,
வாசநாண் மலரைப் போல மகிழ்வுறு காட்சி யாளன்,
பேசநா வூறுந் தெய்வப் பெருமையான், உலகுக் கெல்லாம்
தேசிகன் சத்ய சுத்த தேவனை யறிகு வீரே....

கனியுடன் பாகுந் தேனுங் கற்கண்டுங் குழைத்த தன்ன
இனிமையில் வளர்ந்த சொல்லான், இரக்கமே இதய மானான்,
எனதுயிர்க் கின்ப மானோன், எவ்வுல குயிரி னுக்குந்
தனதுயிர் போல நல்ல தயவுடைத் தந்தை யன்னான்.

ஓங்கிய தவத்தின் மிக்கான், ஒள்ளிய நடையின் மிக்கான்,
ஏங்கிய மனதை மாற்றும் இதயசஞ் சீவி போல்வான் ;
தீங்கனி ரசத்தைப் போலத் தெவிட்டாறு வாக்கி னாலே,
தூங்கிய நாட்டை வீரத் துணிவுடன் எழுப்பி னானே.

அஞ்சறு மனத்தான் பூவை யழித்திடும் அசுரர் செய்யும்
வஞ்சனைப் பழியை வெல்ல, யோகத்தின் வலிமை பெற்றான்;
வெஞ்சின வெறிகொள் வாரை விழிதருங் கருணையாலே
கொஞ்சிள மதலை போலக் குலவிடச் செய்ய வல்லான்.

கொடியதோர் எமபாசத்திற்கொடியதாய் வாழ்வைத்தேய்க்கும்
அடிமைநோய் தீர்க்க வேண்டி ஆத்தும சக்தி கொண்டான்.
மிடிபிணி யிருளி லாது மேதினி மாந்தர் வாழும்
படிநலம் புரியும் வள்ளல் பரிதியுங் கடலும் அன்னான்.

மக்கத்து வள்ளல் போன்றும் வஞ்சமில் கிறிஸ்து போன்றும்,
பக்குவ ஞானி யான பாலறா வாயர் போன்றும்,
மிக்குயர் அப்பர் போன்றும் விழுமிய மூலர் போன்றும்,
சிக்கனக் காந்தி போன்றுந் திவ்விய புருடன் அன்னோன்...

எந்தநன் மதமும் போற்றும் இயல்புறு வாய்மை தன்னைச்
சொந்தநன் மதமாய்க்கொண்டு தூய்மையே போற்றிவாழ்வான்
இந்தநா டுடனே பூவும் இன்புற மாந்தர்க் கெல்லாம்
வந்தருள் அன்பிற் பூத்த வாசகஞ் சொல்வேன் கேளீர்.

சக்தி நாதம்

தலை சிறந்த தலைவனைப் போற்றுமின் ;
நிலை சிறந்த நினைவுடன் செய்யன
கலைசி றந்த கருத்துடன் ஆற்றுமின் ;
மலையின் மாண்புடன் வாழ்வகை வாழுமின்.
அரிய தாகிய மானிட வீணையைக்
கரிய சேற்றிற் கவிழ்த்திட லாகுமோ ?
பெரிய நல்லிசை பேசிட மீட்டுமின்—
உரிமை யென்னும் உணர்வுறு பாட்டினால்.

பேத புத்தியின் பேதமை நீங்கிடின்
சாதி யில்லை, சமயங்க ளில்லையே,
மேதி னியில் விளங்குயர் மானிடர்
நீதி யொன்று நெறியுமொன் றாவரே.

நன்றி யின்றி நடுநிலை யின்றியுள்
ஒன்ற லின்றி, உயிர்க்கரு ளின்றியே
கொன்று கூடிக் குடித்துத ரச்சுவை
தின்று கெட்டதித் தீனி யுலகமே !

வெம்மை யின்றி வெறிக்களி யாட்டின்றிச்
செம்மை போற்றித் திருவுற வாழ்ந்திடின்
நன்மை கண்டு நடந்திடின், வாழ்விலே
இம்மை யம்மையின் இன்பந் தழைக்குமே.

அழிந்த நெஞ்சினர் ஆருயிர் வாழ்வினைப்
பிழிந்துண் பேயர் பெருங்கொலைப் பாதகர்,
பொழிந்ததைப் பொடிக்கும் பொறி போன்றவர்
இழிந்த தீமையால் வந்ததிங் கின்னலே.

ஞால சக்தியின் நாடக மாகவே
கால மான கயிற்றி னியங்கிடும்
தூல வாழ்வெனும் சூத்திரப் பாவையைச்
சீல வாழ்வெனச் செய்திட நேர்மினோ.

பயங்கொள் குண்டுப் படைகளைக் கண்டுநீர்
மயங்கி யஞ்சி மனந்தடு மாறலேன் ?
புயங்கொள் சக்தியினும் புனி தாத்தும
நயங்கொள் சக்தி நலந்தரும் வெற்றியே.

தம்ம தேபெரி தென்னுந் தனிமதம்
இம்மி கூட இனிப்பய னில்லையால்,
எம்ம தமும் இனிதெனப் போற்றியே
சம்ம திக்கும் சமரஸங் காணுவாம்.
இலகு நெஞ்சில் இருக்கும் பரமனை,

விலகி டாது விரும்பிக் கலந்ததும்
உலகில் அந்த உணர்வுடன் வாழ்வதே
நிலவ மைதி நெறியென லாகுமே.

தினமு மன்புத் தியானஞ்செய் மாந்தர்கள்,
மனமொன் றாகி மதவகுப் பின்றியே
இனமொன் றாகி இனிதுற வாழுவார்,
தினக ரனிற் செறிகதிர் போலவே.

சமதை யுள்ளமும் சத்திய நேர்மையும்
இமயத் தோளில் எழுந்தொளிர் வீரமும்,
எமனும் அஞ்சும் இதயவிஞ் ஞானமும்
அமர வாழ்க்கை யளித்திடும் அன்பர்காள்.

அருமை யானசுத் தாத்தும சக்தியும்,
தரும வீரமுந் தன்மை யுணர்ச்சியும்,
ஒருமை யாகிய ஒற்றுமை நேயமும்
பெருமை செய்யும் பிறப்பின் உரிமைக்கே.

அவ மிகுந்த அவுணரை வெல்லுவோம்,
சிவமி குந்த திருவுற வாழுவோம்,
தவமி குந்தருள் சக்திப் பெருக்கினால்,
புவிமி குந்த புதுப்பொலி வெய்தவே.

பஞ்ச பூதஞ்செய் பஞ்சர மேனியிற்
கிஞ்சு கமெனக் கேடற வாழுயிர்
அஞ்சி லாத சுதந்தர மானது ;
நெஞ்சி லந்த நிலையை நினைமினோ.

மன்னுயிரின் மனத்தைக் கெடுத்திடும்
தன்ன லங்களுந் தாமதப் பேய்களும்,
உன்ன தம்பெறும் ஓர்மய உண்மையை
முன்ன றிந்து முயன்றிடின் வீழுமே.

சிறுமை யில்லை, செகத்தை வருத்திடும்
வறுமை யில்லை, மடமை யிருளிலை,
வெறுமை யில்லை, வெருவுறுந் தீதிலை,
பொறுமை யுள்ளம் பொலிபொருள் காணினே.
சாமி யென்பது சத்திய சுத்தமே,
பூமி ஆன்மப் பொதுவளர் சோலையே,
நாமி தென்பது நம்முயி ருக்குயிர் ;
சேம மென்பது சேதன வாழ்க்கையே.

எங்கு மாந்தர் இதயத்தில் ஒன்றியே,
சிங்கம் போலச் சிரநிமிர்ந் தோங்குவார்,
எங்கெல் லாரும் இறைவ னருட்குடை
தங்கி வேறு சழக்கற வாழ்வரோ,

எங்கு நான்என தின்றிப் பொதுமையில்
மங்கலம் பெற வாழ்வு சிறக்குமோ,
பொங்கு யோகமும் போகமும் போதமும்
துங்க மாகத் துலங்குமந் நாட்டிலே.

அயர்வி லாத முயற்சியும் ஆண்மையும்,
துயரை யோட்டுந் துணிவுறு வீரமும்,

மயர்வி லாத மனத்தில் உறுதியும்
உயர்நி லைதரும் உண்மை யறிகுவீர்.

கடமை கண்டு கருத்துடன் காமினோ !
மடமை யச்ச மயக்கம் ஒழிமினோ !
திட மனத்துடன் சேர்ந்தினி வாழ்மினோ !
அடிமைப் பேயும் அடங்கி யொழியுமே.

அரியின் குட்டிவெள் ளாட்டிடை வாழ்ந்தபின்,
நரியின் குட்டியைக் கண்டு நடுங்கல்போல்,
உரிமை தன்னை உணர்ந்துகொள் ளாமலே,
பிரிவு செய்யும் பிறரைப் பணிவதோ ?

ஞான பாரத நாட்டினர், வீட்டினர்
ஈன மான அடிமையென் றாவதோ ?
வான ளாவிய வாகைப் புகழினர்
தீன ராகித் தியங்குவ தாகுமோ ?

பொங்கு வீரப் புகழ்சிறந் தோங்கிடும்
சிங்க வீரச் சிகாமணி நாட்டினர்,
தங்க மான தருமப் புலவர்கள்,
மங்கி யின்று மடிவது நீதியோ ?
ஏங்கி டாமல், இழிநிலை தன்னிலே
தூங்கி டாது சுறுசுறுப் பாகநீர்
தீங்கை வென்று திருக்கொடி நாட்டவே,
ஓங்கி ஓம்சுத்த சக்தியென் றோதுமின் !

எரி நெருப்பில் இருப்பதைக் காட்டிலும்,
வரிப்பு லிக்குகை வாழ்வதைக் காட்டிலும்,
பரிவி லார்கை பகட்டிடும் பாவையாய்
உரிமை யின்றி யுயிர்ப்பது சாவரோ !

ஏழை யில்லை இழிந்தவ ரில்லையே
தோழர் யாருஞ் சுதந்தர வீரரே ;
ஊழி யஞ்ச உழைப்பினில் ஓங்கியே
வாழி தெய்வ வரம்பெறு நாட்டினர்.

தொண்டர்க ளுடனே சக்தி சுத்தவா சகத்தை யோதி,
வண்டெனச் சுறுசு றுப்பாய் மானில மெங்குஞ் சென்றாள்.
பண்டுசீர் அறிந்து மக்கள் பாரதப் பான்மை நெஞ்சிற்
கொண்டெழுந் துணர்ச்சி வெள்ளங் குமுறிடப் பணிசெய் தாரே.

மடமையைஅறிவாற்போக்கி, வறுமையைத் தொழிலாற்போக்கி
அடிமைசெய் மாயம் போக்கி, ஆத்தும தீர ராகக்
கடமையைக் காத்து வெற்றி காட்டிய சுத்த யோகம்
இடமகல் உலக மெங்கும் இயல்புற நிலவிற் றன்றே ....

12. விழித் தெழுந்த படலம்

வீரநல் லுரைக ளாலும் வீறுகொள் பணிக ளாலும்,
பாரத சக்தி யாலும் பழம்புது நடைக ளாலும்,
ஓரின உணர்ச்சி யாலும், உண்மையை அறிந்த தாலும்,
பூரணன் அருளி னாலும் புண்ணியம் எழுந்த தன்றே....

அருளினை யடைந்த தொண்டர், அயர்வறும் பணிக ளாலே
இருளினை யடைந்த நாடும், இடமகல் உலகும், எங்கும்,

தெருளினை யடைந்து மாந்தர் திசைதிசை சுத்த சக்திப்
பொருளினை யறிந்து ஞானப் பொலிவுற விழித்தெ ழுந்தார்.

கங்குலைக் கடிந்து நீண்ட கதிர்களைப் பரப்பி, மண்ணைத்
தங்கமே யாக்கி, மோனத் தணல்பெறும் இரவிச் செல்வன்,
இங்குல குயிரின் வாழ்வை எழிலுறச் சமைப்ப தேபோல்,
பொங்குயர் சுத்த சக்தி புதுயுகஞ் சமைத்த தன்றே.
சதம் பெறுஞ் செயல்க ளாலே, சத்திய வாழ்க்கை யோங்க
நிதந் திரு வளர, மாந்தர் நினைவுகள் புதுமை யாகச்
கதந்தரு மரக்க மாயங் கலங்கிடக் கதிர்கள் வீசிச்
சுதந்தர சக்தி யென்னும் சூரியன் எழுந்த தன்றே.

கார்பெறும் அரக்க ருக்குக் கைகட்டி யஞ்சி யிங்கே
சோர்வுற வாழ்ந்த வாழ்வைத் தூவென உதறித் தள்ளிச்
சீர்பெறும் பரத நாட்டுத் தீரர்கள் விழித் தெழுந்து,
நேர்பெறத் தலை நிமிர்ந்து நின்றனர் சிங்கம் போலே.

நாட்டு நிலைமை

ஆருயிர் நலத்தைத் தாங்கும் அறமெனுங் கற்பகத்தின்
வேருடன் கிளையு மாகி, விண்கனி பழுத்த நாடு,
பேருடன் புகழு மோங்கிப் பெருஞ்செயல் புரிந்த நாடு,
நீருலர் கமலம் போல வாடிய நிலையைக் கண்டார்.

தாமதப் பகையை நூறித் தணல்பெறுஞ் சாந்த மெய்தி,
நேமமும் பிரம ஞான நிட்டையுஞ் சபமும் காத்துப்
பூமிநல் லின்ப மெய்தும் பொதுநலம் புரிந்து வாழ்ந்த
தூமறை யாளர் தங்கத் தூசியின் அடிய ரானார்....

கிழக்கொளி எழுந்த போதும், கிளர்பக லுலகைப் போற்றி
வழக்கமாய் அந்தி மாலை வந்தது மறையும் போதும்,
வழுக்கறச் சந்தி செய்து "மன்னுயிர் வாழ்க" வென்று
தொழுக்கடன் புரிந்த சீலர் தோற்கிடங் காள ரானார்.

மனதுறு மாண்பி னாலே மாதவ வாழ்க்கை பூண்டு,
வனநடு விருந்து கல்வி வழங்கிய குருமா ரெல்லாம்,
கனதன சுகத்தைத் தேடிக் கைகட்டி வாய்பு தைத்துச்
சினமிகு செருக்கர் சேவை செய்திடப் புகுந்தா ரம்மா.

அந்தணர் வணிக ரானார், ஆயுதம் பிடித்த வீரர்,
சந்தையில் விறகு விற்றார், சாத்திரச் செல்வர் தாமுந்
தொந்தியை நிரப்ப வேண்டித் தொத்தடி யார்க ளானார்,
பந்தனை வலையிற் பட்டுப் பதமிழந் தார்க ளம்மா.

தவம்பெரி தாற்றி நின்ற சத்திய சித்தர் தாமும்,
சிவம்பெரி தென்பார் ; மாலே சிறந்தவ னென்பார் ; மற்றோர்
எவர்பெரி யாரென் றேச்சும் பேச்சுமாய் இகல் வளர்ப்பார் ;
அவம்பெரி தாகி யின்னும் ஆயிரஞ் சாதி செய்வார்.
பொங்கிய தொழில்கள் செய்து, புவியெலாங் கப்ப லூர்ந்து,
தங்கமு மணியுங் கொண்டு தாயகங் குவித்த நல்லார்,
சிங்கனின் மரபார் ஊணர் தேசத்துச் சரக்கை வாங்கித்
தங்கடன் மறந்து நின்ற சங்கடந் தனையுங் கண்டார்.

கலையென்பார் புதுமை யென்பார் கைகட்டிச் சேவகஞ்செய்
நிலையினி லுள்ள தாதர், நெஞ்சினில் உரமே யின்றி,
விலையிலாக் காலந் தன்னை வீண்கதை பேசித் தீர்ப்பார்
மலைமலை யாகக் குப்பை மலிந்திடத் தினத்தா ளெல்லாம்.

முனிவர்செய் யிலக்க ணத்தை முனிந்தெரி மூட்டு வார்கள்,
கனிமொழி யென்றாற் சந்தைக் கடைமொழி யென்றுசொல்வார்
மனதினில் வந்த வாறு வசவுநூ லெழுதி விற்பார்
இனியபண் டிலக்கி யத்தைத் தலைவலி யென்று நோவார்.

அணியிசை யாப்புமுற்றும் அமைந்தநன் னூலை யோதி
மணிமொழி பேசுகின்ற மாபெரும் புலவர் தம்மை,
உணவுடன் உடைக்கு மின்றி உலர்ந்திட விடுப்பார் ; ஈசன்
பணிநலம் புரிவார் ஒன்றாம் பசலியென் றிகழு வாரே.

தம்பெருங் குறைகள் எண்ணார்; தகுமுறை கற்றுந் தேறார்,
கம்பனுங் குறளும் ஆன்றோர் கவிகளும் காலம் வேண்டா
வம்புகள் என்பார்; வாக்கை மாற்றுவார்; உண்மை தன்னை
அன்புடன் சொன்னாற் செள்ளென் றாத்திரங் கொண்டு பாய்வார்

செய்தித் தாள் பேனா நாட்டத் தெரிந்ததும், அகங்க ரித்து
வையத்தைத் திருத்த நாமே வந்தனம் என்பார்; நல்ல
மெய்யுரை யாளர் தம்மை விதவித மாக வைவார்,
பொய்யெலாம்புனைந்துகாட்டிப்பொழுதினைக்கொலைசெய்வாரே

தம்மையே புகழ்வார், தம்மைப் புகழ்ந்தவர் தமைப்பு கழ்வார்
செம்மையாய்க் கற்ற டங்கிச் செய்வன செய்வார் தம்மை
இம்மியு மதிக்க மாட்டார்; ஏளனஞ் செய்வார், செல்வர்
பொம்மையாய்த் திரிகி விட்ட போக்கினிற் போவா ரன்றே.

மதிப்புறு காவி யத்தை மன்றினில் விலக்கி வைத்துக்
கொதிப்புரை பேசி நாசக் குரங்கின்கை மாலை செய்வார்.
துதித்ததம் அடியார் தம்மைத் துதித்துக்கொண் டேயி ருப்பார்
எதிர்த்திது நீதி யென்றால் இடிபுய லாவா ரன்றே....

புன்னகை புரிந்து முன்னே புகழுரை பலவுஞ் சொல்லித்
தன்னலப் பயனைக் கொள்வார்; தந்ததும் நன்றி கொல்வார்,
பின்னிருந் திழிவு செய்து பேய்நகை யாடு வார்கள்
அன்னிய ரிடங்கோட் சொல்லி அஃதொரு பிழைப்பு மானார்.

கொல்கொலைக் கஞ்சி டார்கள்; கோள்பொய் பொறாமை யாலே
நல்லவர் தம்மைத் தூற்றி நலிந்திடச் சூழ்ச்சி செய்வார்.
கல்வியிற் பெரியர் பேரால் காசடி வேலை செய்வார்,
பல்வகைத் திருடர் பட்டப் பகலினில் வலுத்தா ரம்மா.

எதிர்மனை வாழக் காணார்; வழக்கினில் இழுத்து விட்டுச்
சதிசெய்து பொட்ட லாக்கச் சாட்சிசோ டித்து நிற்பார்.
கதிர்விடு மணியும் பொன்னுங் கடுஞ்சிறை யடைத்து வைப்பார்
மதியினை மயக்கும் வேசை மனங்கொளத் தந்து தீர்ப்பார்.

ஆயிரம் திருட்டுச் சொத்தில் அரைப்பணந் தருமஞ் செய்வார்,
கோயிலைக் கொள்ளை கொண்டு கோபுரங் கட்டு வார்கள்.
தாயையு நம்ப மாட்டார், தம்படிக் கணக்குப் பார்ப்பார்;
தேயத்தின் பெயரைச் சொல்லித் தின்றுடை மினுக்கு வாரே.

மன்னனை முகமன் கூறி மந்திரி யாகப் பார்ப்பார்.
இன்னொரு தக்கார் எய்தின், எதிர்த்தொரு கட்சி சேர்ப்பார்.
அன்னவன் அழியப் பிள்ளை யாருக்குத் தேங்காய் போட்டுத்
தன்னலஞ் சாதித் தோங்கச் சாமிக்கி லஞ்ச மீவார்.

பொன்னுடன் பெண்கிடைத்தால், பொருளுடன்புகழும்வந்தால்
மன்மதக் குழந்தை வாய்த்தால், மற்றொரு லாபம் வந்தால்
"இன்னதற் கிதுகா ணிக்கை" என்றுகைக் கூலி யீவார்.
அன்னவர் ஆசைதோற்றால் "ஆண்டவன் இல்லை" யென்பார்

எளியவர் பசியைக் கண்டும் எச்சிற்கை யுதற மாட்டார் ;
தெளிமிகு புலவர் வந்தாற் செவிட்டுடன் ஊம ராவார் ;
களிமது வுண்டு வேசை காலினிற் பொன்னைப் பெய்வார் ;
வெளிமயக் கிடம்பா சார விருந்தணி செய்வா ரன்றே.

குணநலம் பாரார் ; நல்ல குலநலம் பாரார் ; கல்வி
மணநலம் பாரார் ; அன்பு மனநலந் தானு மில்லார்.
பணநல மொன்றே கண்டு பாதகம் பலவுஞ் செய்வார்.
கணமொரு கவலை யாகக் காசினைச் சுமக்கும் கஞ்சர்.

பிறப்பெனப் பெற்றார் யாரும் பெருகிழுத் தயர்ந்து நாளை
இறப்பெனும் புலிவாய் சேரு முன்னரே எய்துஞ் செல்வம்
அறப்பணிக் கீந்து, நாட்டில் அறிவுடன் தொழில் வளர்க்க
மறப்பரேல் அவர்செய் செல்வம் மண்ணினும் வறிய தாமே.

காதகர் ஒருபால், செல்வக் கருமிகள் ஒருபால், பஞ்ச
பாதகர் ஒருபால், வாடும் பஞ்சைகள் எங்கு மம்மா !
ஓதியும் உணரார் ஓர்பால் ஓரெழுத் தறியார் ஓர்பால் ;
சாதிகள் பேசு கின்ற சாத்திரக் காரர் ஓர்பால்.

உட்புல னுணரா மாக்கள், உண்மையை யுணரா மாக்கள்,
கட்புல வருந்து மாக்கள், களிநடம் புரியு மாக்கள்,
நட்புற வென்று வந்து நாகரி கங்கள் காட்டி
மட்புல மயக்க மீந்து வாழ்வினைக் கெடுப்பா ரம்மா.

வீங்கிய செருக்கி னாலே, வென்றவ ரென்னும் பட்டம்
வாங்கிய செருக்கி னாலே, வலிபெறுந் தூம கேது
தாங்கிய கொடுங்கோ லுக்குத் தாதராய், அரக்கர் பின்னே
வேங்கைபின் நாயைப் போலே விரைகுவர் வெட்கங் கெட்டார்.

ஒருமையும் அன்புங் கொண்டே உயர்புக ழுடைந்த நாட்டில்,
இருமனப் பெண்டிர் போலே இராக்கத வஞ்சர் புக்கு
ஒருவரை யொருவர் தூற்றி உட்சினங் கொண்டு மோதத்
திருவிளை யாடல் செய்த தீமையை யென்சொல் வோமே !

தந்தர நரியைப் போலே, சமயம்பார்த் தின்னல் செய்ய,
மந்திரக் கிழவர் போலே, வாணிகர் போலே, நாட்டில்
வந்திருந் தறங்கெ டுத்து, மனதினைக் கெடுத்து நாட்டைத்
தந்திரு வரசு செய்த தானவர் கால மிஃதே.

சுத்த சமயோகியர் தொண்டு

கோசலர், வங்கர், சிந்தர், கூர்ச்சரர், சிவாஜி நாட்டார்,
மாசிலாத் தமிழர், கூடி மாதவத் தொண்டர் கூட
காசினிக் கினிதே செய்து, காலசக் கரத்தை மாற்ற
நேசமோ டுதவி தந்து நிறைகடன் புரிந்தா ரம்மா.

மின்சக்தி கொண்ட வர்க்கு விண்சக்தி காட்டி வென்றார் ;
பொன்சக்தி கொண்ட வர்க்குப் பொருட்சக்தி காட்டி வென்றார்
மன்சக்தி கொண்ட வர்க்கு, மாவலிக் கும்ப லுக்குத்
தம்சம சுத்த யோக சக்தியை விளக்கி னாரே....

பொறிகளை யடக்கி வென்ற புலவர்கள் அறிவி னாலே
பொறிபல படைத்த ரக்கர் பொறிவலி தன்னை வென்றார்.
வெறிகொளும் தூம கேது வியந்திடத் தூயர் சுத்த
நெறிதரும் அன்பர், அஞ்சா நிமிர்நடை நடந்தா ரம்மா.

அடிமையின் இழிவைக் காட்டி அரக்கர்கள் உலகிற் செய்யும்
கொடுமையை உணரக் காட்டிக் குடிகளை விழிப்பு றுத்தி,
மடமையை விலக்கி, வீர வளமையை ஊக்கித் தொண்டர்
கடமையை எழுதிப் பேசிச் செயலிலுங் காட்டி னாரே.

அச்சிலு மேடை மீதும் அளவறும் இதழ்க ளாலும்
அச்சமில் லாது தொண்டர் அறத்தினை யுணர்த்தி, நாளுந்
துச்சமாம் புன்மை போக்கித் துயர்செயும் அடிமை வாழ்வை
எச்சிலென் றொதுக்கி மாந்தர் ஏறுபோல் நடக்கச் செய்தார்.

சோலையைப் பள்ளி யாக்கிச் சுதந்தரக் கல்வி தந்து,
வேலைசெய் துண்ட ரக்கர் வேலையை விலகி வாழக்
காலையு மாலைப் போதுங் கைத்தொழி லளிக்குங் கர்ம
சாலைகள் வைத்துக் காசுங் கஞ்சியும் வார்த்தா ரன்றே.

புண்ணிய பூமி நல்கும் பூரண ஞானத் தோடு
மண்ணினிற் புலவர் கண்ட மாண்புதுக் கலையுங் கூட்டி,
உண்ணவும் உடுத்தி ருந்தே உழைக்கவும், தேச சேவை
பண்ணவு மேற்ற கல்வி பயிற்றினர் பரிவி னாலே.

வீணுறு சடங்கு மின்றி, வெளியுறு வேட மின்றி,
மாணுறு நடையி னாலும், மன்னுயிர்த் தொண்டி னாலும்,
பூணுறு விரதத் தாலும் புனிததி யானத் தாலும்,
காணுறு களையி னாலுங் கடவுளை யுணர்த்தி னாரே....

பத்தியும் பாட்டும் தொண்டர் பணிகளும், இனிய சொல்லும்,
ஒத்தநல் உளமும், ஆன்ம ஒருமையும், அன்பும், சித்த
சுத்தமும், செருக்கி லாத தெய்விக நடையுங் கண்டு,
சத்துரு பக்கத் தாருஞ் சகோதரர் ஆகி வந்தார்.

நன்றியும் தெளிவும் அன்பும், நடுநிலை யான பேச்சும்,
வன்றவக் கதிருங் கொண்ட வாய்மையின் வடிவ மானார்
ஒன்றிது நலமென் றோதின், உணர்ந்ததை உள்ளத் துள்ளே
கொன்றுணும் கூற்றன் னாருங் கொடுமையை விடுத்தா ரம்மா.

பொய்யினைப்பொய்யென்றார்கள்பொழுதினைக்கொலைசெய்யாது
மெய்யருள் வாக்கைக் கற்றார்; மேதினி தன்னை யாளுந்
தெய்வமும் உண்டென் றார்கள்; தேகத்தைக் கடந்த தேகி
துய்யது; சுத்த சக்திச் சுகமொன்றே சுகமாம் என்றார்.

ஆத்திரப் பொறாமைச் சண்டை அமைதியைக் கெடுப்பதென்றார்
நாத்திகச் செருக்கி னாலே நரகமே வாழ்க்கை யென்றார் ;
சாத்திர ஒழுக்க மெல்லாந் தருவன சுகமே என்றார் ;
தீத்தணல் போன்ற தீரர் திருந்திய திருவினாரே....

தூலதே கத்தின் மோகத் தோலழ கசைத்த மின்னார்
போலிச்சா யங்கள் பூசிப் புருடரைக் கெடுத்த மாயா
சாலமு மாறி இல்லத் தருமத்திற் பற்றுக் கொண்டார் ;
காலமு மாறி யந்தக் கரணமு மாற நன்றே.

மட்டிலா அடிமை வாழ்வால் வலிமையை யிழந்து, நான்கு
சட்டையுள் எலும்புக் கூடாய்த் தம்முயிர் தாங்கும் மாந்தர்
திட்டமாய்ச் சுத்த யோக தியானத்தின் பயன தாகக்
கட்டுடன் கனமு மெய்திக் காளைபோல் வீர ரானார்.

செப்பறுங் கவலை பற்றிச் சென்மத்தைச் சலித்துக் கொண்டு,
தப்பிட வழியைப் பார்க்குந் தானவ தாச ரெல்லாம்,
அப்பரும் வள்ளலாரும் அருட்பெரும் புலவர் தாமும்
செப்பிய நெறிய றிந்து தீரராய்த் தலைநி மிர்ந்தார்.

அன்னிய வணிகக் கூட்டம் அடிபகற் கொள்ளை கண்டு,
முன்னலை கடல்க லக்கி முதுபொருள் செய்த நாட்டார்,
பன்னருங் கவிதை பெற்ற பாரத வணிகர், சுத்தன்
சொன்னதைச் செய்து நாட்டுத் தொழில்களை ஊக்கி னாரே.

கூட்டுநெஞ் சாளர், நெஞ்சக் கவலையாற் குழிந்த கண்ணார்,
வாட்டிய பசியால் வாழ்வை வஞ்சருக் கடிமை செய்தார்,
பூட்டிய மனந்தி றந்து புந்தியில் உறுதி கொண்டு,
நாட்டினுக் கேதம் வாழ்வை நல்கிட நலங்கண் டாரே !

வெற்றுரை விடுத்தார்; நாட்டு விடுதலை நாட்டிக் காண
ஒற்றுமை யாக நின்றார்; உயிரையுந் துரும்பென் றெண்ணிப்
பற்றலர் குற்றங் குற்றம் என்றவர் பகர்ந்து, தம்மை
முற்றிலுஞ் சுத்த யோக முயற்சிக்கே யளித்து வந்தார்.

வெறுக்கிறோம் அடிமை செய்யும் விநோதநா கரிக வாழ்வைப்
பொறுக்கிலோம்; அயலார்வைத்தபொறியிலேசிக்கிநொந்தோம்
அறுக்கிறோம் பந்தம் என்றே ஆண்மைகொண் டெழுந்திருந்தார்
மறுக்கிலாச் சுத்த யோக சக்தியை மதித்த வீரர்.

விருந்துடன் அரக்கர் செய்த வினைவிளை யாட்டிற் சிக்கி
மருந்திற்கும் அன்பி லாத மாயக்கள் ளுண்ட மாந்தர்,
அருந்தவ சுத்த சக்தி யடியரைக் கண்ட போதே,
திருந்தினர் கண்வி ழித்துத் தேசமெந் தெய்வ மென்றார்.

பிறர்குறை பிதற்று வாருந் தங்குறை பெரிதுங் கண்டு,
நிறைவுறத் தியான யோக நிம்மதி பெற முயன்றார் ;
குறியுடன் நாவுந் தொந்திக் குரம்பையும் வளர்ப்ப தேதம்
அறமென நினைத்த பேரும் ஆத்தும வுணர்ச்சி பெற்றார்.

பித்தராய், அரக்கர் ஆளும் பிள்ளையாய் இருந்த பேரும்,
சித்திமான் முதலோர் செய்த சேவையால் உணர்ச்சி பெற்றுச்
"சுத்தனே போற்றி ! சங்க சுத்தரே போற்றி ! யோக
சித்தியே போற்றி" யென்று தீவிரத் தொண்டு செய்தார்.

தருமத்தை யிழந்து, தீய தானவர்க் கடிமை யானோர்,
அருமையாம் ஏடி ழந்தே அலமருங் கவிஞன் மீண்டும்
ஒரு மலர் வெளியிட் டிந்த உலகதைப் புகழக் கண்டு
பெருமகிழ் வெய்த தேபோல் பிறந்தநாட் டுரிமை தேர்ந்தார்.

நச்செனும் அடிமை மாய வலையினைப் பிளக்க வேண்டி,
அச்சமற் றெழுந்த வீரர், அடக்கமாய் உபச ரித்தே
மெச்சினர் ; சுத்த சங்க விரதத்தைத் தாமுங் கொண்டார் ;
உச்சமாங் கதிர்கள் ஊற்றும் ஒளியினைத் தடுப்பார் யாரே.

தெய்வநற் கனிபி ழிந்து, தீந்தமி ழமுது கூட்டி,
மொய்மலர்த் தேனைச் சேர்த்து முருகிளம் உருவதாக்கி,
செய்யயா ழிசையுங் கூட்டித் திருவுறப் பொலியு மின்னார்
உய்வருள் சக்தி யென்றே உணர்ந்தனர் புதுமை வீரர்.

பேதையள், அபலை, காமப் பிணிதந்து பிணியைத் தீர்க்கும்
போதை; ஓர் போக வத்து, புருடரின் அடிமை, யென்றும்
மாதர்கள் மாயை யென்றும் வழங்கிய பிழைக ளின்றி
ஆதியாம் சுத்த சக்தி யன்னையென் றறிந்தா ரம்மா.

அன்னிய மாயத் தாலே, நாட்டினை அசட்டை செய்து,
தன்னலப் போகந் தேடித் தானவர் அடிமை யானார்,
இன்னிய சுத்த யோகம் இசைத்திடும் பாடல் கேட்டு,
முன்னற நாட்டைக் காக்கு முயற்சியின் முன்னின் றாரே !

சிலர்புகழ் ஓங்க வேண்டிச் செல்வமும் செருக்குஞ் சேரப்
பலர்நலம் அழிக்குங் காலம் பயனிலா தொழிய, மாந்தர்
தலைதலைப் பொறுப்பு ணர்ந்து, தருமத்தை நடையிற் காக்க
நிலமெலாம் உரிமை பெற்று நிலவிடத் தொண்டு செய்தார்.

இவ்வகை யோக சித்தி இயம்பிய படியே நாளும்,
செவ்வியர் செய்த சேவை செகமெலாம் புதும லர்ச்சி
ஒவ்விய படிகி ளர்த்தி ஓசையில் லாது வீச,
வெவ்விய தானவர்கள் வியப்புடன் அஞ்சி னாரே.

13. தூமகேது திகைத்த படலம்

வந்தது மோச மென்று மயக்கமுற் றரக்க னாரும்
சிந்தனை நடுந டுங்கி, சினப்புய லெழுந்து மீறித்
தந்திர ஒற்றர் தாதர் சரியெனத் தலையை ஆட்டும்
மந்திரி மார்கள் கூட மன்னவை நடத்தி னாரே.

கோபுரந் தாங்கும் பொம்மைக் கொலுவென வீற்றி ருக்கும்
பாபமே உருவன் னார்கள் பாரத தேசத் தாரின்
சாபமே யனைய தாதர், சத்தியத் திருவி லார்கள்
"நீபரம் பொருளே" யென்று நிருதனைப் பாடி னாரே.

அடிமைகள் சுற்றி நின்றே அரகர அரக்க வென்னத்
துடிதரு சினத்தீ பொங்குந் தூமகே துவு மெழுந்தே,
கொடியசெங் கண்ணி னாலே கொற்றவை முழுது நோக்கி,
இடிகுர லெடுத்தான் கார்செய் இயற்கையும் திகைக்க வம்மா!

பொழிதரு மேகஞ் சூழப் புயலதை மின்னல் வாளாற்
கிழிதறப் பூகம் பங்கள் கிளர்ந்துல கத்தை யெல்லாம்
அழிதறக் குமுறி அட்ட காசங்கள் செய்வதே போல்
பழிதரும் தூம கேது படபடத் துரைக்கின் றானே :—

தூமகேது

மாவலி வாழிய ! மன்னர் மன்னவன்
ஏவலைப் புரிந்திடும் இறைவன் யானிங்கே
காவலா யிருந்திரு கண்ணி மையென
ஓவற உழைத்தனன் உறக்க மின்றியே.

ஊழ்வலி பெரிதென ஊளை யிட்டிடும்
பாழ்படு சாதிக்குப் பகுத்த றிவினை
வாழ்வுறத் தூண்டினேன் ; மதமுந் தெய்வமும்
தாழ்வுறச் செய்தனன் சமதை பேசியே.

மறையென மறையவர் மறைத்து மாயஞ்செய்
குறைகளைப் பழம்பெருங் குப்பைக் கொள்கையை
முறையுற மாற்றிட முயற்சி செய்தனன்
சிறையுறக் கடவுளைச் செப்பு மூடரே.

ஓரின மெனில் இவர் ஒன்றி நம்முடன்
போரிடு வாரெனப் பொருந்தும் ஐக்கிய
வேரினிற் கோடரி வைத்து வெட்டியே
பேரினப் பகைவராய்ப் பிரித்த டக்கினேன்.

வாள்வலி பெருத்தவர் வலிமை நோக்கியே,
கோள்வலி பெருத்தநங் கொள்கை மேவியே
நாள்தரும் வேலையை நச்சிப் போர்செயுந்
தோள்வலி, கலப்பையைச் சுமக்கச் செய்தனன்.

அற்புதப் பொய்க்கதை அளக்கும் வீணர்கள்
பற்பல புதுக்கலை பயின்று நம்வழி
நிற்பதே நலமென நினைக்கச் செய்தனன்
தற்பெரு மைகளைத் தகர்த்திந் நாட்டிலே.

ஊகத்தை வளர்த்தனன்; ஊணர் போற்றிடும்
நாகரி கத்தினை நன்கு நாட்டினேன்.
மோகியின் கொள்கையில் மோகங் கொண்டிட
வேகமாய்ப் பெண்களின் விருப்பை மாற்றினேன்.

சதிபதி கற்பெனச் சாற்று நாட்டிலே
துதிபெறுந் தானவச் சுதந்தரச் சுக
மதியினை ஊக்கினன் மதுவை யூக்கினேன்.
விதிவிதியெனத்துயர் விளைந்த நாட்டிலே.

பண்டறம் பரமெனப் பகரு நாட்டிலே,
கண்டது நிசமெனக் கருதச் செய்தனன்.
உண்டொரு தெய்வமென் றுளறு நாட்டிலே
திண்டிறல் மாவலி தெய்வ மென்றனன்.

யானைபோல் வீரர்கள் இருந்த நாட்டினைப்
பூனைபோல் அடங்கிடப் புரிந்து தானவ
சேனையிற் சேர்த்தனன் சிறந்த வீரரை ;
ஏனைய நன்மைகள் எண்ண லாகுமோ ?

தமதென நாட்டினைத் தருக்கி டாமலே
நமதெனக் கண்டவர் நயந்து தாழவே,
இம—முனை வரையிலும் எமது சேனையால்
அமைதியை நாட்டினேன் அடிமை நாட்டிலே.

ஒன்றிய நாட்டினை உருக்கு லைத்துநாம்
வென்றனம் வாளினால் வெருவ ஆளுவோம்.
என்றுமிங் கிறையவர் என்றி ருந்தனம்
இன்றுநம் ஆட்சியை எதிர்த்த தேனிவர் ?

பல்வகைச் சமயத்திற் பட்ட ழிந்தவர்,
கொல்படை காட்டிநங் கொடியை ஆட்டினாற்
சொல்லினை கேட்பவர், சுதந்தரம் எனத்
தொல்லைசெய் யாரெனத் தூங்கி நின்றனன்.

படிந்தனர் அடிமைகள் என்னப் பாவித்தேன் ;
இடிந்ததென் எண்ணமும் ; இன்று மீண்டிவர்
"விடிந்தது விழித்தனம் விடுதலை யெனக்"
கடிந்தனர் நம்பெறுங் கட்டுங் காவலும்.

பாரத மாக்கிய பார்த்த சாரதி
தீரரை யூக்கிடத் திரும்புங் கூத்திதோ !
சீரிய துருவனே தேசம் பெற்றிடக்
கோரிய தவசித்தி கொண்டுற் றான்கொலோ ?

அரசரின் கூட்டத்தை அழிக்க வேண்டியே
பரசுறு ராமனே வந்த பண்பிதோ ?
இரணியன் உடலினை இருதுண் டாக்கிய
நரசிங்க தேவன்செய் நாடகம் மிதோ ?

தன்மமும் வீரமும் தவத்தின் ஓங்கிய
கன்மமும் கடவுளுங் கருணை யாடலும்
சன்மசா பல்யமுஞ் சாற்றும் பேதையர்
என்மனம் ஏங்கிடற் கெழுந்த செய்கையே.

நன்றியை மறந்தனர்; நமது நன்மையைக்
கொன்றிடத் துணிந்தனர் கொடுசு தந்தரம்
என்றிடத் துணிந்தனர்; எனது சோற்றையே
தின் றிரண் டகசெயுந் திருவி லார்களே.

சுத்தனாஞ் சங்கமாம் சுத்த சக்தியாம்,
இத்தினம் உலகெங்கும் எழுந்து வீறிடும்,
அத்தகைக் கும்பலை அடக்க மாவலி
ஒத்தொரு வழியையும் உரைத்து விட்டனன்.

புயலுறு நெருப்பெனப் பொங்கித் தூமனும்
மயிலணை வகித்திவை மன்றிற் கூறியே
செயலெது நலமெனச் செப்பு வீரென்றான்
அயலுறும் அடிமைகள் அணிந்து கூறினார்.

அடிமைத் தாதன்

கடலும் விண்ணுங் கடந்து கருணையால்
உடலும் உள்ளமும் ஓய்வற் றுழைத்துமே
அடல ரியவிந் நாட்டை யடக்கியே
நடல ரியவும் வாட்கொடி நாட்டினீர்.

அத்த தியுமை ஆத்திரங் கொண்டெதிர்
சித்தி யிந்திரை மந்திரி யாகிய
சித்தி மான்செயும் செய்கைய லால்இவை
சுத்தனார் செயுந் தொண்டுகள் அல்லவே.

கண்ணை மூடியக் காட்டி லொருபுறம்
எண்ணத் தின்சுழல் இன்றித் தவஞ்செயும்
மண்ணி ழந்தவம் மன்னன் இக் காரியம்
பண்ணு வானெனல் பைத்திய மாகுமே.

ஆண்டி சுத்தன் அரும்பெயர் தன்னையே
பூண்ட சிற்சிலர் புண்ணிய போதமே
யாண்டும் செய்தனர் என்ப தறிகுவோம்—
வேண்டும் சித்தியை வேருடன் வெட்டவே.

சாது சங்கம் சன்மார்க்க மிவற்றினால்,
யாதுந் தீதில்லை என்ப துறுதியே.
வாது செய்திடும் வன்மனச் சித்திமான்
கோது செய்தனன் கோக்களைத் தூண்டியே.

தூமகேது

காரணம் அறிகிலேன் கதிய றிகிலேன்
ஆரண நாட்டினர் அதிர்ந்தெ ழுந்தனர்.
பூரண சுதந்தரம் புகலு கின்றனர்,
பாரணங் கொற்றுமை பகரு கின்றனர்.

தானவர் திருந்திடத் தக்க சூழ்ச்சிகள்
மானவர் வகுப்பராம் ; மனதை வென்றவர்
ஈனமில் லாதினி எங்கும் ஆருயிர்
மேனல முற்றிட வேலை செய்வராம்....

சொப்படி வித்தையிற் சொரிந்த பொன்னைப் போல்,
எப்படி யெழுந்தன இந்தக் கொள்கைகள் ?
இப்படி யாரெங்கும் இயம்பு கின்றனர் ?
செப்புக ஒற்றரே நன்கு சிந்தித்தே....

ஒற்றர்

கலிநகர் காக்கும் புலியே, தூம
கேதுவே வணக்கம், கீர்த்தியிற் சிறந்த
மாவலிக் கேற்ற மாணவ வணக்கம்.
உன்கடுங் காவல் ஓங்கிய நாட்டில்
இத்தனைக் காலமாய் இனந்தெரி யாமல்,
பொதுசனத் துடனே பொதுசன மாக,
உழைப்பா ருடனே உழைப்பா ராகப்
பண்டித ருடனே பண்டித ராகவே
பாமர ருடனே பாமர ராகவே
திறமை கொண்டவர் தினமுங் கலந்து
பொதுக்கடன் செய்வது போலே காட்டி,
மக்களை எழுப்பி மனதைத் திறந்து,
நிமிர்ந்து நடக்க நிகழ்த்தினார் எங்குமே.
யாரவர் என்பதை இன்னுங் காணிலோம்.
சித்திமா னில்லை ; சுத்த யோகத்
துறவிக ளில்லை ; சுதந்தர நாதம்
எப்படிப் பரவிய தென்பதை யறியோம்...
காற்றும் காலைக் கதிரும் போலே
புதிய சக்தி பூத்துப் பரவி
உலகெலாம் உணர உள்விழித் ததுவே....
தானவர் செயலெலாம் தடைப்படு கின்றன.
"எல்லா நாடும் எல்லா வீடும்,
எல்லா வனமும், எல்லா வாக்கும்
ஆன்ம ஒருமை, ஆன்ம சுதந்தரம்
உலகக் கோயில், கலகமில் லாத
சமயோக சாதனம், சாந்த நிலையம்,
சுதந்தர சக்தி சுத்த நிலையம்"
என்னும் பல்லவி இசைத்திடக் கேட்டோம்.
இந்த நாட்டை இனிது புரந்தே
துறந்த துறவி சுத்தனா வானே...
உலக வாழ்வை உதறிய ஞானி
இமாலய மீதே யிருக்கிறான் உறுதி.
அவனிடம் பயிலும் அருந்தவ யோகிகள்,
உலக மெங்கும் உலாவுகின் றாரே.

ஆயினும் அவரிடம் அரசியற் பேச்சிலை.
ஞானமும் யோகமும் நவிலுகின் றார்கள்.
ஐந்து மாதமாய் ஐயநாங் கண்டது
மாவலி மன்னன் மகளாம் சக்தி
சுத்த சமத்துவ சுதந்தர வாழ்வை
வாழ்ந்து காட்டி வழுத்துவ தொன்றே.
மேட்டிமை யான மேடைப் பேச்சிலை.
இரகசிய சங்கமும் இருப்பதை யறியோம்.
உள்ளமும் உள்ளமும் உறுவது போலே,
மனமும் மனமும் வைத்தது போலே,
யாங்கும் அவள்கருத் தேகிடக் கண்டோம்.
கருத்திற் கிசைந்த காரிய மெங்கும்
இயல்பாய்த் தொண்டர் இயற்றிடக் கண்டோம்.
குற்றங் காணாக் குணவான் கூட்டமே
கிராமந் தோறும் கிளர்ந்திடக் கண்டோம்.
அராசகப் பேச்சே அறிந்தோ மில்லை.
மூச்சைப் போலே மூலை முடுக்கெலாம்
பேச்சே யின்றிப் பெரியகா ரியங்கள்
நடப்பதை யறிந்தோம், நடத்துந் தலைவரை
யாரெங் கெவரெனப் பேரூ ரறியோம்.
சாம்பற் பூத்த தணலென மாந்தர்
நெஞ்சுக் குள்ளே நெருப்பு வளர்ப்பதை
உணர்கிறோம் ; ஆயினும் உட்புகுந் தறியோம்.
பம்பரம் ஆடும் பரபரப் பறிந்தோம் ;
சாட்டை கட்டிய சக்தியைக் காணோம்...
மாவலி மகளின் மனதறி யோமே !

தூமகேது

மாவலி பெற்ற மகளையான் அறிவேன்,
அவளைத் தந்தை அடக்கிட வேண்டினான்.
சக்தி யிங்கே சுத்தயோ கியிடம்
ஏதோ கற்றாள். இவ்வுல கெல்லாம்
ஆன்ம வொருமையில் அன்புடன் வாழவே
பேசுவ தாகப் பெரிதும் அறிந்தேன்.
ஆயினும் நாமும் அறியா வண்ணம்
தொண்டரைத் தூண்டிச் சுதந்தர முயற்சி
செய்கின் றாளோ? செய்யவும் வல்லாள்,
ஆம், ஆம் அவளே, அவளே காரணம்...
சுந்தரி மகளிவள். சுதந்தரப் பிச்சி,
புண்ணிய பூமியின் கண்ணியத் தோழி,
ஆதலால் இவளை அடக்கிட வேண்டும்...
தானவக் கொடியைத் தாக்கிப் பேசினால்,
புண்ணிய பூமியைப் புகழ்ந்து பேசினால்,
அரக்கர் தீயரென் றுரக்கப் பேசினால்,
ஊன்மது போகம் உண்பதைக் கெடுத்தால்,
தெய்வம் பெரிதெனத் திருவாய் மலர்ந்தால்,
நமது கலிநகர் நலியப் பேசினால்,
தூம கேது துட்டனென் றாலோ,
ஒற்றர் அவளைப் பற்றிச் சென்று
தானவ வீரர் தம்மிடந் தந்து,
கட்டிக் கொணர்மின் கடுஞ்சிறை யிடவே !
மகளை ஒறுக்க மாவலி யாணை
வந்ததன் பிறகே வகுத்தேன் இம்முறை.
சக்தியைத் தவிர சனங்களில் யாரும்
தானவர் ஆட்சியைத் தாக்கிடின் உடனே

வாய்ப்பூட் டிடுமின் ; வன்சிறை யடைமின்.
கையை ஓங்கினால் கையை வெட்டுமின்.
துப்பாக்கி காட்டினால் சுட்டுத் தள்ளுமின்.
நமது வாணிகம், நமது கொள்கை,
நமதுநா கரிகம், நமது நியதி
பிசகெனப் பேசும் வசவினைத் தாங்கோம்.
வாட்கொடிக் கெதிர்செயும் வஞ்சரை உடனே
ஒழிப்பதே கடனாம்.... ஒற்றர் எழுமினோ !
இரத்தத் தாலே இரத்தவாட் கொடியைக்
காப்போம் உலகக் காவலர் யாமே !
மானிடப் பூச்சிகள் தானவர்க் கிணையோ ?
வாழ்க மாவலி வாழ்க விஞ்ஞானம் !
என்று தூமன் எழுந்து நின்றே
மன்றுடன் ஒருவாய் மதுவைக் குடித்துப்
பாண்டு முழங்கப் பரத்தையர் ஆட
அரக்கர் வாளுடன் உறக்கப் பாடி
மாவலி — கேது வாழிய வென்ன,
மோகிமோ கத்தால் முகம்வெறி காட்ட
வேகமாய்ச் சென்றான் போகமா ளிகையே.

14. மோகி யிறுதிப் படலம்

புயலைப் போலப் பொழிந்து கொடுமொழி
செயலைத் தூண்டித் திரும்பிய தூமனும்,
மயல்கொள் மோகி மருங்கினிற்கள் ளுண்டதுந்
துயிலிற் சொக்கிச் சுயேச்சை யிழந்தனன்.

சஞ்ச லத்திற் சலிப்பறு மோகியும்
நஞ்ச முகை நகையுடன் காட்டியே,
கெஞ்சு வாளெனக் கேள்வன் கரத்தினைக்
கொஞ்சிக் காம வெறிகொடுத் தோதுவாள்...

மோகி: நல்ல கேது, நயமுள்ள கேதுவே,
செல்லக் கேதுவென் சிந்தனை யின்புற
வல்ல கேதுவென் மன்மதக் கேதுவென்
சொல்லைக் கேட்டுச் சுகம்பெறும் கேதுவே...

தூம: அன்பு மோகினி ஆசைப் பசுங்கிளி,
என்பு ருகி இளகிடக் காதல்கொள்
இன்ப மோகினி இட்டது சட்டமே—
நம்பு மோகி நவில்க நயமொழி

மோகி: புவியில் ஊணர் புகழினிச் சாய்ந்திடுங்
கவலை யுற்றனை ; காரணங் காணிலை ;
அவலை விட்டுமி அள்ளிப் புசித்தனை
திவலை யென்சொலைச் செய்து பயனுறாய்.

தூம: தனையொவ் வாத்திருத் தானவ சோதரீ,
உனைத் தவிர உயிரெனக் கில்லையே.
எனை யெதிர்க்கும் இடர்களை எற்றிட
மனம் வகித்தனை வந்தனம், வந்தனம்....

சொல்லு சொல்லெனக் கொஞ்சிடத் தூமனும்
"கொல்லு கொல்லுடன் கோபக் கலியனை
அல்ல லெல்லாம் அவன்செயும் சூழ்ச்சியே
தொல்லை யில்லை தொலை, தொலை! " என்றனள்.

மோகி சொன்னதும் மோக வெறியனும்
வேக மாக விரைந்து மறைந்ததுந்
தாக மான தனிநிசி தன்னிலோர்
சோக நாடகந் துள்ளி யெழுந்ததால்...

உள்ளத் தாழிட் டுறங்கிட மோகினி
கள்ளுண் காமக் கனல்வெறிக் கண்களை,
மெள்ள மூடினள் ; வேற்றுருக் கொண்டொரு
கள்ளன் வந்தவள் கட்டிலைத் தொட்டனன்.

ஆசை நாயக வாவென் றணைந்திட
வேசை மோகி விழியைத் திறந்துகை
கூசி டாது கொடுத்தனள் அவ்வையின்
வீசு வாள் முலை மார்பினை விண்டதால்...

ஐயை யோவென் றலறிய மோகியின்
நாவையும் அறுத்து "நலங்கெடு வேசையே
கட்டிய கணவனைக் கைவிட் டின்னொரு
மட்டியைக் கூடிய பட்டியே பதரே !
போரை வளர்க்கும் பொறாமைப் பூதமே,
நல்லவர்க் கெல்லாம் அல்ல லிழைக்கும்
அகந்தைப் பேயே, ஆணவ நெருப்பே !
கட்டுக் கடங்காக் காமராட் சஸியே,
அடுத்தவர் தம்மைக் கெடுத்திடும் பீடையே,
உள்ளதைச் சொன்னால் உடம்பெரி கொண்டு
கொள்ளிப் பேய்போற் கொலையைத் தூண்டும்,
கொடுமனப் புலியே கெடுமனப் பாம்பே,
நேர்மை கெட்ட நீலிநீ யிருக்கும்
வீடும் வேசை விடுதியா வதுவே,
பள்ளியும் வெறிதருங் கள்ளுக் கடையே,
புசிக்கு மிடமும் புலாற்கடை நாற்றமே,
வசிக்கு மிடமெலாம் வஞ்சச் சூழ்ச்சியே,
கலியைக் கெடுத்த கசட்டு மதியே
தூமனைக் கூடிய காமப்பி சாசே,
அழிவைத் தூண்டும் அழகுப் பிணமே,
எனக்கு நிகரிலை என்றுவாய் நீளும்,
தனச் செருக்கியே தானவர் பதரே,
மோகஞ் செய்த மோகினிப் பேயே,
உனக்குத் தண்டனை உயிர்க்கொலை... சாசா,
சாகுமுன் என்னைச் சற்றே பாரடீ....
பொய்ச்சாக் கடையிற் புரளும் புழுவே
புண்ணிய பூமியிற் புகுந்த பாபமே !"
மோகி: கலியா ஐயோ கொலைபா தகனே...
ஊணரே வாரீர்... உடனே ஐயோ...
கொல்லுமின் கொல்லுமின் கொல்லுமின் என்று
மோகி சாய்ந்து முய்ந்தனள் அம்மா !.....
** ** ** ** **
இரத்தச் சிரிப்புடன் இகல்பெறு கலியும்
மின்னென மறைந்தான்.... மிடுக்குடன் கேது
கடுஞ்சிறை தனிலே கலியைக் காணேன்...
அந்தோ வென்றே அலறித் திரும்பி
இரத்தப் பெருக்கில் இறந்து கிடந்த
மோகியைக் கண்டு சோகமே லிட்டு,
யார்செய் கொலையிது? பேரறி யேனே . . .
அந்தோ கவலை ! அந்தோ துயரம் !
அந்தோ மோகினி ! அழகுத் திருவே...

என்று சோர்ந்துபின் எழுந்து நன்றே,
இனிநான் சக்தியை இனிதே கூடி
ஊணர் மரபை உயர்த்துவேன் எனவே
பெருமை கூறிப் பிதற்றிடும் போதே
ஐயோ கலகம்... ஐயோ செத்தோம்..
என்றூ ரெங்கும் எழுந்தது குரலே !
தூம கேது துடிதுடித் தோடினான்...
பிடிபிடி யென்றே பேரிடி முழக்குடன்
அவனைப் பிடித்ததோர் ஆண்மைக் கையே...
“தானவ சேனை தகர்மின் பகைவரை....
போரோ போரெ” னப் புலிபோல் உருமிய
தூமனை வீரர் சூழ்ந்துபின் கட்டிக்
கலியை அடைத்த கடுஞ்சிறை தனிலே
காவல் வைத்துக் கைதட் டினரே ! . . .
தானவர் ஆயிரர் தங்களால் இயன்ற
திசையெலாஞ் சுட்டுத் தசைமலை குவித்தும்
பயனிலை ; தாமே பயிற்றிய படையெலாம்,
தூம கேது தொகுத்த தாதரும்,
எதிர்த்து நின்றனர் ; என்னே வியப்பு. . .
கொல்கொல் லென்று கூவினார் அரக்கர்.
வெல்வெல் லென்றே வீறிய தூரே !
அந்தச் சமயம் அரண்மனைக் குள்ளே
காவலை வீழ்த்திக் கலியன் புகுந்து,
சபையைக் கூட்டிச் சாற்றிய தென்னே !

15. கலி பணிந்த படலம்

போனதுயர் போனதினிப் புதுயுகத்தைக் கண்டு விட்டோம்.
ஈனவிருள் ஒழிந்ததடா இனியெம்மை இடர்ப்ப டுத்துந்
தானவருக் கிடமில்லை, தருமமெனும் கதிர் வீசி
ஞானரவி யெழுந்த தென்றே ஞாலமக்கள் ஓலமிட்டார்.

ஆவியினும் அரியநலம் ஆகியதன் னுரிமையினைப்
பாவமெனும் படுசிறையிற் பந்தனைசெய் கலியவனும்
சீவனிலே சுத்தவொளி புகுந்திடவே திருந்தி வந்தான் ;
ஏவரெமை யினியடிமை யென்றடக்க வல்லவரே.

சிக்கியநற் பைங்கிளியைச் சிறகரிந்து கூண்டடைத்தே
அக்கவெனப் பயிற்றிவைக்கும் ஆசையுள்ள மாந்தரைப்போல்,
மிக்கவுயர் கலையோங்கி, மேன்மைபெற்ற நாட்டினிலே
புக்கடிமைக் கல்வியெமைப் பொய்யடிமை யாக்கியதே.

மோகிவலைப் பட்டிருந்த மூடமனக் கலிகொணர,
தேகபல மிகுமரக்கர், தீமைவடி வானவர்கள்,
சோகமுறச் சுதந்தரத்தைச் சொல்லிறந்தே பரிதவிக்கும்
மூகையெனச் செய்ததெல்லாம் மூய்ந்ததிடர் ஓய்ந்ததுவே !

வாயிருந்தும் பேசாது, வலிவிருந்தும் கைகட்டித்
தாயிருந்தும் பசிதவிக்கும் தனயரெனத் தாழ்ந்துவிட்டோம்
பேயிருந்த சுடுகாடாய்ப் பிறர்கொள்ளை யடித்திடவே
தேயமக்கள் பார்த்திருந்த தீநாட்கள் ஒழிந்தனவே....

சத்தியசுத் தர்தருமந் தாங்கியபுண் ணியபூமி,
சித்தர்களுஞ் சிங்கம்போல் செருவெல்லும் வீரர்களும்,

ஒத்துவளர் உயர்பூமி, ஊணர்களின் ஆணவப்பேய்
கத்துதலுக் கஞ்சுகின்ற காலமலை யேறியதே.
சிங்கமிருந் தாண்டுவந்த சித்திவளர் நாட்டினிலே,
பங்கயத்தி லேயமர்ந்த பாம்பெனவே, தானவத்தின்
வெங்கொடுங்கோல் வீற்றிருக்க விடுவோமோ...விடுதலையோ?
எங்கள்வள நாடெமதே யாமதற்கு மன்னரென்போம்.

ஆத்துமஞா னமும்அன்பும், அருட்பணியும், அருளரசுந்
தோத்திரமும், சுதந்தரமுந் துலங்குகின்ற வளநாட்டில்,
ஆத்திரமும் அசுரர்களின் ஆணவமும், கொடுங்கோலும்,
நாத்திகமும், வந்தொழிந்தே நாடுநம தானதுவே.

சேர்ந்தவரைப் பிரித்திடுவார்; தேசவுணர் வழித்திடுவார் ;
நேர்ந்தவரை அடிமைசெய்வார், நேர்மையில்லா ஒற்றர்களால்
தேர்ந்த நலத் தொண்டர்களைத் தும்மிடினுஞ் சிறையிடுவார்;
சோர்ந்தவரைத் தொக்குகின்ற தூமாசுரர் வீழ்ந்தனரே.

சாற்றையெல்லாம் பிழிந்துண்டு சக்கையினைத் தந்து தம்மைப்
போற்றிமிகத் தற்புகழும் புன்மதியர், உள்ளமில்லார்,
ஆற்றலெலாந் தீமையலால், அணுவேனு நன்மையிலார்—
காற்றினிலே தூசியெனக் காலவெள்ளத் தேமறைந்தார்.

தாமுலகைப் பிடித்தாட்டும் தறுகண்மை மிகவுடையார்,
நாமுவக்கும் வழியடைப்பர், நரிபுலிஓ நாய்மனத்தார்,
பாமரரை மயக்கிடுவார், பண்டிதரை அடக்கிடுவார்,
பூமியிலே இவர்கொடுமை பூண்டோடே பொன்றியதே

வீடுநலம் பெருகிடவே, வீதிநலம் பெருகிடவே,
நாடுநலம் பெருகிடவே ஞாலநலம் பெருகிடவே
தேடுநலம் கைக்குவந்து சேர்ந்ததெனத் தீரர்களா
பாடுகமே சுத்தசக்தி ஓம்எனவே பாடுகமே !

பழம்பெரும் பான்மை கண்டு புதுப்பெரும் பண்பு ணர்ந்து,
செழுந்திருப் புனித னன்பர் செயசெய சுத்த வென்றே,
எழுந்தனர் இருபா லாரும் கதிர்க்கொடி ஏந்தி நாட்டில்
அழுந்திருள் அகல, வெற்றி யருளொலி துலங்க மாதோ !

மலருடன் மணமும் போல, வாழ்வுடன் யோகம் போல,
நலமுறக் கற்ற நாட்டார் நயவஞ்சப் பிரிவி னைகள்
இலையெனச் செய்தார், அச்சம் இரவுடன் அடிமை நோயும்
வலைவிரி வஞ்சச் சூதும் வாய்ப்பற மறையச் செய்தார்.
கோழைக ளில்லை நாட்டிற் கோட்சொலும் புல்ல ரில்லை ;
ஏழைக ளில்லை; கல்வி தொழிலறி யாதா ரில்லை ;
பீழைக ளில்லை தெய்வப் பெருமையை விளக்கி வாழும்
தோழர்க ளாக மாந்தர் சுதந்தர முழக்கஞ் செய்தார்.

ஒருபெருங் கடவுள் ஆடும், ஒருபுவி யால யத்தில்
ஒருகுல ஆன்ம நேயர் ஒருமன மொன்றி வாழ்வோம்,
ஒருபொது மொழியுந் தந்தந் தாய்மொழி யுடனே கற்போம்,
ஒருதிரு வருளின் வாழ்வோம் என்றனர் உண்மை நல்லார்.

சத்தியக் கடவுளுக்குச் சாதியு மதமு மில்லை ;
எத்தகை யாரும் உள்ளே எண்ணிடின் அடைவா ரென்னுந்
தத்துவம் பரவித் தூய சமத்துவம் பரவி, மாந்தர்
ஒத்துழைத் துரிமை காக்கும் உறுதியைப் பூண்டெ ழுந்தார்.

மதச்செருக் கின்றித் தேச மமதையு மின்றிச் செல்வ
முதற்செருக் கின்றித் தந்தம் மொழிச்செருக் கின்றி, எல்லாம்
பொதுச்சிறப் புணர்ச்சி கொண்டு புவிநலம் புரிந்து வீர
சுதந்தர ராக வாழத் துணிந்தநல் லுறுதி கொண்டார்.

சுத்தமே கடவுள், ஆத்ம சுத்தமே சுகசன் மார்க்கம்,
சுத்தமே சக்தி, சுத்த சங்கமே தொகுத்த மாந்தர்,
சுத்தமே கொள்கை, சுத்த சேவையே சுருதி— வாழ்க்கை;
சுத்த ஓம் சக்தி யென்னும் மந்திரஞ் சொல்லு வோமே...

எந்தமா மதமு மின்றி இயற்கையோ டிணைந்து வாழ்வோம்,
சொந்தமா சக்தியோக சுதந்தரப்பொதுவில் வாழ்வோம்,
பந்தமொன் றில்லோம் ; அன்பும் பணியுடன் அறிவும் போற்றி
இந்தமா நிலத்தில் எல்லாம் இன்புற வாழுவோமே.

தனிச்செருக் கின்றி, ஏறுந் தனச்செருக் கின்றி, வேறு
மனச்செருக் கின்றி, நாடு மதநிறச் செருக்கு மின்றி,
இனச்செருக் கின்றி, இங்கே இறைவனின் மக்க ளெல்லாம்
எனச்சம யோகத் தொன்றி ஏகமாய் வாழு வோமே.

உலகெலாம் விரிநாடாகும் ; உள்ளெலாம் கோவி லாகும்,
பலமத வாத மற்ற பண்புள சுத்த சக்தி
நிலவிடும் தியான கான நிட்டையே சமய மாகும் ;
கலகமில் லாது வாழக் கற்றனம் கருணை யாலே.

நாட்டினை நாடு பற்றி நலிப்பதை நலிக்க நின்றோம்.
சேட்டைசெய் அசுர மாயத் தீவினை தீர நின்றோம்,
வேட்டைகொள் அநீதி தன்னை வெருவுறுமடிமைக் கோட்டைப்
பூட்டினை யுடைத்து வாய்மைச் சுதந்தரம் பொலிய வாழ்வோம்.

உண்மையை உண்மையாக உயர்ந்திட உழைப்போம்; பூவில்
பெண்மையை ஆண்மை நல்கும் பேரின்பக்கனலே என்போம்
திண்மனத்தாலே தீமை நலிந்திடச் செய்து நல்ல
வண்மையே புரிய செல்வ வளமையைப் பெருக்கு வோமே !

புன்மனக் கோள்பொய்சூதுபொறாமை வாராதொழிப்போம்
நன்மையை உகப்போம்; தூய நடுநிலைத் தொண்டு செய்வோம்;
பன்மையில் ஒருமை கண்டு பாரினிற் பொதுமைகண்டு
தன்மையிலுரிமை யான சத்திய முணரு வோமே.

எமனெதிர் வந்த போதும் இறைவனை மறக்க மாட்டோம் ;
நமதுநா மென்னும் பித்தர் நம்மையே மாற்றப் பாரோம்.
சமரஸப் பான்மை யோடு தருமமே கரும மாகி,
அமரகத் தான்ம நேயர் அமைதியாய் வாழுவோமே.

வாழிய சுத்த மூர்த்தி, வாழிய சுத்த யோகம்
வாழிய சுத்த சங்கம் வளர்பிறை போல நாளும் !
வாழிய யோகபோக வளம்பெறுந் தெய்வ ஜாதி ;
வாழிய உலக மெல்லாம் வானருள் அரசு வாழ்க !

இவ்வகை நாட்டில் எழுந்திரு மக்கள்,
        ஏறுபோற் பீடுடை நடையார்,
உய்வகை கண்ட உத்தமன் கொள்கை
        உலகெலாம் அறிந்திட ஓதிச்
செய்வகை யறிந்தே செய்வன செய்து,
        தேசத்தின் சேமத்தை நினைந்து,
தெய்வத்தைப் போற்றிக் கலிநக ருள்ளே
        திடுதிடு வெனப்புகுந் தாரே....

கதிரினிற் குளித்துக் கங்கையில் ஆடிக்
கங்கணங் கட்டியின் றெழுந்தே,
புதியச காப்தந் தோற்றிட வேண்டிப்
புண்ணியப் புனிதசங் கத்தார்
அதிசயமான தவவொளி பரப்பி,
அகங்களைக் காந்தம்போற் கவர்ந்தே
துதியுடன் புகுந்தார் சுடர்மணிக் கணம்போல்
சுதந்தர பேரிகை முழங்க....
வாதெலாம் வம்பு வழக்கெலாம், சும்மா
வாயடைத் தெதிர்வந்து வணங்கத்
தீதெலாம் அஞ்சித் தினகரன் முன்னே
திரள்பனித் துளியென மறையத்
தாதரு மாறித் தம்மவ ராகத்
தரங்கெட்ட ஒற்றருந் திருந்தப்
பாதக வூணர் படைகளுந் திகைக்கப்
பரமன்பேர் பாடினர் புனிதர்.

ஊரெலாந் திரளாய் ஓம்சுத்த சக்தி
ஓமென நல்வர வுரைக்கப்
பாரெலாம் அறிந்த பரிசுத்த யோகப்
பண்பினர் வருகநன் றெனவே,
நேரலா தாரும் நேர்மைகொண் டுரைக்க
நீளுயர் கதிர்க்கொடி நிலவத்
தாரெலாஞ் சூட்டித் தமர்வர வேற்கத்
தமிழ்க்கடல் முழங்கிட வந்தார்...

தீதினை விலக்கித் திருவுறு நன்மை
தினந்தினஞ் செய்திட லொன்றே
காதலாய்க் கொண்ட கண்ணனார் வருக !
கடமைக்குக் கருத்தினை யளித்துச்
சாதலுந் துணிந்து சத்தியத் தொண்டைச்
சரியையும் கிரியையும் எனவே
நீதியாய்ச் செய்த நின்மலர் வருக
நித்தியா னந்தர்கள் வருக !

எத்தனை மொழியார், எத்தனை மதத்தார்
எத்தனை நாட்டினர் உண்டோ,
அத்தனை பேரும் அகம்புற மொன்றி
அன்புடன் வருகவென் றார்த்தார்—
உத்தமத் தமிழர் கன்னடர் தெலுங்கர்
உரமிகு கேரளர் வங்கர்
மெத்த மராடர் கூர்ச்சரர் சிந்தர்
விதவிதப் பண்களை யிசைத்தார்.

தூக்கமும் அடிமைத் தொண்டுமே யாகத்
துருப்பிடித் திருந்தவர் தம்மை
ஊக்கமாய்த் தேசப் பணிநலம் புரிந்தே
உயிர்த்திட நடத்திய உரவோர்,
ஆக்கவே லையிலே அற்புத வெற்றி
யடைந்தவர், அரக்கரை யெங்குந்
தீக்கதிர் முன்னே யிருளெனச் செய்த
திவ்விய யோகிகள் வாழ்க ....

கொடிய வெம் பாசம் வீசியே நம்மைக்
குலங்கெடக் கொன்றிடும் அரக்கர்,
அடிமைவி லங்கை ஆத்மசக் தியினால்
அறுத்தெறிந் தருளிய முனிவர்,

மிடிபிணி மடமை யிருளினைப் போக்கி
மேன்மையாம் அறிவுடன் தொழிலும்,
ஒடிமனம் உறுதி யடைந்திட யோக
சக்தியும் உதவியோர் வாழ்க.

புண்ணிய பூமி விழித்தெழச் செய்தார்.
பூமியிற் கிழக்கிலும் மேற்கும்,
கண்ணிய முள்ள நாடெலாஞ் சென்றே
கடவுளன் பறிவினை விதைத்தார்.
பண்ணிய தவத்தாற் பரிதியின் கதிர்போற்
பாவன சக்தியைப் பரப்பி,
எண்ணிய தியற்றும் எழிலுடைப் பெரியார்
எழுகென ஏற்றதந் நகரே....

சுத்தனின் ஆணை தாங்கிய புலவோன்
சுதந்தர வீரரின் சிங்கம்
சித்தியின் அமைச்சன் சித்திமான் சேனை
செறிதரக் கலிநகர் புகுந்தே,
சத்துரு யாரும் எதிர்த்திடா தெல்லாம்
சாந்தமா யிருந்திடக் கண்டே
மெத்தவு மகிழ்ந்து, வினவுமுன் கலியன்
வேகமாய் விரைந்தெதிர் கொண்டான்.

நல்வர வாகுக ! சித்தி நாயகன்,
வெல்கநங் கதிர்க்கொடி வீறுற் றோங்குக,
புல்லிய லரக்கரின் பொறாமை வீழுக,
செல்வமார் புண்ணிய தேசம் வாழ்கவே !

சித்திமான் வருகெனத் திருந்து நங்கலி
பத்திமா னாகிய பணிவொ டேற்றதும்,
புத்திமான் உலகிது புனித னாகிய
சத்திமான் செயலெனச் சாற்றி நின்றதால்.
கொதிப்புடன் போர்களைக் கொடுத்த தீயவன்,
சதிப்படை யடங்கிடத் தரும தூதனாய்
எதிர்ப்பறப் பணிந்ததும், இளகு நெஞ்சினால்
மதிப்புற வேற்றதும் வரதன் செய்கையே.

கிலிபிடித் துலகமே கிடுகிடு டுத்திட
நலிவறு சமர்செயு நாச நாயகன்
கலியுளங் கருணையைக் கண்ட காரியம்
புலிபசு வாகிய புதுமை போன்றதே.

எம்புவி, எம்மதம், எமது குண்டுப் போர்
எம்புகழ், எம்பெருஞ் செல்வம், என்றெலாம்
வம்புரை யகந்தையு மாறி, ஈசனை
நம்புத லானது நாதன் சக்தியால்.

அரக்கரின் மாயத்தை யறிந்த நங்கலி,
செருக்கினை நீத்தருட் செம்மல் சுத்தனின்
திருக்கரு ணைதனைச் சிந்தித் தன்பினால்
உருக்கிய நெஞ்சுடன் உரைபு கானரோ!

கலியன்

சுத்தனின் பதமலர் துதித்து நாயினேன்
சித்தமுந் திருந்தினன், செய்கை சீருற்றேன் ;
அத்தகு குருபணிக் காசை கொண்டினும்
இத்தகு மானிடம் ஏந்தி நிற்கின்றேன்.

கேளுங்கள் சித்திமான், கேள்வர், நற்சனம்.
கேளுங்கள் என்மதி கெட்டு மீண்டதைக்
கேளுங்கள் என்னுளங் கிளர்ந்த மாற்றத்தை—
வாளுடன் வாழ்ந்தவன் வணங்கக் கற்றனன்.

மதர்த்த மோகி மதியை மயக்கிடப்
பதைத்திப் பாரைப் பறித்திசை யாளவே
சிதைத்த னன்பெருஞ் சித்தி மரபினை
வதைத்த னன்மர போங்கிய வாய்மையை.

இதந்தரும் என தண்ணல் இயம்பிய
பதந்த ரும்உரை யைப்பதர் என்றனன்,
கதந்தரும் அரக்கர் கையின் பாவையாய்ச்
சுதந்தரம் இழந்தேன் சுகங் கெட்டனன்.

புள்ளி மானைப் புலியு நரிகளுங்
கள்ளருந் துயர் செய்திடக் காட்டினேன் ;
கள்ள ரக்க ருடன்களித் தாடினேன் ;
உள்ளம் வேகுமச் செய்கையை உள்ளினால்.

சொந்த நாட்டிற் சுதந்தர மூச்சினை
முந்த விக்க முரடன் முயன்றனன் ;
பந்த னைசெய் பகைவரை நத்தினேன்—
அந்தப் பாவமென் ஆணவப் பாவமே !

கூழைக் கும்பிடு போட்டிடுங் குள்ளரைக்
கோழைத் தாதரைக் குண்டுணிச் சுப்பரை
பாழ ரக்கரைப் பற்றியிப் பாரினைச்
சூழும் வென்று சுகம்பெற நாடினேன்.

சடக்குண் டாலிச் சகத்தினை யாண்டிட
மடத்து ணிவுடன் மாசறு தீரரைச்
சுடத்து ணிந்திரு தோல்வி யடைந்துமே
கெடத்து ணிந்தனன் கெட்டுத் திருந்தினேன்.

தன்னறம் விடுத்தனன் ; சத்தி யன்சொலும்
மன்னறம் விடுத்தனன் ; மரபின் வேருக்கே
இன்னல்செய் கோடரி யெனமு ளைத்தனன்,
என்னினும் பாதகர் இருக்க வல்லரோ ?

அண்ணலை யெண்ணிலன் ; அறத்தை யெண்ணிலேன்,
புண்ணிய பூமியின் புகழை யெண்ணிலேன் ;
கண்ணிலன் உலகுயிர் கண்க லங்கவே
பண்ணினன் பலதரம் பாபப் போர்வினை.

தீரரும் மனசினைச் செயித்த வீரரும்,
ஆருயிர் போலவே அருளிற் காத்திடும்
பாரத தருமத்தின் பண்ப றிந்திலேன்,
ஊரினை ஊனருக் குணவென் றாக்கினேன்.

உத்தமக் குணமெலாம் ஒருங்கு சேர்ந்தவன்,
இத்திரு வுலகெலாம் இறைமை தாங்குவோன்,
சுத்தனென் அண்ணலின் சுடர்வி ளக்கினை,
எத்தனை அகந்தைகொண் டின்னல் செய்தனன் !

கூற்றென நாட்டினைக் குலைக்கப் போர்செய்து,
தோற்றனன் இனுமினுந் தொடர்ந்து மோகியே
சாற்றிய சூழ்ச்சியாற் சதிசெய் தானவர்
போற்றிய சூழ்ச்சியிற் புகுந்து கெட்டனன்.

பைகட்டிக் குவித்திடப் பாரை யேய்த்திடப்
பொய்கட்டி வாணிகம் புரிந்து, மக்களைக்
கைகட்டி வாய்கட்டிக் கடுமை யாகவே
மெய்கட்டி யடிமைசெய் வீண ராக்கினேன்.

தாயினைச் சிறையிடத் தனயர் கையுடன்
வாயினை யடக்கிட, மதிகெ டுத்திட,
நாயடி மையென நடக்கச் சட்டங்கள்—
பேயென விதித்தனன் பெரிய நாட்டிலே.

தூயரும் அழிந்திடச் சூது கட்புலால்
வாய்நகை வேசியின் வலைவி ரித்தனன் ;
நோயினுங் கொடியவர் நூறு நூறுபேர்
ஆயபுல் லரக்கரை யழைத்து வந்தனன்.

தந்திர நாத்திகத் தான வர்படை
தந்திட நானிந்தத் தரும நாட்டிற்கே
பந்தனைத் துயர்செய்த பாபம் யாவையும்
வந்தெனைச் சூழ்ந்தன மாய மேகம்போல்.

வஞ்சனேன் பாவங்கள் வரம்பி லாதன ;
நஞ்சனேன் கொடுமையை நாளும் எண்ணியே
அஞ்சினேன் சுத்தனின் அருட்க ருணையால்
நெஞ்சகந் தெளிந்துமை நிமிர்ந்து காண்கின்றேன்.

உறங்கிய உலகினை யோக சித்தியால்
அறந்தர எழுப்பிய ஐயன், என்னையும்,
மறந்திலன் மாயையின் மறைப்பு நீக்கியே
திறங்கொள எழுப்பினன் சிறையி ருட்டிலே.

எவரையென் னுயிர்த்துணை யெனம யங்கினேன்,
அவரெனைச் சிறையினில் அடைத்த பின்னரே,
துவரிதழ் மோகியைத் துறந்த பின்னரே,
புவியியல் அறிந்தனன் புழுத்த நாயினேன்.

சிறையினிற் பிழைகளைச் சிந்தித் தையன்பாற்
குறைகளை முறையிட்டுக் கொண்டி ருந்தநாள்,
இறைவனென் இதயத்தில் இனித் திருந்தியான்
நிறைவுறும் தன்மையை நிலவக் காட்டினான்.

தூயவன் ஏவிய தொண்டர் கூட்டமும்,
தேயமெ லாந்திரு செழிக்க வேண்டியும்,
தீயரின் கலிநகர் திருந்த வேண்டியும்
தாயருள் பூத்திடத் தயவு செய்தனர்.

என்மன மாற்றத்தை இயம்பக் கேட்டவர்
நன்மனத் தொண்டரை நாட்டிக் காவலில்,
வன்மனத் தானவர் வஞ்சம் தோற்கவே,
பொன்மனக் கருணையாற் புகல ளித்தனர்.

வன்சிறை தப்பவும், வாய்மை காக்கவும்,
என்னரச செய்தவும், இகலை வீழ்த்தவும்,
தன்னிக ரற்றவன் சமர்த்தன் சித்திமான்
துன்சகோ தரனெனத் துணையளித்தனன்.

நல்ல நேயர் நடத்திடத் தப்பிநான்
கல்ல றையைக் கடந்தெழும் ஆவிபோல்
புல்ல ரக்கர் புரியிற் புகுந்ததும்
கொல்லுந் தூமன் கொடுமை யறிந்தனன்.

நிலையி லாது நினைத்ததைச் செய்திடுங்
கலை சிறந்த கடுமன மோகியின்
வலையில் வீழ்ந்த மயக்கப் பழியறத்
தலை மறைத்துத் தகர்த்தனன் பாவியை.

என்னைக் கொன்றிடக் கேதுவை யேவினாள்,
இன்ன லுக்குத் தலைவி, இராட்சசி ;
அன்ன மோகியை ஆவி குடித்தனன் ;
பின்ன ரேபிற விப்பய னெய்தினேன்.

பழி மிகுந்த பதகனை, எம்பிரான்
அழிவி னின்றும் அருளுக் குயர்த்தினான் ;
விழி திறந்திட நன்மை விளக்கினான் ;
வழிதி றந்தது வாய்மை சிறந்ததே.

தூக்க மற்றவன், சுத்த னருளினால்
ஏக்க மற்றனன் ; என்னை யினியவன்
ஆக்க வேலைக் கடைக்கல மாக்கலே—
நோக்கம் ; வேறொரு நோக்கமு மில்லையே.

நாத்தி கக்கலி நாட்டின் தீநகர்
ஆத்தி கக்கரு ணைநக ராகுக.
ஏத்து சித்திக் கினிய துரிமையாம் !
பாத்தி யம்எனக் கன்புப் பணியொன்றே.

மன்னித் தென்னை மறந்திடு வீரினி
என்னன் பாகும் இறையைச் சரண்புக
இன்ன ரேகுவன் இந்திரை மந்திரி
மன்னு மாட்சி புரிந்தினி வாழ்கவே.

ஒப்ப ரிய உயர்குணச் செம்மலைச்
செப்பி நற்பணி செய்தினி வாழுவேன்.
எப்பொ ருளும் இனியெனக் கில்லெனத்
தப்பி னான்கலி சத்திய சீலனாய்...

சித்திமான்: புலியென வாழ்ந்து புரைமிகச் செய்து
புனிதனின் அருளினால் உய்த
கலியனைக் கேட்டுக் கருணையன் "இனிநீ
கடவுளின் அடியவன், மலைமேல்
இலகிடும் சுத்தன் இனிதுனை ஏற்பான் :
ஏகெனச்" **சித்திமா** னாங்கே
நிலவிடுந் தொண்டர் நெடுந்துணை செய்ய
நிமலன்பாற் செலவிடுத் தானே.
வாட்சின வெறிகள் அடங்கிட, நாட்டில்
வளர்ந்திட வாய்மையும் அன்பும்,
கோட்சின வஞ்சங் குறுகிட வரக்கர்
கொலைப்பழி நீங்கிட உடனே,

ஆட்சியிற் சிறந்த சித்திநல் லமைச்சன்,
அருளர சியலினை வகுத்து,
மாட்சியிற் சிறந்த மக்கள்பால் விடுத்து,
மகிழ்ந்தனன் புகழ்சுமந் தனனே....

தானவர் முயற்சி தட்டழிந் திடவுந்
தருமமே நிலையுயர்ந் திடவும்,
மானவர் மரபு மாசிலாத் தெய்வ
மரபென வளஞ்சிறந் திடவும்,
ஆனகா ரியங்கள் ஆற்றிடும் சுத்தன்
அன்பரை நாடெலாம் அனுப்பி,
ஞானமும் கரும வீரமும் செழிக்க
நாடினான் சித்திமந் திரியே.

16. புது மலர்ச்சிப் படலம்

அதிகஞ் சொல்லுவ தென்னினி ஆருல கெல்லாம்
புதிய நல்விழிப் படைந்தது பூரணன் அருளால்,
சதிசெய் ஆணவ தானவப் படைகளுந் திகைக்க—
மதிமி குந்தநந் தொண்டர்கள் வாழிய மாதோ !

ஐந்து கண்டத்தும், அமர்பல நாடுகள் எல்லாம்,
"உய்ந்த னம்"என ஊர்தொறும் ஊர்தொறும் அழைத்தே,
வந்த னத்துடன் வாய்மையைக் கண்டுகேட் டுவந்து,
சிந்தை செய்கையுந் துகளறத் திருந்தின பரிந்தே.

தன்ன லங்களைத் தவிர்த்தனர் ; பொதுநலந் தழைக்கப்
பன்ன லங்களைப் புரிந்தனர் ; பாருயிர் செழிக்கப்
பொன்ன லங்களைத் தொழில்வளர் புண்ணியஞ் செய்தார்;
உன்ன தக்கருத் தோங்கிட உலகினில் வாழ்வார்.

கையு ழைத்தன ; கருத்துகள் கடவுளை நினைத்த ;
மெய்யு ழைத்தன ; வாய்மலர் மெலிந்தவர்க் குதவப்
பைய விழ்த்தன பணமிகு மனங்களும் ; பாரில்
ஐயன் ஏவிய தொண்டரின் அருட்பணிச் சிறப்பால்.

அன்பு கொண்டவர் ஆருயிர் யாவிற்கும்
இன்ப நல்லறம் செய்யும் இயல்பினார்
துன்ப மற்ற சுதந்தரத் தொண்டரை
நம்பி மாந்தர் நடந்து சிறந்தனர்.

தனிய கந்தையும், சாதி யகந்தையும்,
எனதுல கென் றிகல்செய் யகந்தையும்,
இனவ கந்தையும் இன்றி, மனிதரை
மனித ராக மதித்தனர் மாந்தரே.

இந்து முஸ்லீம் கிறிஸ்து வெனாரினி
அந்தண் ஆரியர் திராவிடர் என்றிலார்,
எந்தத் தோல்வில காரமும் எண்ணிடார்
சிந்தை யொன்றிய மானிடத் தேவரே.
தீட்டு தீட்டென் றொதுங்கிடச் செய்வதும்,
பூட்டி வைத்துப் பொருள் சிறை காப்பதும்,
வீட்டில் ஓர்மதம் வீதியி லோர்மதம்
காட்டும் வேடமும் கட்டுடன் விட்டனர்.

மொட்டை தாடி குடுமி முகத்துரு
பொட்டு நாமம்வி பூதி, பலவகைச்

சட்டை கண்டிடுஞ் சண்டைகள் யாவையும்
விட்டொ ழித்தனர் உள்ளதை விண்டவர்.

தற்பெரு மைகளுஞ் சாதி மாமதக்
கற்பனை வேடமுங் காட்டி, நாட்டிலே
சிற்சிலர் எதிர்த்தனர் ; சிரித்து, வைதனர் ;
அற்புதம் இவர்களும் அடங்கிப் போயினார்.

பட்டமும் பதவியும் பந்தனை செயும்
சட்டமும் கொடுமையின் சம்ப மோங்கிடுந்
திட்டமும், அரக்கரின் செருவும் போக்கிடக்
கட்டங்கள் பொறுத்தருங் கடமை காத்தனர்.

வன்ப டையின் வலிமையைக் காட்டிலும்,
பொன்ப டைத்த புகழினைக் காட்டிலும்,
அன்பொ டொற்றுமை யாகும் அருட்பணி
இன்ப மென்றனர் எண்ணம் உயர்ந்தவர்.

ஞான சூனிய ரான நடலையர்,
ஈனச் சேவக மேற்கும் அடிமைகள்,
மானி டர்கள் மயங்கிடு மட்டுமே
தான வரின் சமர்த்தும் பலிக்குமே.

நந்து ணைகொண்டு நம்மை நலிப்பவர்,
நந்து யர்களைக் கண்டு நகைப்பவர்,
நந்துணை மறுத் தாலொரு நாடிலார் ;
வந்த தானவர் மர்ம மிதுவென்றார்.

இரும்பு ரேனியம் எண்ணெய் செம்பீயமும்
கரும்பு கைக்கரி கந்தகம் மாங்கினம்
பெரும்ப கைச்சமர்ப் பேய்ச்சரக் கென்னவே
தருங்க னிகளைத் தப்பறக் காத்தனர்.

சண்டை தூண்டும் சரக்குகள் யாவையும்,
அண்டை நாட்டி லகப்படா வாறவர்,
எண்டி சையிலும் உண்மை யியம்பியே
தொண்டர் போர்வெறி போக்கினர் சூழ்ச்சியால்.

யோக சித்தி யுறுப்புறு தொண்டர்கள்
சீக ரத்திலுஞ் சீரிய தேசத்தும்,
வேக மான வியன்பணி மேன்மையால்
ஏக மான உணர்ச்சி யெழுப்பினார்.

சத்தி யன்னவர் தம்பணி சீர்பெறச்
சுத்த யோகச் சுடரைப் பரப்பியே
சத்தியயுகத் தத்துவஞ் சாற்றியே
புத்து ணர்வைப் பொலிவுறத் தூண்டினாள்.

வானரசு மண்மீது வந்த தன்பீர்,
 மாயவிருட் சங்கடங்கள் மறைந்த தன்பீர்—
மோனத்தின் முடியினிலே முளைத்த சோதி,
 முத்திநதி பாய்மூல சக்திச் சோதி,
ஞானத்தண் கதிர்வீசு நாத ஜோதி,
 ஞாலத்தைப் பொன்னாக்க நயந்த ஜோதி,
தேனொத்த பேரின்பந் திளைத்த ஜோதி—
 சித்தாந்த வேதாந்தச் சிகர ஜோதி.....

அத்தகைய ஜோதியரு ளார்வங் கொண்டே
அன்புசெயும் திருத்தொண்டர் அகில மெல்லாம்
சத்தியமும் சாதிமத பேத மில்லாச்
சன்மார்க்க ஒற்றுமையும் தழைக்க வேண்டிப்
பத்திமையும் அருட்பணியும் பதிஞானத்தின்
பண்புடனே திண்விரதம் பலிக்க வேண்டிப்
புத்துருவும் புதுவாழ்வும் புதிய சீரும்,
பொலிந்திடவே பொதுநலங்கள் போற்றி னாரே.

பொல்லாங்கும் பொய்யுரையும் பொறாமை நோயும்,
புறங்கூற்றும் போலிநடை யுடையும் போக,
அல்லலுறும் அசுரபயம் அற்றுப் போக,
ஆத்மபலம் யோகத்தாற் பூத்துப் பொங்க,
வெல்லாண்மை வீறுபெறச் சோர்வு நீங்க,
வேறுசெயும் பேதமனம் வேரோ டேகி,
எல்லாரும் ஓர்குலமாய் இனிது வாழ,
இன்பமெனும் இரவியெழுந் திலகக் காணீர்.

கருவினையை மாற்றுகின்ற கருணை வள்ளல்,
காசினிக்குப் புதுவழியைக் காட்டும் வள்ளல்,
இருவினையின் பற்றின்றி இயற்றும் செய்கை
இறைவனுக்கு வழிபாடாய் இயற்றச் செய்யும்
குருமணியென் குறைதீர்த்த கோமான், தெய்வக்
குலமணியின் அன்பினிலே குலவி வாழ்வீர்,
ஒருபரமன் உயிர்க்குயிராய் உள்ளத் துள்ள
ஒளிமணியைத் தியானத்தால் ஒன்று வீரே.

தேனோங்குங் கலைச்சோலை யாக வாழ்க்கை
திருவோங்கத் தெய்வவொளி செழிப்புற் றோங்க,
வானோங்கும் பேரின்பம் வளம்பெற் றோங்க
வரமோங்குங் கவிவாக்கு மலர்க ளோங்க,
ஊனோங்கும் உயிர்க்குலத்தின் உளஞ்சி லிர்க்க,
உண்மையறி வோங்கவுயர் பெண்மை யோங்க,
மானோங்கு பாகனரு ளாலே யென்றும்
மங்களமோங் கிடநல்லோர் வருகு வீரே...

ஆண்டானைத் தலைக்கொள்வோம் ; அவனுக் கேயாம்
அருச்சனையாய் அருட்பணிகள் ஆற்றுவோமே ;
நீண்டமுடி கவித்தாலும் நீண்டு போகோம் ;
நிபந்தனைகள் வந்தாலும் நெஞ்சங் குன்றோம் ;
தூண்டுசுடர் ஞானவொளி துலங்க, நல்ல
தொண்டுகளே செய்திடுவோம் தூய நேயர் ;
வேண்டோமிப் புவிப்புகழும் வீறுகொண்ட
வேதாந்தப் பொதுவினிலே விளங்கு வோமே.

புகழுக்கோ கம்பாழ்வார் கவிபு னைந்தார் ?
புகழுக்கோ இலியாதை ஓமர் செய்தார் ?
புகழுக்கோ திருக்காட்சி யிசைத்தார் தாந்தே ?
புகழுக்கோ ஷேக்ஸ்பியர்நா டகங்கள் செய்தார்?
புகழுக்கோ தேவாரம் இசைத்தார் மூவர் ?
புகழுக்கோ வள்ளுவனார் பொதுநூல் செய்தார் ?
புகழ்வேட்டை யாடாது பூசை யாகப்
பொய்யில்லா மெய்த்தொண்டு புரிகுவோமே !

எவருக்குந் தீங்கின்றி இடும்பை யின்றி,
எள்ளளவும் இழிவான பொறாமை யின்றி,

அவரவரின் ஆற்றலுக்கே ஏற்றதாகும்
அருட்பணியை அன்புக்கே ஆற்று வோமே ;
எவருக்கும் அஞ்சாமல் இதயந் தன்னில்
இறைவனுடன் இரண்டறவே ஏக மாகி,
நவயுகத்து நாதனிடம் பணிகள் செய்வீர் ;
நரநாரா யணராக நன்று வாழ்வீர்.

மானிடரின் அரசியலை மாற்ற வேண்டி
வால்தேரும், ரூஸ்ஸோவும், மார்க்சும் வந்தார் ;
தீனர்துயர் தீர்க்க லெனின் காந்தி வந்தார்,
செல்வமுடன் செய்தொழிலும் பொதுமை செய்தார்.
கோனாட்சி குடியாட்சி யாகச் செய்தார்,
கொலைமல்கும் கொடுங்கோல்கள் குமையச் செய்தார்;
ஆனபொழு தும்அசுரப் போர்கள் இன்னும்
அழிநாட கஞ்செய்வ தறிகு வோமே.

துன்பத்தைத் தொழிலாகத் தொடரும் ஊணர்,
துறுதுறுத்துத் திரிகின்ற துட்ட ஊணர்,
மன்பதையைக் கொசுப்போல மதிக்கும் ஊணர்,
மாடாடு மதுவுண்டு மதங்கொள் ஊணர்,
அன்புவழி யறியாமல் அவனி யெல்லாம்
அதர்மப்போர் ஆக்குகின்ற அரக்கர் தம்மை
நம்பியடி மைப்பட்டார் ஞாலத் திற்கே
நமன்போல நலிவினைகள் செய்வா ரம்மா ;

ஆசையுடன் ஆணவமும் அளைந்த தீவில்,
அசுரபலம் கொண்டுலவும் அரக்கர் கோடி,
காசினியைக் கம்சதுரி யோதனாதிக்
காடென்னச் செய்தார்கள் கத்தி தீட்டி,
வேசைமது ஊன்சூது கொலைவே கத்தை
வீரமிலாத் தந்திரத்தாற் போர்வே கத்தை
மோசமுறத் தூண்டியிவர் முப்பால் வாழ்வை
மோகவலை யாக்கிடவே முளைத்தா ரம்மா !

தினமுதிக்கும் தினகரனைத் தேட மாட்டார்,
சிறுதீபச் சுடர் வணக்கம் செய்வார் மாந்தர்,
மனமுதிக்கும் சாட்சிமொழி மதிக்கமாட்டார் ;
வாய்வாதக் குப்பைகளை வாங்கி நிற்பார்.
மனைவளரும் பத்தினியை மதிக்க மாட்டார்
மதிமயக்கும் விலைமாதை மடியில் வைப்பார்,
வனமுதிக்கும் மணமலரைக் கசக்கிப் போட்டு—
வருணக்கா கிதமலரில் மயங்கு வாரே.

யானைகுதி ரைமரியா தைகள் வேண்டார் ;
இசைவிரும்பார் இயல்பாக உள்ளத்துள்ளே
மோனையெது கைநயங்கள் முற்றத் தேர்ந்தே,
முன்னுலகும் பின்னுலகும் முழுதுங் கண்டே,
தேனருவி போலூறும் தெய்வ வாக்கைத்
தெவிட்டாத நல்லமுதைச் செகத்திற் கீந்தார் ;
மானமிலார் அவர் வாக்கை மதிக்க மாட்டார் ;
மாசுற்ற காமவழி மயங்கு வாரே.

தன்புதல்வர் தமைக்காக்குந் தாயைப் போலே,
தயவுடனே சுத்தபிரான் தந்த வாக்கை
அன்புடனே கற்றறிந்து நடப்பீர் ; அன்றே
ஆனந்தக் காவியமாம் அவனி வாழ்க்கை.

*துன்பமிலை, அச்சமிலை, துயர மாகும்
தொத்தடிமைத் தொல்லையிலை சொன்னேன் கேளீர்;
இன்புறுவோம், இடர்களைவோம் ; எல்லா ருக்கும்
இனியவையே மனதறியச் செய்வோம் இங்கே !*

*வானொத்த சுடருண்டு ; மழையும் உண்டு,
மண்ணொத்த பயிருண்டு ; வளமை யுண்டு ;
தேனொத்த கரும்புண்டு செந்நெ லுண்டு,
தேசமெலாம் உண்டுடுக்கச் செழிப்பு முண்டு ,
மானொத்த விழியுண்டு ; மக்க ளுண்டு ;
மனையுண்டு ; வள்ளுவனார் மறையு முண்டு,
ஊனொத்த உயிர்க்குயிராம் ஒருவ னுண்டே,
உண்மைவழி வாழ்ந்தாலிங் கொண்மை யாமே.*

*உலகினிலே அநியாயம் ஒழிய வேண்டி,
உள்ளத்தில் உள்ளன்பு பொலிய வேண்டி,
கலகஞ்செய் பேராசை கவிழ வேண்டிக்
காதலுடன் கற்பொழுக்கங் காணவேண்டிப்
பலருணவைப் பறித்துண்ணும் பதகர் கூட்டம்,
பாட்டாளர் உழைப்பிற்குப் பணிய வேண்டி,
நலமெண்ணி, நலம்பேசி, நலமே செய்யும்
நல்லோரை ஞாலத்தார் மதிப்ப தென்றோ !*

*சத்தியஞ்சொல் மனச்சாட்சி தன்னைப் போற்றிச்
சாந்தமாய்த் தருமவழித் தொழில்க ளாற்றி,
உத்தமராய் உயர்வான சிந்தை யோங்கி,
உலகிற்கு நலஞ்செய்யும் உறுதி கொண்டே,
பித்தான பேராசைப் பேயைத் தப்பிப்
பிசகான துன்மார்க்கப் பிழைக ளின்றி
சித்திரைக்குச் சித்திரைமுன் னேற்றம் பெற்றே
சீராக மாந்தர்குலம் செழித்து வாழ்க !*

*மூலையிலே விதியென்று முக்கா டிட்டே
முனகாதீர், நன்மையுற முயற்சி செய்வீர்,
காலையிலே கனிநகைசெய் மலரைப் பாரீர்,
கள்ளுண்டு வண்டிசைக்குங் கருத்தைக் காணீர்.
சோலையிலே சோடிப்புள் கூடு கட்டிச்
சுதந்தரமாய் விளையாடுஞ் சுகத்தைப் பாரீர்.
வேலையிலே கதிராவி மொண்டு மேகம்
விளைவித்து மழைபெய்யும் வியப்பைக் காணீர்.*

*தேகத்திற் பலம்வேண்டும்; தெம்பு வேண்டும் ;
தீரராய்ச் செய்தொழிலைச் செய்ய வேண்டும் ;
சோகத்தைச் சோம்பலினைத் துரத்த வேண்டும் ;
சொல்லுடனே செயல்வேகந் தொடர வேண்டும்.
மோகமயக் கறச்சீவன் முத்த ராகி
முன்னுலகப் பணிநலமே முயலவேண்டும் ;
ஏகமத நேகத்தை இயக்கி நிற்கும்
இறைவனருள் இன்பத்தில் ஆடுவோமே !*

*அந்தமதம் இந்தமதம் என்னா தீர்கள் ;
அச்சாதி யிச்சாதி என்னா தீர்கள் ;
விந்தையுறும் புதுமதங்கள் விளைக்கா தீர்கள் ;
வேற்றுமைசெய் விதிகளையே வளர்க்கா தீர்கள்,
வந்திருந்து செல்வாழ்வின் அரங்கந் தன்னில்,
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம் இயல்பாய் நாளும் ;*

சந்ததமும் சமயோக சாதனத்தால்
சக்திபெற்ற சுத்தர்களாய் வாழுவோமே.

மனிதகுல மொன்றேநங் குலம தாகும்,
மாசற்ற மனச்சாட்சி சுருதி யாகும்,
தனியகந்தை யற்றசரி சமான ராகச்
சன்மார்க்கப் பொதுவெளியிற் சார்ந்தெல் லாரும்,
கனிகுலுங்குங் கற்பகம்போற் கருணை தாங்கிக்
காசினிக்கு நலஞ்செய்யுங் கடமை காப்போம்,
அனவரதம் தியானத்தால் அன்பே யாகி,
ஆருயிரைக் கடவுளுக்கே அருச்சிப் போமே !

மங்களச் செல்வி சக்தி மண்புவி நாட்டி லெல்லாம்,
பொங்கிடும் புனிதன் வாக்கைப் பூமொழி யிசைக ளாலே,
சிங்கநா தத்தைப் போலும் தென்றலுங் குயிலும் போலும்,
திங்களி னமுதம் போலுந் தெவிட்டறப் பொழிந்தாள் மாதோ.

தீக்கொழுந் தேறும் வீர தீரரின் புகழைப் போலும்,
பாக்கியம் பழுத்த நல்ல பத்தினி யழகைப் போலும்,
பூக்களின் பொலிவைப் போலும், பொய்யறு புலவர் உள்ளம்
ஆக்கிய கவிதை போலும் அருண்மொழி துலங்கிற் றம்மா !

மிடியிருள் அச்சந் தீர, விடுதலைத் திறமை யோங்கக்
கொடியரின் கொடுமை வீழக் குமுறிடும் வீரத் தாலே
அடிமைநோய் அலறி யோடி, ஆண்மையும் பெண்மை யன்பும்
கொடியுடன் மலரும் போலக் குலுங்கிடத் துலங்கிற் றம்மா !

நமனையும் அஞ்சா வீறு நல்கியெந் நாளும், வாழ்வில்
அமைதியும் சுறுசுறுப்பும் ஆற்றலுஞ் செழிக்க கன்னித்
தமிழிசை யமுத மென்னச் சமரச நேய மோங்க,
விமரிசை யான சுத்த வேதவாக் கோங்கிற் றம்மா !

முல்லையைத் தென்றல் வந்து முத்தமிட் டணைந்து கொஞ்ச,
எல்லையிற் கடலின் உள்ளம் எழுமுழு மதியுங் கொஞ்ச
நல்லியற் காதலுள்ளங் காதலை நாடி கொஞ்சப்
பல்கலைக் கவிதை கொஞ்சும் பான்மைபோற் பரவிற் றம்மா !

அவரவர் தியானத் தாலே அழகுற மனந்தி ருந்தி,
நவயுக சக்தி யேற்றி, நலந்தரும் பணியி லுய்த்தே
சிவசுப சாந்த மெய்த்தித் திவ்விய வாழ்வை வாழ்ந்து,
புவியினிற் புனிதன் கொள்கை பொலிவுற நடந்தார் மாதோ !

ஆண்டவன் அருளே தங்கள் ஆற்றலென் றன்ப ரெல்லாம்,
பூண்டனர் உலக மெல்லாம் புதுயுகம் பூக்குந் தொண்டே
வேண்டிய கல்வி வேலை விரிதருங் கலைகள் ஓங்கக்
காண்டலுக் கினிய தான ஒற்றுமை காட்டி னாரே.

வாய்மையில் வளரும் வாக்கும் வண்மையில் வளருங் கையும்,
தூய்மையில் வளரு நெஞ்சும், சுத்தனில் வளரும் உள்ளும்,
தாய்மையில் வளரும் அன்புந் தருமத்தில் வளரும் வாழ்வும்,
நோய்மையில் லாத தூல நுண்ணுடற் பொலிவும் பெற்றார்.

பாரத முனிவன் பண்பருக் கெல்லாம்
மோனப் பெருமையை முன்னின்றுரைத்தான்
எழுத்தும் பேச்சும் எட்டா நிலையில்
சீரடி சாயி சிந்தை யடக்கி

இறைவனே தலைவன் என்றறிந் தோதி
உலகம் போற்ற நிலவினான் காணீர்.
வானெனத் தூய மோனத் தனிமையும்
கடலெனக் காரெனக் கருணையும் கொண்ட
கற்பனைக் கெட்டா அற்புதச் சித்தன்
ஒன்பது தடவை உலகைச் சுற்றினோன்
மேற்கும் கிழக்கும் மேவி வணங்கும்
மேஹரு பாபா மோகறு தீரன்
சகவா சத்திற் சாந்த நல்லன்பர்
இன்பச் சிலிர்ப்பை என்னென் றுரைப்போம் !
மோனமே சக்தியின் மூலமென்றுரைத்த
முனிவனை யுவந்து முந்தினர் தொண்டர்
நலியத் தீமை நன்மை பெருகவே !

மோனத்தில் வளரும் முத்தனின் அருளால்
முனிவரின் யோகசக் தியினால்,
ஞானத்தில் வளரும் பக்தியுஞ் சங்க
சாதன நன்மையுங் கண்டார்,
தானத்தி லோங்குந் தண்முகில் போலே
தருமமுங் கருமமுங் கண்டார்,
வானத்தி னரசைப் புவியிலே வளர்க்கும்
வாய்மையுந் தூய்மையும் அணிந்தார்.

தீரர்க ளெல்லாந் தியானத்தில் ஒன்றித்
திரள்திர ளாகஊர் தோறும்,
பாரத சக்தி யாகிய சுத்த
யோகத்தின் பயனுறும் அமுத
தாரையை யிறங்கப் பெற்றனர் ; சாந்தந்
தணலுமின் சாரத்தைப் பெற்றார் ;
வீரமும் வெற்றித் திறமையும் பெற்று
வீக்கினார் புதுயுகப் பாட்டே !

ஒன்று பட்ட நெஞ்சமும், உலக மெல்லாங் கோயிலே
என்று காணுங் காட்சியும், இலகுயிர் நலங்களே
நன்று செய்யும் ஆற்றலும் நலிவிலாத் தருமமும்,
வென்றியும் அளித்தருள் விரிந்த பூமி நாதனே !

சள்ளை யற்ற சாந்தமும், சலிப்பி லாத சக்தியும்,
கொள்ளையற்ற செல்வமும் கொடுமை யற்ற நீதியும்,
எள்ளலற்ற சீர்த்தியும், எதிர்ப்பை வெல்லும் வீரமும்,
கள்ளமற்ற வாய்மையும் கடவுளே யருளுவாய்.

வறுமையற்ற வாழ்க்கையும் வரம்பிலாத ஈகையும்,
சிறுமையற்ற சிந்தையும் சிறந்த தேச சேவையும்,
பொறுமையுற்ற வீறுடன் பொறாமை யற்ற நேயமும்
திறமை யுற்ற சொல்லுடன் சிறந்து வாழ்க மானிடர்.

சூதிலாத் தொழில்களும் சுரண்டிடா வணிகமும்
கோதிலாக் குணங்களும், குறையிலா வளங்களும்,
தீதிலாப் பொறிகளும், திருமிகுங் கலைகளும்,
வாதிலாத யோகமும், வளர்க மாந்தர் வாழ்கவே !

17. அணுப் போர்ப் படலம்

சுத்தவா சகத்தைக் கேட்டுச் சொல்லொணா வுவகை கொண்டு
இத்தல மாந்தர் எல்லாம், இயல்வழி இயற்றிக் காட்டி,

சத்திய வழியே சென்று, சாந்தமா யிருக்கு மெல்லை,
பித்துறுந் தானவத்திற் பெருஞ்சமர் பெருகிற் றம்மா.

கவலையுந் துயருங் காமக் கள்வெறிச் சினமும் போரும்
புவியிகழ்ச் சிகளும் சூதும், பொறாமையும், வாழ்க்கையெல்லாம்
உவர்நட்ட பதருக் கென்றே ஊற்றிய நீரைப் போன்ற
அவலமும் ஆயின் அஞ்சி யரக்கனுங் கலங்கி டானோ ?

அங்குதன் மகள்கொண் டோங்கும் அறத்துறை வெற்றி யாலும்
இங்கிளந் தம்பி கொண்ட மறத்துறை யிசையி னாலும்,
எங்குந்தன் அரக்க மாயம் இழிவுறும் வசையி னாலும்,
பொங்கிய மாவலிக்குப் பொறாமைத்தீ கொதித்த தம்மா.

கொலைகொலை யாகச் செய்து குவிக்கினும், ஆண வத்தின்
கலைபெறுங் கொலைக்குத் தப்பக் கருவிகள் பலவும் இல்லை.
அலைகடந் தாயு தங்கள் போர்ப்பொருள் அடைவ தில்லை,
நிலையறி செய்தி யில்லை நிருதனுந் திகைத்தான் மாதோ !

புண்ணியபூமிச் செய்தி புகுவதேயில்லை யிங்கு ;
மண்ணக மெங்குந் தன்சீர் மண்ணுற்ற செய்தி யில்லை ;
எண்ணிய எண்ணத் திற்கும் எதிரதே யாகத் தம்பி
பண்ணிய சூழ்ச்சி யென்று பதறினான் பதர னானே ! 20

அறிவினிற் சிறந்த தம்பி, ஆற்றலிற் பெரிய தம்பி,
பொறியினிற் கொடிய னாகிப் போரினை வெல்லு கின்றான் ;
வெறியினிற் பெரிய மாவலி விடுவனோ! பாரென் றின்னும்
குறியினிற் கொடிய வாணக் குண்டுகள் குவித்தெ ழுந்தான்.

பயிற்சியின் சிறப்பி னாலே, பலசன மதிப்பி னாலே,
உயர்ச்சியைப் பெற்ற நெப்போ லியனைப்போல், உலகை வெல்ல
அயர்ச்சியில் லாமல் இட்லர் அணுகுண்டு வெறி பிடித்த
முயற்சியைப் போலே இந்த மூர்க்கனும் முனைந்து சென்றான்.

குளிர்மிகு மாஸ்கோ தன்னைக் குமைந்திடச் சென்றான் போலும்,
களிமிகு வால்காக்ராடைக் கைப்பற்ற முனைந்தான் போலும்
ஒளிமிகும் இந்தியாவில் ஒளிந்துற்ற ஊணர் போலும்,
தெளிவறும் அரக்கன் ஆண வத்தினைத் தீண்டப் போனான்.

"நாளையே ஆண வத்தை நாசமுஞ் செய்து, தம்பி
வாளையு முறியக் கொன்று தலையுடன் வருவேன்" என்று
நீளுறு மீசை தன்னை நினைப்புறத் திரிகி விட்டு,
மாளுறத் தாக்குங் குண்டு மழையுறப் புறப்பட் டானே.

ஒற்றரால் அறிந்த தம்பி, ஊழிமாப் புயலைப் போலும்,
எற்றிநாற் றிசையும் தீயை எறியெரி மலையைப் போலும்,
உற்றெழும் பூகம் பத்தின் உலுக்கலைப் போலும், கோபம்
பற்றிய கோபால்ட் பாமைப் பாய்ந்திட வீசினானே...

கொல்லெனப் பறைகள் கொட்டக் கும்மெனப் புகைகள் சூழக்
கல்லென வெடிகள் வீழக் கடக்கென ஊர்கள் சாயச்
சொல்லரும் அரக்கர் நாடு சுடுபிணக் காடாய் வேக,
அல்லுடன் பகலும் போரின் அலறலே மிச்ச மம்மா !

ஆயிரங் கப்பல் செல்லும், ஆயிரங் கப்பல் வீழும்,
ஆயிரம் படைகள் ஏகும் ஆயிரம் படைகள் சாகும்,
ஆயிரம் பொறிகள் முட்டும் ஆயிரம் பொறிகள் வெட்டும்,

ஆயிரம் ஆயுதங்கள் அனற் பட்ட பஞ்சு மாமே...

போமென முன்னே சேனை போக்குவான் அரக்கன் ; ஆங்கே
டாம்எனக் கேட்ட போதே டபதட வென்னச் சாயும்,
டோமென வெடி பறக்கும் செந்தசை துருவிச் செல்லும்,
வேம்பல ஊர்கள் பற்றி வேதிநூல் வினையி னாலே.
பன்னெடு நாட்கள் செய்த படைநிறைக் கப்ப லொன்று
சின்னதோர் காந்தக் கண்ணி தீண்டிடச் சிதறி மூழ்கும் ;
முன்னுறு டாங்கைட் டாங்கு முடித்திடும் ; கண்ணி தீண்டி
இன்னொரு நாச காரி எரிவிற கென்னப் போகும்.

கொலையினில் வலது கையாய்க் கொள்ளையில் இடது கையாய்,
அலையினில் ஆகாயத்தில், அடுகளப் போரில் எங்கும்
நிலையறச் சுழலக் கண்ணும், நெஞ்சத்தை மண்ணுக் காக்கி,
உலைவறப் போர்கள் செய்யும் ஊணருக் கோய்வும் உண்டோ?60

படையினைப் படைநொ றுக்கப் பகைவனைப் பகைநொ றுக்கத்
தடையினைத் தடைநொறுக்கத் தம்பியை அண்ணன் கொல்லப்
புடைத்தெழுந் தோளை நோக்கப் பொம்மெனக் குண்டு பாயத்
தடித்தினுஞ் செருக்கி னாலே தானவன் போர்செய் தானே.

மாரிபோற் பொன்பொழிந்து மாரிபோற் புண்ணீர் பெய்து,
மாரிபோற் கண்ணீர் பெய்ய மரணத்தின் விருந்தே யாகக்
காரிருட் புகையைக் கீண்டு கனலினை யணைந்து கோடிப்
பேரிடிக் குண்டு தாக்கப் பிணமலை குவிந்த தம்மா !

கடகடத்திடவே பூமி கண்ணிமை திறக்கு முன்பே
தடதடாரென்று தீயதானவம் இடிந்து வீழப்
படபடத் தண்ணல் பாயப் பாழணுக் குண்டுதீரத்
தடியெடுத் தடித்துக் கொண்டார் தம்பியும் அண்ணனாரும்.

இயற்கையின் சீற்றந் தானோ, தருமத்தின் இரக்கந் தானோ,
புயற்குலச் சீற்றந் தானோ, போரிடி முழக்கந் தானோ,
துயர்க்குலச் சேனை தானோ, துட்டரை யழிக்கும் சக்தி
வியக்கருஞ் செய்கை தானோ வெடித்தெழும் சமர மம்மா ?

பீரங்கிக் கொலையும் குண்டு பெய்பெருங் கொலையும் தீயிற்
கூரம்புக் கொலையும் ஊரைக் கொள்ளித்தீ சூழ்ந்து கொண்டு
காரம்பு வீசிக் கொல்லுங் கடுங்கொடுங்கொலையும், தோன்றா
நீரம்புக் கொலையும் கண்ணிக் கொலைகளு நினைக்கப் போமோ?

ஆண்டுகள் அமைத்த ஊர்கள் அணுவெடி தாக்கி மண்ணாம்,
ஆண்டுகள் அமைத்த கோயில் அறிகுறி யற்றே போகும்,
ஆண்டுகள் தொகுத்த சேனை அடுபுகை யாகப் போகும்,
ஆண்டுகள் செய்த செய்கை ஆழிவாய் உப்பைப் போலாம்.

தசமுகன், மேக நாதன், தரகா சுரன், சிக்கந்தர்,
விசைபெறும் அனிபால்நெப்போலியன்கெய்சர்இட்லர்முஸ்ஸோ
வசைமிகு பொறிக ளாலே மாவன் செய் வன்போ ரெல்லாம்
நசைபெறுந் தானவன்செய் நாசப்போர்க் கிணைய தாமோ?

செருவலித் திமிர் மிகுந்த மாவலி கொழுப்ப டக்கப்
பெருவலி யேவி யேவி ஆணவன் பெரும்போர் செய்தான் ;
உருமறைப் புகைக ளிட்டும் ஊழிபோற் கனலு மிழ்ந்தும்,
இருநிரு தர்செய் போருக் கிலக்கியப் போரும் என்னாம் !

அறிவினை வளர்த்தே, கொல்லும் ஆயுத மாகச் செய்து
பொறியினைக் கொண்டி ரத்தப் போர்செயும் வீர ஊணர்
மறவினை புரியச் சந்தர மண்டலஞ் சென்று தம்மை
எறி எரிமலையில் வீசி யெறிந்திடப் போரிட்டாரே

தடிந்தனர் தம்மைத் தாமே தம்பியும் அண்ண னாரும்
ஒடிந்திட ஒருவர் கையை ஒருவர்வெட் டிடவே பாய்ந்தார்,
கடிந்தனர் உடல மெல்லாங் காயமாய் இரத்தங் கொட்ட
மடிந்தனன் சிரமிழந்து மாவலிக் கேற்ற தம்பி...

வென்றனன் ; கொடிய தம்பி வீழ்ந்தனன் மண்ணைக் கவ்வி ;
வென்றனன் ஆண வத்தை வீறுக பேரி கைகள்
என்றுமா வலிசெருக்கால் ஏறிய மகிழ்ச்சி பொங்கி,
நின்றபோ தவனை நோக்கி நெருப்புக்குண் டுருமிற் றம்மா!

"ஆள்வனிவ் வாண வத்தை அவுணன்யான்" என நிமிர்ந்த
நீள்சிரந் தன்னைச் சுட்டு நிலத்தினில் ஒடியத் தள்ள
ஊள்என ஊழைப் போலே உற்றதோர் அணுக்குண் டந்தோ!
மாள்வனென் றஞ்சி யாங்கே மாவலி ஓடினானே....

ஒப்பிலாத் தம்பி தன்னை ஒழித்ததே பெரிய வெற்றி
அப்பவோ போதும் போதும் அணுவெடிப் போர்க ளென்றே
முப்புறம் பகைவர் குண்டு முழங்குமக் களத்தை விட்டுத்
தப்பினேன் பிழைத்தே னென்று தானவன் ஓடினானே !

வேகவி மான மேறித் தானவம் விரைந்த ஊணன்
சோகமே வடிவ மாகத் துறையினில் இறங்கும் போதே,
சீகரப் படைகள் சூழ்ந்து சிறைப்பிடித் திடுமென் றஞ்சித்
தேகமு நடுநடுங்கத் திக்குவே றின்றி நின்றான்...

புலியினைப் போலப் பின்னே ஆணவப் போர்து ரத்த
நலிசிறை யடைக்க முன்னே நற்குடி யாட்சி நிற்க,
வலியதன் செருக்கே தன்னை வம்புறக் கேலி செய்ய
பலிக்கடா போல ஊணன் பதறினான் கதறினானே...

நாம்செய்த பொறிகள் வெந்து நம்மையே நலித்த வென்று
தீமையின் பயனை யெண்ணித் திகைத்தமா வலியை, வெள்ளி,
தூரமகே துவிடம் செல்வோம் துரிதமாய் என்று கொண்டு
மீமிசை பறந்தான் கண்ணீர் நிலமிசை விழுந்து சோர....

எல்லை யற்ற பொருட்குவை ஏந்திய
வல்ல மைபெறு மாவலி ராட்சஸன்,
கொல் லமரிற் கொலைத்தொழி லேசெய்து
தொல்லை யுற்றுத் துடித்துயிர் சென்றனன்.

கற்ப காலங் கனகங் குவித்திந்த
அற்ப மண்ணினை ஆளச் சமர்செய்தே
சொற்ப காலத்திற் சுற்றமுந் தோற்றவன்—
புற்பு தமெனப் போயினன் ஆசையால்.

வாடி மன்னுயிர் மாளச் சமர்செய்த
கோடிகோடிக் கொடியவர் கொலை யுண்டார்.
தேடினும் அவர் திக்கினைக் கண்டிலோம் ;
ஆடி யோய்ந்த தரக்கரின் மாயையே.

வெறிகொண் டேசெய் விமானங்கள் போர்மதப்
பொறிக ளெல்லாம் பொரிந்துமண் ணாயின.
அறிவைக் கொண்டு கொலைசெய் யரக்கரின்
குறி யெதிர்த்துத் தமைக்குறி வைத்ததே.

தூர நாட்டைச் சுரண்டிச் சுரண்டியே
சேரப் பொன்மலை ஆயுதஞ் செய்தனர்.
நேரப் போர்வினை நீண்ட செருக்கெலாம்
தூரில் வெந்து துணையற வீழ்ந்தனர்.

அரக்க மாவலி யப்புறஞ் சென்றதும்
உரக்கச் சத்தியன் உள்ளம் எழுந்ததும்,
இரக்க மென்னும் இதயக் கடவுளே
பறக்க விட்ட பகற்கொடி காட்டுமே !

18. சத்தியன் வென்ற படலம்

நீதியு மன்பும் போற்றி நின்மலன் தந்தை மெய்யன்,
தீதிழைத் தான வத்தர் திருந்திட வேண்டி நல்ல
போதனை செய்யும் போகன் புகன்றவா றழகி யோடு
மாதவத் தொண்டர் சூழ மாவலி நகரம் — சேர்ந்தான்.

முன்னமே விரிவாய் ஆங்கே முயன்றநற் பணிக ளெல்லாம்
இன்னமும் வெற்றி யோங்கி யிலகிடத் தொண்ட ரெல்லாம்
பன்னரும் பயன டைந்து, பதிநலம் பலவுஞ் செய்து,
மன்னனும் காணா வண்ணம் மறைந்திருந் தாணை காத்தார்.

பூவினிற் சிறந்த தான புண்ணிய பூமி தன்னில்,
மாவலி யரக்க னாரின் ஆணவம் மறைய வேண்டித்
தேவசங் கத்தை நாட்டித் திருத்தொண்டு பரவு கின்ற
பாவனச் சித்த னான சுத்தனைப் பணிந்தார் சீலர்.

அஞ்சறு செயலின் மிக்க சீகரன் அனுப்ப வந்து,
செஞ்சொலாம் யோக சித்தி செப்பிய தொண்டு செய்தே,
நெஞ்சினைத் திறந்து தூய நெறியினைத் தூண்டி யன்பர்
வஞ்சமில் லாது ழைத்து வாய்மையை நாட்டினாரே.

வெறுத்தனர் அவுணர் செய்த வேதனை பலவும் அன்பர்
பொறுத்தனர் ; அவுணர் தம்மின் பொய்யொழுக் கத்தைவேரோ
டறுத்தனர் ; அடக்க மாக அரக்கரும் ஒருநாள் போரை
மறுத்தனர், அமைதி நாட்ட மனதுடன் பாடு பட்டார்.

படுகொலைப் பழிகள் செய்யும் பாபப்போர்க் களத்தி னின்றும்,
விடுதலை செய்து, நாட்டில் அமைதியை விளைப்ப தல்லால்,
சுடுதொழி லெதையுஞ் செய்யோம்; ஆயுதந் தூக்க மாட்டோம்
கெடுகமண் ணாசை யென்று கிளர்ந்தனர் உணர்ந்த ஊணர்.

சத்திய வாழ்வை நாட்டிச் சகலர்க்கும் உதவும் யோக
சித்தியைக் கற்றாரெல்லாம் தியானமும் திருத்தொண் டாற்றும்
பத்தியுங் கொண்டு, தூய பரனருள் பணிந்து, சுத்த
சத்தியும் இலங்கப் பெற்றுத் தழைத்தனர் சாந்த மாக.

திருக்கதை பலவுஞ் செப்பித் தினந்தினம் சுத்த சங்கம்
உருக்கிய நெஞ்சத் தாலே உள்விழி திறந்த ஊணர்
மருக்கொளு நாத்தி கத்தை மமதையென் றுதறித் தள்ளி,
இருக்கிறான் கடவு ளென்னும் உறுதியை இயம்பி னாரே.

நயமெனத் தோன்று கின்ற நஞ்சுறுஞ் சிற்றின் பத்தில்,
மயங்கிட வசந்த மாவார், கலங்கிட மாரி யாவார்,
முயங்கிடக் கோடையாவார் முடிவினில் ஆடியாவார் ;
பயனுறக் கற்பொ ழுக்கம் பற்றியின் புற்றார் மன்னோ !

கள்ளமே யுள்ள மாகக் கரவொழுக் கங்கள் செய்வார்,
பொள்ளெனச்சினந்துமற்றோர் பொறுமையைச் சோதிப்பார்கள்
எள்ளுவார் பிறரை யெல்லாம் ஏத்துவார் தம்மைத் தாமே,
கள்ளிலே நீந்தும் ஊணர் கண்விழித் துண்மை கண்டார்.

துறவினைக் கேலி செய்வார், தொண்டரைக் கண்டிப் பார்கள்,
அறவினை அசடென் பார்கள், அறிவினைக் கருவி செய்து,
மறவினை தொடுப்பார்; ஓர்நாள் வானையும் பிளப்போம் என்பார்
இறைவனை நம்பி வாழும் இயல்பினைப் பெற்றா ரம்மா !

இருளினை விரும்பு கின்ற திருடர்கள், இன்னல் செய்து
பொருளினைப் பறித்துத் தாமே போகங்கள் புசிக்கும் ஊணர்,
பருவமங் கையரை யள்ள நரகிலும் பாயும் தீயர்—
அருளினைப் பொருந்தி வாழும் அடியவ ரானார் மாதோ !

நிலமிசை நமக்கு நாமே நேரெனச் செருக்கு மிஞ்சிப்
பலபழி புரிந்த பஞ்ச பாதகர் தமது தீதால்
உலகெலாம் வருந்தி நோகும் உண்மையை யறிந்து கண்டு
மலமல வென்னக் கண்ணீர் வாரிடத் திருந்தி னாரே.

அரியநல் லறிஞன் சீலன் அன்புரு வான மெய்யன்
பெரியவன் பெருமை யாளன், பேயையுந் தூய தாக்க
உரியவன் சுத்தசக்தி யுடையவன், எம்மு ளத்தின்
அரியணைக் கரசன் என்றே அன்பர்கள் போற்றி னாரே.

தொட்டிலிற் பழகுந் தீமை சுடுவன மட்டு மாறாக்
கட்டையர், விலங்கைக்கொன்று கடித்துண்டு தடித்த ஊணர்—
மட்டறும் உயிர்க்கு லத்தை வயிற்றினிற் புதைத்த தெண்ணிச்
சட்டென ஊனை நீத்துச் சைவர்க ளானா ரம்மா !

பெருநிலப் போரி னாலே பிழைப்பிற்குப் பஞ்ச மாகி,
ஒருபிடி யுணவு மின்றி ஒருவரை யொருவர் உண்ண
வருநிலை கொண்ட ஊணர், மனத்தினில் இரக்கங் கொண்டு
சருகையும் உண்பா ரன்றிச் சவங்களை யுண்ணா ரம்மா !

சீரிய மெய்யன் சொல்லும் சீவகா ருண்யம் போற்றிப்
போரினை வெறுத்த நல்லார், புன்கொலைத் தீது நீத்தார்.
கூரிய கணையுங் குண்டுங் கொண்டடு களத்திற் கேகார் ;
பாரினில் அமைதி நாட்டும் பணிகளைத் தொடர்ந்து செய்தார்.

பறையிலாப் பேச்சும், வீணர் பகட்டிலாத் தொண்டும், செந்நீர்க்
கறையிலாச் செயலும், சீவ காருண்ய நெறியுங் கொண்டு,
குறையிலாத் தூய நேயர் கொள்கையிற் சிறந்த போது,
நிறைவிலா நிருதர் கோனும் நெட்டுயிர்த் தெழுந்தான் மாதோ.

மாவலி

"எழுந்தனள் அழகி மீண்டும் எழுந்தனன் அறிந்த மெய்யன்
எழுந்தது சுத்த சங்கம், எழுந்தது கடவு ளன்பே
எழுந்தது கருணை யுள்ளம்" என்று மாவலியும் கோபக்
கொழுந்துவிட் டெரிய ஒற்றர், கொலைஞரைக் கூவினானே.

அரக்கரின் சமர வாழ்வை அவமதி சைவ ரானார்,
இரக்கமென் றுளறுங் கோழை யிதயத்தை வளர்த்தார், மந்தி
வருக்கமென் றூன்வெ றுத்தார்; வன்சமர் செய்ய மாட்டார்—
இருக்கவா போக வாநான் இத்தகை யாள ராலே.

மதந்திகழ் களிறு போன்ற மல்லர்கள் ஊண ரானோர்,
நிதமெனக் கடிமை செய்யும் நிலையின்று மாறி, என்முன்
சுதந்தரம் பேசு கின்றார் ; சுத்தனைப் போற்று கின்றார்.
இதன்பொருள் அறிகி லேனே...என்னவர் எதிர்ப்பென் னாமோ?

பொன் மொழி பேசி மெய்யன் புண்ணியக் கதைகள் சொல்லி,
அன்புடன் மயக்கி ஊணர் அறிவினைக் கெடுத்து விட்டான்,
துன்பத்தை அஞ்சு கின்றார். சுத்தனின் ஆணை யாலே
இன்பத்தை அடைவோம் என்பார் எப்படி யடக்கு வேனே?

மூச்சிலும் என்னை யன்றி முதல்வனொன் றில்லை யென்பார்,
பேச்சிலும் எழுத்திலும் ஓர் பேரின்பப் பொருளுண் டென்பார்,
தீச்சொலைக் கொண்டென் செய்கை தீதெனத் தாக்கு கின்றார்,
ஏச்சினி யுண்டோ? நானும் இராக்கதச் சிங்கந் தானோ ?

ஆணவத் தம்பி செய்யும் ஆயுதப் போர்கள் கோடி
காணரும் புண்ய பூமிக் கலியன்செய் இடர்கள் கோடி;
மாணுறும் உலகம் என்னை மறுத்திடும் வசைகள் கோடி,
நாணுதென் உள்ளம் ; இந்த நரத்துயர் காணுவேனோ !

மனைவியிங் கெதிர்செய் கின்றாள்; மகளுமங்கெதிர்செய்கின்றாள்;
எனைவிடுத் தாண்மைத் தம்பி எங்குமே இடர்செய் கின்றான்,
முனையினுக் கேகவோ யான் முரண்களைத் தீர்ப்பதோயான்
இனிமதி மண்டலத்தின் எரிமலை விழுவதோயான்

ஒற்றரால் இன்னும் இன்னும் உளவறிந் துள்ளம் வேகும்
கொற்றவன் கொலைவாள் இன்னுங் கொதித்திடச்சினத்தினாலே,
பற்றுள மனைவி யான சுந்தரி பண்ப றிந்து,
நற்றிருக் கடிதம் விட்டு நயந்ததை அறிகு வோமே.

சுந்தரி கடிதம்

காவல னாகிய மாவலி மன்ன,
பூவுல கத்திற் போர்வினை யேசெய்
அரக்கர் கோவே, அழகியுன் மனைவி,
இரக்கங் கொண்டிதை உரைக்கப் புகுந்தேன்.
மனங்கொண் டொழுகின் மயக்கந் தீர்வாய்,
இனந்திருந் திடவே இப்பணி செய்தேன்.
உனது நலமே எனது கருத்தாம்.
எனது மனத்தை உனதாய்க் கொள்வாய்.
ஐயநீ நாட்டில் அமைதியை வேண்டின்,
மெய்யன் மெய்ம்மொழி மேலெனக் கொள்வாய்.
மனித ராயினும் மாவலி யாயினும்
பூத யாக்கையிற் பொருந்திய உயிரே.
உன்னுயிர் வேறிலை மன்னுயிர் வேறிலை.
உயிர்க்குயி ராகிய ஒருபொருள் உண்டு,
பரம்பொருள் அதுவே பாருக் கிறையாம்,
அப்பொருள் பற்றி ஆருயிர் உலகிற்
கட்டற வாழுங் கருணை வழியை
எப்பெரி யாரும் எடுத்துரைக் கின்றார்.
அன்பும் அருளும் அறிவுயர் செயலும்
பண்புங் கொண்டு பலகலை கற்றுப்

பாரில் அழகாய்ப் பதமாய் வாழ
வழிதிறந் துள்ளது, விழிதிறந் துள்ளது,
நில்லா உடலும் நில்லா வாழ்வும்,
நில்லாப் பொருளும் நிலையென நம்பிப்
பொல்லாப் போர்செய் கொல்கொலை யரக்கர்,
உலகை அழித்தலே நலமெனக் கொண்டார்.
உயிரடித் துண்ணலே உணவெனக் கொண்டார்,
கொலையால் வளர்ந்து கொலையே தேடும்
பொறாமைப் போர்வெறி பூண்டோ டொழிக !
மதிக்குச் சென்றும் மதியிலாப் போர்செய்
நாடெலாம் படுசுடு காடென லானதே,
விதியா லின்னும் விளைந்தது வெம்மை
இருவர் பகையால் இயந்திரப் போர்வெறி
பசுவள நாட்டைப் பாலையாக் கியதே
அண்ணனுந் தம்பியும் அகப்பகை கொண்டால்
இருவரும் கட்டி இகல் புரியாது
நாட்டையும் உலகையும் வாட்டிப் போர்முனை
பலிதரல் பெரிய பாதக மாமே.
போரினித் தாங்கோம், பொறுமை யிழந்தோம்.
வரிச்சுமை யாலே வருந்தினோம் ; இன்னும்
வரிச்சுமை யேற்றினாய்... வளம்பெறு செல்வரைக்
கொள்ளையுங் கொண்டாய் ; கொடுமை யாக
ஊணரைப் போர்ப்பேய் உண்டிடச் செய்தாய்.
குண்டினாற் பிணமலை குவிந்தது ; நாட்டில்
மாளிகை எத்தனை மண்ணா யினவே !
பஞ்சம் வந்து பட்டினி மக்களைக்
கொன்ற கொடுமை, கொடுமை, கொடுமை !
வயிற்றிற் கேசிலர் மானம் விற்றனர்,
ஆடை யின்றி அவமா னங்கொள்,
மானிகள் உயிரை மாய்த்துக் கொண்டனர்,
தெருவெலாம் பிணங்கள் ; செருக்களம் பிணங்கள் ;
வீடெலாம் தற்கொலை விளைத்த பிணங்கள்...
நாடெலாம் இரத்தம்; காடெலாம் இரத்தம்,
காணச் சகியோம் ; கருணை யுள்ளம்
வெறுப்புறு துன்பால் வெடிக்குதென் ஐயா !
ஆதலால் உலகினித் தீதெலாம் ஒழிய,
அரக்கப் பான்மையை அடியோ டொழித்தே,
சீவகா ருண்யமே சிரமெனக் கொண்டோம்,
தெய்வப் பான்மை திருவுற விளங்க,
சுத்த சங்கத் தொண்டர்கள் கூடி,
அருட்குடி யரசை அமைத்தனம் இன்றே.
உடனே போரை உதறித் தள்ளி
அரசை எம்மிடம் அடைக்கலம் வைத்தே
எம்முடன் நீயும் இனிதிருந் துலகில்
எது பொது நன்மை யது புரிவாயே.
அதனால் உனக்கே அழியாப் புகழாம்.
இன்றேல் என்றும் இகழ்ச்சி யாமே.
போதும் கொலைவெறி புதுவாழ் வடைவாய்.
சொல்லுக்குச் சொல்வி நோதச் சூதுறு பொருளை ஒற்றர்
சொல்லிட ஊணன், அந்தோ "சுந்தரி எமனே உன்னைக்
கொல்லுவேன்" என்று தாவிக் குதித்தனன் வாளை ஓங்கிப்
பல்லினைக் கடித்தான் மீசை படபடத் திடத் துடித்தான்.

பசிகொண்ட புலியைப் போலும், படமுயர் பாம்பைப் போலும்
விசைகொண்ட கணையைப் போலும்வெவ்வியநெருப்பு போலும்

தசைகொண்டு திமிர்பி டித்த தானவ வெறியன் நாவில்,
வசைகொண்ட மட்டும் வைது வாளரை ஏவி னானே.

"கட்டுங்கள் சுத்த சங்கக் கள்ளரை, அழகி தன்னைப்
பட்டெனச் சிறையி டுங்கள் ; பதிலொன்று மூச்சுவிட்டால்,
வெட்டுங்கள் சிரத்தை, வெட்டு விழாதவர் தடுத்தால், மார்பிற்
சுட்டுடன் புதைத்தி டுங்கள் சுதந்தரக் கிளியும் சாக.

கடுவரி விதித்து சாதுக் கயவரை வருத்தி டுங்கள்,
விடுதலை பேசு வோரை விண்ணெனக் கொடுத்தி டுங்கள்,
கொடுவரிக் கூட்டம் போலே கொள்ளையும் வாளுங் கொண்டு
படுகொலை செய்தி டுங்கள் பாவத்திற் கஞ்சா நெஞ்சீர்.....

இறைவன்யான் எனக்குமேலேஇறைவனொன்றிருப்பான்என்னிற்
சிறைகளை நிரப்பி டுங்கள், சிந்தையும் புகுந்து பார்த்துக்
குறைசொலு வோரை நன்றாய்க் குட்டுங்கள்" என்றி ரத்தக்
கறைநகை வாளை யோச்சிக் காவலன் கதறி னானே.

இன்னன சொல்லி ஊணன் இரத்தக்கண் கொதிக்கும் போதே,
மன்னவை மதிம யங்க வானவி மானக் குண்டு
தின்னுறும் ஊழிப்பேய்போற் சிடுசிடு திடுதி டென்று
பன்னரு திசையி னின்றும் பாய்ந்ததைக் கண்டான் பாவி....

வேந்தநின் தம்பி செய்யும் வேலையிச் சேட்டை யென்றே
ஓந்திக்கண் ஒற்றன் சொல்ல, ஊழிபோற் குமுறும் ஊணன்,
காந்தக்கண் ணிகளுங் குண்டுங் கடுமையாய்ப் பொழிந்து தம்பி
தீர்ந்தபின் சிரத்தைக் கொண்டே திரும்புவேன் என்று சென்றான்

அப்புறம் அரக்க னேகி, ஆணவப் போரில் மூழ்க,
இப்புறம் பொதுச னங்கள் 'இம்'என எழுந்தி ருந்தே,
கப்பெனச் சத்த மின்றிக் காவலைக் கவர்ந்து கொண்டு,
முப்புறம் ஊரைச் சூழ்ந்து சுதந்தர முழக்கஞ் செய்தார்.

ஒன்றிய திறமை யோடும் உலகியல் நலமே செய்யும்
வன்றவ உறுதி யோடும் சத்தியன் வழி நடத்தச்
சென்றுளே "அரக்கன் ஆட்சி தீர்ந்தது; பொதுநல் லாட்சி
இன்றுடன் வந்த" தென்றே இயம்பினர் இரக்கங் கொண்டார்.

மதியுள நல்லோர், மெய்யன் வகுத்தநன் முறையைப் பற்றி,
விதிகளை யியற்றி, அன்பே விளங்கிடும் அருளி னாட்சி,
துதிபெற நிலவச் செய்து, சுந்தரி தலைமை தாங்கப்
"புதியச காப்தம் இன்று புலர்ந்த"தென் றுவகை கொண்டார்.

பெருந்திரள் அரக்க ராங்கே பிரியமாய் ஒத்து ழைத்தார் ;
திருந்திய ஊணர் ஆண வத்துடன் சேர்ந்தந் நாளே
வருந்திடும் உலகு வாழ மாப்பெரும் போர்நி றுத்தி,
அருந்துணை யன்ப ராக ஆணவர் அமையச் செய்தார்.

ஆணவன் இறந்த செய்தி, அண்ணனும் பறந்த செய்தி
காணுற வறிந்த மெய்யன் சுந்தரி கனிவு கூற,
நாணுறு நடத்தை விட்டு மாவலி நன்மை சேரச்
சேணுறச் சென்று மாற்றச் சீகரஞ் சேர்ந்தான் மன்னே !

வெள்ளிமா வலிகள் செல்லும் விமானத்தை மறித்துக்கொண்டு
வள்ளிமான் அழகி தந்தை, "மாப்பிள்ளை வருக" வென்றே

தெள்ளிய நதிகள் பாடும் சீகரந் தனிலி றக்கி,
உள்ளூற மாற வேண்டி உபாயங்கள் பலவுஞ் செய்தான்...

புண்ணிய பூமி தன்னிற் புதுயுகம் பிறந்த தோதி,
மண்ணில முய்ய வந்த சுத்தனின் மகிமை சொல்லிக்
கண்ணிய மான சங்கக் கருணையை விளக்கி ஊணன்
உண்ணெகிழ்ந் துருகச் செய்தே உயர்நல வாழ்வை யீந்தான்.

"சென்றது செல்க; நானுந் திருந்தினேன் அறிந்தேன் உண்மை;
நன்றிது நானும் சுத்த நாயகன் சேவை செய்வேன்"
என்றகங் கார மின்றி, மாவலி இயம்பும் போது
"நன்றென" மெய்யன் முன்னே நல்லுரை சொல்லி வந்தான்...

புண்ணிய பூமி யாண்ட சத்தியன், புலவன், மெய்யன்
விண்ணிலே பறந்தி றங்கி வெய்யதா னவர்கள் உய்யப்
பண்ணிய பணிக ளெல்லாம் சீகரன் பகரக் கேட்டுத்
திண்ணென வணங்கித் "தங்கள் சேவகன்" என்றான் ஊணன்.

நாமறி கதைக ளெல்லாம் நன்கறிந் தவுணர் கோனுந்
தூமனின் விதியுங் கேட்டுச் சுத்தனைப் பணிய வேண்டித்
தாமத மின்றிச் சென்றான் சத்திய னுடனே !...... வாரீர்
நாமினிச் சுத்த யோக நிலையத்தை நாடு வோமே....

19. சுத்த மங்களப் படலம்

வான்சி லிர்த்தது ; மண்சி லிர்த்தது ; வாழி பாடின புள்ளினம்;
தேன்மலர் வனம் புன்சிலிர்த்தது; தெய்வக் காலை சிலிர்த்தது;
மீன்க ணங்கள் பவனி வந்து மிளிர்கிழக்கிற் புகுந்தன ;
ஊன்சிலிர்க்க உயிர்சி லிர்க்க உலகமெல்லாஞ் சிலிர்க்கவே.

அருண ஜோதிப்பொற் கிரணம்வீசி அமுதப் புன்னகை செய்ததே
பொரு ளுணர்ந்த இயற்கை யுள்ளம்புளகித் தின்பஞ்சிலிர்த்ததே
இருள கன்றது; புத்துலகின் இரவி நல்லொளி வீசியே,
கருணை கொண்ட கடவுளின் அருட் காட்சி காட்டி யெழுந்ததே.

இன்னி சைக்குழல் வீணை மத்தளம் இன்ப கானம் முழங்கின ;
மன்னு மாதவர் ஆசி கூறினர்; மங்கலப்புது நாளிலே,
பன்ம தத்தினர் எட்டுத் திக்கும் பரந்த மாந்தர் விரைந்தனர்;
பொன்முகத் திருப் புன்னகையொளிர் புனிதனாரைப் புகழவே

சைவர் வைணவர்சாக்தர்புத்தர் சமணர் கிறிஸ்திஸ்லாமன்பரும்
உய்வகை உணர்ந்தொன்று பட்டுலகொன்றெனக்கண்டுவந்தனர்
தெய்வ நன்னிலை யெய்தினார் யோக சித்திசாதனம் செய்தவர்.
ஐவகை நில மக்களும் பர மானந்தப்பண் முழக்கினார்.

கோயி லான உலகிலே, ஒரு கொற்றவன்பர மாத்துமா.
தாயுந் தந்தையுந் தக்க நண்பனுந் தாரகமும் அவனொன்றே ;
வாயுஞ்செய்கையு நெஞ்சுமொன்றிவணங்குவோம் சுத்தசக்திஓம்
தூய மந்திர நாதமெங்கும் துலங்க வெற்றி யிலங்கவே.

போற்றி இன்பப் புதுயுக வொளி, போற்றி திவ்விய ஜீவனம்,
போற்றி சச்சிதா னந்தசுத்த சுயம்பிரகாசம் போற்றியே.
போற்றி சாந்த சிவானந்த சுப மங்களப்பொருள் போற்றியே,
போற்றியேபதிபுண்ணியத்தினிற்பொங்குவாழ்க்கை பொலிகவே

குயிலினோசையும்,கிளியின்ஓசையும்,யாழ்குழலுடன்கொஞ்சவே
மயிலின் ஆடலும் மந்த மாருத மலரின் ஆடலும் கூடவே,

செயலில் வென்றநம் சித்த ராடினர் யோகசித்தியைப் பாடியே,
தெய்வ பாரத சக்தி காவியத் தேனிசை யிசை யோங்கவே.
தொத்த டிமைத் துயரொழிந்தது; துள்ளரக்கரின் மாயமாம்
பித்தொ ழிந்தது; ஆசையாணவப் பேயொ ழிந்தது; தாயகம்
இத்த லத்துடன் இன்னலற்றநல் லின்ப மெய்தி மகிழ்ந்தது,
சுத்த யோக சமத்துவச் சுடர் தொல்லுலகில் விரிந்ததே.

கோரராக்ஷஸர் கொண்ட பூவினைக் கூடித் தூய ரடைந்தனர் ;
வீரதீரர் விஞ் ஞானசித்தர் விளங்கு பொன்யுகம் பூத்ததே ,
போரிலையினிச் சாந்த மாகப் பொருந்தி வாழுவர் மானிடர் ;
ஓரருட் குலம், ஓரருட்பரன், ஓரருள் அர சோங்கவே...

மாற்றி மாற்றி மனிதச் சன்மத்தை மாசி லாதபொன் னாக்கிடும்,
ஆற்றலார் சுத்த சக்தியின்பரி ணாமகாரியம் ஆயிற்றே,
வேற்றுமைச்சண்டையில்லைசாதிவிரோதங்கள்இனி இல்லையே
ஊற்றி மெய்யறி வின்பப் பாலை உலகி நம்மை வளர்த்தனள்.

கற்ற றிந்தவர் கல்வியின் பயன் கடவு ளென்பதைக் கண்டனர்,
உற்ற றிந்தநல் யோக மாதவர் உலகு தாமென விண்டனர்,
பற்ற றிந்தவர் தெய்வசக்தியைப் பற்றினார் பசு பாசத்தை
முற்ற றிந்தவர் முதல்வன் அன்பினைப் பெற்றறிந்தனர் பாரிலே.

நாடு வாழ்ந்திடக் கல்வியுந்தொழிற் செல்வமும் நல்ல வீரமும்,
வீடு வாழ்ந்திட முப்பொருளையும் மேவி யன்பினில் வாழுவோம்
ஓடு வாழ்வினில்ஊறிஉள்ளத்தின்இன்பஊற்றினைக்காணுவோம்
பாடுவோம்பதிப்பாடல்பண்ணுடன்பணிநலங்களும் பூணுவோம்

காசினியிற் பிறந்த மானிடர், கருத்தொன் றாகிக் கலந்தவர்,
தேசம்பாஷை நிறச் செருக்கறத் தெய்வசக்தியில் வாழுவோம்,
மாசிலாத மனத்திலே வளர் மன்னனை நிதம் உன்னுவோம்
தேசு லாவிடுந் தெய்வ ஜீவனம் எய்துவோம் திரு வோங்கவே.

ஆக்கித் காத்தளித் தாருயிர்களை அருளினால் விளை யாடிடும்,
நீக்க மற்று நிறைந்த சுத்தனை நெஞ்சிலே நினைந்தொன்றுவோம்.
போக்குடன்வர வாகும் பூமியின் போக நாடகந் தன்னிலே,
ஊக்க மாக உளத்தில் மன்னும் ஒளியைக் கூடி மகிழுவோம்.

அன்பர்கள் கூடி யிவ்வா றானந்தக் கீதம் பாடிப்
பண்புடன் எடுத்த செய்கை பழுத்தது, வெற்றி யென்றே
நண்புற நினைத்துத் தங்கள் நற்பணிப் பயன்க ளெல்லாம்
இன்பமாம் இறைவ னுக்கே ஈந்தனர் சாந்த வீரர்.

அரியநற் பணிக ளாற்றி, அடக்கமாய்ப் புன்ன கைத்துத்
துரியமா யோக நிட்டை துலங்கிடும் சுத்த னாரைப்
பிரியமாய்த் தூய னாணை பேணிய சக்தி தன்னை
உரியநல் லிசையி னாலே உற்றவர் போற்றி னாரே.

பாரத முனிவன் சாந்தன், பலகலைப் போகன், இந்தப்
பாரினை யோகத் தாலே உய்வித்த பண்பை மெச்சிச்
சீரிய வாக்கி னாலே தோத்திரம் செய்யக் கேட்டு
"ஓரருட் சக்தி செய்கை" என்றனன் ஒப்பிலானே.

அரக்கமா வலியும் அன்பன் ஆகிய கலியும், ஆங்கே
"இரக்கமே வடிவ மாகும் எம்பிரான் சரணம்" என்றே
உரக்கத்தம் பிழைகள் கூறி, உள்ளுணர்ந் தழுது வீழ்ந்தார் ;

சிரக்கம்பம் செய்து சுத்தன் தியானத்தில் ஆழ்ந்து சொன்னான் !

கதிருடன் இரவும் வாழ்வின் கதையினை வளர்த்து நாளும்,
எதிரெதிர் தொடர்வ தேபோல் இப்புவி விதியில் ஊணர்,
கதிபெறும் மிருக சக்தி காட்டினர் உலகம் அஞ்சத்
துதிபெறும் சுத்த சக்தி துலங்கிடத் தோற்று வீழ்ந்தார்.

உலப்பறும் உடுக்க ணத்தில் உலகொரு தூசி போலும்,
அளப்பற விரிந்த விண்ணின் அந்தரத் தாடும் தூசி,
கலப்புறு பூத யாக்கை முக்குணக் கயிறு கட்டி
உளப்பொது சக்தி யாட்டும் ஓய்வறும் பாவை யம்மா.

அத்தகை நாடகத்தில், ஆருல கரங்கு வாழப்
புத்துயிர் ஒளிர, நல்ல புதுயுகம் பூக்க வேண்டி,
இத்தகை விளையாட் டொன்றை யியற்றினாள் சுத்த சக்தி ;
அத்தகை யாடல் வெல்ல எளியனும் ஆடி னேனே.

என்னுடை அருமைக் கௌரி எனக்குயிர் ஈந்து சென்று
தன்னுடை யாவி தன்னைச் சக்தியுள் வைத்து வந்து,
மன்னுல கத்தில் மோன மணியினை ஒலித்துக் காட்டி,
உன்னதத் தொண்டு செய்த உண்மையும் அருளின் ஆடல்.

கலியினை முறியடித்துக் கடல்கடந் தோடச் செய்து,
புலியினும் கொடியர் தம்மைப் புகலடைந் திங்கு வந்து,
நலிதரும் சூழ்ச்சி யாலே நாட்டினை அவர்கை யீந்து,
கிலிகொளுஞ் சிறைவ ருந்திக் கிளர்ந்ததும் அருளின் ஆடல்.

நாட்டினை யடிமை செய்ய நாடிய கலியை ஊணர்
மாட்டிடச் சிறையில், அன்னோன் மதிதெளிந்தெதிர்த்து,மீண்டும்
போட்டியைச் சிறையி லிட்டுப் புத்திவந் திங்கு பத்தி
காட்டிய செயலும் அன்புக் கடவுளின் கருணையாடல்.

இழந்ததை மீட்டுச் சித்தி மான்முதல் அன்ப ரெல்லாம்
தழும்புறத் தொண்டு செய்து, தானவப் பகையை வீழ்த்தி,
எழும்புது யுகத்திற் கான செயல்களை யியற்றி, நாட்டின்
பழம்புகழ் இலகச் செய்த பரிசுமென் பகவன் ஆடல்.

ஏந்திய வீரத் தோடுந் தானவம் ஏகி எந்தை,
வாய்ந்தசுந் தரியைக் கண்டு சக்திக்கு வகையுஞ் சொல்லி,
தேர்ந்தநற் போக னாலே திருத்தொண்டு கலையாற் செய்து,
காந்தம்போல் அரக்கர் தம்மைக் கவர்ந்ததுங் கடவுள் ஆடல்.

அரசினைச் சுற்றி ஐந்தால் அடவியிற் சாந்த னான
வரமுனி வாக்கைக் கேட்டு, வாளினாற் கலியை வென்று,
சிரமணி போன்ற கௌரி என்னுடன் சேர்ந்து வாழப்
பரம்பொரு ளிச்சை செய்த பாக்கிய மறிகு வீரே....

தானவர் எழுந்து, வீழ்ந்து, சரண்புகுந் ததுவும், பாரில்
மானவர் இன்ன லின்று மறைந்ததும், அமைதி சேர்ந்து,
நானிலம் இன்ப முற்ற நன்மையும், உயிரின் உள்ளே
தானென நடன மாடும் தற்பரம் பொருளி னாலே.

ஆதலால் அன்ப ரெல்லாம் அருட்பெரும் சுத்த சக்தி
சோதியை வணங்கி நிற்போம் என்றலும், தொண்ட ரெல்லாம்
நாதத்தால் வணங்கிப் பின்பு நயனத்தை மூடி ஞான
போதத்தால் வணங்கும்போது சித்திமான் புகுந்து சொன்னான்;

சித்திமான்

சுத்தனே வணக்கம்! சுத்த சங்கமே வணக்கம் ! யோக
சித்தியே வணக்கம் ! அங்கே சிந்தித்த பணிக ளெல்லாம்
உத்தம வெற்றி யோங்கி, ஒளிர்ந்தன உலக மெல்லாம்
சித்திமா நகரிற் கூடித் திருவிழாச் செய்வ தாமே. *120*

பண்ணிய யோக மெல்லாம் பலித்தது ; பண்ப நீயும்
புண்ணியத் தொண்டர் சூழப் பொருந்திநன் னகரில், இந்தக்
கண்ணியத் தலைவ ருக்குக் கருத்துற உபதே சித்தெம்
எண்ணமும் இலக வெற்றி அரியணை இருப்பாய் வேந்தே...

அன்னதே கடமை யென்றாங் கந்தண்மா முனிவர் சொல்லத்
தன்னிக ரற்ற சுத்தன், சங்கத்தோ டெழுந்து, விண்ணில்
மின்னலைப் போல யோக விமானத்திற் சென்று, சித்தி
மன்னக ரடைந்து வெற்றி மகாசபை நடத்தி னானே... *128*

20. சுத்த விஜயப் படலம்

விண்ணுயர்ந்த மாடமும் விளக்கு யர்ந்த தூபியும்
பண்ணுயர்ந்த தென்றலிற் பகற்கொடியின் ஆட்டமும்,
கண்ணுயர்ந்த காட்சியும் கவினுயர் அணிகளும்
எண்ணுயர்ந்த சீர்த்தியும் இலங்கு சித்தி மாநகர்.

எங்குமே புதுமைகள், புதுநகை, புதுவியன்,
எங்குமே புதுயுகம் புதுமலர்ச்சி வேகமே ;
எங்குமே புதுமை பெற்ற பூர்ணயோக வாழ்க்கையே ;
மங்கலப் பழநகர் மறுவசந்தச் சோலையே.

பத்திமான்கள் யோகத்திற் பழுத்த திவ்ய ஞானிகள்,
புத்திமான்கள் பல்கலைப் புலவர், மன்னர், வீரர்கள்,
சித்திமான்கள் சேமமோங்குஞ் சித்திமா நகரிலே
"சுத்தசக்தி ஓ"மெனச் சுருதி பாடிக் கூடினார்.

முன்னர் வாழ்வி லேபடர்ந்த முக்குண விகாரமாம்
பன்மதங்கள் சாதிபேத நாடு வர்ணப் பண்புகள்
இன்னர் சூழும் அன்பிலே இணைந்தெலாம் ஒருமயப்
புன்னகைப் புதுநலப் பொலிவுறப் பொருந்தின.

அழுந்திருள் விலகியே அருணன்பூத் தழகொளிர்
செழுந்திரு வசந்தக்காலை சித்திகௌரி மாளிகை.
உழுந்திட இடமிலாமல் ஓங்குகற்ப கத்திலே
கொழுங்கனித் திரளெனக் குலாவினார் வழுவிலார்.

வீரதீரர் வித்தகர், வியன்பெரும் புலவர்கள்,
ஈரமுள்ள செல்வர்கள், இசைமிகுந்த பாடகர்,
பாரிலோங்கு மன்னர்கள், பழுத்ததூய ஞானிகள்,
ஓர்குல வுணர்வுடன் உளமுவந்து கூடினார்.

பயிர்செழிக்கும் வானெனப் பயன்மிகும் பணிகளால்,
உயிர்செழிக்க உள்செழிக்க உலகறம் செழிக்கவே,
துயர்கெடப் பயங்கெடத் துணிந்துதொண்டு செய்தவர்,
அயர்வறும் தொழிற் புலவர் அன்புகொண்டு வந்தனர்.

உலகு கண்ட சீரியர் உருவொளிர் திருச்சபை,
இலகருட் பெரியவர் இருந்திலங்கு சிற்சபை,
புலவரின் பலகலைப் புகழ் மணக்கும் பொற்சபை,
நிலவு நாட்டு வீரர்கள் நிரல்பட விளங்கினார்.

மாப்பெரிய ஆசியா அமெரிக்கா வளம்பெறும்
வாய்ப்பு மிக்க ரஷ்ஷியா வணிகர்வாழ் ஐரோப்பியா,
ஆப்பரிக்கம் ஆஸ்திரேலி யம்அணையு நாடுகள்
பூப்புகழ் சிறந்தசித்தி மாநகர் பொலிந்தவே.

ஆங்கிலம் பிரெஞ்சு ஜெர்மன் ஆரியம் உருசியம்,
தீங்கனித் தமிழ்தெலுங்கு சீனமிந்தி வங்கமாம்
பாங்குறும் மொழிபல பயின்றநற் சபையிலே
நீங்கிலா தொருமை மிக்க நெஞ்சளாவி நின்றதே.

முன்னர்சாத னத்திலே முயன்றவர் பயின்றவர்,
பன்மதப் பெரியவர் பழகிய புலவர்கள்,
மன்னர்வீரர் மாதவர் மனமொருங்கு கூடியே
அன்னையன் பளாவுமக்கள் என்னவாங் கிருந்தனர்.

திருந்திய கலியனும் வலியனும் திருச்சபை
பொருந்தினர் புலிகள்மாறிப் பூனையான வாறுபோல்.
அருந்திறல் அருளொன்றால் அனைவரும் சமரஸ
விருந்தருந்தி ஓரின வுணர்விலே விளங்கினார்.

திருமிகச் செதுக்கிய உயிர்ச் சிலைகள் போலவே
கருமவீரர், ஞானவீரர், கருணைவீரர் கூடியே
உருமிகப் பொலிவுகூற யோகசித்தி உள்ளமாய்,
ஒருகுலம் ஒருநிகர் ஒருமைகொண் டிருந்தனர்.

புனைவுறும் சமயதேசப் பொய்ப்பிரிவை நீத்தவர்,
அனைவரும் ஒருவனை அகத்திலே நினைத்தனர்.
நினைதொறும் நினைதொறும் நெகிழ்ந்துநெஞ் சுருகியே,
தனையொவாத் தலைவ சுத்த சக்தியோகிஓம் என்றார்.

உள்ளெலாம் ஒருவனே; உணர்வெலாம் ஒருவனே ;
தெள்ளறிவி லேயொளிர் தினகரன் ஒருவனே ;
வெள்ளமாக் கருணையன்பு மேவு சுத்தன் வாழ்கெனா
துள்ளுமார்வங் கொண்டிசை துலக்கி நின்ற போதிலே.

சிந்தனை குளிரயோக சித்திகேட்டுப் பூரித்தார் ;
சந்தமார் மதுரகீர்த்த னாஞ்ஜலி தழைத்ததே ;
அந்தமார் விமானத்தில் அருளழகு வீசியே,
வந்திறங்கி னார்கள் சுத்த சக்திமா முனிவரே.

சுந்த ரத்தவப் பொலிவுடன் சுடர்நகை வீசி,
வந்த மன்னனை வாழிபல் லாண்டென வழுத்தி,
மந்தி ரத்தமி ழிசைகளை மாரிபோல் வழங்கி,
இந்தி ரையுடன் ஏற்றனர் இனமலர் சொரிந்தே.

இந்திரை "மகனே"யென இருகையால் அளாவிச்
சிந்தை யானந்தஞ் சிலிர்த்திடச் செல்வனை யேற்றாள்.
தந்தை தாயினைத் தகுமுறை முறைமுறை வணங்கி,
முந்து நின்றனன் முத்தியின் பிழம்பென முதல்வன்.

வீர மூதிளஞ் சத்தியன் விமலனைத் தழுவிப்
பாரெ லாம்ஒளி பரவிய திருவருட் சுடரே,
சூரி யக்கொடி யுலகெலாந் துலங்கிடச் செய்த
தீர வாழ்கெனச் சென்னியை முகந்துமுத் திட்டான்.

“இனிய தந்தைநீ இன்றெனக் காயினை” என்று
பனி மலருடன் சக்திமா வலியினைப் பணிந்தாள்,
இனிய சத்திய குருவினை, இந்திரை தன்னை
நனி வணங்கிநல் லாசியை நயந்தனள் ஆங்கே.

யாழின் ஓசையும் குழல்களின் மழலையும் எழுந்த ;
வாழி பாடினர் மாசபை வயங்கிய பெரியார்,
ஆழி போல்இசை யார்த்திடும் அப்பெரு மன்றில்,
சூழ யோகிகள் விளங்கினன் சுடர்மணிப் பெருமான்.

மங்கல மறைமு ழங்க மாதவர் மலரைத் தூவ,
திங்களும் இரவி யும்போற் சித்தியின் சக்தி சுத்தர்,
தங்கமாந் தவிசி ருக்க ஜயசுத்த சக்தி யென்றே
பொங்கிய தன்ப ருள்ளம் புன்னகை முகங்கள் பூத்தே.

சித்திமான், சாந்தன் போகன், சீகரன் பரத யோகி
பத்தியோ டாசி கூறப் பரவசா னந்தந் தூண்ட,
சத்தியன் அரசி யோடு தாங்கிப்பொன் முடியை, “வாழ்க
சுத்த ஓம் சக்தி” யென்று சுபமுறச் சூட்டி னானே !

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓமென
சத்திய னுடன்சபை சயமுழக்கஞ் செய்யவே,
அத்தர்வாசச் சந்தனம் அருமலர் பொழியவே,
சித்தர்போற்றி சைக்கவே சிலிர்த்ததன்பர் உள்ளமே.

கலையெலா மறிந்தனை கணக்கெலா மறிந்தனை
நிலையெலாந் தெளிந்துநின்று, நீதிகாத்த வள்ளலே !
உலகெலாம் ஒருமைசேர யோகசித்தி தந்தனை ;
நலமெலாம் தவமென நயந்தசுத்த நாதனே.

மடமையும் அடிமைநோயும் வறுமையும் மாற வேண்டி,
விடமனத் தானவர்கள் வெம்மையைப் போக்க வேண்டிக்
கடமையைக் காக்கவேண்டிக் கலியினைத் திருத்த வேண்டி
இடையறா யோகசக்தி இரவிபோல் ஈந்தாய் வாழ்க !

பல்வகைச் சமயசாரம் பார்த்துப் பார்த்துப் பாரிலே
அல்லலற்று மானிடர் அமைதியாக வாழவே,
கொல்லும்ஊணர் வீழவே கொழுங்கருணை சூழவே
வெல்லும்யோக சித்தியை விளக்கினை விமலனே...

கூற்றென வந்த தீமை, குளிர்மலர் கொஞ்சு கின்ற
காற்றெனச் செய்தாய் வாழி ! கலியினை அன்ப னாக
மாற்றினை வாழி ! தான வத்தினை மெய்யன் வெல்லச்
சாற்றினை வழியை யோக சாதன குருவே வாழி !

போற்றி போற்றி புதுயுகச் செங்கதிர்
போற்றி சுத்த சுதந்தர சக்தியே
ஆற்ற லாயுள் அறந்திரு வின்னொளி
போற்றி மானிடர் பூரணம் பொங்கவே...

மன்னன் சுத்தனிம் மன்னுயிர்க் கின்னுயிர்
என்ன வாழி இகத்திற் பரசுகம்
துன்னு யோகச் சுடர்மணி வாழியே
அன்னவன் பணி யானந்த மாகுமே...

இந்தவா றிசைத்து நல்லார் இசைமலர் வாரித் தூவ,
சிந்தையுட் குவிந்து சுத்தன் சிற்சக்திக் கதிர் பரப்பி
முந்துளோர் உள்ளந் தன்னுள் தன்னுளம் முந்து ளோருள்
சந்ததந் துடிக்க நாட்டிச் சாற்றினான் அமுத வாக்கே... 124

21. சுத்த வாணிப் படலம்

உள்ளப் பெருமான் உலவுங் கோயில்காள் !
என்னுயிர் அனைய இன்னுயிர் மக்காள் !
உங்கள் முன்னே ஊழிய னாகி,
என்னுள் இன்பம் இவ்வுல கிற்கும்
எய்த வேண்டி எழுந்தேன் இத்தினம் ;
சுத்த யோக சித்திக ளெல்லாம்
எல்லா ருக்கும் எளிதிற் கிடைத்தே
மானிட ரெல்லாம் மங்கள மான
பூரண வாழ்க்கை பொருந்திட வேண்டியே,
சக்தி பரப்புதல் நித்தியக் கடனே.
அரசிய லுக்கும் ஆத்மசா தனமே
அடிப்படை யாகும் அறவழி வகுத்தேன்.
எம்மத மாயினும், எக்குல மாயினும்,
ஆண்பெண் அடங்கலும் அரைமணி தினமும்
சித்தங் குவிந்து தியானம் செய்மினோ !
பொன்னிளங் காலை புலரும் போதும்,
மாலைச் செங்கதிர் மறையும் போதும்,
அன்பறி வோங்கி யனைத்தும் வாழ்கென
ஊரூர் மக்கள் உறுதியாய்க் கருதினால்,
உயிரும் உலகும் ஒற்றுமை யாமே.
மனதின் வெற்றியே வாழ்வின் வெற்றியாம் !
உள்ள மிருந்தால் உலகும் இன்பமாம்.
நல்ல கல்வியும் நல்ல சிந்தையும்
பலகலை யறிவும் பல தொழின் முயற்சியும்,
நன்னெறி யொழுக்கமும் நாளும் பயின்று,
உடலுயிர் மனமும் உள்ளமுஞ் செயலும்,
உறுதி யாகி, உலகப் பணிக்கே
பயனுற வேண்டும் பதியன் புடனே.
யோகமுந் தொண்டும் ஒன்றுக வாழ்வில்,
பிரம சரியம் பேணிக் கற்றபின்,
வீரப் பயிற்சியும் பாரினில் வாழத்
தொழிற் பயிற்சியும் துலங்குக நாட்டில்.
பிறகே தகுதி பெற்ற வாலிபர்—
ஒத்த காதலர் உலகம் வளர—
இல்லற மாகிய நல்லறந் தாங்குக.
மக்களுக் குரிய மாநிலந் தன்னை
சரிசம னாகப் பிரித்துக் கொடுத்தே
உழைப்பால் உண்ண ஒவ்வொரு வர்க்கும்
உரிமை யுண்டென உலகினில் நாட்டுவோம்
மனிதப் புரட்சி வயிற்றின் புரட்சியே.
ஒவ்வொரு கையும் உழைத்தே புசித்தால்,
எல்லாக் கைகளும் இயற்றிட வேண்டி
பொதுநலத் தொழில்களைப் பொருத்தமாய் வகுத்தால்,
பஞ்சப் பேயை பாரினின் றோட்டினால்,
போரு மில்லை ; புரட்சியு மில்லையே !
அஞ்ஞா னத்தை அறிவால் விலக்கி,
தொழிலால் வறுமையைத் தூர விலக்கி
யோகத் தாலே ஒழுக்கம் பேணி,

உள்ளன் பாலே ஒற்றுமை நாட்டி,
ஒருவரை யொருவர் உயிரென மதித்தே,
வீடும் விரிந்த நாடும் வாழ
அருளர சாட்சி தருவதென் கடனே....
அரியணை யிருந்தே அணிமுடி தாங்கி,
மனப்படி யாளும் மன்னன்யா னல்லேன்.
பரம்பொருள் ஒருவனே பாரின் அரசனாம் ;
ஆருயி ரெல்லாம் அவன்உட லாமே.
என்னுள் எவனோ அவனே உலகில் ;
அரசிய லென்பதும் ஆருயிர்ப் பணியே.
தாய்மொழிப் படிக்கே தரணியைப் பிரித்து
வாய்மையன் புறவே வளம்பெறச் செய்வேன்.
உலகப் பொதுமொழி யுடனே அவரவர்
தாய்மொழி போற்றுக தனிச்சிறப் பெய்தவே.
உலக மக்கள் ஒரேசமு தாயம் ;
நாட்டை நாடு நன்கு மதித்து,
போட்டி பொறாமை போர்மத மின்றி,
இயற்கை விளைவை இயல்புறத் துய்த்தே,
திறமைப் படியே செய்தொழில் வகுத்தே,
இல்லாப் பொருளை இருப்பவர் நல்கி,
பண்ட மாற்றினாற் பயனுற வாழ்ந்தால்,
உலகில் அமைதி உலாவக் காண்போம்,
பொறாமைச் சண்டை பூண்டோ டொழிக.
கொடிய பயிர்களை அடியோ டொழித்து,
ஊணுடைக் காகவே உழவினைச் செய்தால்,
உணவுப் பஞ்சம் உடனே ஒழியும்.
உழைத்துப் பலபேர் உண்ணத் தக்க
யந்திரத் தொழிலை ஏற்பதுங் கடனே.
வீட்டைக் காக்கவும், நாட்டைக் காக்கவும்,
குண்டரைக் குமைக்கவும் தொண்டுசெய் வீரர்
எல்லா ருக்கும் இராணுவப் பயிற்சி
தகுமுறை தருவோம், தருமம் வாழவே,
பாதகர் ஒழியப் படைவலி வேண்டும்,
நாட்டை நாடு வேட்டையா டாமல்,
குண்டைக் குவித்துச் சண்டைபோ டாமல்,
பாதுகாப் பிற்கே படையணி யாமே.
பாருக் கோர்பொதுப் படையணி வேண்டும்
ஒவ்வொரு நாடும் உத்தம வீரரைத்
தேர்ந்தப் படையிற் சேர்த்திட வேண்டும் ;
ஐக்கியப் படையே அதன்பெய ராமே.
ஆண்டுக் கோரிடம் அப்படை யூன்றி,
அநீதியைத் தாக்கும், அறத்தையே காக்கும் ;
உலகில் அமைதி ஒளிரச் செய்யுமே ;
எந்தநா டாயினும் இன்னொரு நாட்டை
அதருமப் போரில் அழித்திடப் பார்த்தால்,
கொடுமை யாகக் கொள்ளை யடித்தால்,
அந்த நாட்டை ஐக்கியப் படையே
அடக்கி அறவழி அமைப்பது கடனே.
மனிதனுள் விலங்குகள் வாழுறு மட்டுமே,
காவற் படைகள் கண்விழித் திருக்கும்.
தலைவர் இருவர் சண்டைக் கெழுந்தால்
பொதுஜன வாழ்வைப் போராக் காமல்
அவரவர் திறமையை ஐக்கியப் படைமுன்
பண்புடன் காட்டிப் பலன்பெற லாமே.
ஒருவன் செருக்கால் உலக மாந்தர்

குண்டு பட்டுக் கொலையுண் டிறப்பதை
இனிநாம் உலகில் என்றுங் காணோம்.
ஆசையா ணவத்தால் அழிந்த மனமே
வீரியத் தினவால் வெம்போர் புரியும்.
மனப்போர் வளர்ந்தே இனப்போ ராகும்.
படையும் வெடியும் பாழும் போரும்,
உள்ளே கிளம்பியே உலகைத் தாக்கும்.
உள்ளப் பயிற்சியே உலகமை திக்குச்
சாதன மாகும் தன்மை யறிவீர்.
உள்ளந் திருந்தின் உலகம் திருந்துமே.
யோகத் தாலே உள்ளம் திருந்துமே.
சுத்த சமத்துவ சுதந்தர யோகம்
பூமிக் கெல்லாம் பொதுவாய் விளங்கினால்,
எல்லா ருக்கும் இதயந் திறந்தே
தெய்வத் தன்மை தெளிவுற லாமே.
ஆசை யாணவம் அடியோ டொழியும் ;
அன்பும் அருளும் ஆத்தும சக்தியும்
வாழ்வுக் கியல்பாய் வளம்பெற லாமே.
பொய்யும் வஞ்சமும் பூண்டுடன் அழிந்தே,
அரக்கத் தன்மை அன்பினால் மாறி,
அமரத் தன்மை ஆருயிர் மூச்சாம்.
மனிதக் குறைகள் மாறி மாறியே
நரரும் அமரராய் நலமுற விளங்கி
தேவ ஜாதியும் தேவஜீ வனமும்
எல்லா ருக்கும் இயல்புற லாமே.
சித்தி நகரிலே தேவ ஜாதியை
நாட்டிய பிறகு ஞால மெல்லாம்
பாரத சக்தியைப் பரப்பிப் பரப்பியே
யோகமே வாழ்வாய் உருக்கொளச் செய்வோம்.
ஊர்தொறும் ஊர்தொறும் யோக சமாஜம்
புதுயுக வாழ்வைப் பொலிவுறச் செய்கவே.
யோகமே வாழ்க்கை வாழ்க்கையே யோகம்.
அனைவரும் வணங்கும் அருட்பெருங் கோயிலே
உருவுறச் செய்த யோகமந் திரமாம்
அதனைச் சுற்றி அறவோர் வாழ்வார்
அவரைச் சுற்றி அறிவுச் சாலைகள் ;
அவற்றைச் சுற்றி அருங்கலைப் புலவர் ;
அவரைச் சுற்றி அருந்தொழி லாளர்கள்,
அவரைச் சுற்றி அரும்பணி யாளர்கள்,
அவரைச் சுற்றி அருந்தொழிற் பண்ணைகள்,
சாதனம் செய்து சாந்தமாய் வாழவே
புதுயுக மாந்தர் புதுநகர் அமைப்போம்.
சித்தியை அப்படித் திருவுறச் செய்தே,
அருட் கோயில் சுற்றி அணியணி யாகப்
பொதுநல வாழ்க்கை பூத்திடச் செய்வோம்.
மண்புவி தியான மந்திர மானால்,
வாழ்வே யோகமாய் வளர்ந்து விளங்கினால்,
அழகும் சிவமும் அமைதியும் சக்தியும்,
அமரத் தன்மையும் ஆற்றலும் பெருகி,
எல்லா வுயிர்களும் இன்புற லாமே.
இந்தக் கடமை இனிது நடக்கத்
தொண்டராய்ச் சேர்ந்து துணைபுரி வீரே.
உலகத் தொண்டே உயிர்ப்பெனக் காமே.
ஒருலக த்தில் ஓர்குல மாந்தரை
யோக வுணர்வில் ஒளிபெற நாட்டியே

யானும் சக்தியும் இமாலஞ் சென்று
யோகத் தாலே ஊன்சுமை நீத்து
நுண்ணுட லாலே எண்ணிய நலங்கள்
யாங்கும் புரிந்து நீங்காத் தூய
ஒருமையும் தெய்வ வுரிமையும் நாட்டி,
சுத்தா னந்த முத்திசேர் வோமே !

வெற்றுரைகள் பேசாமல், வீண்பொழுது போக்காமல்,
வீறு கொண்டு,
கற்றறிவுங் காணறிவுங் கலையறிவுந் தொழிலறிவும்
கருதித் தேர்மின்.
ஒற்றுமையும் உள்ளன்பும் உண்மையறி வின்பத்தில்
ஒன்றும் யோகப்
பற்றுதலும் பயின்றிடுமின் ; பாரால யத்தினிலே
பரவி வாழ்வீர்.

எனதுனதென் றிறுமாக்கும் இருமனதை யடக்கிடுமின் ;
ஏழை யின்றி
இனிதறிவு தொழிலெய்தி எல்லாரும் உழைத்துண்மின்
இயற்கை யாக
மனிதசக்தி தெய்வசக்தி யாய்வளர மேன்மேலும்
வாழ்க்கை தன்னைப்
புனிதமுறத் திருத்திடுமின் ! அருள்பெற்ற பூரணராய்ப்
பொலிமின் அன்பீர் !.....

என்று சுத்தன் இயம்பிய நன்மொழி
மன்று கேட்டு மகிழ்ந்தது ; ஞாலமும்
நன்று கேட்டு நலஞ்செய நாடியே
நின்று தூய நிருபனைப் போற்றுமே.

தானொ லித்த தகைமணி வாசகம்
வானொ லித்திட வையக மெங்குமே,
தேனொ டொத்த திருவருள் வாக்கென்றே
ஊனொ டொத்த உயிரி லுணர்ந்ததால்.

ஊண நாட்டின் ஒழுங்கமை சுந்தரி,
மாண நல்ல வழியென வாழ்த்தினாள் ;
ஆண வத்திலும் அன்பர் புகழ்ந்தனர்
வேண தொண்டுசெய் வேட்கை விளம்பினார்.

புதிய மாவலிக் கன்பு புகன்றினிச்
சதிபதி யெனச் சம்மதங் கூறினாள்.
துதிசெய் மாவலி சுந்தரி சொன்னதே
மதி யெனக்கென மாறிப் பிறந்தனன்.

சீக ரத்திற் செழுந்திருத் தொண்டர்கள்,
ஏக மாக விரிநில மெங்குமே,
வேக மாகவிண் ணாட்சி விளங்கிட
யோக சித்தி யொளியைப் பரப்பினார்.

சித்தி முற்றிய யோக சிகாமணி,
சுத்த பாரத சக்தியைத் தூண்டியே
ஒத்த மானிடர் ஓர்குலத் தேவராய்
எத்தி சையும் இலங்கத்தொண் டாற்றினான்.

புண்ணியப் பெரும் பூமி நடுவதாய்,
விண் பறவை வியன்பெரு வானொலி
கண்முன் காட்டிக் கருவிக ளாலிந்த
மண்ண கத்தின் மனத்தில் விளங்கினான்.

நாடு நாடு நலங்களை நாடிட,
வீடு வீடு விளங்கிட மங்களம்—
பீடு மிக்க பெரும்பணி யாற்றியே
நீடு நீடு நிலவி மகிழ்ந்தனன்.

பேச்செ லாம்அருள் பெற்ற மணிமொழி ;
மூச்செ லாம்அருள் அன்பின் முதிர்பணி.
ஓய்ச்ச லின்றித்தன் யோக வொளியினைப்
பாய்ச்சி னான்புது வாழ்வு பழுக்கவே.

அறிவும் ஆற்றலும் ஆயுளும் ஓங்கிடத்
துறவுந் தொண்டுந் துகளறு நன்மனை
யறமுடன் அரு ளாட்சியும் ஓங்கிட,
நிறைய வாழ்ந்து நிறைவிற் கலந்தனன்.

பரனருள் எனும் பாரத சக்தியின்
வரன ருளும் வரம்பெறு நன்மையால்,
அரிய யோகத்தில் வாழ்அதி மானிட
மரபெ ழுந்தது ; மன்புவி வாழவே.

இம்மை யம்மை இருமைப் பயன்களும்,
செம்மை யாகச் செழித்திட வாழ்விலே
அம்மை யப்பன் அருள்வழி காட்டிட
இம்ம காகவி என்னுள் உதித்ததே.

இந்தக் காவியம் ஏத்திடும் சுத்தனென்
சிந்தை யிற்குடி கொண்டொளிர் சித்தனே ;
அந்த ராத்ம குருவென லாம் ; அவன்
தந்த வேதமிப் பாரத சக்தியே.

என்னு ளேஎன தாவி நலம்பெறத்
தன்னை வைத்துத் தழைத்தனன் செய்யுளாய் ;
பன்னு காவியம் பாரத சக்தியை,
என்ன வர்க்கும் எழுத்தி னுதவினேன்.

எத்தி றத்தினர் ஏற்றமும் பேணியே,
தத்து வப்பெயர் தந்த பெருங்கதை,
ஒத்து லகம் உயர்நிலை வாய்ந்திட
வைத்த மாநிதி யென்ன வழங்குமே.

ஊனு டலம் உயிரைப் பிரியினும்
யானு ளேனிவ் வரகவி யென்னவே.
பானு போற்றி வளர்த்திடும் பாரிலே
ஏனு ளேனென் றியம்புமிக் காப்பியம்.

அணைந்தி டாதுள் அமரக் கனலெனத்
துணைதந் தோங்கிடுஞ் சுத்த பராசக்தி ;
இணையி லாத கருணையை யென்றுமே
இணைந்தி ருக்குமென் இன்னுயிர் வாழ்க்கையே.

கோவி லான குவலய வாழ்விற்கே,
ஆவி யாகும் அருட்பெருஞ் சோதியே—
தேவ மானிடச் சித்திர மாகுமிப்
பாவி லேவளர் பாரத சக்தியே.

வாழ்க பாரத சக்தி வளம்பெற ;
வாழ்க பாரத நாட்டு வளமையே.
ஏழ்க டலுல கெங்குநல் லின்பமே
சூழ்க நல்லரு ளாட்சி துலங்கவே ! 257

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரின்
பாரத சக்தி மகா காவியம்
ஐந்தாவது, சுத்த சக்தி காண்டம் முற்றிற்று.

ஓம் சுத்த சக்தி